# மெட்ரிக் முறை என்பது என்ன ?




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3- SEP 1958
MADRAS

மெட்ரிக் முறையில் மீட்டர் என்பது அடிப்படை நீட்டல் அளவு. இந்த மீட்டரிலிருந்து உண்டான அளவுகளைக் குறிக்கும் முறை மெட்ரிக் முறை என்று பெயர் பெற்றது. எல்லா தசாம்ச முறைகளிலும் 10 ஆல் பெருக்கி அல்லது வகுத்து மற்ற அளவுகளைக் கணக்கிடுகிறோம். மெட்ரிக் முறையிலும் இப்படியே.

மெட்ரிக் முறையில் *டெகா* (பத்து தடவை), *ஹெக்டா* (10 × 10 = 100 தடவை), *கிலோ* (10×10×10 = 1000 தடவை) என்னும் சொற்களை முன்னால் இணைத்து அடிப்படை இலக்கத்தின் பெருக்கங்களைக் குறிப்பிடுகிறோம். அதுபோலவே, *டெசி* (1/10), *சென்டி* (1/100), *மில்லி* (1/1000) என்னும் சொற்களை முன்னால் இணைத்து கீழ்வாய் இலக்கங்களைக் குறிப்பிடுகிறோம்.

**மெட்ரிக் முறை எடைகளும் அளவுகளும் 1958 அக்டோபரிலிருந்து அமுலுக்கு வருகின்றன**

## மெட்ரிக் நீட்டல் அளவுகள்

நீளக்கணக்கில் அடிப்படை அளவு
**மீட்டர்**
= சுமார் 40 அங்குலம்
1 கிலோ மீட்டர் = 5 பர்லாங் தூரம்

### கீழ்வாய் இலக்கங்கள்

| | |
|---|---|
| 10 மில்லிமீட்டர் | = 1 சென்டிமீட்டர் |
| 10 சென்டிமீட்டர் | = 1 டெசிமீட்டர் |
| 10 டெசிமீட்டர் | = 1 மீட்டர் |

### பெருக்கங்கள்

| | |
|---|---|
| 10 மீட்டர் | = 1 டெகாமீட்டர் |
| 10 டெகாமீட்டர் | = 1 ஹெக்டாமீட்டர் |
| 10 ஹெக்டாமீட்டர் | = 1 கிலோமீட்டர் |

OA 58/109

2

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது.



"திவ்யமான சாப்பாடு"
"அவாவுடன் உண்ணும் சிற்றுண்டிகள்"
"சுவையுள்ள தித்திப்புகள்"
துஷார்
வைடமின் சேர்ந்த வனஸ்பதியில் சமைக்கப்படுகின்றன.
துஷார் வனஸ்பதி சமையலுக்கு ஏற்ற சாதனம் மட்டுமல்ல. இதில் ஏ, டி. வைடமின் சத்துக்கள் நிறைந்து, சமையலின் ருசியையும் வாசனையை ஊட்டமளிக்கும் சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன.
Tushar
5lbs
TUNGABHADRA INDUSTRIES LTD. KURNOOL
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட், கர்நூல்
TI-4/58

# காவேரி

## ✸ பொருளடக்கம் ✸


| விளம்பி-வரு மலர் 18 | செப்டம்பர்-1958 | ஆவணி இதழ் 1 |
|---|---|---|



| | | | |
|---|---|---|---|
| தீபாவளி மலர் | ... | | 5 |
| டில்லித் தபால் | ... | கே. ஸ்ரீநிவாஸன் ... | 6 |
| ஆலமரங்களின் நிழலிலே | ... | உஷா ... | 8 |
| விஜயா என் கண்ணே! (அட்டைப்படக் கதை) | ... | அவாரா ... | 13 |
| மண்ணகத்து விண்ணகம் | ... | தி. பக்ஷிராஜன் | 17 |
| நாதயோகி (காஞ்சிபுரம்) நாயனாப் பிள்ளை | ... | ரங்கராமானுஜ அய்யங்கார் ... | 19 |
| சந்துலாலின் திட்டம் | ... | "அசேன்ராஜ்" ... | 25 |
| தொழில் துணுக்குகள் | ... | விசால்தேவ் ... | 35 |
| சிரித்த செந்தாமரை (தொடர் கதை) | ... | ஏ. சுப்பையா ... | 39 |
| கேரள நாட்டுப் பிரயாணம்-2 | ... | கே. ஸ்ரீநிவாஸன் ... | 53 |
| சரியா தப்பா? | ... | ரா. வேங்கடசாமி ... | 58 |
| விஞ்ஞானத் துணுக்குகள் | ... | நா. கி. நாகராசன் ... | 65 |
| பெண்களுக்கு மட்டும் | ... | எஸ். விஜயா ... | 68 |
| சிறுவர் பகுதி | ... | எஸ். விசாலாக்ஷி ... | 71 |
| சந்தேகம் யார் மேல்? | ... | எஸ். லட்சுமி சுப்பிரமணியம் ... | 74 |
| சுடச்சுட! | ... | திருமால் ... | 79 |
| காலம் செய்த கோலம் | ... | அமிழ்தன் ... | 81 |
| சினிமா | ... | நமது விசேஷ நிருபர் ... | 89 |
| ஓவியம் | ... | விச்வம் ... | 94 |



குறிப்பு: காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# உங்களுக்கு உதவி புரிய உதவுங்கள்

காப்பக நூலகம்
218564

"பரிசுத்தம் தெய்வீகத்திற்கு அடுத்தபடி"

என்பது பழமொழி. சுத்தமான சுற்றுச்சார்பு மகிழ்ச்சியைத் தருகிறது. அதுமட்டுமல்ல, அது நோய்களைத் தடுக்க உதவுகிறது. மக்கள் அதிகமாகக்கூடும் ரயில்வே பிளாட் பாரங்கள், பிரயாணிகள் தங்குமிடங்கள், ரயில் பெட்டிகள் (காரேஜ்) இவற்றில் சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து பிரயாணிகளின் உடல் நலத்தை பேண வேண்டுவது மிகவும் முக்கியம்.

சுற்றுச் சார்புகளை சுத்தமாக வைத்திருப்பதன் மூலமும், ரயில்வே ஸ்டேஷன்களில் அமர்த்தப் பெற்றிருக்கும் சுகாதார சிப்பந்திகளின் பணியை தேவைப்படும் பொழுது பயன்படுத்திக் கொள்வதன் மூலமும்

**நோய்களைத் தடுப்பதில்**

**ரயில்வேயாருக்கு நீங்கள் உதவலாம்.**

இந்திய ரயில்வேயின் சார்பில்

## நார்தர்ன் ரயில்வேயால்

வெளியிடப்பெற்றது.

JL
M24, V40KV
N 58.18

# காவேரி

விளம்பி-ஹூ
மலர் 18

"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

ஆவணி
இதழ் 1

# தீபாவளி மலர்

இவ்வருட தீபாவளி மலரில் என்னென்ன அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன என்று கேட்டுப் பல கடிதங்கள் வந்துள்ளன.

நம் காரியாலயத்தில் அது சம்பந்தமான வேலை வெகு துரிதமாக நடந்துவருகிறது. என்னென்ன அம்சங்கள் என்பது குறித்து இப்பொழுது முழுமையும் வெளியிட இயலாது. வாசகர்களுக்கு ஒன்று மட்டும் உறுதிகூற முடியும். எல்லா வருடங்களைக் காட்டிலும் இம்மலரின் மணம் பரவி வீசும். இதற்குக் காரணம் நாட்டிலுள்ள பல தலைசிறந்த அறிவாளிகளின் எழுத்தோவியங்களாகும். படங்களுக்குக் குறைவிருக்காது. அடுத்த இதழில் அநேகமாக விவரங்கள் குறிக்க இயலும். அதுவரை பொறுத்தருள வேண்டுகிறோம்.

பவுன் பரிசு சம்பந்தமான கதைகள் அநேகம் வந்துள்ளன. இப்பரிசு பெற்ற கதையை தீபாவளி இதழில் வெளியிடுவதாக உத்தேசம். எனவே, அக்டோபர் முதல்தேதிவரை இதற்கான கதைகள் அனுப்பிவைக்கலாம் கதையின் தலைப்பும் கருத்தும் "பதினெட்டாம் பருவம்" என்று இருக்கவேண்டும். இப்போட்டியில் பெண்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

இம்மாத இதழில் ஸ்திரீ ரத்தினங்கள் தொடர் இடம்பெற இயலவில்லை, ஸ்ரீமதி அம்புஜம்மாள் பற்றிய கட்டுரை அடுத்த இதழில் பிரசுரிக்கப் படும்.

இந்த இதழில் ஸ்ரீ ரங்கராமானுஜ ஐயங்கார் அருளிய நாதயோகி (காஞ்சிபுரம்) நாயனப் பிள்ளையைப்பற்றிய கட்டுரை இடம் பெற்றிருக்கிறது. அது ஒரு சுகீதம்போல் அமைந்துள்ளதை வாசகர்கள் கண்டு களிப்பார்கள்.

சிறுவர்களுக்கென அமைக்கப்பெற்ற அம்சத்தை இளம் வாசகர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

ஆலமரங்களின் நிழலிலே என்ற தலைப்பில் ஸ்ரீமதி "உஷா" கலாக்ஷேத்திரம் என்று உலகெங்கும் விளங்கும் கலைமன்றத்தை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தியுள்ளார். அப்பெயருக்கேற்ப அது இயங்குகிறது என்பதோடு தமிழ் நாட்டிற்கே அந்த ஸ்தாபனம் புகழைத் தேடித் தந்துள்ளது என்பதையும் காண்கிறோம். ஸ்ரீமதி ருக்மணிதேவியின் தொண்டினைக் கலையுலகம் என்றென்றும் மறக்கலாகாது.

தமிழ்நாட்டில் கலைப் பொக்கிஷங்கள் காணக் கிடைக்கின்றன. அவை மூலை முடுக்குகளில் எல்லாம் மலிந்து கேட்பாரற்றுக் கிடக்கின்றன. அதனையெல்லாம் கண்டறிந்து காவேரி வாசகர்கள் அகக்கண்முன் கொணர்ந்து நிறுத்தி அதனில் ஊக்கங்கொண்டு கலை ஆர்வத்தை வளர்ப்பதே காவேரியின் குறிக்கோளாகும். வரும் வரும் இதழ்களில் இதனைச் செவ்வனே செய்துவைக்க எழுத்தாளர்களின் ஒத்துழைப்பும், வாசகர்களின் ஆதரவும் அவசியம்.

ஸ்ரீமதி கே. சுந்தராம்பாளை காவேரி வாசகர்கள் நன்கு அறிவர். பல அரிய சிருஷ்டிகளை காவேரி மூலம் வாரிவழங்கி வாசகர்களின் உள்ளங்களைக் கவர்ந்த சிறந்த எழுத்தோவியர். இவர்கள் எழுதும் தொடர்நாவல் 'வஜ்ர வீணை' நவம்பர் தீபாவளி இதழில் ஆரம்பமாகிறது. சுவையும் கருத்தும் உயரிய காட்சிகளும் நிரம்பப் பெற்றது. மற்றவை பின்னர்.

# டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

டில்லியில் ஒவ்வொரு வருஷமும் வருஷாந்தரக் கொண்டாட்டங்களைப்போல் சில விபரீதங்களும் நிகழ்வது உண்டு. அவை முறையே கோடையில் நெருப்பு விபத்துகள், மழை ஆரம்பமானவுடன் வெள்ளம், அதனால் நஷ்டம், பிறகு யமுனை ஒடுங்குவதால் தண்ணீர் கஷ்டம், மழை பெய்யும்பொழுது கட்டிடங்கள் பழைய தில்லியில் வீழ்தல் முதலியன. இந்த மாதம் இந்தக் கொண்டாட்டங்களில் இரு நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை.

டில்லியில் அடைமழை என்பது அபூர்வம். ஒவ்வொரு வருஷமும் சராசரி 20 அங்குலம் மழை பெய்யும். இந்த வருஷம் எதிர்பாராத விதமாக ஒரு நாளிலேயே பத்து அங்குலம் மழை பெய்தது, உடனே விபரீதங்களும் நிகழ்ந்தன. வருஷா வருஷம் நடப்பதுபோல பல கிராமங்கள் தண்ணீரில் மூழ்கின. ரயில் பாதை தடைப்பட்டது. பல டஜன் பழைய கட்டிடங்கள் தரை மட்டமாயின. இவையெல்லாம் சாதாரணமாக நடப்பவை. விசேஷம் என்னவென்றால் சுமார் இரு கோடி ரூபாய்கள் செலவில் கட்டப்பட்ட பல மாடிகள் கொண்ட இரு சர்க்கார் கட்டிடங்களில் ஒன்றின் அஸ்திவாரத்திற்குள் கட்டப்பட்ட பல அறைகளில் தண்ணீர் புகுந்து அங்கிருந்த காரியாலயங்களில் இருந்த தஸ்தாவேஜுகள் நாசமடைந்ததுடன் அங்கு ஸ்தாபிக்கப்பட்ட அச்சாபீஸ் முழு நாசமடைந்தது.

இந்தக்கட்டிடம் கிருஷிபவன் என்று முழங்கும் விநோதம். இதைக் கட்டியபொழுது மத்திய பொது வேலை இலாக்கா இன்ஜினியர்கள் அடித்துக்கொண்ட ஜம்பத்துக்குக் கணக்கே இல்லை. "பாருங்கள், நாங்கள் அஸ்திவாரத்தில்கூட இடம் கண்டுபிடித்திருக்கிறோம்" என்று பெருமையடித்துக்கொண்டார்கள். கிருஷிபவனம் பெரிய பொது ரஸ்தாவுக்குப்பக்கத்தில் கட்டப்பட்டது. ரஸ்தாவின் மட்டத்திற்குத் தாழ்ந்தது. கிராமங்களில் வீடு கட்டும் கொத்தர்கள்கூட வீட்டை கட்ட ஆரம்பிக்குமுன் ஜலப்போக்கு, அஸ்திவார நிலை முதலியவைகளைப்பற்றி யோஜிப்பது உண்டு பல ஆயிரம் ரூபாய்கள் தண்டச் சம்பளம் வாங்கும் என்ஜினியர்களுக்கு ஜலம் உயர்ந்த இடத்திலிருந்து தாழ்ந்த இடத்துக்குத்தாவிபாயும் என்று தெரியாது என்று சொன்னால் யாராவது நம்புவார்களா? பாவற்காயை பூனை கொண்டு போயிற்று என்று சொன்னால் கேட்பவருக்கு மதி எங்கே போயிற்று என்றுதான் கேட்பார்கள்.

இது கிருஷிபவனத்தைப் பொறுத்தவரை. மற்ற இலாக்காக்கள் மட்டும் என்ன வாழ்ந்தன. மிண்டோ பாலம் என்பது ரயில் பாலம். கீழ் வழியாக பஸ்களும் கார்களும் செல்லவேண்டும். இந்த கார்பாதை கிண்ணத்தின் குழிவுபோல் வளைந்திருக்கும், மழை அதிகமாகப் பெய்தால் இங்கு தண்ணீர் நிரம்பிவிடும். அப்படி நிரம்பும் தண்ணீரை மின்சார பம்புகொண்டு இறைப்பதுண்டு. இந்த வருஷம் பம்பு வேலை செய்கிறதா. இல்லையா என்று பார்க்க முனிசிபல் கமிட்டி என்ஜினீயருக்கு அவகாசம் இல்லைபோல் இருக்கிறது. முதல் மழையிலேயே தண்ணீர் நிரம்பி, அடமழை பிடித்த பொழுது ரயில் பாதைக்கு மூன்றடி வரை தண்ணீர் நிரம்பி விட்டது. முனிஸிபாலிடியின் திறமையை நம்பி அப்பாலத்தின் கீழ் வழியாக வந்த ஒரு பத்திரிகை காரியாலயத்தின் வண்டி தண்ணீருக்குள் மூழ்கியது. டிரைவர் நல்ல வேளையாக உயிர் தப்பினார்.

இப்படி பல இடங்களில் தண்ணீர் நிரம்பியதும் முதலில் டில்லி நெருப்பணைக்கும் படையைத்தான் கூப்பிடுவது வழக்கம். தண்ணீர் இறைக்க இப்படையைக் கூப்பிட்டதும் அப்படையினர் விழித்துக் கொண்டனர். உள்ளே சென்று பார்த்தால் அவர்கள் பம்புகள் கூட தண்ணீருக்குள் மூழ்கிக் கிடந்தன. எல்லா மார்க்கங்களும் தடைபட்டால் என்ன செய்வது? ஒன்று பகவானைப் பிரார்த்திக்கவேண்டும். அல்லது ராணுவத்தினரைக் கூப்பிட்டாக வேண்டும். மதப்பற்றற்ற சர்க்கார் அல்லவா, அதனால் ராணுவத்தாரை "ஓ கிருஷ்ணா" என்று அழைத்தனர் (ராணுவ மந்திரி ஸ்ரீ கிருஷ்ண மேனன் அல்லவா) கிருஷ்ணனும் அபயம் கொடுத்தார். ராணுவப் படையினர் லாரிகளில் என்ஜின்களையும் பம்புகளையும் கொண்டு வந்து சாய்த்து தண்ணீரை இறைத்தனர். மக்களும் பெருமூச்சு விட்டனர்.

* * *

அதிக மழைப் படலம் இங்கு முடிவுபெறவில்லை. டெலிபோன் மார்க்கத்திற்கும் இந்த ஊழலில் ஒரு பங்கு உண்டு. மழை பெய்து தண்ணீர் போக இடமில்லாமல் கட்டிடங்களை சூழ ஆரம்பித்ததும் டெலிபோன் காரியாலயத்திலும் தண்ணீர் தன் கைவரிசையைக் காண்பிக்க ஆரம்பித்தது. இரவில் தண்ணீர் கட்டிடத்துக்குள் நுழைய ஆரம்பித்ததும் டிரங்கு இலாக்காக்காரர்கள் சாமர்த்தியமாக எங்கிருந்தோ மணல் மூட்டைகளைத் தருவித்து தங்கள் சாதனங்களைப் பாதுகாத்துக்கொண்டனர். மற்றவர்கள் நன்றாகத் தூங்கிவிட்டார்கள். கட்டிடத்துக்குள் தண்ணீர் நுழைந்து தரைமட்டத்துப் பெருங் கம்பிகளை நாசம் செய்ய ஆரம்பித்தபொழுதுதான் அவர்கள் விழித்துக் கொண்டனர். "ஹலோ ஹல்லோ என்று நாம் அழைத்தபோதிலே அண்டைவீட்டார் அறைந்துவிட்டார் அண்ணா காதிலே"

என்று நாம் பழைய சினிமாப் பாட்டைப் புதுப்பிப்பதில் தவறு ஒன்றுமில்லை. வெள்ளம் வந்து போய் ஒரு மாதத்துக்குமேல் ஆகிறது. இன்னும் டெலிபோன் மார்க்கம் சரியாகவில்லை, ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்பார்கள். டெலிபோனை பொறுத்தவரை ஐந்து தடவைக் கூப்பிட்டால் ஐந்தும் பழுதுதான் ஆகிறது. ஆனால் நிர்வாகத்தாரைக் கேளுங்கள். "7800 லைன்களில் 7000-க்குமேல் சரியாகிவிட்டது" என்பார்கள். பிரிட்டிஷ் ஆகாய விமான கம்பெனியைக் கூப்பிட்டால் இன்றும் பிரிட்டானியா பிஸ்கோத்துக் கம்பெனி பியூன்தான் "ஹான்ஜி" என்று அழுகிறான். இது இன்றைய டில்லி நிலைமை.

இப்படிப்பட்ட நிலைமை ஏன் ஏற்படவேண்டும்? இந்தக் கேள்விக்கு அதிகாரிகளின் பதில்: "அந்நாளில் டில்லியில் இவ்வளவு மழை கிடையாது டில்லியின் தரைமட்டத்திற்குக் கீழ் உள்ள சாக்கடை இப்போது உபயோகிக்கப்படும் தண்ணீரை கொண்டுசெல்ல என்று உண்டாக்கப் பட்டது அல்ல. சுமார் ஐந்து லக்ஷம் பேர்களே வசிக்க என்று கட்டப்பட்ட டில்லியில் இன்று இருபது லக்ஷம் ஜனங்கள் வசிக்கிறார்கள்." வாஸ்தவம், ஆனால் ஜனத் தொகை நான்கு மடங்கு அதிகரித்தால் அதிகாரவர்க்கம் பத்து மடங்கு அதிகரிக்கிறதே! அவர்கள் என்ன தண்டச் சம்பளம் வாங்குவதற்கென்று ஏற்பட்டவர்களா?

தண்ணீர் சப்ளைக்கென்று ஒரு படாடோப பயங்கர போர்டு உண்டு. அதன் முக்கிய இன்ஜினீயர் பெயர் ஸ்ரீ ஆர். எஸ். மேத்தா. ஏது? எங்கோ பெயரைக் கேள்விப் பட்டாற்போல் தோன்றுகிறதே என்று யோசிக்கிறீர்களா? அவர் உங்களுக்குத் தெரிந்தவர் தான். மூன்று வருஷங்களுக்கு முன் டில்லி பூராவும் அல்லோல கல்லோலப்பட்டதல்லவா மஞ்சள்காமாலை என்று? அதற்குக் காரண பூதர் சாக்ஷாத் ஸ்ரீமேத்தா தான். சாக்கடைத் தண்ணீர் குடி தண்ணீருடன் கலந்ததைப் பொருட்படுத்தாமல் ஸ்ரீ மேத்தா டில்லிக்குத் தண்ணீர் இறைத்ததன் விபரீதம் மஞ்சள் காமாலை நோயால் சுமார் ஒரு லக்ஷம் பேர் பீடிக்கப்பட்டனர். அப்பொழுது மஞ்சள் காமாலையைப் பற்றி விசாரிக்க ஏற்படுத்தப் பட்ட கமிட்டி அப்பட்டமாக தன் அபிப்ராயத்தைத் தெரிவித்தது. அதனால் ஸ்ரீ மேத்தா என்னவோ தன் உத்தியோகத்தை விட்டுப் போகவில்லை. மிக தாதுபுஷ்டியாக நம்மை ஒரு கை பார்த்துவிடுவதற்கென்றே இருக்கிறார் போலும்!

இந்த மாதம் 17ம் தேதி திடீரென்று குழாய்கள் முகாரி ராகம் பாடின. என்னவென்று பார்த்தால் தண்ணீருக்குப்பதில் அவைகளில் காற்று வந்துகொண்டிருந்தது. சரி, ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் தண்ணீர் வேண்டாம் என்ற தீர்மானம்போல் இருக்கிறது என்று ஜனங்கள் மறுநாள் குழாயைத் திறந்தால் ஜலம் அருணஜலம் தான். பத்திரிகையைப்பிரித்தால் "யமுனை நதி திடீரென்று நோட்டீஸ் கொடுக்காமல் தன் போக்கை கிழக்குப் பக்கம் மாற்றிக்கொண்டு விட்டது. மேற்குத் துறையில் தண்ணீர் இறைக்கும் பம்புகள் தாகத்தால் மடிகின்றன" என்ற செய்தி. வழக்கம்போல "தாங்கள் இரண்டாயிரம் கூலிகளைக்கொண்டு ஒடுகால் தோண்டுகிறோம்" என்று அதிகாரிகள் சொன்னார்கள்.

இந்த வருஷம் 18ம் தேதி மத்திய சர்க்கார் சரித்திரத்திலேயே மிகவும் இழிவான நாள்: தலைநகரம் என்று பெருமையடித்துக்கொள்ளும் டில்லி வாசிகள் தலைகுனிந்தநாள். நாள் பூராவும் தண்ணீர் கொட்டிய டில்லியில் நாக்கை நனைக்கக் கூட சில சொட்டுகள் தண்ணீர் கிடைக்கவில்லை. ஆதிநாளிலிருந்து மொகலாயர்கள் ஆண்ட வரை டில்லி வாசிகள் என்றும் குடிதண்ணீருக்கு குப்புற விழுந்து அழவில்லை. ஆகஸ்ட் 18ம் தேதி இப்படி அலறினோம். நாம் கையாலாகாதவர்கள் என்று உலகநாடுகளின் ராஜதூத காரியாலங்களுக்கு ருஜூப்படுத்தினோம். தண்ணீரைச் சரிவர சப்ளை செய்யத் தெரியாத நாமா பட்டரைக் கட்டப் போகிறோம்?

முடிவு என்ன? தலைவலிக்கும் ராணுவம், தவிடு பொடிக்கும் ராணுவம், டில்லி ராணுவத்தார் (முக்கால்வாசிபேர் தமிழர்கள்) யமுனையை அடைந்து பெரிய "புல்டோஸர்" என்னும் இயந்திரங்களைக்கொண்டு ஒருநாளில் ஒரு கால்வாயைத் தோண்டி மறுநாள் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தனர். மற்றும் 24 மணி நேரங்களில் வழக்கம்போல் தண்ணீர் கிடைத்தது.

இந்த சம்பவங்களின் படிப்பினைதான் என்ன? ஸிவில் நிர்வாகம் உளுத்துவிட்டது. தொட்டதற்கெல்லாம் ராணுவத்தினரை நம்பும் நிலைமை வந்துவிட்டது. ஒழுங்கு நிரம்பிய ராணுவத்தாருக்கு எடுத்ததைச் செய்யும் ஆற்றலும் மனோதிடமும் இருக்கிறது. பணம், லஞ்சம் முதலியவைகளே குறியான ஸிவில் நிர்வாகத்தாருக்குத் திறமைக் குன்றிப்போனதுடன், நிலைமை சீர்கேடடைவதை நிறுத்த போதிய தெம்பு இல்லை. ஆகவே நாளடைவில் ஜனங்கள் ராணுவத்தினர் ஆண்டால் தேவலை என்ற நிலைமை ஏற்பட்டால் அதில் ஆச்சரியமாக ஒன்றுமில்லை. அந்நிலைமை விரைவாக வந்துகொண்டிருக்கிறது என்பது வருந்தவேண்டிய விஷயம்.

* *

இந்தியாவில் எல்லாம் சரியில்லை என்பது மற்றவர்கள் சொல்லத் தேவை இல்லை. நம் பிரதமர் நேரு இதை அறிவார். சுதந்திர தினத்தன்று அவர் பிரசங்கத்தில் அடிக்கொரு தரம் மகாத்மா காந்தியை நினைவூட்டியது தனக்கு தாதுபுஷ்டி கொடுத்துக் கொள்வதற்காக அல்ல. நாட்டில் ஆக்க வேலை குறைந்து விட்டது, ஒழுங்கு குறைந்துவிட்டது. கட்டுப்பாடு மறைந்துவிட்டது என்பதை ஞாபகப்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)



# ஆலமரங்களின் நிழலிலே

உஷா

அலை வீசி, வெண் நுரை பொங்க ஆர்ப்பரித்து எழும் கடல் ஒருபுறம்; இருகரையையும் தொட்டுக்கொண்டோடும் நதி ஒருபுறம்; நெடிதுயர்ந்த மரங்கள் செறிந்த சோலைவனம் ஒருபுறம் எனச் சூழ்ந்துநிற்க அமைதியும், கம்பீரமும் குடிகொண்ட குருகுலமாகக் காட்சி அளிக்கிறது கலாக்ஷேத்திரம்.

செழுங்கிளை பரந்த ஆலவிருக்ஷங்கள், மலர் செறிந்த பூஞ்செடிகள், எங்கும் பசுமை படர்ந்த இயற்கை, உடலுக்கும், உள்ளத்திற்கும் சிலிர்ப்பை யூட்டும் இதமான காற்று, ஆங்காங்கே விரவிக்கிடக்கும் பர்ணசாலைகளையொத்த சிறு சிறு குடில்கள், எங்கும் தவழ்ந்து நிற்கும் மோன அமைதியை நடு நடுவே தங்கள் இனிய குரலோசையால் கலைத்துக்கொண்டிருக்கும் பறவை இனங்கள் என, இவ்வினிய காட்சி கோதாவரி தீரத்திலோ, புனித கங்கையாற்றின் கரையிலோ, முனிபுங்கவர்கள் வாழ்ந்த தபோவனத்தை, இதிகாச புராணங்களிலே நாம் படித்த அவ்வரலாற்றை நினைவூட்டுகின்றன.

குடில்களிலிருந்து வீணையின் நாதமும், மிருதங்க ஒலியும், இழைந்து பாடும் இன்குரலும், தா, தை, தா, தை என்று தாளத்திற்கேற்ப ஒலிக்கும் பாதச் சிலம்போசையும் காற்றிலே கலந்துவந்து அச்சூழ்நிலைக்கு இனிய போதை யூட்டுகின்றன.

பரபரப்பையோ, ஆத்திரம், அவசரத்தையோ, தம் செயல்களிலும், பேச்சிலும் வெளியிடாது யாவரும் சுருசுருப்புடன் தங்கள், தங்கள் பணிகளிலே ஈடுபட்டிருப்பதைக் காண வியப்பாகயிருக்கிறது. தூய்மையையும், எளிமையையும் அங்குள்ள ஒவ்வொருவரும் பிரதிபலிக்கின்றனர். நடையுடை, பாவனையிலும், தம் தோற்றத்திலும், மாணவ, மாணவிகள், ஆசிரிய, ஆசிரியைகள் பாரதீய பண்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.

கலாக்ஷேத்திரத்தினுள் நான் பிரவேசித்த பொழுது இத்தகையதொரு காட்சியைத்தான் கண்டேன். மகரிஷிகளின் குருகுலங்களிலே, அடர்ந்த விருக்ஷத்தினடியிலே அமர்ந்து சீடர்கள் பாடம் கற்பதுபோல், முதுகுரவர்களான பெருங் கலைஞர்களின்கீழ் பல்வேறு வகுப்புகள்

ஆங்காங்கே குடில்களிலும், மரத்தடிகளிலும் நடைபெறுகின்றன. வித்வத்தும், திறமையும் மட்டுமன்றி ஆன்மீக உயர்ச்சிபெற்றஅரும்பெரும் கலைஞர்களை ஆசிரியர்களாகப் பெற்ற பாக்கியம் கலாக்ஷேத்திரத்திற்குண்டு.

ஸ்ரீமதி ருக்மணி அருண்டேலின் நெடுநாளைய இனிய கனவுதான் இன்று கலாக்ஷேத்திரமாக விளங்குகின்றது. தேன் ஈ பற்பல வண்ண மலர்களின் இனிய சுவைமிகுந்த தேனை எல்லாம் தேடித் திரட்டித் தருவது போல, பல்வேறு கலைகள், அக்கலைகளில் மிகுந்த தேர்ச்சியும், புலமையும் பெற்ற அறிஞர்கள். அவர்களின் ஆராய்ச்சிகள் என யாவையும், ஸ்ரீமதி ருக்மணி தேவி அவர்கள் தமது அரும்பெரும் உழைப்பினால் திரட்டி, ஒன்று சேர்த்து, கலாக்ஷேத்திரத்தின் வாயிலாக நமக்குத் தந்துள்ளது, இன்றைய தலைமுறை செய்துள்ள பாக்கியமாகும். இசைக் கலைஞர்கள், ஓவியர்கள், நடன மணிகள், ஆராய்ச்சியாளர்கள், பாஷைகளில் புலமை பெற்ற புலவர்கள் என யாவரும் ஒருங்கே கூடி, கலைக்காக, கலையின் உயர்வுக்காக, உழைக்கும் கலாகேந்திரம்தான் இது.

பரதநாட்டியம் நம்நாட்டில் 3000 ஆண்டுகளாக தொன்றுத் தொட்டு தழைத்து வரும் புராதனக் கலையாகும். கலையும் மதமும் இணைந்ததொரு அற்புதத்தை நம் நாட்டிலன்றி வேறெங்கும் காண முடியாது. எந்தக் கலையும் தர்மீக உணர்வின்றி தூயதன்மை வாய்ந்ததாக வளர்ந்து, செழித்து மக்களையும் வாழ்விக்க முடியாது. இடைக் காலத்தில் அரச சபைகளின் ஆதரவை அக்கலை பெற்றிருந்தாலும், ஆலய வழிப்பாட்டின் ஓர் அங்கமாக அது இடம் பெற்றிருந்தது. ஆலய வழிபாடும், நாட்டியமும் இணைந்திருந்தது அர்த்தமற்றதன்று. மக்களை மகிழ்விக்கத்தான் கலை என்பதுடன் நின்றுவிடாது மக்களை உயர்த்த அவர்களின் ஆன்மீக, தார்மீக உணர்வைத் தூண்டிவிடக் கலையை ஓர் அரிய சாதனமாகக் கொண்டிருந்தனர் நம் முன்னோர்கள். இடைக்காலத்தில சிருங்கார ரசத்தை பிரதானமாகக் கொண்டு, ஜனரஞ்சகமாக அமைந்த பரதநாட்டியக் கலை தரம்குறைய நேரிட்டாலும், அக்கலைக்கு மீண்டும் புத்துணர்வும், புது மெருகும் ஊட்டி, அதன் தரத்தை உயர்த்த முன்வந்தவர்களில் ஒருவர் ஸ்ரீமதி ருக்மணி தேவி.



1904ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மகாமகத்தின் போது மதுரையில் பிறந்தார் ஸ்ரீமதி ருக்மணி. ருக்மணி தேவியின் தந்தையார் A. நீலகண்ட சாஸ்திரியார் திருவிசநல்லூரைச் சேர்ந்தவர். சம்ஸ்கிருதத்தில் மிக்க தேர்ச்சியும் புலமையும் பெற்றவர், இன்ஜினீயர். ருக்மணியின் தாய் சேஷம்மாளும் கல்வி அறிவு பெற்ற நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். கலைப்பண்பும், அறிவும் நிறைந்ததொரு சூழ்நிலையில் வளர்ந்த ருக்மணி தேவிக்கு தன் இளமைப் பருவத்திலே கலைகளில் ஈடுபாடுகொள்ள நல்ல வசதி ஏற்பட்டிருந்தது. சிறுவயதிலேயே சிறந்த பாடகியாக ஆகவேண்டும் என்ற விருப்பம் ருக்மணி தேவிக்கு இருந்ததாம். சங்கீதத்தின் அன்றைய ஆர்வம்தான் இன்றும் மைசூர் வாசுதேவாச்சாரியார் போன்ற வித்வான்களிடம் கர்நாடக சங்கீதத்தைக் கற்றுக் கொள்ளும்படித் தூண்டுகிறது எனலாம். நீலகண்ட சாஸ்திரியார் தியாசாபிகல் சொஸைடியின் அங்கத்தினராக மட்டுமின்றி அதில் மிக்க ஈடுபாடு கொண்டவராயிருந்ததால் ருக்மணிதேவி 7-ம் வயதில் (C. W. Leadbeater) ஸி. டபிள்யூ. லெட்பீட்டரைச் சந்தித்தார். அச்சந்திப்பு நாளடைவில் வளர்ந்து வரவே ருக்மணி தேவிக்கும் தியாசபியில் பற்றுதல் ஏற்பட்டது.

1918-ல் ஸ்ரீமதி ருக்மணி, டாக்டர் அருண்டேல் அவர்களைச் சந்தித்தார். ருக்மணிதேவியின் குடும்பத்தினரும், டாக்டர் அருண்டேலும்



நெருங்கிய தோழமை பூணவே 1920 ஆண்டு, தனது 16ம் வயதில் ருக்மணிதேவி அருண்டேலை மணந்தார். இக் கலப்பு மணம் நம் சமூகத்தில் ஒரு பெரும்புயலை எழுப்பிவிட்டதெனலாம். 1920-ம் ஆண்டில்தான் ருக்மணி அருண்டேல் டாக்டர் பெஸண்டைச் சந்தித்தார். அச்சந்திப்புத்தான் ஸ்ரீமதி ருக்மணியின் கொள்கைகளையும், வாழ்க்கை முறையையும் உருவாக்கியதெனலாம்.

1924ம் ஆண்டு, தம் கணவர் அருண்டேல் அவர்களுடன் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். 1926-ம் ஆண்டு ஆஸ்திரேலியா சென்றார். அங்குதான் (Madam Anna Pavlova) ஸ்ரீமதி அன்னா பாவ்லோவா எனும் ரஷிய நடன மாதைச் சந்தித்தார். அச் சந்திப்புதான் ருக்மணிதேவியின் வாழ்விலே புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. கலை உள்ளமும் உணர்வும் கொண்ட ஒரு பெண்மணி, சிறந்த நடன மாதைச் சந்தித்தார்; நட்புக் கொண்டார். அவரிடம் மேல்நாட்டு பாலெட் நடனமும் கற்றுக் கொண்டார். 1933-ம் ஆண்டு மீண்டுமொரு முறை மேல்நாட்டுச் சுற்றுப் பிரயாணம் செய்கையில் பல்வேறு நாட்டின் கலைகளை ஆராய ஓர் அரிய சந்தர்ப்பமும் கிட்டியது. 1933 முதல் 1936 மிக முக்கியத்வம் வாய்ந்ததாகும். இதற்கு முன்னரே காரைக்கால் சாரதாமபாள்; மைலாப்பூர் கௌரி அம்மாள் முதலியவர்களிடம் நடனம் கற்றுக்கொள்ள ஆரம்பித்திருந்தாலும் பந்தணைநல்லூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையைச் சந்தித்தது தான் குறிப்பிடத்தக்கதாகும். ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையை ஒரு நடன நிகழ்ச்சியில் சந்தித்தார் ருக்மணிதேவி. பிள்ளையவர்களை அவர் காணவில்லை. ஒரு மேதையைத்தான் அவர் கண்டார். அவரிடம் பாடம் கற்பது என்று உறுதி பூண்டார். அதை நிறைவேற்றவும் செய்தார். மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பரம்பரை வழிவந்த நாட்டிய கலையை சாஸ்திரீயமாகப் பயின்றார்.

ஸ்ரீமதி ருக்மணி தொன்றுதொட்டு வரும் அப்புராதன கலைக்கு, அதன் பண்பும், முறையும் கெடாது, ஆனால் சாஸ்திரீய ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்த உத்திகளையும் இணைத்து புதியதொரு உருவம் கொடுத்தார். சிற்பங்கள், சிலைகளிலுள்ள பல்வேறு நடன நிலைகள், முத்திரைகள், ஹஸ்தங்களை ஆராய்ந்தார். பரத சாஸ்திரத்தை ஆராய்ச்சிக்கண்ணுடன் நோக்கி, புராதனப் பண்பிற்கு விரோதமில்லாமலும் அதே சமயம், புதிய மெருகுடன், தூய்மையான கலையாக பரிணமிக்க செய்த பெருமை ஸ்ரீமதி அருண்டேல் அவர்களுக்கு உண்டு.

கலாக்ஷேத்திர நிகழ்ச்சிகள் மேடைகளில் நடைபெறும்போது ஆடுபவர்கள் பக்தி பரவசமான ஒரு நிலையில் மெய்மறந்து தங்கள் உள்ளக் கிடக்கையை இறைவனின் முன்னிலையில் நின்று வெளிப்படுத்துவது போலவும், நாமும் தூய்மை நிறைந்ததொரு ஆலயத்துள்ளிருப்பது போலவும் உணர்கின்றோம்.

பரத நாட்டியத்தை முதன் முதலில் ஆடிய குடும்பப் பெண்மணி இவர்தான். பரதம் கற்று ஆடியதுடன் ஸ்ரீமதி ருக்மணி நின்றுவிடவில்லை. அக் கலையை நன்கு மெருகிட்டு பற்பல திருத்தங்களும் செய்தார். ஆடை அணிகளில் அவர்

தந்த பாணி அவருடைய கலைத்திறமைக்கு ஒரு சான்று. எவ்வித நிறங்களின் சேர்க்கை எவ்வித பாவங்களை பார்ப்பவர்கள் உள்ளத்தில் தோற்றுவிக்கும்; எவ்வித புராதன அணிகள், அதற்கு அழகு செய்யும் என்பதை உணர்ந்தவர் அவர். பின்னணி இசையிலும் அவர் கவனம் செலுத்தினார். மேடை அமைப்பு, மேடை அலங்காரங்களிலும் பாரதப் பண்பிற்கு முரண் இல்லாதவாறும் அதே சமயம் நூதனமாகவும் அவர் முறை வகுத்தார். பாரதப் பண்பாட்டிலும், கலாசாரத்திலும் அழியாப் பற்றும், அசையாத பக்தியும் கொண்ட கலைஞர்தான் ஸ்ரீமதி ருக்மணி. அவருடைய ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் இதுவே வெளிப்படுகின்றது. அவருடைய கலை உள்ளம் எதிலும் அழகைக் காண விழைகின்றது. அழகையே காண்கிறது.



1936-ம் ஆண்டு கலாக்ஷேத்திரம் உருவாகியது. சங்கீத சிரோன்மணி வகுப்புகள் துவங்கின. பின்னர் லலித கலைகளின் பயிற்சிகூடங்கள் ஆரம்பமாகின. அன்று நட்ட அவ்விதை இன்று நன்கு செழித்து வளர்ந்திருக்கிறது.

மக்களிடையே எதையும் குறிப்பாக கலைகளை துரிதமாகக் கற்றுக்கொண்டுவிட வேண்டும் என்ற அவாவுள்ளது. 6 மாதம் சங்கீதப் பயிர்ச்சியில் கச்சேரி செய்யவேண்டும், 3 மாத நடன பயிற்சி செய்யும் 7 வயது சிறுமியின் அரங்கேற்றம் நடக்கவேண்டும் என்று ஆசைப்படுகின்ற பெற்றோர்கள் கலாக்ஷேத்திரத்தை நெருங்கமுடியாது. 8, 9 வயதிலிருந்து 18 வயதிற்குட்பட்ட சிறுமிகளை நடன பயிற்சிக்கு எடுத்துக்கொள்கிறார்கள். புஸ்தகங்களில் உள்ளவற்றை மனப்பாடம் செய்வதுபோல் கலைகளை பயின்றுவிடமுடியாது. கலையின் சாதனைக்கு உணர்ச்சியும், பாவநிறைந்த உள்ளமும், கற்பனையும், சலியா உழைப்பும் தேவை. அகத்தூய்மையும், புறத்தூய்மையும் மிகமிக அவசியமானவை என்பதை அங்குள்ளவர்கள் நன்கு பயின்றிருக்கின்றனர்.

நடன பயிற்சி பெறுபவர்களுக்கு, சங்கீதமும் ஓவியமும் கட்டாய பாடமாகும். "அபிநய தர்பண" ஸ்லோகங்கள்மூலம் ஹஸ்தங்களும் முத்திரைகளும் விளக்கப்படுவதால் இயல்பாகவே சம்ஸ்கிருத ஞானமும் ஏற்பட்டுவிடுகின்றது. இவ்விதம் ஒரு கலையை பிரதானமாகப் பயிலும் மாணவ மாணவிகளுக்கு அக்கலையை விகசிதப்படுத்த உதவும் மற்ற கலைகளைப்பற்றிய அறிவும் கிட்டிவிடுகின்றது. ஆங்கிலமும், பிராந்திய மொழிகளும், சம்ஸ்கிருதமும் கற்பிக்கப்படுகின்றன. நம் கலாசாரம், நம் பண்பிற்கு இன்றியமையாததொரு அம்சம் தார்மீக உணர்வாகும்.

கலாக்ஷேத்திரத்தில் "Religion" வகுப்பு மிக முக்கியமானதாகும். உலக தர்மங்களின் சாரத்தை வடித்தெடுத்து மாணவிகளுக்கு போதிக்கின்றனர். குறள் வகுப்பு, கதாகாலக்ஷேபங்கள், பாசுரங்கள், ராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாச புராணங்களையும், அவ்வப்போது தக்க புலமை வாய்ந்த பெருமக்கள் மாணவ மாணவிகளுக்கு எடுத்துச் சொல்லுகின்றனர். வகுப்புகள் நடத்துகின்றனர்.

ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் அவர்கள் கலாக்ஷேத்திர வாசிகளுக்கு அருமை அத்தையாக விளங்கி வருகின்றார்.

1944லிருந்து 1950 வரை டைகர் வரதாச்சாரியார் சங்கீத இலாகாவில் பணி ஆற்றி வந்தார். அதற்கு முன்னர், ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள் இதை கவனித்து வந்தார். டைகரின்

மறைவிற்கு பின்னர். சிறந்த வைணீகரான காரைக்குடி சாம்பசிவ அய்யர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் மாணவிகள் பயிற்சி பெறும் பேறு பெற்றனர். ஸ்ரீ வாசுதேவாசாரியார் தங்கள் மத்தியில் இருக்கும் பாக்கியத்தை பெற்றவர்கள் கலாக்ஷேத்திரவாசிகள்.

விடிவேளை 4½ மணியிலிருந்து இரவு 10 மணி வரை வீணையின் சுநாதத்தைக் கேட்டு மகிழ்ந்திருந்தகலாக்ஷேத்திரவாசிகள் இன்று காரைக்குடி சாம்பசிவ அய்யரை இழந்ததால் பெருந்துயரத்தில் ஆழ்ந்திருக்கின்றனர்.

சங்கீத சிரோன்மணி வகுப்பைத் தவிர, கலாக்ஷேத்திர டிப்ளமோ வகுப்புகளும் நடைபெறுகின்றன. ஸ்ரீவாசுதேவாசாரியாரிடம் பாடம் கற்ற சீடர்கள், மற்றும் N. P. ராமனுதன் (டைகரின் சீடர்) ஸ்ரீராமஸ்வாமி அய்யங்கார் (டைகரின் சகோதரர்) T. பசுபதி (இளம்பாடகர், டைகர், வாசுதேவாசாரியாரின் சீடர்) போன்றவர்கள் இவ்வகுப்புகளை கவனித்துக்கொள்கிருர்கள்.

பரதநாட்டிய வகுப்புகளை ஸ்ரீமதி ருக்மணி அவர்களே கவனித்துக்கொள்கிருர்கள், ஸ்ரீமதி S. சாரதா, A சாரதா, N. S. ஜயலக்ஷ்மி முதலியோர் "தியரி 'Theory,' வகுப்புகளையும், ஸ்ரீமதி S. வசந்தா, மைலாப்பூர் கௌரி அம்மாள் அவர்களும் கவனித்துக்கொள்கிருர்கள்.

கதகளி வகுப்புகளை நடத்துபவர். ஸ்ரீ சந்து பணிக்கர் எனும் மாபெரும் கலைஞர் ஆவர். அவ்வாசானிடம் பாடம் கேட்பவர்கள் உண்மையில் அரிய வாய்ப்பு பெற்றவர்கள்தான். ஜனுதிபதி பரிசு பெற்றவர் அவர்.

ஓவிய வகுப்புகளை சாந்தி நிகேதனத்தில் நந்தலால் போஸிடமும், முன்னர் கலாக்ஷேத்திரத்திலும் பயிற்சிபெற்ற ஸ்ரீ தயாநந்த் அவர்கள் நடத்துகிருர். தவிரவும் நூல் வெளியீட்டு இலாகா, பல பழம் சுவடிகளை ஆராய்ந்து அரிய நூல்களை வெளியிட்டு வருகிறது. ஆராய்ச்சியும் நடைபெற்று வருகின்றது.

கலாக்ஷேத்திரத்தின் மற்ருெரு பகுதியைப் பற்றிகூற மறந்துவிட்டேன். அது பெண்களுக்கு முக்கியமானதல்லவா? அதுதான் கலாக்ஷேத்திரத்தின் நெசவு இலாகா. இவ்விலாகாவினர் சித்திர வேலைப்பாடமைந்த புடவைகள், விரிப்புகள், திரைச்சீலைகளைத் தயாரிக்கின்றனர். இந்திய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் இவ்வழகிய டிசைன்களும், ஆழ்ந்த நிறங்களின் வர்ணச்சேர்க்கையும் மனதைக் கவர்கின்றன. நூல் புடவைகள், பட்டு புடவைகள், இங்குகிடைக்கின்றன.

கலாக்ஷேத்திரத்தின் நாட்டிய நாடகங்கள் அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்றவைகள். குற்ருலக் குறவஞ்சி, சீதா கல்யாணம், குமார சம்பவம் போன்ற நிகழ்ச்சிகளை தனக்கென வகுத்துக் கொண்டிருக்கும் பாணியில் நடத்தி வருகின்ருர் ஸ்ரீமதி ருக்மணி தேவி. கலாக்ஷேத்திர மாணவ மாணவிகள் பலர் அரசாங்க உபகாரச் சம்பளம் பெற்றவர்கள். பல்வேறு நாட்டு பெண்களும், இங்கு இந்தியக் கலைகளை கற்கும் அவாவுடன் விழைந்து வருகின்றனர் கலாக்ஷேத்திரம் நம் பாரத கலாசாரத்தை பிரதிபலிக்கும் ஒரு சிறந்த ஸ்தாபனமாகும். ●

---

(டில்லித் தபால் தொடர்ச்சி)

படுத்தவே. மகாத்மா காந்தி சத்யாக்கிரகம் என்ற அரும்பெரும் ஆயுதத்தை தேசத்துக்கு அளித்தார். அதை உபயோகிக்க பல கட்டுப்பாடுகளையும் வரையறுத்தார். ஆனுல் அகமதாபாத்தில் நடப்பது என்ன? சத்தியாக்கிரகத்தின் பெயரால் துராக்கிரகம். இந்த நிலைமையில் தேசம் எப்படி உருப்படும்?

* * *

கேரளத்தில் மந்திரி சபை ஏற்பட்டபொழுது அது பாட்டாளிகளுக்கு ஒரு கலங்கரை விளக்கு என்று பத்திரிகைக்காரர்கள் உள்பட பல அறிஞர்கள் அபிப்பிராயப்பட்டனர். "ஆகா! நம்பூதிரிபாத் எப்பேர்ப்பட்ட அறிவாளி? ஸ்ரீ தாமஸைப்போன்ற பாட்டாளியின் துணைவன் உண்டா" என்றெல்லாம் ஆர்ப்பரித்தனர். ஒரு வருஷம் சர்க்கார் நடந்த பிறகு நிலைமை என்ன? கம்யூனிஸ்ட் கட்சி போலீஸுக்கும்மேல் ஒரு மகாபோலீஸ் என்று திகழ்கிறது.

கொஞ்சம் கொஞ்சமாக ஜனங்களின் சுதந்தரங்கள் பறிமுதலாகி இன்று கம்யூனிஸ்ட்களைத் தவிர மற்றவர் யாரும் கூட்டங்கள் போட முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சென்ற மாதத்தில் கம்யூனிஸ்ட்களுக்கு எதிராக முழுமுச்சாக பிரசாரத்தில் இறங்கிய காங்கிரஸ்காரர்களுக்கும் கம்யூனிஸ்ட் கட்சி மெம்பர்களுக்குமிடையே பல இடங்களில் கை கலப்பு ஏற்பட்டு ரத்தக் களறி, கொலை முதலியவை சர்வசகஜமாகி விட்டன. இந்தக் கட்டத்தில் கேரள போலீஸ் கண்மூடி மௌனியானதுடன் கம்யூனிஸ்ட்கள் உதை வாங்கினுல் உடனே அலறியடித்துக் கொண்டு நடவடிக்கையில் ஈடுபடுகின்றன.

இதுவரை இவைகளை அப்பட்டமாகச் சொல்ல யாரும் துணியவில்லை. இப்பொழுது இந்த மாதிரி அதிக்கிரமங்களை நிறுத்த வேண்டும் என்ற கூக்குரல் இங்கு கேட்கிறது. ஒரு சாரார் ஜனுதிபதி ஆட்சி ஏற்படவேண்டும் என்றுகூட சொல்லுகிருர்கள். நிலைமை மோசம் என்பதில் சந்தேகமில்லை. ஆனுல் செய்யவேண்டியது என்னவென்ருல் காங்கிரஸ்காரர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு நன்ருக எதிர்ப்பிரசாரம் செய்யவேண்டும். ஜனுதிபதியின் ஆட்சி ஏற்பட்டால் அதை கம்யூனிஸ்ட்கள் மிகவும் வரவேற்று குடியரசில் காங்கிரஸ்காரர்களுக்கு நம்பிக்கையில்லை என்று பிரசாரம் செய்வார்கள். ○

# விஜயா என் கண்ணே!




அட்டைப்படக் கதை

அ. வா. ரா

விடிந்தால் விஜயாவுக்கு விவாகம். என் 'விஜிகுட்டி' நாளை வேறொருவனுக்குச் சொந்தமாகப் போகிறாள்.

அங்கே ஜானவாஸத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் சன ஜோராக நடந்துகொண்டிருந்தன. இங்கே ஜன சந்தடியற்ற இடத்திலே நான் வெந்து விரிந்துகொண்டிருந்தேன்.

விஜயா எப்படி இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்தாள்? 'ஈருடலும் ஒருயிரும் நாம்' என்று சொன்னவள், 'உங்களுக்காகவே நான்; எனக்காகவே நீங்கள்' என்று பேசியவள், எப்படி வேறொருவனுக்கு மாலையிடத் துணிந்தாள்?

துணியாமல் வேறு வழி? அவள் தந்தை என்ன சாதாரண மனிதரா......? கலிகால துர்வாஸரல்லவா? தனது எண்ணத்துக்கு விரோதமாக அவர் என்றும், எதையும் செய்ததில்லையே...! கடந்த பத்து நாட்களாக மகளை வெளியே விடாமல், வீட்டுக்குள்ளேயே பூட்டி வைத்திருக்கிறார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!

நேரம் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கிக்கொண்டிருந்தது. எனக்கும் விஜயாவுக்கும் உள்ள உறவு, சிறிது சிறிதாக விலகிக்கொண்டிருந்தது. 'ஐயோ, விஜயா! நாளைக் காலை, உன் கழுத்திலே மாற்றான் ஒருவன் தாலி கட்டப் போவதைப் பார்த்துக்கொண்டு, இந்தப் பாவி எப்படி உயிருடன் இருப்பேன்?'

திடீரென்று என்னையுமறியாமல், 'குபுக்'கென்று நான் எழுந்து நின்றேன். கண் மண் தெரியாமல் எங்காவது, ஓடிவிடவேண்டும் என்ற வெறியுணர்ச்சி என் உள்ளத்தே கிளர்ந்தெழுந்தது. ஓடுவதற்காகத் திரும்பினேன். அந்தச் சமயத்தில்......

"என்ன பிரதர்...? சோகபுராணம் படிக்கிறாப் போலிருக்கு......உம்......என்ன செய்வது? காதலாவது வெண்டைக்காயாவது......? எல்லாம் வெறும் வேஷம், பிரதர், வெறும் வேஷம்!"— அட்டகாசமாகக் கையையும் காலையும் ஆட்டி, நாடக பாணியில் பேசியவாறு நாராயணன் நின்றான்.

நான் வெறுப்புடன் அவனை ஏறிட்டு நோக்கினேன்! இதே நாராயணன் அன்று, விஜயாவுக்கும் எனக்கும் குறுக்காக நின்றிருக்கிறான். எங்கள் காதலுக்கு வில்லனாக இருந்தான். இன்று...? அவனுடைய சூரத்தனம் விஜயாவின் அப்பாவிடம் பலிக்கவில்லை.

"என்ன அட்பனே, இந்தக் கட்டை இப்படி வெறித்துப் பார்க்கிறது? வாழ்வா, சாவா என்ற பிரச்னையா...? பாவம், காத்திருந்தவன் காதலியை நேற்று வந்தவன் தூக்கிச் சென்ற கதையாக.. ..."

"சட், நிறுத்து... பேடிப்பயல்... உன் சூரத்தனத்தைக் கல்யாண வீட்டில் காட்டாமல், இங்கே வந்து கோழைபோல் உளறிக்கொட்ட வெட்கமாக இல்லை..." என்று அவனைத் தள்ளிவிட்டு, விடுவிடென்று கால்போன திக்கில் நடக்கத் தொடங்கினேன்.

"அடடா...மஜ்னு கோபமா! போரார்டா... லைலாவை வேண்டுமானால் கூட்டிட வா...லைலா... லைலா..." என்று கத்தி, உரக்கச் சிரித்தான் நாராயணன்.

அந்தச் சிரிப்பின் அலைகள் என் மனப்பாறையில் பட்டு, பன்மடங்கு ஒலி அலைகளாக எதிரொலிக்கத் தொடங்கின. "கோழை, கோழை" என்ற ரூபத்தில், அந்த ஒலி அலைகள் திரும்பத் திரும்ப ரீங்காரம் செய்துகொண்டே இருந்தன.

* * *

கோழை! உம், நானா கோழை, அப்படியானால் காதலில் தோல்வி கண்ட அனைவருமே கோழைகள்தானா? லைலாவின்மேல் தன் உயிரையே வைத்திருந்த மஜ்னு கோழையா? ஏழை அனார்கலியினிடம் கொள்ளை ஆசை வைத்திருந்த, அக்பர் மகன் கோழையா?

அவர்களெல்லாம் கோழைகள் என்றால் என்னையும் அந்தப் பட்டியலிலே சேர்த்துவிடுங்கள்.

விஜயாவை நான் காதலித்தேன், முழு மனதுடன். அவளை என் வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்ள வேண்டும் என்று மனக்கோட்டைகள் பல கட்டினேன், ஒரு சமயம். ஆனால் இன்று......?

போயிற்று, போயிற்று; எல்லாம் கதையாய், கனவாய், கற்பனையாகப் போய்விட்டது.

விஜயாவை எனக்குச் சிறுவயது முதலே தெரியும். பிரபல மிராசுதார் மேகநாதனின் ஏக புதல்வி அவள். நானோ ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் ஏழை மகன்.

ஏக புதல்வியும், ஏழை மகனும் எப்படியோ ஒன்றுகிவிட்டார்கள், பிஞ்சு உள்ளத்திலே வேரூன்றிய அன்பு, பருவத்திலே காதல் விருட்ச மாக வளர்ந்தது.

வில்லன் இல்லாத காதல், நடனம் இல்லாத தமிழ்ப்படம்போல. எங்கள் காதலின் குறுக்கே யும் வில்லனுக நாராயணன் வந்து சேர்ந்தான்.

ஒரு நாள்.........

வழக்கம்போல் விஜயா குளத்திலே குளித்துக் கொண்டிருந்தாள். ஏதேச்சையாக நான் அந்தச் சமயம், குளக்கரைப் பக்கம் செல்ல நேர்ந்தது. என்னைக் கண்டதும் விஜயா, "நீங்களும் குளிக் கத்தானே" என்றுள்.

நான் லேசாகச் சிரித்தேன். "எனக்கும் ஆசை தான், உன்னுடன் ஜலக்கிரீடை செய்ய. உன் அப்பா அம்மா விடுவாரா. பிச்சி எடுத்துவிட மாட்டாரா என்னை."

'கலகல'வென்று வெண்கலக்குரலெழுப்பி, முத் துப் பற்களைக்காட்டினுள் அவள்.

அதே சமயம் எதிர்க்கரையில் தொப்'பென்று சப்தம் கேட்டது.

நான் திடுக்கிட்டு எதிர் நோக்கினேன். விஜயா வும் திரும்பிப்பார்த்தாள். ஒன்றையும் காணும்! பின் சத்தம் எப்படி வந்தது...?

'யாராவது கல்லைத் தூக்கிப் போட்டிருப்பார் கள்' என்ற நினைப்பில் மெள்ள அங்கிருந்து நகர்ந்தேன்.

"எங்கே கிளம்பிவிட்டீர்கள்?" என்றுள் விஜயா.

"பின்னே கிளம்பாமல்...? ஒரு பெண் குளிப் பதை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நிற்கும் அளவுக்கு, நான் என்ன ரோஷம் கெட்டவனு? இல்லை, உன் அப்பா என்ன சாந்த சொரூபியா? என் முதுகிலே பலம் இல்லை; வரேன்..."

நான் சிறிது தூரமே நடந்திருப்பேன். அதற்குள் "ஐயய்யோ" என்ற அலறல்.

நான் திடுக்கிட்டுத் திரும்பினேன்.

"ஐயோ என் காலைப் பிடித்து யாரோ இழுக் கி..." விஜயாதான். என் 'விஜிக்குட்டி'யேதான்.

"விஜி" என்று கூவியவாறு, ஒரே பாய்ச்சலாகக் குளத்தில் பாய்ந்தேன். தண்ணீரில் மூழ்கியவாறு நான் விஜயாவை நெருங்கியவுடன்......

"அடப் பாவி" என்று என் உள்ளம் அலறியது.

அடுத்த விநாடி, தண்ணீருக்குள் இரண்டு ஜதை முரட்டுக் கரங்கள் உராய்ந்தன.

விஜயாவின் காலைப் பிடித்திழுத்தது வேறு யாருமல்ல; சாட்சாத் நாராயணனேதான்! முன்பு 'தொப்'பென்று எதிர்கரையில் கேட்ட சப்தத்திற்குக் காரணகர்த்தாதான், தண்ணீரில் மூழ்கியவாறு வந்து, குளித்துக்கொண்டிருக்கும் விஜயாவிடம்......

தண்ணீரின் மேல்பரப்புக்கு வந்த இருவரும் சளைக்காமல் அரைமணி நேரம், சண்டை செய் தோம். முடிவில்......

நான் விட்ட ஒரு குத்தில் பத்தடி தள்ளிப் போய் விழுந்தான் நாராயணன். திரும்பவும் பாய்ந்து என்னிடம் வருவான் அவன் என்று நான் நினைத்துக்கொண்டிருக்கும்பொழுது......

'விர்'ரென்று அம்பு மாதிரி கரையை நோக்கிச் சென்றுவிட்டான் அவன்.

கழுத்தளவு தண்ணீரில் நின்றுகொண்டிருந்த நான் திரும்பினேன். இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டிருந்த விஜயா, 'லபக்'கென்று தண்ணீருக்குள் மூழ்கி, வேகமாக என்னிடம் வந்து தலையைத் தூக்கினுள்.

தண்ணீருடன் அவள் முகத்தில் கண்ணீரும் கலந்திருந்தது. "கலங்காதே விஜயா! அந்தப் பயலுக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்......" என்றேன், ஆதரவாக அவள் கண்களைத் துடைத்தவாறு. அந்த சமயத்தில்...

"டேய், அயோக்கிய ராஸ்கல்!" என்ற இடி குரல் கரையிலிருந்து எழுந்தது.

இருவரும் அதிர்ச்சியுடன் திரும்பினேம். கரை யிலே......

விஜயாவின் அப்பா, கோபக்கனல் வீச நின்றி ருந்தார். அவருக்குப் பக்கத்தில் நாராயணன்.

எனக்கு விஷயம் விளங்கிவிட்டது!

"உம்... இவ்வளவு தூரத்துக்கு வந்துவிட் டாயா...? தனியாக ஒரு பெண் குளித்துக் கொண்டிருந்தால்......"

வாயைத் திறக்காமல் நானும் விஜயாவும் கரை சேர்ந்தோம். நான் கரையை அடைந்த அந்தக் கணம்...

'பளார்!'

ஓங்கி என் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. மறு கணம், விஜயாவை இழுத்துக்கொண்டு அவர் போய்க்கொண்டிருந்தார்.

வெற்றிப் பெருமிதத்துடன் நாராயணன் பின் னுல் சென்றுகொண்டிருந்தான்.

நான் கன்னத்தைத் தடவிக் கொண்டேன். பெண்ணைக் காப்பாற்றியவனுக்கு, அவள் தந்தை யிடமிருந்து கிடைத்த பரிசு...!

அன்றிலிருந்து, விஜயாவை நான் பார்ப்பதே அபூர்வமாகிவிட்டது. ஒரு வாரம்வரை பல்லைக் கடித்துக் கொண்டிருந்தேன். எட்டாம் நாள்!

என் தலையிலே இடி விழுந்தது!

விஜயாவுக்குக் கல்யாணம் ஏற்பாடாகியிருப் பதாக செய்தி வந்தது.

நான் துணிந்து ஓடினேன் விஜயாவின் வீட்டிற்கு.

என்னைக் கண்டதும் அவள் தந்தை எகிறிக் குதித்தார். "எங்கே வந்தாய்? அன்று குளத் திலே என் பெண்ணை அவமானப்படுத்தியது போதாமல் இங்கேயும் வந்து விட்டாயா...? போய்விடு, நான் மிருகமாவதற்குள் போய்விடு..."

"மாமா!" என்றேன் நான் நிதானமாக.

'பளார்!'

இரண்டாவதாக இன்று ஓர் அறை!

"யாரடா மாமா உனக்கு! ஊரில் உள்ள அனு தைகளுக்காகத் தான் நான் பெண்ணைப் பெற்று வைத்துக்கொண்டிருக்கிறேனு.........ராஸ்கல்..."

நான் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. கன்னத்தை ஒரு கையால் பிடித்தவாறு, "அன்று நடந்த சம்பவம் வேறு... அதைக் கூற இன்று வரவில்லை ... விஜயாவை எனக்கு..."

வாக்கியத்தை முடிக்கவில்லை நான். அதற்குள்



புலியாக என் மேல் பாய்ந்த அவர், கழுத்தைப் பிடித்து என்னை வெளியே தள்ளிக்கொண்டு போய்த் தள்ளினர். நான் எழுந்திருப்பதற்குள் கதவு தாள் போடப்பட்டது. விரக்தியுடனும் வேதனையுடனும் நான் திரும்பினேன்!

தொடர்ந்து பத்து நாட்கள் விஜயா வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தாள். கல்யாண காரியங்கள் துரித கதியில் நடந்தன. பட்டணத்து மாப்பிள்ளை; படித்துப் பட்டம்பெற்று பெரிய உத்தியோகம் வகிப்பவன். நாளைக்குக் கல்யாணம். பொழுது விடிந்தால் என் 'விஜிகுட்டி'க்குக் கல்யாணம், ஆனால் நானோ...?

ஊரை விட்டு ஓடிக்கொண்டிருக்கிறேன், பைத்தியக்காரனைப்போல.

வாரம் ஒன்று ஓடி மறைந்தது! நான் ஊரை விட்டு வந்து ஏழு நாட்களாகிவிட்டன. விஜயா இப்பொழுது மாற்றானின் மனைவியாக வீற்றிருப்பாள். உம் நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!

பாழும் மனம் கடந்த ஒருவார காலமாக விஜயாவைப் பார்க்கவேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது.

ஆவலை அடக்க முடியாமல், ஆசைக்கு அணை போட முடியாமல் ஊரைநோக்கித் திரும்பினேன்.

இரவு மணி எட்டு!

ஊர் எல்லையில் கால் வைத்தபொழுது ஊரே அமைதியில் ஆழ்ந்திருப்பது போன்ற பிரமை! காதலில் தோல்வி கண்ட என் உள்ளத்தைப் போல, மரங்கள்கூட ஆடாமல் சலனமற்று நின்று கொண்டிருந்தன.

என் கால்கள் விஜயாவின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. வீடு வந்தது, துணி வைத்தேக்கி, தைரியத்தைக் குழைத்து, அச்சத்தை உதறி, உள்ளே காலடி எடுத்துவைத்தேன்.

உள்ளே.........

ஒரு நாற்காலியில் சோகமே உருவாக வீற்றிருந்தார் விஜயாவின் தந்தை! ஏன் இந்தச் சோகம்? ஒரு வேளை விஜயாவை புருஷன் வீட்டுக்கு அனுப்பி விட்டார், அந்த வருத்தம் தாளாமல்...

என் காலடிச் சத்தம் கேட்டு, நிமிர்ந்தார் அவர் மறு விநாடி...

எங்கிருந்துதான் அவருக்கு அவ்வளவு பலம் வந்ததோ, நாற்காலியை ஓர் உதை உதைத்துக் கொண்டு, துள்ளி எழுந்தார். எதற்காக இந்தப் படபடப்பு என்று தெரியாமல் நான் குழம்பிக் கொண்டிருக்கும் பொழுது.

பாய்ந்து வந்தார் என அருகே.

'பளார்!'

மூன்றும் முறையாக, அன்று அவர் கை என் கன்னத்தைப் பதம் பார்த்தது.

விவரம் புரியாமல் நான் விழித்து நிற்கும் வேளையில்

"அடப் பாவி! என் குடியைக் கெடுக்க வேண்டும் என்று எத்தனை நாளாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தாய்... சொல், சொல்... எங்கே விஜயா...? எங்கே மறைத்து வைத்திருக்கிறாய் அவளை?"

"மாமா..." என்று வீறிட்டேன் நான்.

'பளார்' நான்காவது அறை.

"என் மானம், மரியாதை, அந்தஸ்து, கௌரவம் எல்லாவற்றையும் மண்ணோடு மண்ணாக்கி விட்டு, கலியாணத்திற்கு முன் தினம் அவளை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டு, இப்பொழுது மாமா உறவா கொண்டாடுகிறாய், பாவி! உன்னைச் சும்மாவிடப் போவதில்லை. என் பெண்ணின் வாழ்வு போனாலும் போகிறது; உன்னைச் சிறையில் தள்ளி..."

குழப்பம், குழப்பம், ஒரே குழப்பம்! விஜயா கல்யாணத்திற்கு முன் தினம் ஓடிவிட்டாள். ஆ... யாருடன்...? ஐயோ! இவர் தவறாக எடை போட்டுவிட்டாரே. பழி ஓரிடம், பாவம் ஓரிடம் என்பது போல, காக்கை உட்கார பனம் பழம் விழுந்த கதை போல, நான் ஊரைவிட்டுப் போன அன்றே விஜயாவும் ஓடி விட்டிருக்கிறாள்.

எங்கே, யாருடன், எப்படி...?

ஏதும் தெரியாத நான் குற்றவாளி!

அன்று குளத்தில் கதறிய விஜயாவைக் காப்பாற்றப் போனேன். அதற்கு ஓர் அறை; 'விஜயாவை எனக்குக் கொடுங்கள்' என்று கேட்கப் போனேன். அதற்கு மற்றோர் அறை. இன்றோ? விஜயாவைப் பார்க்கலாம் என்று வந்திருக்கிறேன். இதற்கு இரண்டு அறைகள்.

குற்றம் ஏதும் செய்யாதவனுக்குக் கிடைத்த பரிசு நான்கு அறைகள்!

"என்ன வாயை மூடிக்கொண்டு நிற்கிறாய்? சும்மா இருந்தால் விட்டுவிடுவேன் என்று நினைக்கிறாயா? புளியமரத்தில் கட்டிவைத்து உண்மையை வரவழைத்துவிடுவேன். உம்... சொல்லு... எங்கே என் கண்மணி...! எங்கே என்..." அவர் வாய் ஓயவில்லை. அதற்குள்....

'தட தட'வென்று நாலைந்து பேர் உள்ளே வரும் பூட்ஸ் சத்தம்!

ஆ... இதென்ன? போலீஸ்காரர்கள். அவர்களுடன்.... "விஜயா" என்னையுமறியாமல் நான் கூவியே விட்டேன். விஜயாவுடன் ஓர் இன்ஸ்பெக்டரும் நான்கைந்து போலீஸ்காரர்களும் தான் உள்ளே நுழைந்தனர்.

"கண்ணே, விஜயா!" என்று மகளை சேர்த்து அணைத்துக்கொண்ட விஜயாவின் தந்தை, "நல்ல சமயத்துக்கு வந்தீர்கள், சார்! பயலை இங்கேயே மடக்கி வைத்திருக்கிறேன். தள்ளிக்கொண்டு போங்கள்." என்றார்.

"மிஸ்டர் மேகநாதம்! குற்றவாளி அகப்பட்டு விட்டான்! ஏதுமறியாத அப்பாவியை எதற்காக எங்கே தள்ளிக்கொண்டு போகச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் அமைதியாக.

"குற்றவாளி அகப்பட்டு விட்டானா? அப்படியானால் இவன்"

"அல்ல... நாராயணன்தான் தங்கள் பெண்ணைக் கடத்திச் சென்றது. கல்யாணத்திற்கு முன் தினம், இதோ நின்றுகொண்டிருக்கிறாரே இவர் எழுதியதுபோல் ஒரு கடிதம் தயார் செய்தார். அந்தக் கடிதத்தில், "விஜயா! நீ நாராயணனுடன் உடனே புறப்பட்டு வந்துவிடு. அவன் உன்னை என்னிடம் கொண்டுவந்து சேர்ப்பான்!" என்று எழுதி, கீழே இவருடைய பெயரை போட்டு, விஜயாவிடம் கொண்டு வந்து கொடுத்திருக்கிறான். கள்ளம் கபடு தெரியாத உங்கள் பெண், அந்தப் பொய் கடிதத்தை நம்பி அவனுடன் போயிருக்கிறாள். வெகுதூரம் தள்ளிக்கொண்டு சென்றவன், உங்கள் பெண்ணைக் கெடுக்க முயற்சித்திருக்கிறான். சமயத்தில் நாங்கள் சென்று, உங்கள் பெண்ணைக் காப்பாற்றினோம்."

"என்னை மன்னித்துவிடு" என்று என்னை அணைத்துக் கொண்டார்.

என் கண்கள் விஜயாவின் பக்கம் திரும்பின. அவள் அங்கில்லை. தோட்டத்திற்கு ஓடினேன். தோட்டத்திலே பூரண சந்திரன் குளுமையை அள்ளி வீசிக் கொண்டிருந்தான். விஜயா குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். நான் அவள் எதிரே சென்று, அவள் கையைப் பிடித்தேன். கண்களில் கண்ணீர் பெருகிக் கொண்டே இருந்தது.

"சீ, அசடு! எதற்கு அழுகை?" என்றேன்.

அவள் கண்ணீரைத் துடைத்தவாறு.

"ஓடிப்போன என்னைக் கைவிடமாட்டீர்களே?"

அப்படியே அவளை, இறுக அணைத்துக்கொண்டேன். "விஜயா, என் கண்ணே! நீ அன்றும் என்னுடையவள்; இன்றும் என்னுடையவள்; இனி என்றும் என்னுடையவள் தான்!"

புயல் ஓய்ந்தது; கண்ணீர் நின்றது; அமைதி தவழ்ந்தது! ★

# மண்ணகத்து விண்ணகம்...?

தி. பக்ஷிராஜன்

## 1. வல்விழி!

காலப் பெருவெளியில் வெகுதூரம் நடந்து வந்து விட்டோம். ஆனால் நாம் செல்லும் திசை நேரானதா என்ற தயக்கம் திடீரெனத் தோன்றுகிறது. வந்த வழியைத் திரும்ப நோக்குகிறோம். சிறிது தூரம்வரை நேராகத் தான் வந்திருக்கிறோம். பிறகுதான் கோணல் வழியில் எப்படியோ புகுந்துவிட்டோம்!

வெண்ணிலவு கனிவதும், விண்மீன்கள் பூப்பதும் விண்ணகத்தில்தான்; மின்னல் நடமிடுவதும், இடி தாளமிடுவதும், முகிற் கூட்டம் உலவுவதும் அங்குதான்; வெண் பரிதி விளங்குவதும் அங்குதான்; — ஆனால் அந்தக் கலையுலகம் மனிதன் கைக்கெட்டாத உயரத்தில் அல்லவா தொங்குகிறது?

அதற்குப் போட்டியாக சென்ற காலச் சொல் வேந்தர்கள் மண்ணகத்திற்கருகே விண்ணகம் ஒன்றினை வேய்ந்தனர். அங்கே, காதல் நிலவையும், இன்பத் தாரகைகளையும், வீர உறுமலையும், வெற்றி மின்னலையும், கனவு முகில்களையும், புகழ்ப் பரிதியையும் நிறுத்திவைத்தனர். அதில் உதயத்தின் ஒளியையும், அந்தியின் அழகையும் வரைதற்கு வாழ்வின் இனிய அனுபவத்தை வர்ணமாகக்கொண்டனர். அதுதான் அகட்புற இலக்கியம். அந்த விண்ணக வாழ்விலிருந்து நாகரீகம் பறித்த பெருங்குழியில் வீழ்ந்துவிட்டோம். அந்த உணர்ச்சி விதானம் சொல்லாலும் தொடமுடியாத உயரத்தில் தொங்குகிறது; இப்போது நம் விழிகளை உயர்த்திக் காணும்போது பெருமூச்சுவிட்டு நிற்கிறோம்!

மண்ணகத்துப் பசிகளனைத்தும் நம்மைச் சூழ்ந்துவிட்டன. அறிவுப் பசி, அன்புப் பசி ஆன்மப் பசி, இன்பப் பசி, கலைப் பசி, காவியப் பசி — அத்தனைக்குமிடையில் திணறுகிறோம். பழங்கணக்கைப் பார்க்க முயல்கிறோம். முன்னவர் விட்டுச் சென்ற வாழ்வுக் கணக்கைப் புரட்ட முற்படுகிறோம்!

கோணல் வழியை விடுத்து, பெருமூச்சை நிறுத்தி, வேதனை நினைவுகளிலிருந்து விடுதலை பெறவேண்டுமா? ஒரு வழிதானுண்டு. சென்ற காலத்தின் பாதையிலே மெல்ல நடந்து செல்ல வேண்டும்! "விண்ணகத்திற்கு" வழியதுதான்!

'உணர்வின் பிறப்பிடம் உள்ளம்—அகம்! அகத்தில் பிறந்து புறத்தில் எதிரொலிப்பதே வாழ்வு கீதம்! அந்த சுக உணர்வின் பிரதிபேதங்களைக் கொண்டு ஆக்கியதுதான் அகத்துறை இலக்கியம்.' முதலில் அதுதான் பாதையோரத்தில் கண்ணில் படுகிறது!

'உள்ளத்து உணர்ச்சிகளுக்குத் தடை விதிக்காத காலம்,' என்ற உணர்வு எழுகிறது. இன்று போல் வாழ்வைப் பாரமாகக் கருதாமல் கலையாகச் சுவைத்துக் கண்ட நினைவும் தொடர்கிறது! பெருமிதம் பொங்க சுற்றிப் பார்க்கிறோம்!

* * *

விண்ணிற்கு வழிவகுத்து நிற்கும் பெருமலையொன்று நிமிர்ந்து நிற்கிறது. பசுமையான மரங்கள்; துள்ளிப் பாயும் அருவிகள்; தவழ்ந்தாடும் சுனைநீர்; சுவைதேக்கும் தேனடைகள்; அவை சிந்தும் துளிசுவைத்து தெறித்தோடும் 'மழலையாறுகள்';—அத்தனையும் அந்தக் குறிஞ்சி நிலத்தைக் கனவுக் களமாகச் சித்தரிக்கின்றன.

அதன் உச்சிமீது உலவிவருகிறான் ஒரு வாலிபன்; பருவத்தின் பொன்னிறம் அவன் அங்கத்தில் மின்னுகிறது!

அப்போது அடிவாரத்திலிருந்து 'கலகலப்' பொலி யெழுகிறது; அதையொட்டி மகளிர் கூட்டமொன்று தென்படுகிறது; அவர்களுக்கிடையே விண்மதிபோல் தனித்து விளங்குகிறாள் ஒரு மடமகள்! நீர்ப்பூக்களுக்கிடையில் முறுவலித்து நிற்கும் தாமரையை நினைவூட்டும் உருவம்! அந்தக் கூட்டம் மலர்ப் பந்தொன்றை வீசியெறிந்து விளையாடிக்கொண்டே வருகிறது.'

அவனும் மலைக்காட்சியைச் சுவைத்த வண்ணம் மௌனமாய் வருகிறான். மகளிர் கூட்டம் உச்சியைநாடி ஓடிவருகிறது.

இயற்கை வேடிக்கைப் பார்த்து நிற்கிறது!

ஆயத்தொடும் அணங்கு அந்த மலையீன்ற தென்றலுக்கு நடை கற்பித்துக்கொண்டு வருகிறாள். அவனும் கனவுகளில் மிதந்துவருகிறான்.

காலம் 'சட்'டென்று சுழல்வதை நிறுத்திக் கொள்கிறது!

அவனும்...அவளும் —வளர்பிறைப் பருவத்தின் முற்றத்தில் வந்து நிற்கும் இருவரும்...... எதிரெதிரே! விழிகள் விருந்துண்கின்றன!

அவன் உரையாடல் அந்தரத்தில் நின்றது; அதரங்கள் துடிக்கின்றன; வதனம் தாழ்கிறது; ஆனால் பசிவிழிகள் அலைபாய்கின்றன.

அவனும் நிலையிழந்தான். கனவிழந்தான்; செயலிழந்தான்; அவள் விழிகளின் கூர்மைக்குத் தன் உள்ளத்தைப் பலியாக்கி நின்றான்!

அவனோ, அந்த மலையின் தலைவன்; அவளோ அடிவாரத்துத் தாழ்குலப் பெண்; — இடத்தின் பேதம், அவர்கள் குலம், செல்வம், அத்தனையிலும் பிரதிபலிக்கத்தான் செய்கிறது. என்றாலும் என்ன? விழிக் கனவுகளில் உள்ளங்கள் சங்கமிக்கின்றன. பேதங்கள் அமிழ்ந்துவிடுகின்றன.

இயற்கை சிரிக்கிறது; பருவம் கெலிக்கிறது!

இன்ப வெள்ளம் பண்பின் எல்லைகளை அழித்துக்கொண்டு ஓடுகிறது!

பெண்மை குனிகிறது, வில்லைப்போல!

ஆண்மை பணிகிறது, விடுபட்ட கணைக்கு இலக்கானதுபோல!

அவர்கள் நிற்கின்றனர்!

காலம் கரம் நீட்டிப் பிரிக்கிறது; பிரிகின்றனர், இதயங்களை யிழந்துவிட்டு!

அந்த மலைநாடன்தான் அதிகமாய்த் தாக்குண்டவன்! அவன் எங்கு சென்றாலும் இரு கூர்விழிகள் இடைமறிக்கின்றன! அவை அவன் மார்பிலேயே தாக்கி வீழ்த்திவிட்டன; வேலுக்குத் தோற்காத அவன், வேல்விழிக்குத் தோற்றுவிட்டான்; ஆனால் அதில் அவனுக்குப் பெருமை வேறு?

சுனையின் கரையருகே யமர்கிறான். நீர்ப்பூக்கள் தள்ளாடுகின்றன; மீன்கள் அடித்தலத்தில் புகுந்துகொள்கின்றன; அவன் உள்ளத்தை ஊடறுத்த இருவிழிகளுக்குமுன் நிற்கக் கூசித்தான் அவைகள் ஒளித்துக்கொள்வதுபோல் அவனுக்குத் தோன்றுகிறது.

இரவு முழுதும் விழியும் இமையும் ஊடலில் அணைய மறுத்தன.

விண்ணை நோக்குகிறான். விண்மீன்களும் அவன் உள்ளத்தில் தைத்து நிற்கும் விழிகளைக் கண்டு வெட்கத்தில் கண்ணை மூடிக்கொள்கின்றன; காணும் பொருள்களனைத்திலும் அக்குளிர் விழிகள் உறவாடி நிற்கின்றன!

அவன் தனியனானான்; தன்னிலை மறந்தான்!

அவனுடைய உயிர்தோழன் அவனை நெருங்கி வினவுகிறான். "அன்புள்ள மலைநாடனே, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் அணிகலன்களை மகளிர்க்குப் பூட்டிய சமுதாயக் கரங்கள் ஆடவர்க்கும் பல பண்புகளைப் படைக்கலன்களாய் அணிவித்துள்ளதை அறிவாயா?"

"அறிவேன். அதற்கென்ன?" – தலைவன் கேட்கிறான்.

"அவைகளில் எவற்றையும் உன்னிடம் காணேனே!"

"அத்தனையும் இருந்தன; இப்போது இறந்தன!"

"ஏன்?...?"

"இரு கூர்விழிகள் கொன்றுவிட்டன."

"என்ன?"

"ஆமாம், தோழனே! ஆடவர்க்குரிய பண்புகளைப்பற்றிக் கூறினாய். எவர்மாட்டும் நெருங்கி உறவுகொள்ளும் 'நயன்' எனும் பண்பு; உற்றார், உறவினர், உன்போன்றோர் அனைவருடனும் ஒட்டியொழுகும் 'நண்பு'; தன்னிலும் தாழ்ந்தோர் மாட்டு எதனையும் வேண்டிப் பெற 'நாணும்' தன்மை; தன் உயிரினையும் இரப்பார்க்கு ஈந்து 'பயன்' உள்ளதாக்கிக்கொள்ளும் நோக்கு; தீநெறிவிலக்கிய 'பண்பு'; உலகோடு ஒட்டி வாழ்தல்—அத்தனைப் பண்புகளும் உன்னிலும் மிகுதியாகத்தான் பெற்றிருந்தேன். ஆனால்... ஆனால், அவையெல்லாம் இப்போது எல்லை சுருங்கிவிட்டன; இயல்பு திரிந்துவிட்டன?"

"அப்படியென்றால்...?"

"இனி, அந்த கானகத்துப் பெண்ணின் உறவன்றி, வேறெதுவும் இனிப்பூட்டாது. அவளன்றி எனக்குத் தோழரில்லை; அவள், குலம், செல்வம், அனைத்திலும் என்னிலும் தாழ்ந்தவள்தான். என்றாலும் அவள் அன்பை இரந்துநிற்க நாணுதல் இல்லை. என் உயிரும் அவள் பயன் தழுவியே நிற்கிறது. உற்றவர், ஊரினர் எவரும் அறியா இடத்தில் கூடுதற்குக் களவுநெறி கைக்கொள்ளவும் தயங்கேன்; அப்பொன்னுலகம் கிட்டினால் போதும்; இம்மண்ணுலகை யிழக்கவும் தயங்குதல் இல்லை! தோழனே, இதையெல்லாம் உன்னால் புரிந்துகொள்ளவே முடியாது!"

"மங்கையின் விழிவீச்சிற்கு இவ்வளவு விலையா? விந்தைதான்!"

"தோழனே, செவ்வரி படர்ந்த அவள் குளிர் விழிகள் என்னை மோதியபோது என்னையே நான் இழந்துவிட்டேன். சிவந்த நெற்றி; அதன் மேலே நறுமணக் கூந்தல்; நிமிர்ந்த கொங்கைக் குவடுகள். அவற்றிற்கு நடுவே குவளை மலரைக் கொய்தெடுத்து எதிரெதிராய்த் தொடுத்து வைத்ததுபோன்ற இரு விழிகள், கன்னமேட்டை ஆசனமாய்க்கொண்டு அமர்ந்திருந்தன. நீள் புருவங்கள் இருபுறமும் காவல் நின்றன. அந்தக் காட்சியைக் கண்டளவே தோற்றேன். மெல்லியலாளின் வல்விழிக்கு எதிராட வலுவில்லையே!" இதைக் கூறும்போதே தலைவனின் முகத்தில் பெருமை செம்மை பூசுகிறது.

தோழனுக்குப் புரிகிறது! அது காலத்தின் போக்கு.

உள்ளங்கள் ஒன்றுபட உணர்ச்சிக் குழைவு வேண்டும். அதுதான் தனி மனிதர் வாழ்வின் அடித்தலம். தனிமனிதர் வாழ்வைக்கொண்டு தானே சமுதாயம் அமைகிறது? இயற்கையின் ஆட்சிக்குட்பட்ட அந்த சமுதாயத்தில் தடுமாற்றம் இல்லை; மேடில்லை, பள்ளமில்லை!

ஒரு நிமிடத்தில் இருவாழ்வு ஒருவாழ்வான விந்தையைக் காண நம் உள்ளமும் திகைக்கிறது.

அந்தக் காட்சியின் அழுத்தத்தில் பிறந்த பாட்டைக் காண்கிறோம்;—

"நயனும், நண்பும், நாணு நன்கு உடைமையும்
பயனும், பண்பும், பாடறிந் தொழுகலும்
நும்மினும் உடையேன் ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ...
முதுநீர் இலஞ்சிபூத்த குவளை
எதிர்மலர்ப் பிணையல் அன்னவிவள்
அரிமதர் மழைக்கண் காணா ஊங்கே!"

—(நற்றிணை–160)

இதுபோன்ற எண்ணற்ற எழிலோவியங்களை அழியா வர்ணத்தில் தன்னகத்தே கொண்ட அந்த விண்ணகத்தை விட்டு வர நெஞ்சம் ஒப்பவில்லை; அஞ்சிநிற்கிறோம்!

உவகை கரையுடைத்துப் பாய்கிறது. உணர்வுச் சுழிப்பில் மூழ்கிநிற்கிறோம்! காலம்......? அதைப்பற்றி நமக்கென்ன? ★

# நாதயோகி (காஞ்சிபுரம்) நாயனாப்பிள்ளை

(1887 — 1934)

ரங்கராமானுஜ அய்யங்கார்



புதுவயல் முத்து க. ரு. செட்டியார் வீட்டில் கலியாணம். மாலை நேரம். கலியாணப் பந்தலில் பெருங்கூட்டம். பிரபல வித்துவான்களின் இசை விருந்து. கச்சேரியின் நடுவில் பிரதான வித்துவான் தன்னுடைய 'சில்க் ஷர்ட்'டைக் கழற்றி வைத்தார். பக்கத்தில் உட்கார்ந்திருந்த சிஷ்யர் ஒரு விசிறியை எடுத்து "மாமா"வுக்கு விசிராந்தி அளித்தார். அந்த சமயத்தில் கச்சேரி மேடையிலிருந்து கம்பீரமான குரல் ஒன்று ஒலித்தது. "சங்கரா, சட்டையுடன் கச்சேரிக்கு வரவேண்டாம் என்று ஸுப்பையாவுக்கு அறிவிக்கும்படி நான் சொன்னது என்னவாயிற்று? நீ தெரிவிக்காமல் இருந்துவிட்டாயா?" பேசியவர் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகரற்று விளங்கிய கடம் வித்துவான் பழனி கிருஷ்ணய்யர். அன்று அவர் பக்க ஜமாவாக வீற்றிருந்தார். தனது மாணாக்கரான சங்கரனை நோக்கி அவர் கூறிய மொழிகளே மேற்கண்டவை.

சேலம் ஸுப்பய்யர் என்ற ஒரு மகா வித்துவான் சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் ஜலதரங்கம் வாசிப்பதில் முதன்மைபெற்று விளங்கினார்.* கார்வையும் கமகமும் ஸாத்தியமில்லாதது ஜலதரங்கம். ஆகவே அவர் அவாங்மன கோசரமான வேகத்தில் வாசித்துக் கேட்போருக்குப் பிரமையை உண்டுபண்ணுவார். இவருக்குப் பக்க வாத்தியம் வாசிப்பவர்கள் இவருடைய அதி துரிதமான வேலைகளுக்கு ஈடு கொடுக்கமுடியாமல் சிரமப்படுவார்கள். இதனால் சிறிது பெருமைகொண்ட ஸுப்பய்யர் கடம் கிருஷ்ணய்யரின் ஜம்பம் தன்னிடம் பலியாது என்று இங்கிதம் இல்லாமல் சொல்லி வைத்தார். இது எப்படியோ கிருஷ்ணய்யர் காதில் விழுந்து விட்டது. தன்னம்பிக்கை உள்ள கிருஷ்ணய்யர் ஸுப்பய்யருடைய கச்சேரிக்குப் பக்கவாத்தியம் வாசிக்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்.

---

* கவிழ்த்து வைத்த பித்தளைக் குடங்களைப் போலத் தோன்றும் பல இசைக்கருவிகளை அரை வட்ட வடிவில் அமைத்து, இரு கோல்களினால் வரிசையாகத் தட்டி இசைப்பது இந்தோனீஷியாவில் உள்ள "கெமலான்" என்ற பிரசித்தமான வாத்தியம். அதுவே நமது நாட்டில் 'ஜலதரங்கம்' என்று வழங்கும் இசைக் கருவியின் அடிப்படை என்பது ஆராய்ச்சியாளரின் முடிவு.

புதுவயல் முகூர்த்தத்திற்கு அழைப்பு வந்தது. அங்கு போனபிறகே ஸுப்பய்யர் கச்சேரிக்குத் தனது கடவாத்தியம் ஏற்பாடாயிருந்தது கிருஷ்ணய்யருக்குத் தெரிய வந்தது. கச்சேரிக்குப் புறப்பட ஆயத்தமாகும் பொழுதே கிருஷ்ணய்யர் சங்கரனை அழைத்து, "ஸுப்பையாவின் விடுதிக்கு உடனே போய், இன்றையக் கச்சேரிக்குச் சட்டை போட்டுக்கொள்ளாமல் வரும்படி நான் தெரிவித்ததாகச் சொல்லிவிட்டு வா," என்றார்.

சங்கரன் தன் குருவின் ஆணையை நிறைவேற்றினர். ஆனல் ஸுப்பய்யர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன், "கலியாணப் பந்தலில் பானை உடையாமல் பார்த்துக்கொள்ளட்டும். பக்கவாத்தியந்தான் என்பதையும் மறக்க வேண்டாம்," என்று அவமதித்துப் பேசிவிட்டார்.

கச்சேரி ஆரம்பமாயிற்று. ஸுப்பய்யர் எப்பொழுதும் உள்ளதைவிட அதிகமான வேகத்துடன் வாசிக்கலானர். ஆனல் கருங்கற்கிணற்றுக்கு ஏற்ற இரும்புக் குடம்" என்பதுபோல, கிருஷ்ணய்யர் சற்றும் பின்வாங்காமல் மிகவும் சாதுரியமாக வாசித்தார். "பவ னுத நா ஹ்ருதய முன ரமிம்புமு" என்ற மோஹனராக க்ருதி ஜலதரங்கத்தின் விசித்திர ஜோடனைகளுக்கு மிகவும் ஏற்றது. அந்த க்ருதியை மிகவும் விஸ்தாரமாகவும் அற்புதக் கற்பனைகளுடனும் ஸுப்பய்யர் வாசித்தார். அதன் முடிவில் கடத்திற்குத் தனி ஆவர்த்தம் கொடுக்கப்பட்டது.

ஏற்கனவே கிருஷ்ணய்யரின் வீர ஆவேசம் பலருக்கும் தெளிவுற்றிருந்தது. ஆனல் காரணம் வெளியாகவில்லை. இடைவெளி கிடைக்கும்போதெல்லாம் அவர் புதிது புதிதான லயச்சித்திரங்களை நிறுவிவந்தார். பல இடங்களில் ஸுப்பய்யருடைய நிர்ணயமான லயக்ஞானத்தையும் சோதிப்பனவாக இருந்தன கடத்தின் சின்னஞ் சிறு அறுதிகளும், மோராக்களும். ஆனல் தனியாக வாசிக்கத் தொடங்கியதும் கிருஷ்ணய்யர் ஸுப்பய்யரின் அகந்தையை ஒடுக்கத் திட்டம் போட்டுக்கொண்டார். பல ஜாதிகள், கதிகள், சொற்கட்டு வரிசைகள், குறைப்பு இடங்கள், முதலிய தாளவின்யாஸங்கள் அதிவேகமான காலத்தில் மின்னல்போல ஒன்றை ஒன்று தொடர்ந்து வந்தன. அவருடைய காலப்ரமாணத்தைக் கட்டுப்படுத்தும் எண்ணத்துடன் ஸுப்பய்யர் தனது கைக்கோல்களினல் கிண்ணங்களில் சதுஸ்ர நடையைத் தட்டிக்கொண்டிருந்தார். லய இரகசியங்கள் நிறைந்த மிடுக்கான பகுதிகள் வரும்போது அவருடைய மனஉறுதி கல கலத்தது. கைகள் சோர்வடைந்தன. விலை உயர்ந்த அவரது பட்டாடைகள் வியர்வையில் நனைந்தன. முகத்தில் தாரையாகப் பெருகிய வியர்வைக்கோ அளவில்லை. கிருஷ்ணய்யரின் தனி ஆவர்த்தம் கரைபுரண்டு பெருகிய வண்ணம் இருந்தது. ஸுப்பய்யர் தனது சிஷ்யனைத் தாளம்போடும்படி சமிக்ஞை செய்து தன் கைக்கோல்களைக் கீழே வைத்துவிட்டுச் சரேலென்று தனது அங்கியைக் கழற்றி கீழே வைத்தார். தன் தனி ஆவர்த்தத்தை விமரிசையாக முடித்துச் சபையோரின் நீண்ட, பலத்த, கரகோஷத்தையும் பெற்ற கிருஷ்ணய்யர் மேற்கண்டவாறு கேட்டார்.

இந்தச் சம்பவம் தமிழிசையின் (கர்நாடக ஸங்கீதத்தின்) சரித்திரத்தில் ஒரு கட்டத்தைக் குறிப்பதாகும். தமிழிசைத் தாளம் ஒரு மாபெருங்கடல் எனத்தகும். இதன் திவலை ஒன்றின் அணுவளவுகூடப் பிற இசைமுறைகளில் காண்பதற்கில்லை என்பது கண்கூடு. இதனைப் பல நூற்றாண்டுகளாகப் பேணி வளர்த்தவர்கள் இசை வேளாளப் பெருங்குடிமக்கள். தமிழகத்தில் உள்ளதுபோல் எண்ணிறந்த லய வாத்தியங்கள் வேறு எங்கும் உளவோ?

இப்படி விஸ்தாரமும் எழிலும் அடைந்த தாளப்பகுதி சென்ற ஐம்பது வருஷங்களில் சிகரத்தை எட்டியுள்ளது. இதனல் ஒரு விபரீதம் விளைந்தது. பிடில், மிருதங்கம், கஞ்சிரா. இவற்றில் மிகவும் மேதாவிகளாக முன்னேறிய சிலர், "எங்களுடைய வாசிப்புக்குத் தகுந்த பாட்டு இல்லையே" என்று பேசத் தொடங்கினர்கள். அவர்கள் அனைவருக்கும் வாய்ப்பூட்டு வழங்க வால்நட்சத்திரம்போல ஓர் இசைப் பேறறிஞர் உதித்தார்.

சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் கிராமபோன் தட்டுகளில் தமிழிசையாளர்கள் பலர் முதன் முதலாக இசைப்பதிவு செய்தனர். அந்தத் தட்டுகளில் பல "காஞ்சிபுரம் தனக்கோடி" என்ற அங்கிதத்துடன் முடியும். உன்னதமான பாணியில் ஏராளமான உருப்படிகளைப் பாடிப் பெயரும் புகழும் பெற்று அரசாங்கத்திற்கு வருமான வரியும் கட்டியவர்களில் முதல் ஸ்தானம் பெற்றவர் அந்தத் தனக்கோடி அம்மாள்.

அன்னுருடைய ஸகோதரி காமாக்ஷி அம்மாளின் புத்திரரான ஸுப்ரமண்யம் 1887-ம் ஆண்டில் பிறந்தவர்.

வீட்டில் உள்ளவர்கள் செல்லப் பெயராக, "நாயனு" என்று அழைத்துவந்தனர். அதுவே நாளடைவில் நிலை பெற்று, "காஞ்சிபுரம் நாயனுப் பிள்ளை" என்று முழங்கியது. இளம் பிராயத்தில் அவரிடம் ஸங்கீத வாஸனையே காணப்படவில்லை. உடற் பயிற்சியில் அவர் கவனம் செலுத்திவந்தார். கர்லாச் சுற்றுதல், கோழிச் சண்டை முதலிய சில்லறை வேடிக்கைகள், இவைகளில் அவர் ஊக்கங்கொண்டிருந்தார்.

ஒரு சமயம், சுருதி லய ஸகோதரரான மகா வித்வான் கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யருடைய கந்தர்வ கானத்தைக் கேட்கும் வாய்ப்பு நாயனுவுக்குக் கிடைத்தது. காம்பீர்யமும் கற்பனைப் பெருக்கும் நிறைந்த ஐயர் அவர்களின் பாட்டில் அவர் மெய்மறந்தார். அவரையே தனக்கு லக்ஷ்ய புருஷராகக் கொண்டு உடனே தனது குல தனத்தில் பங்குகொள்வாராயினர்.

துரோணரின் அம்சமாகத் தோன்றி, புஷ்பவனம், சிமிழி சுந்தரமய்யர், முதலிய இசைப் பெரும் புலவர்களின் போதனுசிரியராகப் புகழ்பெற்ற எட்டையபுரம் ராமச்சந்திர பாகவதரிடம் நாயனுவுக்கு இசைப் பயிற்சி ஆரம்பமாயிற்று ஆனல் முதலில் சாரீர அமைப்பு நன்ருக இல்லை. எனினும், அவர் தன் உடல் வலிவைத் துணை கொண்டு விடாமுயற்சியுடன் தீவிரமான ஸாதகம் செய்துவந்தார். கோனேரிராஜபுரம் மகானிடம் நோக்கிய லயப்பண்பாடும், ராமச்சந்திர பாகவதரிடம் பயின்ற இலக்கண ஒழுங்கும் சேர்ந்து இவரைத் தாள நுணுக்கங்களில் இறங்கும்படி செய்தன. இறைவன் அருளால் ஒரு யோகீசுவரர் இவருக்கு லயப் பிரஸ்தாரங்களின் ரகசியத்தைப் போதித்துச் சென்ருர்.

அது முதல் நாயனுப் பிள்ளை ஏகாக்ரசித்தராகக் கலையில் நாட்டங்கொண்டார். வாலாஜாப்பேட்டை வேங்கடரமண பாகவதரின் வம்சத்தவர்கள் காத்து வைத்திருந்த தியாகராஜ கீர்த்தனைகள் பலவற்றை வெளிப்படுத்திய பெரும்பாக்கியம் நாயனுப் பிள்ளையைச் சேர்ந்தது. திருவொற்றியூர் ராமஸ்வாமி அய்யர் என்ற ஒருவர் வாலாஜாப்பேட்டை வம்சத்தவர்களின் சிஷ்யர். அவர் இந்தக் கட்டுரை எழுதுபவரின் நண்பர்களில் ஒருவர். அவர் பாடும் திறமை நன்ருகப் பெற்றவர் அல்லர். சிறிதளவு இலக்கண அறிவும், நல்ல பக்தியும் படைத்தவர். ஆனல் வெளிவராத தியாகராஜ கீர்த்தனைகள் அனேகம் அவரிடம் கையெழுத்துப் பிரதிகளில் இருந்தன. அவைகளில் பலவற்றை அவர் நாயனுப் பிள்ளைக்கு வழங்கினர். மேலும் சென்னை ஜலதரங்கம் ரமணைய செட்டியார் என்பவரிடமிருந்தும் அனேக கீர்த்தனைகளை நாயனுப் பிள்ளை பாடம் செய்தார். இவைகளைத் தவிர, ஆங்காங்கு கீர்த்தனைகள் கிடைக்குமிடந் தேடி அரும்பாடுபட்டுச் சேகரம் செய்துவந்தார். தியாகராஜஸ்வாமியிடம் அவருக்குக் கரைகடந்த பக்தியுண்டு. தன்னுடைய பழுத்த லயக்ஞானத்தின் பலத்தினுலும், கம்பீரமான சாரீரத்தின் உதவியைக் கொண்டும், கீர்த்தனங்களை அழகாக மெருகிட்டு, ஸாகித்தியத்தைப் பிழையற ஸ்பஷ்டமாக உச்சரித்துப் புன்னகையுடன் அனுபவித்துப் பாடுவார். அவர் பாடிய கீர்த்தனைகளில் பெரும்பாலனவை அவராலேயே இசை அரங்கேறியவை. ஆகையினுல் அவைகளை "நாயனுப் பிள்ளை கீர்த்தனங்கள்" என்றே பலர் கொண்டாடுவார்கள். தேவாரப் பாடல்கள், திருப்புகழ் முதலியவற்றைப் பற்பல அபூர்வ தாளங்களில் அமைத்துப் பாடி தானும் மனமுருகி, கேட்போரையும் பரவசமாக்கி விடுவார். கீர்த்தனைகளின் பாடசுத்தம், ஸம்ப்ரதாயம், என்னும் போலிச் சீட்டுகளைக் குறித்து இந்த ஸந்தர்ப்பத்தில் சில கருத்துக்களை வெளியிடுவது அவசியமாகிறது, அனுபவத்தின் மூலமே இவைகளின் உண்மையை அறியக்கூடும்.

தியாகராஜஸ்வாமி இறைவன் வழிபாடாகப் பாடிய கீர்த்தனைகளை, அவைகளின் ஸாகித்தியம், வர்ணமெட்டு, ஆகியவை அழியாமலோ, மாறுபடாமலோ இருக்குமாறு பாதுகாக்கச் சிறிதளவும் முயற்சித்ததில்லை. அவருடைய காலத்திற்குப்பின் பற்பலர் பலவாருகப் பாடிவந்தனர். ராகங்களின் லக்ஷணம், பெயர் முதலியவைகூட நிலவரமாக இராமல், "அபூர்வ ராகம்" என்று சொல்லப்பட்டு வந்தன. தியாகராஜஸ்வாமியின் காலத்திற்குப்பின் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் வரை அவருடைய கீர்த்தனைகள் கர்ண பரம்பரையாகவே உயிர் பெற்றிருந்தன.

அந்த நிலையில் அவைகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சேதம் எத்தகையது என்பது ஏராளமான பாடாந்தர பலம் உள்ளவர்களுக்கே தெரியும். மகா வைத்திய நாதய்யர் (1844–1893), பட்டணம் ஸுப்ரமணிய அய்யர் (1845–1902), சரப சாஸ்திரிகள் (–1904), திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர்(1857–1913), ஆகியோரின் முயற்சியினால் ஏறக்குறைய இருநூறு கீர்த்தனைகள் உயர்ந்த முறையில் செப்பனிடப்பட்டுப் போதிய பிரசாரம் பெற்றன என்பது உண்மை. இவை மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை (1878–1931), ஸித்த வித்யாதரி ஸ்ரீமதி வீணை தனம்மாள் (1867–1938), ராமனாதபுரம் (பூச்சி) ஸ்ரீனிவாஸய்யங்கார் (1860–1919), கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யர் (1878–1920), முதலிய மேதைகளினால் மேலும் மேலும் பண்பாடடைந்து வந்ததையும் மேற்கூறியவர்களிடம் நெருங்கிப் பழகியும் அவர்களுடைய சங்கீதத்தைப் பல காலம் கேட்டறிந்தும் ப்ரத்தியக்ஷ அனுபவம் பெற்றவர்கள் அறிவார்கள். ஆனால் அவர்கள் பரம்பரையையோ, பாடசுத்தம் என்பதையோ பறைசாற்றவில்லை. இந்த விதமாகவே நாயனாப் பிள்ளையும் கிடைத்த சரக்கைப் பெற்று, தன் தீஞ்சுவை அறிவினால் அதை ஸ்புடம் செய்து, ஒவ்வொரு கச்சேரியிலும் புதிய புதிய உருப்படிகளைத் தனிச் சிறப்புடன் பாடி வந்தார். இது இம்மட்டாக, லயம் என்ற பெருங்கடலில் அவர் கப்பலோட்டிய விந்தையைச் சிந்திப்போம்.

நாயனாப் பிள்ளையின் கச்சேரிகளில் சுமார் நூறுக்குக் குறையாமல் இந்தக் கட்டுரையாளர் கேட்டதுண்டு. அவருடைய பிரதம சிஷ்யரான வில்லியம்பாக்கம் நரஸிம்மய்யங்கார் என்பவரிடம் முந்நூறு கீர்த்தனங்களுக்குமேல் பாடம் செய்யும் அரிய வாய்ப்பும் கட்டுரையாளருக்கு ஈசனருளியதாகும். நாயனாப் பிள்ளையின் ஒவ்வொரு கச்சேரியும் சராசரி ஐந்து மணி நேரத்திற்குக் குறைவதில்லை. ஒரு கீர்த்தனத்தின் பின் அவர் பாடிய ஸ்வர அடுக்குகளின் அளவு தற்காலம் நடக்கும் ஒரு கச்சேரியில் பாடப்படும் ஸ்வரம் அனைத்திற்கும் அதிகமாகவே இருந்தது. அதிகப் பழக்கத்தில் இராத ராகங்களில், புதுப் புதிதான கீர்த்தனை இடங்களில், பிரமிக்கும்படியான லயச் சொற்கட்டுகளை ஆதாரமாக்கி, அனுயாஸமாகவும், பிரஸ்தாரக்கிரமும், காலப்பிரமாணமும் சிறிதும் பிறழாமலும், ஸ்வரச் சித்திரங்களை வாரி வழங்குவார். "மா மதுரை மீனாட்சி", "பரிமள ரங்கபதே", "தாரக ப்ரம்மஸ்வரூப" என்ற பல்லவிகளைக் கேட்டுக் கேட்டுச் சலிப்புற்ற காதுகளுக்கு, அமிழ்தினும் இனியதோர் நல் விருந்தாக "தென்பழனி வடிவேலன், ஏழை அடியார்க்கனுகூலன், தேவகுஞ்சரி மணாளன்" என்றும், "பயமேது நமக்கு, வேலும் மயிலும் சாவலும் காவலிருக்க, மாயவேலன் நமக்கிருக்க" என்றும், விரிவான பல்லவிகளை நான்கு களைகளில், ஸங்கீர்ண ஜாதி, த்ரிபுடை, மிச்ர ஜாதி, மட்யம் இவை போன்ற கடினமான தாளங்களில் அமைத்துப் பாடி வந்தார்.

நமது இசை தெய்வத்தன்மை வாய்ந்தது. அதன் புனிதத்தன்மை குன்றுவண்ணம் உண்மை உரைப்பது உரிமை அல்ல, கடமையே ஆகும். ஆகவே ஸமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஈண்டு குறிப்பது முறையே. மிகவும் பிரபலமடைந்த ஒரு ஸங்கீத கலாநிதியின் கச்சேரியில் ஜம்பை தாளத்தில் ஒரு கீர்த்தனை பாடப்பட்டது. புலமை நிறைந்த மிருதங்க வித்துவான் அந்தத் தாளத்தில் சாதுரியமாக ஒரு தனி ஆவர்த்தம் வாசிக்கவேண்டும் என்ற விருப்பத்தைக் கேட்பவர்கள் நடுவே இருந்த ஒரு பிரமுகருக்கு ஜாடைமூலம் தெரிவித்தார். ஆனால் நமது கலாநிதி கையமர்த்தி, "மற்றொரு உருப்படியில்" என்று சொல்லி, நிலைமையைச் சமாளித்துக்கொண்டார். கச்சேரி முடிந்ததும், பிரமுகரைத் தேடிப்பிடித்து, "ஆதி தாளம் பிராம்மண தாளம். மற்றதெல்லாம் மேள தாளம். அதுபற்றியே...," என்று பசப்பு மொழியைத் தஞ்சமாகக்கொண்டார். இந்த மனப்பான்மையை விளக்கவும் வேண்டுமா?

நாயனாப் பிள்ளையினுடைய மேன்மை இசைத்திறனுடன் நிற்கவில்லை. அவருடைய தாராள மனப்பான்மையும், உதார சித்தமும், தியாகராஜஸ்வாமியிடம் அவருக்கிருந்த பக்தியும் மிகவும் போற்றத்தக்கவை.

உற்றார், உறவினர், நண்பர்கள், பிடில், மிருதங்கம் முதலியவை கற்றுக்கொள்ளுகிறவர்கள், ஆகியோர் பலர் எப்பொழுதும் அவருடைய இல்லத்தில் குழுமியிருந்தனர். இரவும் பகலும் ஸங்கீத கோஷமே அங்கு நிறைந்திருக்கும். அவரிடம் ஊண், உடையுடன் கலைப் பயிற்சியும் பெற்றவர்கள் பலர். அவருடைய அபார லயப் பண்பைக் கண்டு வெகுண்டு அவரை நிந்தித்த பலரை அவர் ஆதரித்து, உற்சாகமூட்டித் தனது கச்சேரிகளில் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு நற்பெயர் கிட்டும்படி பேருவகை புரிந்த சந்தர்ப்பங்கள் அனந்தம்.




# சந்தன நறுமணத்திற்கு

மென்மையான மலர்போன்ற மேனி எழிலை வளர்ப்பதற்கு மேட்டூர் சந்தன சோப் ஓர் உன்னத சாதனம். நாள் முழுவதும் குளிர்ச்சி பொருந்திய சந்தன நறுமணத்தை நீடித்து நிற்கவும் செய்ய வல்லது மேட்டூர் சந்தன சோப்.

மேனி அழகுக்கு

## மேட்டூர் சந்தன சோப்



தயாரிப்பு:
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்.
மேட்டூர் அணை. R. S. சேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்.

MC-388

கடைசியாக, அவர் தனது சொந்தச் செலவில் காஞ்சிமாநகரில் பிரதி வருஷமும் தியாக ப்ரும்ம உற்சவம் நடத்திய விமரிசை சொல்லத் தரமன்று.

இவ்வளவு மகிமை வாய்ந்த ஓர் உத்தம காயக சிரோமணியின் வாழ்விலிருந்து கற்கத் தகும் படிப்பினைகள் எவை?

இசை அறிவு ஈசுவரனுடைய வரப் பிரஸாத மான உயர்ந்த ஸம்பத்து. அதுவே இம்மை மறுமைப் பயன்களில் ஒன்றாகும். அதைக் கொண்டு பிறலாபங்களை அடைய எண்ணுவது பெரும் பாவம் என்ற கருத்து அவருடைய வாழ்வில் தெட்டென விளங்கியது.

கச்சேரி செய்யும் பொழுது ஸபையோருடைய ஆமோதிப்பு, முகபாவம், முதலியவற்றை அவர் கவனிப்பதில்லை. தனது நாதயோகத்தில் லயித்து அதில் எல்லோரும் பங்குகொள்ளவேண்டும் என்பதே அவருடைய நோக்கம்.

ஸங்கீதத்தைத் தொழிலாகக் கருதாமையினால், தன் மதிப்பைப் பறிகொடுத்து, பிறரிடம் இச்சகம் பாடுவதும், பிரபுக்களை நாடி அவர்களுடைய தயலவப் பெறக் கபட நாடகம் நடிப்பதும் அவருக்கு வழக்கமில்லை.

உறங்கும்நேரம் தவிர எஞ்சியபொழுதெல்லாம் ஸங்கீத சிந்தனையும் ஆராய்ச்சியுமாகவே கழிப்பது அவருடைய வழக்கம்.

கடைசியாக, தமிழர் இசையின் விசாலத் தன்மையைக் கணக்கிட்டு, ஓர் ஆயுளில் அதன் ஓர் அம்சத்தைத்தான் சரிவரக்கற்பது ஸாத்தியம் என்று அவர் முடிவு செய்திருந்தார். ஆகவே தனது ஆயுளை லய ஆராய்ச்சிக்கென்றே அர்ப்பணம் செய்து, அதில் அமோகமான வெற்றியும், ஆத்ம திருப்தியும் அடைந்தார்.

Foot note—பரத நாட்டியம், வாய்ப்பாட்டு, இரண்டிலும் தேர்ச்சி பெற்று, தனது பதினேராம் பிராயத்திலேயே ராமநாதபுரம் மன்னர் பாஸ்கரஸேதுபதி அவர்களிடம் கனகாபிஷேகம் அடைந்த திருவாரூர் ராஜாயி என்னும் கனவிதுஷி இவருடைய பிரிய சிஷ்யை. ஸந்ததி இல்லாமல் இவர் இறந்த பின், இவருடைய கோரிக்கைக் கிணங்க, ஸ்ரீமதி ராஜாயி வருடந்தோறும் அவருடைய ஞாபகார்த்தமாகக் குருபூஜைவிழா நடத்தி வந்தார்.



சென்னையில் எமது ஏஜன்ட் :-

# தி மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி

13, நரசிங்கபுரம் தெரு

மவுண்ட் ரோட் — மதராஸ்-2



# சந்துலாலின் திட்டம்

"அசேன்ராஜ்"

கையில் சிறு குழந்தைகளின் விளையாட்டுத் துப்பாக்கியைப் போன்று சின்னதொரு துப்பாக்கி! ஆனால் அதுபோதும் ஒரு மனிதனின் உயிரைக் குடிக்க! அதையேந்திக்கொண்டிருந்த அவன் வலக்கரம் நடுங்க அவன் நின்று கொண்டிருந்தான். அடிக்கொருதரம் அதன் கோரப் பசியை அளந்துவிடுபவன் போல் உறுத்து நோக்கினான். விழிகளில் கருமையோடு பிரட்சியும் குடியேறியிருந்தது. மரண அரணின்று தப்பிச் செல்ல வழியில்லையே என்ற ஏமாற்றம் பெருமூச்சுகளாய் உருவெடுத்துக் கொண்டிருந்தது. மனித இனம் உயிர்மேல் கொண்டிருக்கும் பிடிப்பின் வரிப்படம்போன்று காணும் சுழிப்புகள் நிறைந்த முகம்! அப்பப்பா, என்ன பயங்கரம்! உலகிற்கே மரணத்தை விற்பனை செய்ய அனுப்பப்பட்டவன் போல் காட்சியளித்தான்!

பாவம், அவன் காதல் புரிந்தவன்! "காதலிக்கத் தெரியாதவன் முட்டாள்; காதலிக்கக் கிடைக்காதவன் பாபி;" என்று மண்ணகத்துக் கவிஞன் பாடிச்சென்றுவிட்டான். ஆனால் "காதலிக்கத் தெரிந்தவன்— கிடைத்தவன்— அவன் தான் முட்டாள்; பாபி;" என்று புதுக் கவிதையொன்றை 'விதி' எழுதியது. அதற்கு அவன் வாழ்வை உதாரணமாக்கியது.

அவனும் அழகியொருத்தியும் அந்த ஆற்றின் கரையில் சந்தித்தனர்; இதயத்தை மாற்றிக்

கொண்டனர். 'விழி மொழி' நிலையை விட்டு 'கரம் உறவாடும்' நிலைக்கு வந்துவிட்டனர். அவள் காதல் மதுக்கிண்ணத்தை நிறைத்துவந்து நீட்டினாள். அவன் தாகத்தை வர்ணக் குழம்பு பாக்கி அன்பை ஓவியமாய் வரைந்து வந்து நின்றான். இருவரும் அனாதைகள்; யாரிடமும் அனுமதி பெற வேண்டிய அவசியமற்றவர்கள். அதனால் விரைவில் கூடினர். ஆனால்...?

ஆனால்...? 'விதி' இடையில் வந்து நின்று கொண்டது. அவன் ஓவியத்தைப் பற்றியெடுத்து கிழித்தெறிந்துவிட்டது; அவள் மதுக்கிண்ணத்தைப் பறித்தெடுத்துக் கவிழ்த்துவிட்டது. அவள் பயங்கர நோய்க்குப் பலியானாள். அவன் தனிப்பறவையானான். அவள் உயிர் நீப்பதற்கு முன் அவனைப் பலமுறை வேறு பெண்ணை மணந்து கொள்ளும்படி வேண்டிக்கொண்டாள். "அன்பே நான் வாழக் கொடுத்துவைக்கவில்லை. ஆனால் நீங்கள் வாழத்தான் வேண்டும்; என்னை மறந்துவிடுங்கள். புது வெள்ளத்தின் மேற்பரப்பில் நொடியில் தோன்றி மறையும் ஒளிக்குமிழியாய் எண்ணி என்னை மறந்துவிடுங்கள்; மணம் செய்துகொள்ளுங்கள். மரம் பட்டுவிட்டதென்பதற்காக அதில் கூடுகட்டிய பறவையும் இறந்துவிடுவதில்லை. வேறொரு மரத்தில் கூடு கட்டிக் கொள்கிறது!" இப்படி எவ்வளவோ சொன்னாள். அவள் சொன்னதுபோல் அவனும் வாழ்ந்துவிட முயன்றான். உண்மையிலேயே வேறொரு மரத்தில் கூடுகட்டிக் கொள்ள முடியுமென்று நம்பினான். ஆனால், பிரபஞ்ச முழுதும் அவள் உருவைத் தவிர வேறெதையும் அவன் விழிகள் காணமுடியவில்லை; அவள் மழலை மொழியின் எதிரொலியையன்றி வேறெதையும் அவன் செவிகள் கேட்கக்கூடவில்லை; அவள் தன்னோடு நிறுவ இருந்த வாழ்வுக் கோயிலையன்றி வேறெதையும் அவன் உள்ளம் கற்பனை செய்யமுடியவில்லை — பொழுது விடிந்தால், மடிந்தால் அவள் நினைவே நெஞ்சில் சுழன்றது. அவன் அனுபவித்த கற்கண்டுச் சுவையை நாக்குப் புரட்டிக் கொடுத்துக் கொண்டேயிருந்தது. அவன்...? 'பைத்தியமாய் விடுவேனோ?' என்று பயந்தான். அப்போதுதான் நண்பனின் கைத் துப்பாக்கி கண்ணில்பட்டது.

அதைத் திருட்டுத் தனமாய்க் கைப்பற்றிக் கொண்டான்!

அவள் வாழ்ந்தபோது தன்னோடு கூடிச் சிரித்து ஓடித்திரிந்த ஆற்றின் கரையில் வந்து நின்றான். அந்தத் துப்பாக்கி, பேரின்ப சாளரத்தைத் திறந்துவிடும் தெய்வக்கரம் போல் தோன்றியது. ஆனால் உயிர்மேல் உள்ள ஆசை அவ்வளவு எளிதில் மடிந்துவிடுமா?... சிறிது தயக்கம்! மீண்டும் காதலி விண்ணுலுகினின்று அழைப்பதுபோல் ஒரு பிரமை; வானத்தையொருமுறை ஏறிட்டு நோக்குகிறான். கைத் துப்பாக்கி நெற்றிப் பொட்டை நோக்கி நகருகிறது!"

இந்த 'உயிர்ப் போராட்டத்தின்' இறுதிக் கட்டத்தைத்தான், "கமலா ஸ்டுடியோவில்" படமாக்கிக் கொண்டிருந்தார்கள்.

டைரக்டர் சந்துலால் முன்னால் வந்து நின்று கொண்டு கதாநாயகனுக்கு இறுதிக் குறிப்புகள் கொடுத்துக்கொண்டிருந்தார். அவனுக்கு அந்தக் காட்சியில் வசனம் எதுவும் கிடையாது. உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அவன் முகமாற்றத்திலேயே காட்டவேண்டும். டைரக்டரின் நெடுநாளையப் புகழுக்கு அந்தக் காட்சிதான் உரைகல்லாய் அமையவேண்டும்!

அவனுக்குக் கதையின் முன் பகுதியை நினைவுபடுத்தினார் சந்துலால்; ஒளி அமைப்பாளர் தன் புகழ் ஒளி மங்காமல் பாதுகாப்புகள் செய்து கொண்டார்; படப்பிடிப்பாளர் கதாநாயகனின் முகவெட்டுக் கோணங்களை அளவெடுத்துக் கொண்டார். எல்லாம் ஒழுங்கானபின் டைரக்டர் துவக்கக் குரல் கொடுத்தார்.

நாயகன் நாயகியைக் கற்பனையில் கண்ட வண்ணம் கண்ணீர் பெருக்குகிறான்; பெருமூச் செறிகிறான்; வேதனையின் பல்வேறு வெட்டுப் படங்களை அவன் முகம் காட்டுகிறது. துப்பாக்கி உயருகிறது. இன்னும் சிறிது நேரத்தில்...?

டைரக்டர் 'சட்'டென்று 'கட்'டென்றார். கதாநாயகனின் அருகே வந்தார்.

அவன் காதோடு மெல்லச் சொன்னார்! "மிஸ்டர், முரளீதர், என் அனுதாபங்களை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உங்கள் கையிலுள்ள துப்பாக்கியில் உண்மையான குண்டுகள் கெட்டிக்கப்பட்டிருக்கின்றன. தாங்கள் இப்போது இறந்துவிடுவீர்கள். தங்கள் மரணம் நடிப்பு மரணமல்ல; உண்மையான மரணம் என்பதையறிவீர்கள். தங்களுடைய கடைசி விருப்பம் என்னவோ?..."

"டைரக்டர் சந்துலால், நான் நல்ல உணர்வோடு தானிருக்கிறேன். தாங்கள் நான் இறந்தபின் என் குடும்பத்தாருக்குச் சேரவேண்டிய பத்தாயிரம் ரூபாயை மட்டும் நினைவாக........" என்று இழுத்தான். துக்கம் தொண்டையை அடைத்தது.

டைரக்டர் அவனை இடைமறித்து, "என்னை நீங்கள் நம்பலாம்" என்றார். "நம்பாவிட்டால் சாகத் தயாராவேனா......? போகட்டும் அந்நன்றியைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்."

"நானல்லவா நன்றி தெரிவிக்க வேண்டும்? இந்தக் காலத்தில் நடிப்புக் கலையின் சிரஞ்சீவித் தன்மைக்காக உண்மையிலேயே உயிரை அளித்திட யாருக்குத்தான் துணிவு வரும்? சரி, என்னால் உங்கள் மரணத்தைப் பார்த்துக்கொண்டு நிற்க முடியாது. நான் வருகிறேன். என்னை மன்னித்துவிடுங்கள்..." சந்துலால் வெளியேறி

னுர். அவர் கையில் ஓர் ஒப்பந்தப் பத்திரம் சரசரத்தது. தன் உயிரைக் குடித்து நிற்கும் அதைப் பிடுங்கிக் கிழித்தெறிந்து விட்டாலென்ன?..." இப்படியொரு எண்ணம் தோன்றவே, அவன் கைத்துப்பாக்கி சந்துலால் செல்லும் திசையை நோக்கிச் சற்று திரும்புகிறது. ஆனால் அது ஒரே கணம் தான். அவன்தானே அந்த ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்தது. அதற்கு யாரும் பொறுப்பாளி அல்லவே? அவன் சாவதனால் தான் என்ன? பத்தாயிரம் ரூபாய் அவன் குடும்பத்திற்குக் கிடைக்கப் போகிறதே! உள்ளத்தில் மகிழ்ச்சியின் ரேகை படர்கிறது... ஆனாலும் அவன் சாகப்போகிறானே!

அவன் அன்பு மனைவி பத்மா...? குழந்தை கண்ணன்...? என்ன பாடுபடுவார்கள்...?

அவன் அந்த ஒப்பந்தம் செய்து கொள்ளாமலிருந்தாலோ...?

புதிர் நிறைந்த உலகைப்போல் அவன் மனமும் மாறியது! வசனகர்த்தாவின் பொய்ப் படைப்பு சற்று ஒளிந்துகொண்டது; கதையின் நாயகியும் மறைந்தாள். அவன் யதார்த்த வாழ்வு அவன் முன் அவிழ்ந்து ஆடியது!

* * *

ராஜன், திருநெல்வேலி ஜில்லாபோர்டின் பி. டி. ஆசிரியர் படையில் ஒருவனாய்ச் சேர்ந்த மூன்றாவது வருடம். அப்போதுதான் அவன் மாமா பெண் 'பத்மா' அவன் மனைவியாக வந்தாள். அவள் தனியாக வரவில்லை. பருவக் கழனியின் கவர்ச்சிவிளைவைப் பறித்து வந்தாள். அவளுடைய கூர்மையான மூக்கு; குளிர்ந்த நோக்கு; குவிந்த உதடுகள்; குழைந்த இடை; அத்தனையும் இன்பப் பாட்டையின் மைல் கற்கள் தான்!

"பத்மா... உன் அழகு உன்னைச் சிருஷ்டித் தொழிலின் இறுதி வார்ப்பாகக் கற்பனை செய்து கொள்ளத் தூண்டுகிறது. என் உள்ளத்தோடு இழைந்துவிட்ட உன்னை எப்படிப் புகழ்வதென்றே தெரியவில்லை!"

"நீங்கள் ஒன்றும் புகழவேண்டாம். வாயை மூடிக் கொண்டிருங்கள்"

"என்னை ஊமையாக்கவா உன்னை கொடுத்தார்கள்."

"இல்லை; என்னைச் செவிடாக்கிக் கொள்ளத்தான். உங்கள் புகழ்ச்சிக்கும் எல்லை வேண்டாமா?"

"எப்படி அது சாத்தியமாகும்? பத்மா. பெண்கள் ஆண்களிடம் எதிர்பார்ப்பதே அதுதானே? 'ஒருபெண்ணைப் புகழத்தெரிந்துவிட்டால் அவன் உலகத்தையே ஆளத் தெரிந்துவிட்டவனாகிறான்' என்று ஒரு கவிஞன் பாடியிருப்பது தெரியாதா? பத்மா... ஏ, பத்மா!..."

"உம்......"

"முகர்வாரில்லாத மலரும், புகழ்வாரில்லாத பெண்ணும் உறைவாரில்லாத வீடுதான்! தெரிந்துகொள்!"

"அது இந்த பத்மாவிற்குப் பொருந்தாது!"

"இருக்கலாம். ஆனால் என்னால் புகழாமலிருக்க முடியாதே. காலம் உன்மேனியில் முலாம் பூசத் துவங்கிய நேரத்திலிருந்து நீ என் கண்களுக்கு விருந்தாயிருந்திருக்கின்றாய். இன்றோ அத்தனையையும் எனக்கு உரிமையாக்கிவிட்டாய் அதற்கு......?"

"நீங்கள் திரும்பத் திரும்ப பேசிக்கொண்டேயிருந்தால், 'அப்புறம், அவ்வளவுதான்!" அவள் முகம் சிவக்கும். ஆனாலும் அவன் விடாமல், "எவ்வளவுதான்" என்பான்.

அவள் "இவ்வளவுதான்!" என்று கூறிவிட்டு சரேலென்று உள்ளே சென்றுவிடுவாள். அவனும் பின்னால் எழுந்துபோவான். இந்த சர்க்கரைப் பேச்சுக்கள் வாழ்வின் துவக்கத்தை நிறைத்தன. முந்தானையைத் தொட்டிழுப்பதும், முகத்தைத் தூக்கிநிறுத்தி கொஞ்சுவதும் ராஜனின் மாலை விளையாட்டுக்களில் ஒன்றாகிவிட்டது.

ஆனால், திருநெல்வேலி ஜில்லாபோர்டின் கீழ் ஆசிரியராய் நுழைவது என்பது வறுமைச் சுரங்கத்தில் வைரம் தோண்ட முயல்வதுதான். "சம்பளமில்லாமல் ஆசிரியர்கள் எவ்வாறு உயிர்வாழ்கிறார்கள்? எத்தனைபேர் அப்போதும் உண்மை உழைப்பாளிகளாயிருக்கிறார்கள்?" என்று சில சமயம் புள்ளி விவரங்கள் சேகரிக்க ஜில்லா போர்டு துவங்கிவிடும். அப்போதெல்லாம் மூன்று மாதத்திற்குச் சம்பளம் வராது. மாற்றுதல் உத்தரவுகள் மட்டும்தான் மாதாமாதம் வரக்கூடியது. அந்த வருடம் அந்த மாதிரிச் சோதனைகளைப் பலமுறை நிகழ்த்திவிட்டார்கள். ராஜனும் அந்தச் சோதனைக்காளான பக்தன்.

ராஜன் குடியிருந்ததோ கோவில்பட்டி 'டவுனிங் தெரு' தான். 'வக்கீல் லயன்' என்ற பெயர் பெற்ற அந்த வீதியில்தான் நகரின் பொய்க்கிட்டங்கி அமைந்திருந்தது. அத்தனை வக்கீல்கள் அந்தத் தெருவில் கடை பரப்பியிருந்தார்கள். அவர்கள் வழக்குகளில் பெறும் ஒவ்வொரு வெற்றியும் ஒவ்வொரு அறையாக மாற்றப்பட்டு இருபது ரூபாய் வாடகைக்கு விடப்பெறும். ஆனால் வீட்டுப் பிரச்னையின் அழுத்தத்தில் அதையெண்ணிக் கொண்டிருக்க முடியுமா? ராஜனும் அந்தமாதிரி நெருக்கடியில் முப்பது ரூபாய்க்கு ஒரு காம்பவுண்டில் மூன்று அறை வீடொன்றில் குடியிருந்தான். வீட்டுக்காரர் கொஞ்சம் கறார்ப்பேர்வழி. சம்பளம் வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி, வாடகை அந்தந்த மாதம் செல்லுபடியாக வேண்டும்.

நாளாக நாளாக... மத்திய சர்க்கார் நிதியமைச்சரால்கூட தீர்க்கமுடியாத அளவுக்குப் பொருளாதார சிக்கல் இறுகிக்கொண்டே சென்றது.

இன்பமான உரையாடல்கள் துருப்பிடித்து விட்டன. இப்போதெல்லாம் பத்மா தேவையைத் தெரிவிக்கும் ஸ்தாபனமானாள்; குழந்தை கண்ணனோ, அதனை ஒலிபரப்பும் நிலையமானான்!

"என்னா, இன்னிக்குப் பருப்பு வாங்கிக் கொண்டு வரமுடியுமா?" என்பாள் பத்மா.

"பத்மா, இதற்கு விடை நான் சொல்லவேண்டுமா? அதோ, சட்டை தொங்குகிறது. நீயே பார்த்துக்கொள்," என்பான் அவன்.

இன்னொரு நாள், "பால்காரி இரண்டு மாத பாக்கியாய் விட்டதே யென்கிறாள்," என்பாள் அவள். அப்போதும் சட்டைப்பையை விரித்துக்காட்டுவான்.

"பத்மா, நம்மைப்போல எல்லோருந்தான் கஷ்டப்படுகிறார்கள். யாரிடமென்று போய்க் கடன் வாங்குவது? அநேகமாக, இந்தமாதம் இருபதாம் தேதிக்குள் ஒருமாதச் சம்பளமாவது வந்திடுமாம்; அதுவரை சமாளித்துக் கொள்!" என்று சொல்லும்போதே, அவனுக்குத் தெரியும் பத்மாவைத்தான் இந்தமாதிரி சமாதானம் செய்யமுடியுமென்று. ஆனால் பால்காரி, மோர்க்காரன் இதைக் கேட்டுப்போக முடியுமா? அவர்கள் சிறு மூலதனக்காரர்கள்; அதனால் தாங்க



மாட்டார்கள். வீட்டுக்காரரோ பெரும் மூலதனக்காரர்; அவருக்கு 'வட்டி கட்ட' வேண்டும்!

இந்தமாதிரி எண்ணற்ற பற்சக்கரங்களிடையே சிக்கிச் சுழன்று கொண்டிருந்தது அவர்கள் குடும்பம்!

* *

மோஹன், இப்போது பெரும்புள்ளி! 'அன்பன்' என்ற பெயரில் எண்ணற்ற திரை ஓவியங்களுக்கு வசனம் எழுதிப் புகழ்பெற்றவன். சென்னையில் பெரிய வீடு; கோவில்பட்டிக்கருகாமையிலுள்ள அவன் சொந்த கிராமமான 'அய்யனேரி'யில் 'ஏழெட்டு ஏகரா நஞ்சை; தந்தை பெயருக்கு மில்லில் சில பங்குகள்; இத்தனையும் அவன் பெருமையை விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன.

அவனும் ராஜனும் சவேரியார் கல்லூரியில் படித்துவந்தபோது ஒரே அறையில் வாழ்ந்தவர்கள்தான்; உயிருக்குயிரான நண்பர்கள்தான். ஆனால் கல்லூரியைவிட்டு வெளியேறியதும் மோஹன் சென்னைநகர வீதிகளை அளந்துவிடும் துணிவோடு கிளம்பிச் சென்றுவிட்டான். அதன் பயன் இப்போது பிரபல வசனகர்த்தா! தன் நண்பனையும் பலமுறை அழைத்துப் பார்த்தான்.



ஆனால் அவனே, "அது ஒரு சூதாட்டம். நிலையான வருமானம் கிடையாது. அதனால், நிலையான வாழ்வும் சாத்தியமில்லை" என்று சொல்லி விட்டான். அதனால்தான் இந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வு! ஆனால் மோஹன் கோவில்பட்டி வரும்போதெல்லாம் ராஜனைப் பார்க்காமல் சென்றது கிடையாது. அன்றும் அப்படித்தான் திடீரென்று வந்து சேர்ந்தான்!

"டே, பழி, சௌக்கியமாடா!" என்று அட்டகாசமாய் ஒருவரையொருவர் வரவேற்றுக் கொண்டனர். நெடுநாளைக்குப்பின் தன் புகழ் பெற்ற நண்பனைக் கண்டதில் மகிழ்ச்சி சரை காணமுடியவில்லை ராஜனுக்கு!

"பத்மா, மோஹன் வந்திருக்கான் பாரு!" என்று கூவினான். பத்மாவும், வெளியேவந்து, "நமஸ்காரம் அண்ணா. வாருங்கோ" என்று வரவேற்றாள். வெளியே விளையாடிக் கொண்டிருந்த கண்ணனும் ஓடிவந்து, "மாமா, மாமா" என்று கூவிக்கொண்டே அவனிடம் தாவிக் கொண்டான். மோஹன் குழந்தைக்கு வாங்கி வந்த 'சாக்லெட்'டை யெடுத்துக் கொடுத்தான். பழம், பூ எல்லாவற்றையும் கூடையோடு எடுத்து பத்மாவிடம் நீட்டினான். ராஜன் அதைப் பார்த்துவிட்டு, 'உம்' உங்க அண்ணன் கொண்டுவந்துவிட்டான் சீர் வரிசையெல்லாம் எடுத்து பூட்டி வைச்சுக்கோ!" என்று கிண்டல் செய்யவாரம்பித்தான்.

"டே, என்னடா குறைஞ்சுப் போச்சு?......சரி, சரி இந்தாம்மா எனக்குப் பசிக்கிறது. சாப்பாடு தயாரா?" என்று தன் உரிமையை நிலைநாட்டிக் கொண்டான் மோஹன். ராஜனும் பத்மா அழைக்கவே எழுந்தான்!

"டே பயலே, வாடா, சாப்பிட்டுட்டு விளையாடலாம்" என்று கண்ணனையும் மோஹன் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

"டே, டே... உன் பங்களா நினைவிலே தலை நிமிர்ந்து போகாதே; ஆஸ்பத்திரி அருகேயில்லை இதெல்லாம் பணிவின் பெருமை தெரிந்தவர்களுக்கென்று தனியாக நிர்மாணித்த ஆசிரமம்" என்று குத்தலாகப் பேசினான் ராஜன்.

"சரிதாண்டா! வா!"

நெடுநாளைக்குப் பிறகு 'கட கட' வென்று நகையொலி பாய்ந்து பரந்தது அந்த இல்லத்தினுள்ளே!

* * *

அன்று இரவு...... நண்பர்கள் தனியாக அமர்ந்திருந்தனர். அவர்கள் பேச்சு எங்கெங்கோ சுற்றித் திரிந்து கடைசியில் பொருளாதாரக் கடலில் வந்துதான் சங்கமித்துக் கொண்டிருந்தது.

"மோஹன், உன்பாடு எவ்வளவோ தேவலை. அன்றாடப் பிரச்சினைகள் எதுவும் கிடையாது. இங்கே என்னடான்னா, அணாச் சில்லரைக்கே மாதக் கணக்கில் திண்டாட்டமாயிருக்கிறது!" என்று பெருமூச்செறிந்தான்!

"டே, உனக்குவரும் பிரச்சினைகளை அணுக்களை வைத்துக்கொண்டாவது தீர்த்துக்கொள்ளலாம். நம்முடைய பிரச்சினைகள் ஆயிரங்களை விழுங்கிக்கொண்டும் தீர்ந்தபாட்டைக்காணோம்!" மோஹனுக்கும் பெருமூச்சுதான்!

"மோஹன், சரி அதைத் தள்ளு. இப்போ நீ என்னமோ புதியதாய் வசனம் எழுதுகிறேன் என்றாயே, என்ன படம்?"

"அதுவா? ஒரு புதிய கட்டுக் கோப்பு, 'சிரஞ்சீவி' யென்று மகுடம். அதற்கு டைரக்டர் யார் தெரியுமா?"

"யாரு...?"

"பிரபல டைரக்டர் சந்துலால் தான். ஆனால் அவருக்கு இப்போ கொஞ்சம் மூளைக்கோளாறு!"

"என்னடா சொல்றே?"

"பின்னே என்னடா? நடிப்பு தத்ரூபமாய் இருக்கணுமாம்..."

"அதிலென்னத் தப்பு?"

"கேளுடா, அந்தக் கதையில் கடைசிக் கட்டத்தில் கதாநாயகன் தன்னைச் சுட்டுக் கொண்டு இறக்கிறான். அதிலே ஒரு சொல் மருந்துக்கூட கிடைக்காது. எல்லாம் முகபாவத்தோடு சரி. அந்தக் கட்டத்தில் உண்மையிலேயே ஒருவன் சுட்டுக்கொண்டு சாகவேண்டுமாம். அப்பதான் இயற்கையாக இருக்குமாம். அதற்கு எவனையாவது பிடிக்கவேண்டும் என்கிறார். இது எங்கேயாவது நடக்கக்கூடியதா?"

"ஏன் நடக்கக்கூடாது? கொஞ்சம் அதிகமான பணம் கொடுப்பதானால் எத்தனையோ பேர் கிடைப்பார்களே!"

"அதற்கு ஒண்ணும் குறைவில்லை. படம் எடுத்து முடியும்வரை மாதமொன்றுக்கு ஐநூறு ரூபாயும், அவன் இறந்தபின் அவன் குடும்பத்திற்கோ அல்லது அவன் குறிப்பிடுவோருக்கோ ரொக்கமாக ரூபாய் பத்தாயிரமும் கொடுப்பார்களாம்! இந்தக்கூத்து வேண்டாமென்று எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை!"

"வேறெ டைரக்டர் பார்க்கவேண்டியது தானே?"

"உணர்ச்சி பாவங்கள் நிறைந்த ஒரு சித்திரத்திற்கு அவனைவிடப் புகழ்பெற்ற டைரக்டர் திரையுலகிலேயே கிடையாதே?

"அப்ப சரி, புயலில் சிக்கியவன், வெள்ளத்தில் வீடிழந்தவன், பிரிவினையால் அகதியானவன் எவனையாவது பார்க்கிறதுதானே. இல்லே, இப்ப இருக்கிற நிலைமையிலே ஜில்லாபோர்டு ஆசிரியன் எவன் கிட்டேயாவது சொல்லு. அப்புறம் நீ பொறுக்கி யெடுக்கவேண்டிய அளவு படை திரண்டுவந்துவிடும்!"




ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.

L. 279-X52 TM

இப்படி சம்பாஷணை எங்கெங்கோ சுழன்று கொண்டிருந்தது. அருகாமை போலீஸ் நிலையத்தில் பன்னிரண்டு மணி அடிக்கும் ஒலிகேட்டது!

அவர்கள் விழிகளில் ஏறிய கனத்தையுணர்ந்தார்கள்.

* * *

இரண்டு மாதங்கள் புதைந்துவிட்டன.

அன்று மோஹன் முகமெல்லாம் சிவப்பு ஏறியிருந்தது. நரம்புகள் எல்லாம் புடைத்து நின்றன. உதடுகள் குளிரில் நடுங்குவதைப் போல் தாளம் கொட்டின! அவனுக்கு ராஜன் மேல் அடக்க முடியாத அளவு கோபம்!

"ஏண்டா ராஜன்? உன் மனசிலே என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று ராஜனை நோக்கிக் கத்தினன். அப்போதும் அவன் பற்றற்றவன் போல் மௌனமாய் அமர்ந்திருந்தான்.

"ஏண்டா, நான் கேட்கிறேன்? பதில் சொல்லேன். யாரைக்கேட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டாய்? பெரிய கலை ரசிகர். தன் உயிரைக்கொடுத்தாவது கலையை நிலைப்படுத்த வந்துட்டாரு... உனக்கென்ன மூளைக்கோளாறு? எவனே ஒரு முட்டாள் உண்மையிலேயே உயிரைவிடத் தயாரான கலைஞன் வேண்டுமென்றான்; இந்த அறிவாளி அதற்கு மனப்பூர்வமாக தயாராம்..." மோஹனின் கோபத்தைத் தணிவிக்கும் திறனற்ற வார்த்தைகள் எல்லாம் வெளியேறிக்கொண்டிருந்தன. ஆனல் ராஜன் குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தான்! மோஹனுக்கு அதைக் காணப் பொறுக்கவில்லை. அவனருகில் சென்று அவன் முகத்தைத் தூக்கி நிறுத்தி, "ஏண்டா, பத்மாவையும் கண்ணனையும் நிற்கதியாக்க நினைத்துவிட்டாயா? என்று கேட்டான். ராஜனுக்கு பொறுக்கமுடியவில்லை.

"இதோ பார் மோஹன். என் ஆயுள் முழுவதும் நான் உழைத்தாலும் ஆசிரியர் தொழிலில் கொஞ்சம்கூட மீதம் வைக்கமுடியாது. கடைசியில் கவலைகள் அரித்திட கடனைவைத்துவிட்டுத்தானிறக்கவேண்டும். அப்போது அவர்கள் கதியென்ன? அதைவிட இப்போது எவ்வளவு பெரிய தொகையை அவர்களுக்கு நான் விட்டுசெல்ல முடியும்! அதை எண்ணினயா?

"ராஜன், ஆனல் நான் உனக்கு வேறு பதவியொன்று வாங்கித் தருகிறேன். நீயும் வசன கர்த்தா ஆகிவிடு!"

"சொல்வதைக் கேள், மோஹன். அந்த முறையில் பணம் சேர்க்கநெடுநாள் ஆகும். இந்த வழியோ மிகச் சுலபமானது...."

"அட சனியனே, கேளுடா. நான் அந்த ஒப்பந்தத்தை ரத்துசெய்துவிடச் சொல்கிறேன். நீ வேறு முறையில் பொருள் சேர்க்கலாம்."

"அது கூடாத காரியம். மோஹன் உன் கதையை சிரஞ்சீவியாக்குகிறேன்; என் பெயரை சிரஞ்சீவியாக்கிக் கொள்கிறேன்; இத்தனையும் ஒரே வீச்சில் உதிர்கின்றன!"

"ராஜன், உனக்கேன் இந்த "மரண தாகம்? சொல்வதைக் கேள்!"

"மன்னித்துக்கொள்!"

"ஆனல் பத்மாவிக்கு நான் தந்தியடித்து வரவழைக்கிறேன்...."

"செய்யடா செய். கதையில் கடைசியில் வரவேண்டிய கட்டம் இப்பொழுதே நிகழ்ந்துவிடட்டும்!"

"என்னை என்னடா செய்யச் சொல்றே?"

"சும்மாயிருக்கச் சொல்றேன்."

மோஹன் தோல்வியுற்ருன். அவனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. அதன்பின் தினம் ராஜனைத் தன் காரிலேயே ஸ்டுடியோவிற்கு அழைத்துச் செல்லலானன். ஒவ்வொரு தடவை அவனை விட்டுவரும்போதும் அவனையறியாமல் கண்களில் நீர்பெருகும். துடைத்துக்கொள்ளும் உணர்வுமில்லாமல், தூர்த்துவிடும் திறனுமில்லாமல் திணறிவந்தான்!

* * *

ராஜனின் குடும்பம் சென்னை நகருக்குப் பெயர்ந்து வந்துவிட்டது! கண்ணன் இப்போது நான்காம் பாரம் படிக்கிறான். அவன் இப்போது ஏழை ஆசிரியன் மகன் அல்லவே. பிரபலமாகப் போகும் நடிகனின் ஒரேமகன்! மாதவருமானம் ஐந்நூறு ரூபாய் பெறும் தந்தையின் மகன்! அவன் இப்போது பள்ளிக்கூடம் செல்வது, நண்பர்களைத் தேடிச் செல்வது எல்லாமே காரில்தான்!

பத்மாவும் இன்பவெளியில் பறந்து வந்தாள். வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்தில் பெரும் பொழுதைக் கழித்துவந்தாள். கலகலவென்று எப்போதும் சதங்கையொலி எழுப்பிக் களித்து வந்தாள்.

ஆனல் இந்த இன்பத்தடாகத்தின் கரையில் காத்துநிற்கும் நச்சரவை மோஹனல் மறக்க முடியவில்லை. அவன் மனம் வேதனையில் நெளிந்து கொண்டிருந்தது.

"மோகன், பத்மாவையும் கண்ணனையும் பார்த்தாயா? எவ்வளவு மனநிறைவோடு திரிகிருர்கள். ஆசிரியர் தொழிலிலேயே இருந்திருந்தால் ஒரு நாளாவது இத்தனை இன்பம் அளிக்கமுடியுமா என்னல்?" என்று ராஜன் கூறுவதைக் கேட்க அவனுக்கு வெறுப்புத்தான் மிகுந்தது. கடல் அலையின் நுரையாட்டத்தைக் கண்டு அதனையே அணைத்துக்கொள்ள போகிருயே!" என்று கூவ வேண்டும்போலிருந்தது அவனுக்கு.

ஆனலும் மௌனமாய் இருந்துவிட்டான்!

*　　　*　　　*

திரைக்கதை வளர்ந்துகொண்டே வந்தது. ஆரம்ப காலத்தில் ராஜனுக்கும் ஒப்பந்தத்தைப்பற்றிய நினைவெழவில்லைதான்; ஆனால் நாளடைவில் மரணத்தின் நிழல் அவன் முகத்தில் படர ஆரம்பித்தது. அதைத்தான் டைரக்டர் விரும்பினார்.

அப்பொழுதெல்லாம் அவனுக்குக் கதாநாயகியின் நினைவு எழுவதில்லை. பத்மா, கண்ணன்! இருவர் முகங்களும் மாறி மாறி அவன் நெஞ்சில் மோதும்; கண்கள் அருவிகளை வடிக்கும்; உதடுகள் துடிக்கும்; முகம் கறுக்கும்!

அன்று திரைக்கதையின் இறுதிக் கட்டம்; அவன் வாழ்வுக் கதைக்கும் இறுதிக் கட்டம் தானே?

"பத்மா," என்று அன்பு குழைய அழைத்தான்.

"என்ன? அதற்குள் கிளம்பி விட்டீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே அவளும் வந்தாள்,

"இன்றைக்குத் தானே கடைசி 'ஷூட்டிங்'... என்றால் இங்கு இருக்கவே மனமில்லை. எப்படா இது முடியுமென்று துடிக்கிறது... ஆமாம், கண்ணன் எங்கே?"

அவள் மாடியை நோக்கி, "கண்ணா", என்று குரல் கொடுத்தாள். "இதோ அம்மா" என்று அவனும் இறங்கி வந்தான். ராஜன் அவனை மெதுவாய் அணைத்தவண்ணம், "என்னடா, கண்ணா செய்து கொண்டிருக்கிறாய்" என்று கேட்டான்.

"நாளைக்கு எனக்குப் பரீட்சை ஆரம்பம், அப்பா!"

ராஜனின் மனம் ஏனோ துணுக்குற்றது; இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, "சரிசரி, நன்றாகப் படிக்கணும்; கல்லூரிக்குப் போகணும், ஆனால் உங்கப்பா மாதிரி பள்ளிக்கூட வாத்தியாரா மட்டும் வந்துடாதே...... என்ன பத்மா?" பத்மாவை நோக்கிக் கண்ணை வெட்டினான்.

"அதுனாலே இப்ப என்ன குறைஞ்சு போயிடுத்தாம்?" அவள் கொஞ்சலாகக் கேட்டாள்.

"சரி கண்ணா, நீ படிக்கப்போ; நான் நடிக்கப் போறேன்". என்றான் ராஜன்.

"அப்பா, கண்ணா, உங்கப்பா படிப்படியாய் வசனகர்த்தாவும் ஆயிடுவார் போலிருக்கே!" என்று பெருமிதத்தோடு கூறினாள் பத்மா.

"அப்பா, மாமாவுக்குப் போட்டியா வந்திடாதீங்க. அம்மாவுக்குப் பொறுக்காது. எப்பவும் அம்மாவுக்கு அவ அண்ணாமேலே மதிப்பு ரொம்ப அதிகம்; ஏம்மா, அப்படித்தானே?" என்று






உலகப் பிரசித்திபெற்ற தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும்

**பெப்ஸ்** வில்லைகளை உட்கொண்டதால், பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது

தொண்டைப்புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் முதலியவை பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும் வில்லைகளை உட்கொண்ட உடனேயே அகலுகின்றன. பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, நோய்க்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும், வலியைக் குறைக்கவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள்.




**பெப்ஸ்**

தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணம் அளிக்கும் வில்லைகள்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-56-TAM.

சோல் ஏஜண்டுகள்:

**தாதா அண்ட் கம்பெனி,**

86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3.

கூறிவிட்டு மாடிக்குச் சென்றுவிட்டான், கண்ணன். அதைப் பார்த்துக்கொண்டே ராஜன் நின்ருன். முதிர்ந்த கதிர்க் கொண்டைகள் காற்றில் சரசரப்பதைக் கேட்க மகிழ்ச்சிகொள்ளும் விவசாயியைப்போல், கண்ணனின் வார்த்தை உச்சரிப்பில் அவன் மகிழ்ந்துபோனுன். ஒரு நிமிடம் அவன் மரண பயம் மறைந்துகொண்டது. ஆனல் வெகு விரைவில் திரும்பிக் கொண்டது. அவன் முகத்தில் சுருக்கங்கள் தோன்றின. அது வயதின் விளைவல்ல; பிரிவுத் துயரின் புதைவிடங்கள்!

"பத்மா, நாளைக் காலையில் நான் வரக் கொஞ்சம் நேரமாகும்...நான் போய் வரட்டுமா?" என்று விடை கேட்டான்.

"சரி, ஆனல் அண்ண வந்தால்...?"

"ஸ்டுடியோவுக்கு வரச்சொல்!"

அவன் சரேலென்று வெளியேறினன். பத்மா விழிகளில் பெருமை துள்ள அவன் செல்வதையே நோக்கினள்!

* * *

கடைசிக் கட்டம்! அவிழ்ந்து வீழ்ந்த அவன் வாழ்வுத் திரையைச் சுருட்டியெறிந்து விட்டுத் திரைக்கதை முன் நின்றது! ராஜன் முரளீதரனுக நின்றுகொண்டிருந்தான் துப்பாக்கியோடு!

மறுபடியும் அவன் வாழ்வின் நினைவு...!

கண்ணனின் வருங்காலத்தைக் கற்பனைசெய்து பார்த்தால்! வானவில் கண்ணுக்குக் கவர்ச்சியாகத்தானேயிருக்கும்?

அவன் பத்மாவை எண்ணிக்கொண்டான். பட்டுப் புடவை சரசரக்க அவள் அவனை வணங்கி நிமிர்கிருள். ஆனல், அதற்குள் அவளுக்கு என்ன நேர்ந்துவிட்டது? நெற்றியில்...? கருங்குழல் கற்றையின் இடைவெளியில்...? மென் கழுத்தில்...? தந்தக் கரங்களில்...? எங்கும் வெறுமை! உடலில்...? வெண்மை? ஐயோ, அவள்...?

அவன் நெஞ்சு வெடித்துச் சிதறியது!

கதாநாயகி அவனை அழைத்து நிற்கிருள்...!

அவன் துப்பாக்கி உயருகிறது!

'டுமீல், டுமீல்......!

ஸ்டுடியோவே அதிர்ந்தது: ராஜன்— கதாநாயகன் முரளீதரன்— கீழே சாய்ந்துவிட்டான்! அன்புச் சுமையோடு சென்றுவிட்டான்!

படப்பிடிப்பு முடிந்தது!

"அற்புதம்! அபாரம்! அமோகம்! என்று இரைந்துகொண்டு ஓடிவந்தார் டைரக்டர் சந்துலால். அவருக்குப் பின்னே, "என்ன அற்புதம்? உங்கள் அற்புதத்திற்கு ஓர் உயிர்ப்பலியா! சந்துலால் உங்கள் புகழ்வெறிக்கு என் நண்பனைப் பலியாக்கிவிட்டீர்களே!" என்று அலறிக் கொண்டு ஓடிவந்தான் மோஹன்.

ராஜனை அப்படியே எடுத்து மடியில் போட்டுக்கொண்டு கதறினன், "கடைசியில் நினைத்ததை முடித்துவிட்டாயேடா! என்னிடம் சொல்லிக்கொள்ளாமல் இதற்காகத்தான் முன்னதாகவே வந்தாயா...? ஏண்டா உனக்கு இந்த மரண தாகம்!... தங்கைக்கு என்னடா சொல்வேன்...? என்னை நீ வஞ்சித்துவிட்டாயே!" என்றுத் தேம்பித் தேம்பி அழலானன். எல்லோரும் வேரோடி நின்றுவிட்டார்கள்.

டைரக்டர் ஒரு கோப்பை நீருடன் அவனருகே வந்தார். "மிஸ்டர் அன்பன்! என்னை வெறியன் என்று கூறிவிட்டீர்கள். பாதகமில்லை!" என்று கூறிக்கொண்டே ராஜனின் முகத்தில் நீரைத் தெளித்துக் கண்களையும் துடைத்துவிட்டார். யாருக்கும் ஏதும் புரியவில்லை!

ராஜனுக்கு நினைவு மெல்ல வர எழுந்து உட்கார்ந்தான். அவனல் எதையும் நம்பமுடியவில்லை. "டைரக்டர் சார், துப்பாக்கி குறி தவறிவிட்டதா?" என்று கேட்டான்.

அப்போதுதான் மோஹனுக்குச் சந்துலாவின் திட்டம் புரிந்தது! "ராஜன்! சந்துலாவின் குறி யென்றும் தவருது! எழுந்திருடா. எல்லாரும் சிரிக்கப்போகிருர்கள்!" அவனைத் தூக்கி நிறுத்தினன். சந்துலாலை நெருங்கி, "மன்னித்துக் கொள்ளுங்கள். வெற்றி உங்களுக்குத்தான்." என்று வாழ்த்தியவண்ணம் கைகுலுக்கினன்.

பட முதலாளியும் அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தவர், "சந்துலால், உங்கள் திறமை அபாரம்! நடிப்பு அற்புதம்! வெற்றி அமோகம்!" என்று புகழ்ந்த வண்ணம் சந்துலாலைத் தழுவிக் கொண்டார்.

சந்துலால் கர்வத்தின் வர்ணத்தோடு கோணல் புன்னகையை வீசினர்.

வானத்து 'நடிக நக்ஷத்திரங்கள்' எதற்கோ சிரித்துக்கொண்டன!

# தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

## பருப்பு ரச ஆராய்ச்சி

நம் உணவில் நைட்ரஜன் மிக முக்கியமான ஒரு ஸ்தானத்தை வகிக்கிறது. மனிதனுக்குத் தேவைப்படும் புரத சத்தில் பிரதான அம்சம் நைட்ரஜனேயாகும். அரிசி, கோதுமை, பார்லி போன்ற நம் தானிய உணவுகளைவிட பருப்புகளில் இப்புரதசத்து அதிகமாக அடங்கியுள்ளது. பருப்புகளில் புரத உருவில் உள்ள நைட்ரஜனை நீக்கி வேறு சில பொருள்களோடு கலந்து வேறு பல உருவிலும் நைட்ரஜன் உண்டு.

நம் தமிழ் நாட்டில் பருப்பை நீர்கலந்து வேகவைத்து, பருப்பு சத்து கலந்த நீரை வடித்து, அதோடு புளி, உப்பு முதலியவை சேர்த்து பருப்பு ரசம் தயாரிக்கும் வழக்கம் பிரபலமாக உள்ளது. வடநாட்டில் இவ்வழக்கமில்லை. பருப்பு நீரில் நாம் ரசத்துக்காகச் சேர்க்கும் புளி அந் நீரில் கரைந்துள்ள நைட்ரஜன் சத்தைத் தனியே பிரித்துவிடும் இயல்புடையது. ஆனல் உப்போ நைட்ரஜனை நீரோடு கரைத்துவிடும் இயல்புடையது ஆகையால் புளியோடு உப்பும் சேர்ப்பதால் புளியின் இவ் இயல்பு செயல்படாமல் போய்விடுகிறது.

நம் உணவுக்காகப் பயன்படும் பிரதான பருப்புகள் பத்து ஆகும். அவையாவன:

1. துவரை (Canjanus cajan), 2. உளுந்து (Phaseolus mungo), 3.கொள்ளு (Dolichos biflorus), 4. கடலை (Cicer arietinum), 5. பாசிப் பயிறு (Phaseolus radiatus), 6. மசூர் (Lens culinaris), 7. காராமணி அல்லது தட்டைப் பயிறு (Vigna Sinensis), 8. சோயா (Lycine max), 9. பட்டாணி (Pisum Sativum) 10. மொச்சை (Dolichos lablat).

மேலே கண்ட பருப்புகளில் முறையே 3·8, 3·9, 3·3, 3·7, 4·0, 4·1 3·8, 6·8, 3·6, 4·5% நைட்ரஜன் அடங்கியுள்ளது. இப்பருப்புகள் வேக எடுத்துக்கொள்ளும் நேரம், சேர்த்து வேகவிடும் நீர், அடுப்பின் வகை, இடம், எரிபொருள் முதலியவற்றைப் பொருத்து மாறுபடும். ஓர் இடத்தில் துவரைப் பருப்பு வேக 90 நிமிடமாகிறது என வைத்துக்கொண்டால் மேலே கண்ட பத்து வகைப் பருப்பும் வேகப் பிடிக்கும் நேரம் முறையே 90, 35, 95, 35, 25, 20, 35, 155, 150, 40 நிமிடமாகும். துவரைப் பருப்பு வேக குறைவான நேரம் பிடிக்கும் இடங்களில் அதற்கேற்றபடி மற்ற பருப்புகள் வேக எடுத்துக்கொள்ளும் நேரமும் குறையும். பருப்புகளில் வேக மிகமிகக் குறைவான நேரம் எடுத்துக்கொள்ளுவது மசூர் பருப்பு. மிகமிக அதிக நேரம் எடுத்துக்கொள்ளுவது சோயாப் பருப்பு. துவரைப் பருப்பு வேகும்போது அதோடு நான்கைந்து துளி எண்ணெய், சிறிது அரைத்த மஞ்சள் கலந்தால் 90 நிமிடத்தில் வேகும் துவரைப் பருப்பு 55 நிமிடத்தில் வெந்துவிடும். அதாவது சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் நேரத்தில் 60% நேரமே எடுத்துக் கொள்ளும். மஞ்சள், எண்ணெய் சேர்த்து பருப்பை வேகவைப்பது நம் அனுபவத்தில் உள்ள ஒரு முறையேயாகும்.

பருப்போடு நீர் சேர்த்து வேக விடுவதால் பருப்பில் அடங்கியுள்ள நைட்ரஜன் சத்தில் ஒரு பகுதி பருப்பு நீரில் கரைந்து விடுகிறது. இப்படிக் கரையும் நைட்ரஜன் சத்து பருப்புக்குப் பருப்பு வித்தியாசமாக உள்ளது. மேலே கண்ட பத்து வகைப் பருப்புகளையும் நீர் சேர்த்து வேகவிட்டுச் சோதித்ததில், அவற்றின் நைட்ரஜன் சத்து முறையே 7·4, 3·4, 2·4, 7·8, 11·5, 11·7, 7·1, 3·8, 7·8, 10·4% நீரோடு கரைந்ததாகத் தெரியவந்துள்ளது. மற்ற எந்தப் பருப்பையும்விட மிக அதிகமாகச் சத்துக்கரைவது மசூர் பருப்பில்தான். குறைவாகக் கரைவது கொள்ளு எனப்படும் காணப்பருப்பில்தான். மசூர் பருப்பே மற்ற எந்தப் பருப்பையும்விட மிகக் குறைவான நேரத்தில் வேகுவதோடு அதிக நைட்ரஜன் நீரில் கரையவிடுவதால் மற்ற எந்தப் பருப்பையும்விட அதுவே ரசத்துக்குச் சிறந்ததாகும் என ஆராய்ந்து தீர்மானித்திருக்கிருர்கள். மசூர் பருப்பு பலசரக்குக்

கடைகளில் சுலபமாகக் கிடைக்கும் பருப்பே யாகும்.

## மலிவான மண் தார் ரோடு

டில்லியிலுள்ள மத்திய ரோடு ஆராய்ச்சிக் கழகம் பதினேழுண்டுகளுக்கு முன்பு மண்ணுல் மலிவான ரோடு அமைக்கும் முறை ஒன்றைக் கண்டறிந்தது. அம் முறைப்படி பதினேழுண்டுகளுக்கு முன்பு பஞ்சாபில் 280 மைல் நீளமுள்ள ரோடும் அமைக்கப்பட்டது. அந்த ரோடு இன்று வரையில் நல்ல நிலையில்தானிருந்து வருகிறது. மண்ணுல் முன்னைவிடச் சிறந்த முறையில் ரோடு அமைக்கும் வகை ஒன்றை இப்பொழுது புதிதாக அதே கழகம் கண்டறிந்துள்ளது. இதன்படி அவ்விடங்களில் கிடைக்கும் பலவித மண்களைச் சேகரித்துத் தரம்பிரித்து குறிப்பிட்ட அளவில் அவற்றை ஒன்ருகக் கலந்து, அதோடு அவ்வவ்விடங்களில் கிடைக்கும் சரளைக் கற்கள், செங்கற் பொடி, கூழாங்கற்கள் முதலியவைகளையும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் சேர்த்து, நீர் விட்டுக் குழைத்து அதில் ரோடு அமைக்க வேண்டும். இப்படி அமைத்தால் அது மிக உறுதியாக இருக்கும். தார் அதன்மேல் பூசிவிட்டால் முதல்தர ரோடாக அது அமைந்துவிடும். இவ்விதம் ரோடு ஒரு மைல் தூரம் அமைக்க எல்லாச் செலவுகளுமாகச் சேர்த்து ரூ. 18000 தான் ஆகிறது. ஆனுல் இப்பொழுதுள்ள முறைப்படி அமைக்க ரூ. 35000 செலவாகிறது. சிரமதான முறையில் இவ் ரோடை அமைப்பதானுல் மைலுக்கு 3000 ரூபாய் தான் செலவாகும். இப்புதிய முறை மாதிரி ரோடுகள் ஒவ்வொரு ராஜ்யத்திலும் சுமார் இரண்டு இரண்டு மைல் தூரம் அமைக்க ஏற்பாடாகியுள்ளது.

## நிலக்கடலை பால், தயிர் தொழிற்சாலை

நிலக்கடலை பாலும் தயிரும் சாதாரண தயிரைப்போல் உடலுக்குப் புஷ்டி தரவல்லது. உடல் நலத்துக்கும் ஏற்றது. வைட்டமின் சத்துகள் நிறைந்தது என ஆராய்ச்சி மூலமும், அனுபவ மூலமும் இப்பொழுது தெளிவாகியுள்ளது. நம் நாட்டில் இப்பொழுது வருடம் சுமார் 35 லட்சம் டன் நிலக்கடலை உற்பத்தியாகிறது. இதில் ஒரு சிறு பகுதியை பால்-தயிராக மாற்றினுல்கூட நம் மக்களின் உடல்நலம் வெகுவாக அபிவிருத்தியடையும். கடந்த ஐந்தாண்டுகளாக மைசூரில் உள்ள மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகம் நிலக்கடலை பால் தயிர் ஓரளவு பெரும் அளவில் உற்பத்தி செய்து பொதுமக்களுக்கும் ஹோட்டல்களுக்கும் வினியோகம் செய்து வருகிறது. இதன் மூலம் நிலக்கடலைப் பாலுக்கு நம் நாட்டில் நல்ல எதிர்காலமுண்டு என்பது இப்பொழுது நிச்சயமாகி விட்டிருக்கிது. ஆகையால் மைசூரைப் போலவே மற்ற முக்கிய நகரங்களிலும் இனி நிலக்கடலை பால் தயிர் தொழிற்சாலை ஏற்படுத்தலாம். எட்டு மணி நேரத்தில் 1000 ராத்தல் அதாவது நூறு காலன் நிலக்கடலைப் பால் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க ரூ. 60,000-மும் சிறு அளவில் அதாவது தினம் 400 ராத்தல் தயிர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க சுமார் ரூ. 10,000மும் வேண்டியிருக்கும். இத் தயிரிலிருந்து மோர், தயிர், சாதம், தயிர்வடை, அவியல் போன்றவையும் தயாரிக்கலாம். முதன் முறையாக மைசூருக்கு வெளியே கோயமுத்தூருக்கு அருகே உள்ள பெரிய நாயக்கன்பாளையத்தில் இப்பொழுது நிலக்கடலை பால்-தயிர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று அமைக்க ஏற்பாடாகி வருகிறது. இதேபோன்று மற்ற நகரங்களிலும் ஆரம்பித்து நடத்த வசதியும் ஆர்வமும் உள்ளவர்கள் முன்வரவேண்டும்.

## கரும்பு நடும் மெஷின்

லக்னேவிலுள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் கரும்பை நடும் மெஷின் ஒன்றை இப்பொழுது புதிதாகக் கண்டுபிடித்துள்ளனர். இவ் இயந்திரத்தை ட்ராக்டரோடு இணைத்துவிட்டால் கரும்பை ஒரு தடவையில் மும்மூன்று வரிசையாக நட்டுவிடும். நம் நாட்டில் கரும்பு சாகுபடி செய்பவர்கள் செய்யவேண்டியுள்ள பெரிய செலவினங்களில் நடுகைச் செலவு மிக முக்கியமானது. ஆகையால் மெஷின் மூலம் நடும் இப்புதிய முறையால் கரும்பு சாகுபடிச் செலவைக் கணிசமாகக் குறைத்துவிடலாம்.

ட்ராக்டரின் பின்பக்கம் ஒரு இரும்புத் தடி (Iron Bar) இணைக்கப்பட்டிருக்கும். அத்தடியில் கரை அல்லது வரப்பு இடும் மூன்று சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும். இச் சாதனங்களின் மேற்புறமாக ஆசனங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவ் ஆசனங்களின் பின்புறம் ஒவ்வொன்ருக மூன்று ஆசனங்களுக்குப் பின்புறம் மூன்று குழாய்களிருக்கும். ஆசனத்தின்மேல் பெட்

எந்நேரத்திலும்
எவ்விடத்திலும்
எவ்விசேஷத்திலும்







# கடாவ் வாயில்கள்

அணிந்தால் உங்கள் தோற்றம்
எழிலுடன் விளங்குகிறது.

தி கடாவ் மகன்ஜி ஸ்பின்னிங் &
வீவிங் கம்பெனி லிமிடெட்

மில்ஸ்: பைகுலா, பம்பாய்.
ஆபீஸ்; லக்ஷ்மி பில்டிங்கு, பல்லார்டு எஸ்டேட்,
பம்பாய்

SISTA'S KMS-193

டிகள் அமைக்கப்பட்டிருக்கும். அப்பெட்டிகளில் நடவேண்டிய கரும்புத் துண்டுகள் நிரப்பப்படும். ட்ராக்டர் நகர, நகர வரப்பிடும் சாதனங்கள் நடுகைக்கு வசதியாக வரப்பிடும். பெட்டிகளிலிருந்து கரும்புத் துண்டுகள் ஒன்றன்பின் ஒன்ருக வெளியேறி ஆசனத்துக்குப் பின்புறமுள்ள குழாய் வழியாகக் கீழே இறங்கி கரையிடும் சாதனம் அமைக்கும் கரையில் வரிசையாக நடப்பட்டுவிடும். ட்ராக்டரின் வேகம் மணிக்கு இரண்டு மைல் அளவில் வைத்து இவ்விதம் நடுகை செய்தால் 8 மணி நேரத்தில் 6 ஏக்கர் நடலாம். இந் நடுகை இயந்திரம் மிகவும் சிக்கலானதல்ல. சிறு தொழிற்சாலேகளில் சுலபமாகச் செய்து கொள்ளலாம். இச்சாதனத்தைத் தாங்களே செய்து பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறவர்கள் அமைப்பு முறைபற்றி விரிவான விவரங்களேக் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

The Secretary,
National Research Development
Corporation of India,
Mandi House,
LYTTON ROAD — New Delhi-1

## லிஸ்டரின் டூத் பேஸ்ட்

லிஸ்டரின் டூத் பேஸ்ட் செய்யும் முறை ரகசியமானது. வியாபார நோக்குடன் அக் கம்பெனியார் அம் முறையை ரகசியமாக வைத்துக்கொண்டுள்ளனர். ஆனுல் லிஸ்டரின் பேஸ்ட்டைப் போன்றதோர் பற்பசையை நாம் தயாரித்துக்கொள்ளலாம். அதற்கான முறை இதுதான்:

வேண்டிய பொருட்கள்:

| | |
|---|---|
| பிரஸிபிடேடட் சாக் பவுடர் | 1 ராத்தல் |
| நயம் வெள்ளே சோப்பு | 5 ட்ராம் |
| பொராக்ஸ் | 3 ,, |
| தைமால் | 20 கிரெய்ன் |
| மெந்தால் | 20 ,, |
| யுகலிப்டஸ் ஆயில் | 20 ,, |
| ஆயில் ஆப் வின்டர்கிரீன் | 20 ,, |
| அல்கஹால் | ½ அவுன்ஸ் |

செய்முறை:

மேலே கண்ட எட்டுச் சரக்குகளேயும் ஒன்ருகக் கலந்து அதோடு தேவையான அளவு ஆவி நீர் சேர்த்து பிசைந்து கொள்ளவும். காற்றுப் புகாத டப்பிகள், பாட்டில்கள் அல்லது Collapsible Tube களில் நிரப்பிக்கொண்டால் நல்ல நிலேயில் வெகுகாலம்வரை இருக்கும்.

நீண்ட அடர்ந்த கூந்தலுக்கு
ராம்தீர்த் பிராம்மி எண்ணெயை உபயோகியுங்கள்
ஸ்பெஷல் நெ. 1 (ரிஜிஸ்டர்ட்) ஆயுர்வேத முறை
கேசத்திற்கும், புத்திக்கும் சிறந்த நிகரற்ற டானிக்

மயிர் விழுதலே தடுப்பதற்கும்
புஷ்டியுள்ள கேசம் வளரவும்
இயல்பான கருமை
பெறுவதற்கும் உதவுகிறது



பொடுகு, ஞாபக சக்தி,
நல்ல தூக்கம் யாவற்றுக்கும்
எல்லா பருவத்திலும்
எல்லோருக்கும் பயன்படும்

பெரிய பாட்டில் ரூ. 4—0—0 சிறிய பாட்டில் ரூ. 2—0—0

தபால் செலவு தனி. வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.

ஆரோக்கியமாகவும், திடமாகவும் வாழ்வதற்கு யோகாஸனங்களே விவரித்திருக்கும் எங்கள் ஆஸன படத்தை வாங்கிப்பாருங்கள். ரூ. 2—50 அனுப்பினுல் தபால் செலவின்றி அனுப்பப்படும். இந்த ஆஸனப் பயிற்சியை வீட்டிலேயே சுலபமாகச் செய்யலாம்.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாச்ரமம்
தாதர் (மத்திய ரயில்வே) பம்பாய்-14
போன்: 62899 தந்தி: "பிராணுயாமம்" தாதர், பம்பாய்

தொடர் கதை

# சிரித்த செந்தாமரை



ஏ.சுப்பையா

## நீங்கள் முன் படித்தவை

எட்டு வயதில் திருமணம், மூன்று மாதத்திற்குப் பின் விதவை. அறியாப் பருவத்தில் கயவனொருவன் வலையில் சிக்கி முகரப்பட்டு உதறி எறியப்பட்டவள். கர்ப்பவதியாகி அன்பு நிறைந்த ஒரு வயோதிகரால் புகலிடம் தரப்பட்டு, ஒரு மகவை ஈன்றெடுக்கிறாள் கதாநாயகி சுகுணா. ஈன்ற களைப்பு நீங்கிய பின்னர் தன் மகள் லீலாவை புகலிடம் தந்த குடும்பத்தாரிடமே விட்டு விட்டு, ஆதரவற்ற சுகுணா சேரன்மாதேவி நகருக்கு அருகிலுள்ள மஹாயோகி மடத்திற்குச் சென்று, யோகியாரைச் சந்திக்கிறாள். தன் உள்ளத்தைக் கொட்டி தன் துன்பங்களுக்கு முடிவு உண்டா என்று வினவுகிறாள்.

ஒரு பாபமும் அறியாத தான் ஏன் இப்படி அவதிக்குள்ளாக வேண்டும்; தான் நன்றாக வாழ விரும்புவதாகவும், ஆயினும் உலகம் அதற்கு இடமளிக்கவில்லை என்றும் எடுத்துக் கூறி மஹாயோகியிடம் தான் ஏன் மறுமணம் செய்துகொள்ளக்கூடாது என்று கேட்கிறாள்.

மஹாயோகியின் கண்கள் அவளை ஆகர்ஷித்தன. அவர் சரீர அழகில், கண்களின் கவர்ச்சியில் சிக்கித் தவிக்கிறாள்.

யோகியார் அவளுக்கு ஆறுதல் கூறி ஆச்ரமத்திலேயே கொஞ்ச காலம் தங்கும்படி உத்தரவிட்டார். மன அமைதி நிச்சயம் காண்பாய் என்று உறுதிகூறினார்.

தன்னை ஆச்ரமத்திற்கு அழைத்துவந்த மலையப்பரும், கர்ணம் கந்தசாமிப்பிள்ளையும் அவளிடம் விடைபெற்றுச் செல்லுகின்றனர். சுகுணா மடத்திற்குள் செல்கிறாள்.

---

வாழ்க்கை நாடகத்தின் புதிய காட்சி ஆரம்பமாயிற்று. சுகுணா புதிய வாழ்க்கையில் புகுந்தாள். பழைய வாழ்க்கையை விட்டு ஒரு நூதன வாழ்வைத் தொடங்க வேண்டும் என்ற அவளது ஆசை நிறைவேறும்போல் தோன்றிற்று. அவள் விரும்பியபடி ஒன்றிரண்டு மாதங்கள் ஒரு கவலையும் இல்லாமல் அங்கு கழிக்க முடிந்தால் அவள் மனம் ஓரளவு சந்தோஷம் அடையும். மகாயோகி கல்வி-கேள்விகளில் சிறந்தவராகவும், மிகவும் நல்ல

வராகவுமே அவளுக்குத் தோன்றினர். அவருடைய காந்தசக்தி அவளுடைய மனதைக் கவர்ந்திருந்தது. அவருடைய வாயிலிருந்து கடைசியாக வெளிவந்த வார்த்தை, அவர் கண்களிலிருந்து வீசிய ஒளி சுகுணவின் கண் முன்னல் இன்னும் காட்சியளித்துக் கொண்டிருந்தது. மீண்டும் யோகியாரை தரிசிக்கவேண்டும் என்ற ஆவலும் அவள் உள்ளத்தில் எழுந்தது.

அறைக்குள் சுகுண நுழைந்ததிலிருந்து அந்த அறையின் அமைப்பையே கவனித்துக் கொண்டிருந்தாள். இடம் சாதாரணமாக இருந்தாலும் மிகவும் அழகாக இருந்தது. நான்கைந்து வெள்ளிப் பலகைகள் அங்கே கிடந்தன. அவைகளில் ஒன்றின் மீது உட்கார்ந்துகொண்டு, புதிய வாழ்வில் என்னென்ன நடைபெறுமோ என்று அவள் சிந்தனை செய்ய ஆரம்பித்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, தனது தலையை நிமிர்த்திச் சுற்றுமுற்றும் பார்த்தாள் சுகுண. எதிரில் ஒரு பெரிய கண்ணடி இருந்தது. தன் உருவத்தைக் கண்ணடியில் பார்க்கவேண்டும் என்ற ஆசை அவளுக்கு உண்டாயிற்று. உடனே எழுந்து அதன் முன்னல் சென்ருள். தன் முகத்தின் சௌந்தர்யத்தை, வெகுகாலங்களுக்குப் பிறகு அன்றுதான் முதல் தடவையாகப் பார்த்தாள் அவள். அவளுக்கே சிரிப்பு வந்துவிட்டது. சிறிது வெட்கமும் ஏற்பட்டது. தான் இவ்வளவு வனப்புடையவள் என்பதை அவள் இதுவரையில் தெரிந்து கொள்ளவில்லை. கருவண்டுகள் மொய்த்தது போல் நெற்றி வரையில் முளைத்திருந்த கூந்தல் அவளது அழகைப் பன்மடங்காகப் பெருக்கிக் காண்பித்தது. மட்டற்ற மகிழ்ச்சி கொண்டாள் சுகுண. தன் அழகைத் தானே ரசித்துச் சிரித்தாள் அவள்.

சுகுண கண்ணடியைப் பார்த்துக்கொண்டே நின்றபொழுது அதன்மீது லேசாக நிழல் படர்ந்தது; அடுத்த விநாடியில் முன் போலவே ஆகிவிட்டது. என்ருலும் அவள் மனதில் ஒருவித சந்தேகம் எழுந்தது. ஆதலால் சிறிது நேரம் கண்ணடியைக் கூர்ந்து கவனித்தாள்; கண்ணடி மெதுவாக அசைந்தது. அதன் பின் பக்கம் யாரோ நிற்பதுபோல் தென்பட்டது. அந்த உருவம் மறைந்து நின்று அவளைப் பார்த்துக் கொண்டிருப்பது போல் தோன்றிற்று. அது யாராக இருந்தாலும் சரி என்று மனதைத் திடப் படுத்திக் கொண்டு, உள்ளே வரும்படித் தலையசைத்தாள் சுகுண. ஆனல் அந்த உருவம் மாயமாகிவிட்டது. மீண்டும் கண்ணடியில் அசைவு உண்டாயிற்று. பின்பு, மெதுவாகக் கண்ணடி மேலே சென்றது.

சுகுண பயந்து பின்னல் நகர்ந்தாள். கண்ணடியிருந்த இடத்தில் ஒரு முகம் தெரிந்தது. அம்முகத்தில் மலர்ச்சியும், எழிலும், யௌவனமும், திடமும் பொருந்தியிருந்தன. அது ஒரு பெண்ணின் முகம்! சுகுண திடுக்கிட்டாள். அம்முகத்தின் கண்கள் பீதியினல் மருண்டிருந்தன. அறை முழுவதையும் அந்த முகம் ஒரு முறை பார்த்துவிட்டு, சுகுணவை எச்சரிக்கை செய்யும் தோரணையில் தன் வாயில் விரலைவைத்து சைகை காட்டிற்று.

"இங்கிருந்து ஓடிப்போய் விடு!" அந்த முகம் கூறிற்று.

சுகுண வியப்புற்றாள். அந்த முகம் மறைவதற்குள் அதன் திரையைக் கிழித்துவிடவேண்டும் என்ற ஆவலோடு, கண்ணடியைப் பிடித்து அவள் இழுத்தாள்; கதவு திறந்து கொண்டது! ஆனல் அந்த ரூபவதியைக் காணவில்லை. சற்றுத் தூரத்தில் ஒரு குறுகலான சந்து வழியாக அவள் ஓடியது தெரிந்தது. அதைப் பார்த்த சுகுண, பயந்து கதவில் பிடித்திருந்த தன் கையை அகற்றினள். கதவில் 'ஸ்பிரிங்' இணைக்கப்பட்டிருந்ததால் தானகவே மூடி விட்டது.

இதெல்லாம் என்ன கனவா அல்லது நிஜமாக நடைபெற்றதா என்று சுகுணவால் தீர்மானிக்க முடியவில்லை, அப்பெண்ணின் சௌந்தர்யம், அவளது குரல், அவள் தோன்றி மறைந்தவிதம்—இவைகளின் ரகசியம் என்னவாக இருக்கும் என்று தேம்பினள் அவள்.

"இங்கிருந்து ஓடிப்போய் விடு!"

ஏன்? யாரேனும் அவளை ஏமாற்றப்பார்க்கிருர்களா? சுகுண சிரித்தாள். உலகில் யாரைப் பற்றியும் அவளுக்கு லட்சியமில்லை. சொந்தம் என்று சொல்லிக்கொள்வதற்கு யாரும் அவளுக்குக் கிடையாது. யார், எதற்காகஅவளை ஏமாற்ற வேண்டும்?

சுகுண சிறிதும் பயப்படவில்லை. அந்த மர்மப் பெண் கூறியதன் ரகசியத்தை அறியவேண்டும் என்ற ஆர்வத்தால் அவளுக்கு ஆனந்தம் உண்டாயிற்று. கதவையே அவள் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தாள். மீண்டும் திறந்தது கதவு மகாயோகி உள்ளே வந்தார். அவருடைய கண்கள் லேசாக நகைத்தன.

"உன் பெயர் என்ன?" யோகியார் வினவினர்.

"சுகுண."

யோகியார் நெற்றியில் ஒரு சுழிப்புத் தோன்றி மறைந்தது. "சரி, என்னேடு வா! நீ எந்த அறையில் இருக்கவேண்டும் என்பதைக் காண்பிக்கிறேன். இங்கு ஒரு கண்டிப்பான நிபந்தனை உண்டு. ஏதேனும் புதிய அபூர்வமான பொருள்கள் உன் கண்ணில்பட்டால் அதைப்பற்றி நீ கேட்கக்கூடாது. எத்தனையோ திநுசான வியாதியஸ்தர்கள் இருக்கிருர்கள்."

"தங்கள் கட்டளைப்படி நடக்கிறேன், சுவாமி!" என்ருள் சுகுண. முன்பு தோன்றிய மர்மப் பெண்ணின் முகம் அவள் கண்ணெதிரே நின்று கொண்டிருந்தது. ஆனல் அவள், யோகியாரைப் பின் தொடர்ந்து சென்றுவிட்டாள்.

"கணபதி! இந்த அம்மாளுக்குப் பன்னிரண்டாம் நம்பர் அறை கொடுக்கப்பட்டிருக்கிறது;

அங்கு அழைத்துப் போ" என்று ஒரு சிஷ்யரிடம் கூறினார் மகாயோகி.

"உத்தரவு" என்று அவருக்குத் தலைவணங்கி சுகுணாவைக் கூட்டிச் சென்றார் கணபதி.

கணபதி ஒரு வயோதிகர். மிகவும் பலவீனமாகவும் இருந்தார். அவர் சுகுணாவை அழைத்துச் சென்றபொழுது மகாயோகியின் மகிமைகளை அவளுக்குக் கூறிக்கொண்டே சென்றார்.

சுகுணாவுக்கு ஒரு விஷயம் மாத்திரம் விசித்திரமாகத் தோன்றிற்று. அவர்கள் போய்கொண்டிருந்த பாதையில் அறைகள் எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை; கட்டிடம் அவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது. நடுவழியில் ஒரு பாதாள அறைக்கு ஏணிப்படி வைக்கப்பட்டிருந்தது.

"இப்படி இறங்கிக் கீழே போ! போனதும், பக்தர்கள் பயிற்சிபெறும் புத்தகாலயம் இருக்கிறது. அதையும் தாண்டிச் சென்றால் பக்தர்கள் வசிக்கும் ஆசிரமம் இருக்கிறது" என்று சுகுணாவிடம் கூறினார் கணபதி.

"அப்படியானால் இங்கே இருப்பவர்கள் யார்?" சுகுணா கேட்டாள்.

"பரிபக்குவமடைந்தவர்களாகக் கருதப்படுபவர்கள் இங்கே இருக்கிறார்கள். நீ மகா அதிர்ஷ்டசாலி. அதனால்தான் உன்னை சுவாமிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மகாயோகியின் கிருபை கிடைப்பது அவ்வளவு சாமான்யமல்ல. எங்கள் மகாயோகி, பெரிய மகான்."

"இங்கு யாரும் இருப்பதாகத் தெரியவில்லையே!"

"எப்படித் தெரியும்? எல்லோரும் ஆத்மதரிசனம் பெற்ற ஜீவன் முக்தர்கள். ஒருவர் கண்ணுக்கும் அவர்கள் தென்படுவதில்லை."

சுகுணாவுக்கு ஆச்சரியமும், அதே சமயத்தில் ஆனந்தமும் உண்டாயிற்று. மகாயோகியின் உதவியை அவள் இப்பொழுதுதான் உணர ஆரம்பித்தாள். தனிமையாக இருக்கவேண்டும் என்பதே அவளுடைய விருப்பம். கடந்தகால நினைவுச் சித்திரங்கள் அவள் கண்முன் பளிச்சிட்டன. நீண்ட பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

சுகுணாவுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறை மிகவும் சிறியது. இருந்தாலும், சுத்தமாகவும் சுந்தரமாகவும் இருந்தது. அலங்காரங்கள் அதிகம் இல்லை; ஆனால் கண்களுக்கு ரம்மியமாகத் தோன்றிற்று. பக்கத்திலேயே சமையல் செய்துகொள்வதற்கென்று ஒரு தனியறையும் அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

"நான் இங்கு சமையல் செய்துகொள்ள வேண்டுமா?" தன் அருகில் நின்ற கணபதியிடம் கேட்டாள் சுகுணா.

"மகாயோகியின் அந்தரங்க சிஷ்யர்கள் அனைவரும் அவருடைய நேரடியான பார்வையில் இருக்கிறார்கள். அவர்கள் யோகேஸ்வரர்கள் அல்லவா? அதனால் மற்றவர்கள் தொட்டதை உண்ணமாட்டார்கள். அடுத்த பகுதியில் சாதாரண பக்தர்கள் கூட்டாகச் சமையல் செய்து சாப்பிடுவதற்கென்று தனியிடம் இருக்கிறது" என்றார் கணபதி.

"அப்பப்பா! ஒரு மட்டும் சாந்தி கிடைத்துவிட்டது!...... பின்பக்கம் தோட்டம் இருக்கிறது, இல்லையா?"

"ஆம்! அழகான தோட்டம்."

"சரி, நீங்கள் போகலாம்."

சுகுணா அறைக்குள் நுழைந்ததும் கணபதி போய்விட்டார்.

அமைதியின் ஆனந்தத்தை அனுபவிப்பதற்காக அங்கு கிடந்த ஊஞ்சலில் உட்கார்ந்தாள் சுகுணா. ஆட ஆரம்பித்ததும் பாட்டுத் தானாகவே வந்தது. திடீரென்று ஒரு சிந்தனை! லீலாவின் நினைவு அவளுக்கு வந்துவிட்டது. யோகியார் அனுமதியளித்தால், லீலாவையும் கொண்டுவந்து தன்னோடு வைத்துக் கொள்ளலாமே என்று அவள் எண்ணினாள். பின்பு, மகாயோகியின் உருவம் அவள் மனக்கண்ணில் காட்சியளித்தது. அவளுடைய உள்ளத்தைப் பற்றிக்கொண்டிருந்த அவ்வுருவத்தை அகற்றிவிடவேண்டும் என்று அவள் எவ்வளவோ முயன்றாள். ஆனால், வேறு யாருடைய கட்டளைக்கோ கீழ்ப்படிந்து நடப்பது போன்று அவள் மனம் யோகியின் உருவத்தோடு ஐக்கியமாகியிருந்தது.

ஊஞ்சலில் ஆடியாடி சுகுணாவின் கால்களும் சோர்ந்துவிட்டன. அசையாமல் வாசற்பக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். மகாயோகி அங்கு நின்றுகொண்டிருக்கிறாரோ என்று நினைக்கும்படியாக அவளது பார்வை அந்த இடத்திலேயே நிலைத்து நின்றது. கனவு காண்பவள் போலத் தென்பட்டது அவளது தோற்றம். அரை மணி நேரம் அதே நிலையில் அவள் இருந்தாள்.

மனோநிலை மாறியதும் அக் கனவு நிலையும் மாறிவிட்டது. சுற்றுமுற்றும் பார்த்ததில் அவளைத்தவிர வேறு யாரும் அங்கில்லை. தன் மனம் அவ்வளவு பலவீனம் அடைந்துவிட்டிருக்கிறது என்பதை அன்றுதான் உணர்ந்தாள் சுகுணா. எழுந்து அங்குமிங்கும் நடந்தாள் அவள். சிறிது நேரத்திற்குப் பிறகு, சமையல் செய்வதற்கான சாமான்களோடு அங்கு வந்தார் கணபதி.

"சுவாமி! மகாயோகியின் பெயர் என்ன?" சுகுணா வினவினாள்.

"அவருடைய உண்மையான பெயர் ஒருவருக்கும் தெரியாது. சதாசிவம் என்று சிலர் சொல்லுகிறார்கள்; வேறுசிலர் சாந்தசிவம் என்கிறார்கள். உனக்குப் படிக்கத்தெரியுமா?" என்றார் கணபதி.

"தெரியும்."

"உனக்குத் தேவையான புத்தகங்களைத் தரும் படி மகாயோகி சொல்லியிருக்கிறார்.

"புத்தக நிலையத்திலிருந்துதானே?"

"ஆம். நீயே வேண்டுமானாலும் போய் எடுத்துக்கொள்ளலாம்."

"வேண்டாம். நீங்களே ஏதாவதொரு புத்தகத்தை எடுத்துவந்து தாருங்கள்."

சிறிது நேரத்தில் ஒரு புத்தகத்தைக் கொண்டு வந்து சுகுணாவிடம் கொடுத்தார் கணபதி.

அன்று சுகுணா தனக்கென்று சமைத்தாள்; சாப்பிட்டாள். நன்றாகப் படுத்துத் தூங்கினாள். மாலையில் பஜனையில் கலந்துகொண்டாள். இரவில் உபன்யாசத்திலும் பங்கெடுத்துக்கொண்டாள். உபன்யாசம் முடிந்ததும் தன் அறைக்குச் சென்றாள்.

படுத்து உறங்கிவிடவேண்டும் என்று எவ்வளவோ முயன்றும் சுகுணாவுக்குத் தூக்கம் வரவில்லை. மகாயோகியின் உருவம் அவள் மனதில் மாறிமாறித் தோன்றிக் கொண்டிருந்தது. எப்படியோ பொழுது விடிந்தது; வழக்கம்போல வேலைகள் ஆரம்பமாயின. சுகுணா திடசங்கல்பத்தோடு யோகியாரை மறக்க முயன்றாள், முடியவில்லை. அவர் நோக்கும் இடமெல்லாம் அந்த சாந்தஸ்வரூபம் அற்புதமாய் பிரகாசித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு, அவ்வுருவம் அவள் மனதைவிட்டு அகன்றதும், கொடுந்தண்டனையிலிருந்து விடுபட்டவள்போல அவளுக்குத் தோன்றிற்று.

சுகுணாவின் உள்ளம் மகாயோகியை நாடிக் கொண்டேயிருந்தது. தன் மனதின் பலவீனத்தில் அவளுக்கே வெறுப்பு உண்டாயிற்று. எதற்காக அவள் அவரைப்பற்றி நினைக்கிறாள்? இரவில் தூங்கும்பொழுது ஏன் அவளுடைய கனவில் மகாயோகி தோன்றுகிறார்?

இரண்டாவது நாளும் அதேவிதமாகத்தான் சுகுணாவின் நிலைமை இருந்தது. அதிகாலையில் நடைபெறும் பிரார்த்தனையில், மாலையில் நடைபெறும் பஜனையில், இரவு உபந்யாசத்தில் மகாயோகியை அவள் பார்க்கிறாள், அவரது குரலைக் கேட்கிறாள், பகல் முழுதும் அவருடைய புத்தகாலயத்தைப் பயன்படுத்திக் கொள்கிறாள். அதிகாலையில் ரகுநாத் மூலம் கொஞ்சம் விபூதியை மகாயோகி அவளுக்குக் கொடுத்தனுப்புகிறார். அதைப் பிரசாதமாகக் கருதி அவள் ஏற்றுக் கொள்கிறாள். இதைத் தவிர அவள்மீது அவர் அதிகச் சிரத்தை எதுவும் காண்பிக்கவில்லை.

சுகுணா, ஆசிரமத்திற்கு வந்ததும் அவளை எச்சரிக்கை செய்த அந்த மர்மப் பெண்ணைப் பார்க்கவேண்டும், அவள் யாரென்று தெரிந்து கொள்ளவேண்டும் என்பதை மறந்துவிடவில்லை. பிரார்த்தனையிலும், பஜனையிலும் அவள் கலந்து கொள்ளும்பொழுது, அந்த ரூபவதி எங்கேனும் இருக்கிறாளா என்று ஒவ்வொரு நாளும் உன்னிப்பாகக் கவனித்தாள். ஆனால் அவளைக் காண முடியவில்லை. முதலில் தான் தங்கியிருந்த அறைக்குப் பல தடவைகள் அவள் சென்றிருக்கிறாள். ஆனால் அந்தக் கண்ணாடிக் கதவு திறப்பதை அவள் பார்க்கவில்லை. அவளுடன் எப்பொழுதும் நம்பிசாமியோ அல்லது கணபதியோ செல்வதால் அந்தக் கதவைத் திறந்து பார்க்கும் சந்தர்ப்பமும் அவளுக்குக் கிட்டவில்லை.

இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாகவே சுகுணாவின் சரீரத்தில் ஓர் அற்புதமான மாறுதல் ஏற்பட்டிருந்தது. ஒவ்வொரு நாடி—நரம்பிலும் புதிய ரத்தம் ஓடத்தொடங்கிற்று. வெளுத்துப் போயிருந்த அவளது முகம் சிகப்பாக மாறிவிட்டது. அவையவங்கள் ஒவ்வொன்றிலும் புது மெருகு துளித்துக்கொண்டிருந்தது. இம்மாறுதல்கள் அவளுக்கே ஆச்சரியத்தை விளைவித்தன. மகாயோகி அனுப்பும் பிரசாதத்தின் மகிமையாக இருக்குமோ என்றும் அவள் நினைத்தாள். எதுவாகயிருந்தாலும், இப்புதிய வாழ்க்கை அவளுக்குப் பிடித்துப்போய் விட்டது. அவள் கொஞ்சமும் கவலைப்படவில்லை. நாள் முழுதும் பிரார்த்தனையிலும், புத்தகங்களிலும் மனதைச் செலுத்தியதால் அவளுக்கு மனச்சாந்தியும் கிடைத்தது.

பகல் நேரங்களில் சுகுணாவுக்குப் போதுமான அவகாசம் கிடைத்தது. எனவே அவள் புத்தக நிலையத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டாள். பத்தே நாட்களில் அவளுடைய மனக்கோட்டையின் எல்லைக்கோடு விரிவடைந்துவிட்டது.

வீடு, கணவன், குழந்தை ஆகியவற்றில் திருப்தியடையாதிருந்த அவளுடைய ஆசைகள் மீண்டும் தலைதூக்கி அவளை வாட்டின. உபன்யாசத்திற்கு அவள் தினசரி செல்லும்பொழுது அவளுக்கும் அங்கு கூடி உட்கார்ந்திருப்பவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்ததும் அவளுக்குத் தாங்கமுடியாத வேதனை ஏற்பட்டது. முன்போலவே பழைய—சந்தோஷமற்ற நிலைமைக்கு மெதுவாகப் போக ஆரம்பித்தாள். அந் நிலைமை வளர வளர முன்பு கண்ணாடிக் கதவில் காட்சியளித்த மர்மப்பெண்ணின் நினைவும் வளர்ந்துகொண்டிருந்தது. அத்தகைய ஒரு தோழி அவளுக்கு அங்கே கிடைத்தால் எப்படியிருக்கும்!

* * *

ஒரு நாள் காலைப் பிரார்த்தனையில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பிரார்த்தனை முடிந்ததும் மகாயோகி, பக்தர்களின் மத்தியில் புகுந்து நடந்து சென்றார். ஆங்காங்கே அமர்ந்திருந்த பக்தர்கள் சிலர் ஓடிவந்து அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு வயோதிக ஸ்திரீ வேகமாக வந்தாள். மகாயோகியின் தரிசனம் தனக்குக் கிடைக்காமல் போய்விடுமோ என்ற கலவரம் அவள் முகத்தில் தென்பட்டது. வேறொரு கிராமத்திலிருந்து அவள் வந்தவள் போலத் தோன்

றிற்று. அவள் கூட்டத்தினுள் நுழைந்து முன் வரிசையில் வந்து நின்ருள். யோகியார் அதே சமயத்தில் அவள் பக்கம் வந்துகொண்டிருந்தார். மகாயோகியைப் பார்த்ததும் அவள் திடுக்கிட்டாள். அவளோடு வந்திருந்த ஒரு மனிதனின் கையைப் பிடித்துக்கொண்டு எல்லோருடைய காதிலும் விழும்படியாகக் கத்தினுள்.

"இவன் யார்? இவனு மகாயோகி? இல்லை! எங்கள் கிராமத்துப் பண்டாரம் இவன். டேய்! பண்டாரப் பயலே! என் அக்காள் மகளை எங்கே மறைத்து வைத்திருக்கிருய், சொல்லடா!" என்று யோகியார் செல்லும் பாதையின் குறுக்கே நின்று கொண்டாள்.

மின் வெட்டுத் தாக்குதலில் சிக்குண்டவர்கள் போலப் பக்தர்கள் பதறித் துடித்தனர். இவ்வாறு மரியாதையற்ற முறையில் மகாயோகியை அந்த ஸ்திரீ பேசியதும், அநாகரீகமான வார்த்தைகளை உபயோகித்ததும் சுத்தப் பைத்தியக்காரத்தனம் என்று அவர்கள் கருதினர், யோகியாருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டதோ என்று ஆவலோடு, 'இதென்ன? அதென்ன?' என்று ஒவ்வொருவரும் கழுத்தை நீட்டிக்கொண்டும், இடித்துத் தள்ளிக்கொண்டும் ஓடிவந்தனர். யோகியாரின் அருகில் நின்றிருந்தாள் சுகுணு. அதனுல் அங்கு நடைபெற்றவைகளைத் தெளிவாகப் பார்க்கவும், கேட்கவும் அவளால் முடிந்தது.

ஒரு க்ஷண நேரம் மகாயோகி வாசல் பக்கம் நோக்கினர். அந்த ஸ்திரீயிடமிருந்து தப்புவது சாத்தியமல்ல என்று அவருக்கு தோன்றிற்று. ஆகவே தந்திரத்தைக் கையாண்டார்.

"நீ யாரம்மா? உனக்கு நேர்ந்துள்ள துன்பம் டாது!" அன்பு ததும்பக் கேட்டார் யோகி.

அப்படியிருந்தும் யோகியாரைச் சுகுணு பார்த்தபார்வை, கூர்மையான ஈட்டி கொண்டு அவர் கண்களில் குத்தியது போன்றிருந்தது. கண்கள் சிவக்காமலே கோபத்தை வெளிப்படுத்தினுர் அவர்.

இரண்டு வினுடிகளில் எல்லாம் சரியாகிவிட்டது. இந்த வயோதிக ஸ்திரீ முதலில் பயந்தாள். பின்பு, தான் செய்தது குற்றம் என்று உணர்ந்து கொண்டவள் போலத் த குனிந்தாள். மகாயோகியின் கண்கள் அவளைத் தகித்தன. இறுதியில் அந்த ஸ்திரீ மகாயோகியின் காலில் விழுந்துவிட்டாள்.

"சுவாமி! என்னை மன்னித்துவிடுங்கள்" என்று மன்ருடினுள் அவள்.

"நம்பிசாமி! பாவம், இந்த முதியவள் ஏதோ அவதிப்படுகிருள் என்று தெரிகிறது. இவளை நம் பக்தர்கள் இருக்கும் இடத்திற்குக் கொண்டு போய் தகுந்த சிகிச்சைகள் செய்து அனுப்பு!" இவ்வாறு கூறிவிட்டு, ஒன்றுமே அசம்பாவிதம் நடக்காததுபோல் சர்வ சாதாரணமாகச் சென்று விட்டார் மகாயோகி.

பக்தர்கள் கைகட்டி, வாய் புதைத்து நின்றனர். மகாயோகியின் மகிமையைக் கண்டதும் அவர்களுடைய பக்தி சிரத்தை இன்னும் அதிகரித்தது.

"சாந்தி! சாந்தி!" என்ற கோஷத்தோடு கூட்டம் கலைந்தது. சுகுணு மெதுவாகத் தன் அறைக்குச் சென்ருள். அந்தச் சம்பவம் அவள் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தது. யோகியாரின் மீது அவளுக்கு ஒருவித வெறுப்புத் தோன்றிற்று. அவரது இமைக்காத கண்களை நினைத்ததும் அவள் உடல் நடுங்கிற்று.

உண்மையில் யோகியார் கொடூரமானவராகத் தான் இருக்கவேண்டும். அந்த ஸ்திரீ ஒரு குற்றமும் செய்யவில்லையே. அவரைப் பற்றிச் சில வார்த்தைகள் சொன்னுள், அது உண்மையாகத்தான் இருக்கும். அதனுல்தான் தனது மந்திர சக்தியால் அவளை மயக்கிவிட்டார்—இவ்வாறு எண்ணினுள் சுகுணு. அந்த சிந்தனையில் அவர் யார், எதற்காக இவ்வளவு பெரிய ஓர் ஆசிரமத்தை நடத்துகிருர் என்பதை அறிய வேண்டும் என்னும் ஆவல் கொண்டாள்.

அதே சமயத்தில், தினம் அவளுக்குத் தோன்றுவதுபோல மகாயோகியின் உருவம் இருமுறை அவளது கண்களுக்குக் காட்சியளித்தது. உடனே அவளது சிந்தனை சிநேக பாவத்தில் திரும்பியது தலை வணங்கினுள்.

இவ்வாறு மனம் ஒரு நிலையில் நில்லாமல் அடிக்கடி மாறிக்கொண்டிருப்பதன் ரகசியம் சுகுணுவுக்கு விளங்கவில்லை. அந்த ஸ்திரீயை மகாயோகி எப்படி மயக்கினுரோ அதுபோலத் தன்னையும் மயக்குவதற்கு அவர் தினம் முயன்று கொண்டிருக்கலாம் என்றும், அவர் தனது சக்தியை எவ்வளவு நேரம் பிரயோகிக்கிருரோ அவ்வளவு நேரம் வரையில் தன் மனோநிலை விசித்திரமாக மாறிவிடுகிறது என்றும் அவள் நினைத்தபொழுது மிகவும் பயம் ஏற்பட்டது அவளுக்கு. மகாயோகி, மகாபோக்கிரியாக இருப்பாரோ என்ற சந்தேகமும் உதித்தது.

எதற்காக மகாயோகி அவ்வாறு செய்கிருர்? அவளிடம் பக்தியை உண்டு பண்ணுவதற்காகவா அல்லது அவளைப் பைத்தியமாக்குவதற்கா? சாதாரண மனிதர்களைப் போல அவரும் அநியாயம் செய்பவர்தானே? அடிக்கடி இந்தக் கேள்விகளைத் தன்னையே கேட்டுக் கொண்டாள் சுகுணு. நாட்களும் கழிந்து கொண்டிருந்தன. அதன் பலன்; மகாயோகி ஓர் உபயோகமற்ற மனிதர் என்று அவள் தீர்மானித்துக்கொண்டாள்.

அன்று மத்தியானம் சுகுணுவின் மனதில் ஓர் உபாயம் தோன்றிற்று. அவகாசம் கிடைத்தால் மகாயோகியைச் சந்திக்க விரும்புவதாக கணபதி மூலம் அவள் சொல்லியனுப்பினுள். உடனே வரும்படி யோகியாரிடமிருந்து பதில் வந்தது. முதல் முதலில் அவரைச் சந்தித்த அதே அறைக்குச் சென்ருள் அவள். ஊஞ்சலில் உட்கார்ந்து



# செல்லம் அழுதது ஏன்?



பிற்பகல் வேளை; பித்தான்கள் உடைந்து காலரிலும் கைகளிலும் கிழிந்திருந்த என் கணவரின் சட்டைகளை நான் தைத்துக்கொண்டிருந்தேன். அதே சமயம் பக்கத்து வீட்டுப் பப்பியுடன் விளையாடிக் கொண்டிருந்த என் குழந்தை செல்லம் திடீரென வீரிட்டு அழுதாள்; அந்த அதிர்ச்சியில் தையல் ஊசியே என் கையில் ஏறிவிட்டது. கோபத்துடன் திண்ணைக்கு ஓடி வந்தேன். அதே சமயம், பப்பியின் தாயார் கண்ணம்மாவும் அங்கு ஓடி வந்து செல்லத்தை வாரியெடுத்து சமாதானம் செய்ய முயன்றாள்: "ஆரு அடிச்சாம்மா என் செல்லக் குழந்தையை?"

"மாமி, ப...ப...பப்பி என் பொம்மயோட கவுனை அழுக்காக்கிட்டா, மாமி!" என்று விசித்து விசித்துக் கூறினாள் செல்லம்.

"அவ்வளவுதானே. பப்பியை நாம்ப நல்லா அடிச்சுட்டு உன் பொம்மைக்குப் புதுசா ஒரு கவுன் வாங்கிப் போட்டுடலாம். வா!" என்று தேற்றிவிட்டு, இரு குழந்தைகளையும் தன்னோடு அழைத்துச் சென்றாள் கண்ணம்மா. கண்ணம்மாவிடம் காணப்படும் தங்கமான குணங்களில் ஒன்று, தன் குழந்தைகளைப் போலவே பிறர் குழந்தைகளையும் அரவணைத்துக்கொள்ளும் தன்மை. தன் தந்தை பணக்காரர் என்ற கர்வம் எள்ளளவும் அவளிடம் கிடையாது. - இவ்வாறாக எண்ணமிட்ட


6. 258A-X52 TM



வண்ணம் அப்படியே கண்ணயர்ந்துவிட்டேன். அப்புறம் செல்லம் வந்து என்னை எழுப்பினாள். கண்விழித்துப் பார்த்ததும், செல்லத்தின் கையிலிருந்த பொம்மைக்குப் புதுக் கவுன் போட்டிருந்தது தென்பட்டது—முன்பிருந்ததைப் போலவே இருந்தது இந்தக் கவுனும். இந்த ஏற்பாடு எனக்குப் பிடிக்கவில்லை. இதை ஆட்சேபிக்கக் கண்ணம்மாவின் வீட்டுக்கே சென்றேன்.



கண்ணம்மாவோ, "புதிதாகக் கவுன் ஏதும் வாங்கவில்லையே. சில துணிகளை நான் துவைக்க வேண்டியிருந்து, கையோடு கையாக அந்தக் கவுனையும் அலசினேன்" என்றாள். அழகாயிருக்கிறதே பேச்சு! வீட்டில் துணிகளைத் துவைத்துக்கொள்ளும் வழக்கம் எங்களுக்கே கிடையாது; சலவை செய்ய வெளியே அனுப்புகிறோம். அப்படியிருக்க, மோதிரக் கையினால் துணி துவைப்பதாகக் கூறினால், நம்புகிறவள் நானா? "அதெப்படியம்மா துவைத்தீர்கள், அடித்துத் துவைக்கும் சத்தங்கூடக் கேட்காமல்?" என்றேன். "என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் இதோ இந்தத் துணிகளைப் பாருங்கள், இப்போதுதான் இஸ்திரி போட்டு முடித்தேன். ஆனால், அடித்துத் துவைக்கும் சத்தம் கேட்காத காரணம்........."




ஆனால் என் கவனமோ அவள் பேச்சில் லயிக்கவில்லை. வெகு பளிச்சென்று சுத்தமாக விளங்கிய அந்தத் துணிகள் மீது என் பார்வையைப் பறிகொடுத்துவிட்டேன். எனினும், அதே சமயம் என் மனதை உறுத்திய விஷயம் வேறொன்று. தன் செய்கையைப்பற்றி நாலு பேர் என்ன நினைப்பார்கள் என்பதை யோசித்துப் பார்த்தாளா இவள்? இதையே நான் இவளிடம் கேட்டதும், அவள் சிரித்துவிட்டு, "நல்ல கேள்வி கேட்டாய். என் வேலையை செய்வதற்கு நான் ஏன் கூச்சப்படவேண்டும்? தாம் தூம் விவகாரமே எனக்குப் பிடிப்பதில்லை. என் கையாலேயே நான் துணிகளைத் துவைத்துக்கொள்வதில் எவ்வளவோ சிக்கனமிருக்கிறது. அன்றாடம் உடுத்திக்கொள்ள சுத்தமான துணிகள் கிடைப்பதோடு அவை நீடித்து நிற்கவும் செய்கின்றன" என்றாள்.

"நீடித்து உழைக்கிறதாவது; அதென்னமாக? எங்கள் வீட்டுத் துணிகள் விறுவிறுவென்று கிழிந்துவிடுவதும் வாங்கின சுருக்கோடு விட்டுப்போய் விடுவதும் சர்வசாதாரணமாகிவிட்டன. வருஷத்துக்குப் பல் தடவை புதுத்துணிகள் வாங்கி மாளவில்லை!"

"அடித்துத் துவைப்பதால்தான் அவை கிழிந்துவிடுகின்றன. ஆனால் நாங்களோ அடித்துத் துவைக்காமல் ஸன்லைட் சோப்பினால் சலவை செய்கிறோம்."

பரிசுத்தமுள்ள சிறந்த சோப்பான ஸன்லைட் ஏராளமான நுரை கொழிக்கிறது என்றும், கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலுமுள்ள எல்லா அழுக்குகளையும் நொடிப்பொழுதில் அகற்றிவிடும் நுரை அதனுடையதுதான் என்றும் விளக்கிக் கூறினாள் கண்ணம்மா.

இப்போதெல்லாம் நாலுபேர் நினைப்பதைப்பற்றி நானும் அக்கரைப்படுவதில்லை. துணிகளை வீட்டிலேயே ஸன்லைட் சோப்பினால் சலவை செய்துவிடுகிறேன். அது சிக்கனமான சோப் என்றும், சிறிதும் பெரிதுமாக சுமார் நாற்பதைம்பது உருப்படிகளைச் சுத்தமாகவும் பளிச்சென்றும் வெளுப்பதற்கு ஒரே ஒரு வில்லை ஸன்லைட்டே போதுமானது என்றும் கண்டு கொண்டேன். இப்போதெல்லாம் தினசரி உடுத்துவதற்குத் தூய்மையான துணிகள் எங்களெல்லோருக்கும் கிடைத்துவருகின்றன. கிழிசல்கள் தைக்கப்பட்ட ஆடைகளை அணிந்துகொள்ளும் நிலைமையும், காலர்களையும் கைகளையும் கோட்டுக்குள் மறைத்துக்கொள்ளும் அவசியமும் இனி என் கணவருக்குக் கிடையாது. சிக்கனம் என்றால் எல்லா விதத்திலும் சிக்கனம். ஒரு குடும்பப் பெண்மணிக்கு இதைவிட வேறென்ன வேண்டும்?




S. 2568-X52 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட்

ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார் யோகி. சுகுணவைக் கண்டதும் தரையில் உட்காரும்படி கண்ஜாடை காண்பித்தார். அவ்வாறே உட்கார்ந்தாள் அவள்.

"என்ன......?" புன்முறுவலுடன் வினவினர் அவர்.

"சுவாமி! நான் இங்குவந்து பதினைந்துநாட்கள் ஆகிவிட்டன. எவ்வளவு காலம் வரையில் நான் இவ்வாறு செயலற்றுக்கிடப்பது?" இது சுகுண.

"ஏன், நீ வருந்தும்படியான சம்பவங்கள் ஏதேனும் நடந்ததா?"

"அப்படியொன்றும் நடக்கவில்லை, சுவாமி! என்னுடைய சுபாவம் விசித்திரமானது. சாப்பிடுவதும், தூங்குவதுமாகக் காலங்கழிப்பது எனக்குப் பிடிக்கவில்லை."

"அப்படியானல் பகவானை நினைத்துப் பஜனைகள் பாடு!"

"அதுவும் என்னல் முடியாது. உலக இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். அதே சிந்தனைதான் இரவும்—பகலும் என்னை வதைக்கிறது."

"வேறென்றும் உனக்குத் தோன்றவில்லையா?" மகாயோகியின் பார்வை சுகுணவின் இதயத்திற்குள் ஊடுருவிப் பாய்ந்தது.

"தினம் இரண்டுதடவைகள் தங்களது உருவம் என் கண்களில் காட்சியளிக்கிறது. ஆனலும் என் கவலை தீர்ந்தபாடில்லை."

"ஆத்திரத்தினல் நீ படும் அவதி இது. இங்கு உனக்கென்ன கஷ்டம் இருக்கிறது? என்னுடைய பக்தர்கள் யாரும் கஷ்டமடைவதற்கு நான் இடம் கொடுக்கமாட்டேன்." இதைச் சொல்லிமுடித்ததும் ஒரு தினுசாக அவளை நோக்கினர் அவர்.

சுகுணவின் மனம் 'படக்'கென்றது. யோகியின் பார்வை அவளை என்னவோ செய்தது. மீண்டும் அவள் அவரைப் பார்த்தபொழுது எப்பொழுதும் போலக் கம்பீரமாகவே தோன்றினர். தனக்கு ஏற்பட்ட மனமயக்கத்தினல் தான் அவ்வாறு தென்பட்டதோ என்று அவள் சந்தேகித்தாள்.

"சுவாமி! தாங்கள் சர்வ சக்தியுடையவர். தங்களால் எப்படிவேண்டுமானலும் இருக்க முடியும். என்னல் வேலை செய்யாமல் இருக்க முடியாது. அதற்கு ஒரு பாதை காட்டுங்கள்."

"காண்பிக்கிறேன், அவசரப்படாதே! எனது பக்தர்கள் என்னுடையவர்கள்; நான் அவர்களுடையவன். நீ நினைப்பவையெல்லாம் நிறைவேற்றப்படும். இப்பொழுது போய் வா! நாளை மறுதினம் நான் மீண்டும் உன்னைச் சந்திக்கிறேன்."

இவ்வாறு யோகியார் கூறியதும் சுகுண எழுந்து வெறுப்போடு தன் அறைக்குத் திரும்பினள். அளவுகடந்த ஆத்திரம் ஏற்பட்டது அவளுக்கு. ஆனல் அந்த வெறுப்பும் கோபமும் சிறிது நேரங்கூட நீடித்திருக்கவில்லை. அவளுடைய சஞ்சலத்திற்குக் காரணம் அவள் மனதில் ஏற்பட்டிருந்த பிரமைதான் என்று தெரிந்துங்கூட மனதை அவளால் அடக்க முடியவில்லை; உள்ளம் கொதித்தது, உலகம் முழுவதும் சந்தோஷமாக இருக்கும்பொழுது அவள் மாத்திரம் துன்பப்படுவதா? அத்தகைய குற்றம் அவள் என்ன செய்துவிட்டாள்.

* * *

மாலை நேரம். சுகுணவின் கண்களில் அரை மணி நேரமாவது காட்சியளிக்கும் மகாயோகியின் உருவம் அன்று தோன்றவில்லை. அது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. மிகவும் சலிப்போடு ஜன்னல் பக்கம் சென்ருள். கீழே தோட்டத்தைப் பார்த்தாள். அதன் கதவுகள் மூடப்பட்டிருந்தன.

ஏன் தோட்டத்திற்கு ஒருவரும் வருவதில்லை? தோட்டத்திற்குப் போகும் பாதை எங்கே இருக்கிறது?—இவ்வாறு யோசனை செய்துகொண்டிருந்ததில் நேரம் ஓடிவிட்டது. இரவு வந்தது.

ஓர் உருவம் தோட்டத்தில் நடந்துவருவது போல் சுகுணவுக்குத் தென்பட்டது. யாரது? கண்களை அகலத் திறந்து பார்த்தாள் சுகுண. அந்த உருவம் அவள் நின்ற திசையை நோக்கி வந்தது. சிறிது தூரத்திலிருந்து ஒரு கல்லை அவள் மீது வீசிற்று. கல், தன்மீது விழுந்து விடுமோ என்று பயந்து விலகிக்கொண்டாள் சுகுண. கல் பூமியில் விழுந்தது. அந்தக் கல்லில் ஒரு காகிதம் சுற்றப்பட்டிருந்தது. அதை எடுத்துப் பிரித்துப் படித்தாள் சுகுண:

"சகோதரி!

மகா பயங்கரமான ஆபத்து உன்னை விழுங்கக் காத்திருக்கிறது. ஒரு விநாடிகூட நீ இங்கிருப்பது உசிதமல்ல. உடனே தப்பி ஓடிவிடு.

இப்படிக்கு
உன் பிரியமுள்ள தோழி."

கடிதத்தைப் படித்து முடிந்ததும் ஜன்னல் அருகே ஓடினள் சுகுண. தோட்டத்தில் யாரையும் காணவில்லை. அந்தக் கடிதத்தின் கடைசி வார்த்தையைக் கவனித்தபொழுது, அந்த மர்மப் பெண்ணிடமிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றிற்று.

ஆபத்து!

அப்படி ஏதேனும் ஆபத்து நேர்ந்தாலும் நல்லதுதான் என்று சுகுண நினைத்தாள். ஏனென்ருல், சாரமற்றுக் கிடக்கும் அவளது வாழ்க்கையில் ஒருவேளை ஏதேனும் மாறுதல் ஏற்படக்கூடும் என்று அவள் எண்ணினள். ஆனல் கடிதம் எழுதியவள் அந்த ரூபவதியாக இருந்தால், இவ்வாறு அவளை எச்சரிக்கை செய்வதனல் என்ன லாபம்?

சுகுணா திரும்பவும் தோட்டத்தை உற்றுப் பார்த்தாள்.

"கடவுளே! இனிமேல் நீதான் எனக்கு ஒரு பாதை காண்பிக்க வேண்டும். உன்னைத்தவிர எனக்கு இந்தச் சமயம் உதவுவார் யாருமில்லை" என்று வாய்விட்டுக் கூறினாள் அவள்.

அவள் எதிர்பார்த்தபடியே நடந்தது. கீழே அதுவரையில் மறைந்திருந்த உருவம் அங்கிருந்து நகர்ந்து சென்றது. வெள்ளையான ஒரு வஸ்து தோட்டத்தில் ஊர்ந்து செல்வதுபோல் தென்பட்டது.

அது யாராக இருக்கும்? அந்த உருவம் என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறது?—இதே கேள்விகளைத் திருப்பித்திருப்பிக் கேட்ட வண்ணம் அங்கேயே நின்றாள் சுகுணா. சிறிது நேரத்தில் அவளுக்குப் பின்பக்கம் இருந்த அறைக்குள் யாரோ வந்ததுபோல் ஒரு நிழல் பாய்ந்தது. சுகுணா பயந்துபோய் விட்டாள். அவள் திரும்பினாள், அவளது மூச்சே நின்றுவிடும் போலாகி விட்டது.

கண்ணாடி கதவுக்குள் க்ஷணநேரம் தோன்றி மறைந்த அதே மர்மப்பெண், அழகே உருவாக சுகுணாவின் எதிரில் நின்றுகொண்டிருந்தாள்!

## 3. சீர்திருத்தச் செம்மல்கள்!

திருநெல்வேலி நகரத்தைத் தென்பகுதி-வடபகுதி என்று பிரிக்கும் வகையில் அமைந்திருந்த நீளமான கடைத்தெரு, 'ஹை ரோட்' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்; 'ராஜ பாட்டை' என்று தமிழில் நாம் சொல்லலாம். அங்கு ஓரிடத்தில் எல்லோருடைய கண்ணிலும் படும்படியாக ஒரு பலகை தொங்கிக்கொண்டிருந்தது. அதில், பெரிய கொட்டை எழுத்துக்களில்—

"பா. வைகுண்டம், பி. ஏ., எல். எல். பி.
வக்கீல்"

—என்று எழுதப்பட்டிருந்தது. அது தான் வக்கீலின் காரியாலயம். உள்ளே ஓர் அறையில் அகலமான ஒரு மேஜை. காகிதக் கட்டுகள் அதன்மீது அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. மத்தியானம் சிற்றுண்டி அருந்திவிட்டு, வக்கீல் விட்டெறிந்த பொட்டலம் கட்டிய ஒரு காகிதமும், ஒரு காலித் தம்ளரும் அந்த மேஜையிலேயே கிடந்தன. அன்று ஞாயிற்றுக்கிழமையானதால், மூக்குக் கண்ணாடி அணிந்து-கையிலொரு சிகிரெட்டையும் பிடித்து, கால்களை மேஜையின்மீது நீட்டிக்கொண்டு, தனது வருமானக் கணக்கைப் பரிசீலனை செய்துகொண்டிருந்தார் வக்கீல் வைகுண்டம். சுமாரான ஆதாயத்தில் அந்த மாதம் ஓடியிருப்பதாகத் தெரிந்ததால் அவருடைய முகத்தில் மகிழ்ச்சி அரும்பிற்று. மேஜையின் மீதிருந்த கால்களைக் கீழே இழுத்துக் கைகளை மேஜையின் மீது போட்டுக் கொண்டார் அவர்.

"அப்பப்பா! வண்டி இப்படி ஓடிக்கொண்டிருந்தால் கவலையே இல்லை" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு மேஜையைப் பார்த்து அவர் சிரித்தார்

உருவத்தில் குள்ளம், நல்ல கனம், காக்கைக் கருப்பு, முன்னே தள்ளிக்கொண்டிருக்கும் பெரிய பெரிய கண்கள், சப்பையான முகம்— இவ்வளவு லட்சணங்களுக்கும் பொருந்தியவர் வக்கீல் வைகுண்டம். அவர் அடிக்கடி மூக்கை இழுத்துவிடும் பழக்கமுடையவராக இருந்ததால் அது முன்பாகத்தில் கோலிக் காய் போல உருண்டு நீண்டிருந்தது. ஜெர்மன் தேசத்துக் கெய்ஸர் போலத் தானும் இருக்கவேண்டும் என்பதற்காக, நீண்டு வளர்ந்திருந்த மீசையை அவர் முறுக்கி முறுக்கிப் பதப்படுத்தினதால், ஒருபக்கத்து மீசை மேல்நோக்கியும் மற்றொன்று கீழ்நோக்கியும் வளைந்திருந்தது. அவரைப் பார்த்தவர்கள், ஏதோ நாடகக் கம்பெனியைச் சேர்ந்தவன் வேஷத்தைக் கலைக்காமலே மேடையிலிருந்து ஓடிவந்து விட்டானோ என்றுதான் நினைப்பார்கள்.

நாகரீகக் கல்வி, நவநாகரீகஉடை ஆகிய இரண்டும் வைகுண்டத்திற்கு வாழ்வளித்தன. அவர் சென்னைக் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்த பொழுதே தனக்கெனச் சில லட்சியங்கள் வகுத்திருந்தார். அவைகளை அடைவதற்கு இப்பொழுது பகீரதப் பிரயத்தனங்கள் செய்தார். சென்னையிலுள்ள சிறந்த அறிவாளிகளின் சொற்பொழிவுகளை மிகவும் ஆர்வத்தோடு அவர்கேட்ட காலமும் ஒன்றிருந்தது. காந்திஜீ, பாரதியார், திலகர் ஆகியோரின் கொள்கைகளையும், அவர் பின்பற்றியவர்தான். அவர்களுடைய அறிவுரைகள் அவருக்கு இன்றும் நினைவில் இருந்தன.

"நாசமாய்ப் போன இந்த நாட்டில் பண்டைக் காலத்து ஆங்கில எழுத்தாளர்களின் ஆலோசனைப்படி மேல்நாட்டுப் பழக்கவழக்கங்களை நம்மவர்கள் கடைப்பிடிக்கிறார்களே! இது எவ்வளவு பெரிய மடத்தனம்" என்று அப்பொழுது மிகவும் மனம் வருந்தினார் வைகுண்டம். அவருடைய பேச்சிலிருந்து, அவர் எத்தனையோ பொது நல சங்கங்களின் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுத் தன்னலங் கருதாமல் சேவை செய்து வந்திருக்கிறார் என்றும், சொர்க்கவாசம் செய்யும் தனிப்பெருந் தலைவர்களின் சபையில் ஓர் அங்கம் வகிக்கும் அதிகாரம் அவருக்கும் உண்டு என்றும் நினைக்கத் தோன்றும்.

வைதீகத்தின் வரையறை தாண்டாமல், பழமைக்குக் கவுரவமளிக்கும் பரம்பரையின் குல விளக்காக வைகுண்டம் இருந்தும், பதினேழாம் நூற்றாண்டின் பண்புள்ள பாவையை அவர் தன் பத்தினியாகப் பெற்றிருந்தும் இன்று, பரங்கிக் காரன் தொட்ட பாதி ரொட்டியைத் தின்னும் நிலைமைக்கு அவர் வந்துவிட்டார். ஆசார அனுஷ்டானங்களை அறவே விட்டுவிட்டார். அதே சமயத்தில், நவநாகரிகத்தின் தாராள



மனப்பான்மையோ அல்லது பரந்த நோக்கமோ அவரிடம் இன்னும் ஏற்படவில்லை. துடுப்பில்லாத ஒரு படகு, காற்றடித்த திசையில் செல்வதுபோல வைகுண்டத்தின் வாழ்க்கையும் நகர்ந்துகொண்டிருந்தது.

வைகுண்டம் வக்கிலானார். ஏழைகள் மத்தியிலும், குடும்பங்களுக்கிடையேயும் ஏற்படும் சண்டை சச்சரவுகளுக்கு ஒரு நியாயம் வழங்குவதற்காக—சமுதாயத்தின் நன்மையை உத்தேசித்தல்ல, தன் சுயநலத்திற்காகத்தான் அந்தக் கட்டிடத்தில் ஒரு 'பெயர்ப் பலகை'யையும் மாட்டி, சோமு என்ற ஒரு சோம்பேறிப் பையனையும் தனக்கு வேலைக்காரனாக நியமித்துக்கொண்டு தனது தர்பாரை அவர் ஆரம்பித்தார். தொழில் சுமாராக நடந்தது. சர்க்கார் வக்கீலும், நகரப் பிரமுகர்களும் அவரிடம் மரியாதை காண்பித்தனர்.

அன்றைய தினம் வைகுண்டம் ஜன்னலின் அருகே நின்று வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். நான்கைந்து வியாபாரிகள் சிறிது தூரத்தில் வந்துகொண்டிருந்தனர். அவர்கள் தன்னிடந்தான் வருகிறார்களோ என்று ஆவலோடு அவர்களையே கவனித்தார் வைகுண்டம். ஆனால் அவர்கள் அந்தவாசலைக் கடந்து சென்று விட்டனர். ஆகவே, ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு அவர் திரும்பப் போகும் சமயம் ஒரு 'பெரிய புள்ளி' அவரை நோக்கி வந்தது அவர் கண்ணில் பட்டுவிட்டது. உடனே பின்னால் பாய்ந்து சென்றார் வைகுண்டம். மேஜையை இரண்டு தட்டுத் தட்டிவிட்டு, ஒரு சட்டப் புத்தகத்தைத் திறந்து மேஜையின் மீது வைத்தார். நாற்காலியில்

உட்கார்ந்து, தலையில் கையை வைத்து, நெற்றியைச் சுழித்துக் கொண்டு, தீர்க்க முடியாத சட்டப் பிரச்னையில் மூழ்கியிருப்பவர் போல நடித்தார். மாடிப்படிகளில் ஒருவர் ஏறி வந்த சத்தம் அவர் காதில் நன்றாக விழுந்தது.

"உள்ளே வரலாமா?" வெளியிலிருந்து வந்த குரல்.

வைகுண்டம் பதில் சொல்லவில்லை. சிந்தனையில் அவ்வளவு தூரம் மெய்மறந்திருக்கிறார் என்று அதற்கு அர்த்தம்!

வெளியில் நின்றவர் இன்னும்பலமாகக் கத்தினார். அந்தச் சத்தத்தில் தனது சிந்தனை சிதறிப் போய்விட்டதுபோல முகத்தைச் சுழித்து நிமிர்ந்து பார்த்தார் வைகுண்டம்.

"யாரது?... ஓ! டாக்டரா? வாருங்கள் மிஸ்டர்! ஏது... இந்த நேரத்தில்... இப்படி... திசை தப்பினாற்போல...?"

"ஆஹாஹாஹா!" என்று சொல்லிக்கொண்டே சர்ப்பம்போல நெளிந்து வளைந்துகொண்டு அறைக்குள் நுழைந்தார் டாக்டர் கேசன். அவருடைய முழுப்பெயர் முருகேசன்' அதைத் தான் அவர் எம். கேசன் என்று மாற்றிக் கொண்டார்.

கேசனுக்கும் அனேகமாக வைகுண்டத்தின் வயசுதான் இருக்கும்; ஆனால் கொஞ்சம் மெலிந்த சரீரம். உள்ளத்தில் எவ்வளவோ கவலைகளும், துன்பங்களும் இருந்தாலும் வாழ்க்கையில் முன்னேறவேண்டும் என்ற ஆசையும், புகழ்பெற வேண்டும் என்ற ஆர்வமும் இருந்ததால் எப்பொழுதும் அவர் கம்பீரமாகவே பேசுவார்.

"மிஸ்டர் வைகுண்டம்! நாள் முழுதும் உனக்கு வேலைதானா? சுத்த 'நான்ஸென்ஸா'க இருக்கிறாயே. உன் மாதிரி நபர்கள் பொதுக் காரியங்களிலும் கொஞ்சம் ஈடுபடவேண்டுமப்பா! இன்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்தும் நீ......?"



"என்ன செய்வது, டாக்டர், உன் மாதிரி நாலைந்து புட்டிகளில் வர்ணத் தண்ணீரை வைத்துக்கொண்டு சம்பாத்தியம் செய்யும் தொழில் அல்லவே என்னுடைய தொழில். மூளையைக் குடைந்து நான் வேலை செய்யவேண்டியிருக்கிறதே." புத்தகத்தில் பதிந்த கண்ணை எடுக்க முடியாத நிர்ப்பந்தத்தில் இருப்பவர்போல அதைப் பார்த்துக்கொண்டே பேசினார் வக்கீல்,

"அட சரிதாம்பா! ஒரு முக்கியமான காரியமாக நான் வந்திருக்கிறேன். நமது நகரத்தில் உடனடியாக நாம் அதைச் செய்தாகவேண்டும்."

"என்ன பொதுஜன சேவையா?"

"ஆமாம்."

"டாக்டர்! நாம் செய்யும் சேவையில் பொது நலம், சுயநலம் இரண்டும் சேர்ந்திருக்க வேண்டும். பொது நலத்திற்கு மாத்திரம் உழைப்பதில் எனக்கு விருப்பமில்லை."

"என்ன இப்படிப் பேசுகிறாய்? சம்பாதிக்க வேண்டாம் என்று யார் உன்னிடம் சொன்னது? அதோடு பொது சேவையும் செய்தால் இன்னும் அதிக லாபம் உண்டு."

"ஹா...ஹா.. ஹா...ஹா! இதெல்லாம் மேடையில் பேசவேண்டிய பேச்சு, டாக்டர், சரி. விஷயத்தை நேராகச் சொல்!" புத்தகத்தை மூடிவிட்டு நாற்காலியில் சாய்ந்தார் வக்கீல் வைகுண்டம்.

"நாம் பேசுவது யார் காதிலாவது விழுந்தால் நம்மைத் தவறாக நினைத்து விடுவார்கள்."

"இங்கு வேறு யாரும் இல்லை. எனது 'பிரைவேட் ரூம்' இது. யாரும் இங்கு வரமாட்டார்கள். சும்மா சொல், டாக்டர்! ஆனால் ஒரு விஷயம்; இனிமேல் நாம் என்ன செய்வதாக இருந்தாலும் சரி-நேரடியாக நடவடிக்கையில் இறங்கிவிடவேண்டும்."

"சபாஷ்! என்னுடைய உத்தேசமும் அது தான். அதனால்தான் நான் ஒரு ஜில்லா சங்கம் ஆரம்பிப்பதற்குத் திட்டம் வகுத்திருக்கிறேன். இந்த நேரத்தில் அதற்கு மிகவும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நம் நண்பர் 'கோடையிடி'யையும் கலந்துபேசினேன். அனேகமாக அவரும் இப்பொழுது வருவார் என்று நினைக்கிறேன்.

"கேசன்! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன? உனக்குச் சர்க்காரைப் பற்றியும் வேறு எதைப்பற்றியும் கவலையில்லை, ஆனால் என் பாடு என்னவது?"

"நீ என்ன, எங்காவது இப்பொழுதே முன்சீப் ஆகிவிடப் போகிறாயா? சும்மா அரசியலில் குதித்துவிடப்பா! அரசியலில் பங்கெடுத்துக் கொண்டால் அதற்குரிய பலன் கிடைக்காமல் போய்விடாது.

"இதோபார்! இன்னும் ஆறு மாதத்தில் சர்க்கார் வக்கீல் ஸ்தானம் காலியாகப் போகிறது. அதில் நான் ஒரு 'சான்ஸ்' பார்க்கலாமென்று நினைத்திருக்கிறேன். அதுவரையில் நீ வேறு என்ன சொன்னாலும் நான் கேட்கத் தயார். அரசியல் சம்பந்தமாக எதையும் என்னிடம் சொல்லாதே. வேண்டுமானால் ஒரு சமூகச் சீர்திருத்த சங்கமோ அல்லது முன்னேற்ற சங்கமோ ஆரம்பிப்போம்; அடிக்கடி பிரசங்கங்கள் செய்வதற்காவது சந்தர்ப்பம் கிடைக்கும்."

"அதில் என்ன பிரயோஜனம்? வக்கீல் வாதம் பேசினால் போதுமா? 'பிராக்டிக'லாக ஏதாவது செய்யவேண்டும்."

"மண்ணாப்போச்சு! நீயும் உன் பிராக்டிகலும்! ...உன் பிராக்டிகல் பாதையில் தம்பிடிக்கு ஏதேனும் வழியிருக்கிறதா?"

"வருமானம் கிடையாது! ஆனால் வேறு...... அதாவது என் உத்தேசம் என்னவென்றால், ஓர் அனாதை விடுதி அமைக்கவேண்டும். அதனால் ஜனங்களுக்கும் பிரயோஜனம் உண்டு, நமக்குப் புகழ் கிடைக்கும்."

"சரிதான்! விடுதியை ஆரம்பித்துவிட்டு அப்புறம் அதற்கு நன்கொடை, சந்தா முதலியவைகளை வசூலிப்பதற்கென்று அலைந்து சாக வேண்டும். அப்படித்தானே?"

"பிரசங்கங்கள் செய்தால் நீ பணம் வரும் என்கிறாயா?"

"அதைப்பற்றி யோசனை செய்யாமல் நான் சொல்வேனா?"

"ஊ...ஹூம்! அது ஒரு நாளும் நடைபெறாது. சமூகச் சீர்திருத்தச் சங்கத்திற்கு நான் ஒத்துழைக்கமாட்டேன்."

"அது உன் இஷ்டம், உனது யோசனை எனக்குப் பிடிக்கவில்லை. உண்மையாகச் சொன்னால், உன் திட்டம் உருப்படாத் திட்டம் என்று எனக்குத் தோன்றுகிறது." இவ்வாறு கூறிவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் வைகுண்டம்.

"என்ன உருப்படாத் திட்டம்?" என்று கேட்டுக்கொண்டே மற்றொருவர் அங்குவந்தார்.

"யார் கோடையிடி குமாரா?" இருவரும் ஒரே சமயத்தில் வினவினர்.

"ஆம் ஏழைத் தொண்டன். நீங்கள் எது விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று நான் தெரிந்துகொள்ளலாமோ?" கேட்டுக்கொண்டே ஒரு நாற்காலியில் அமர்ந்தார் கோடையிடி குமார்.

டாக்டர் கேசன் கூறினார்; "எனக்கும் நம் வக்கீலுக்கும் ஒரு தர்க்கம். நான் அனாதைவிடுதி ஆரம்பிக்கவேண்டும் என்று சொல்கிறேன்.



## அவனுடைய தாயார் 'ஸான்பொரைஸ்ட்' அடையாளமுள்ள துணி மட்டும் வாங்கியிருந்தால்...

உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்கிப்போய் இறுகப்பிடிக்கும் உடைகளை அணிந்து அரிய வாய்ப்புகளை விணுக்காதிர்கள்! நீங்கள் பருத்தி துணியோ அல்லது ரெடிமேட் உடைகளோ வாங்கும்பொழுது, அவைகளில் 'ஸான்பொரைஸ்ட்' ('Sanforized') அடையாளமிருக்கிறதாவெனக் கவனிக்கத் தவறாதீர்கள். இந்த அடையாளமிடப்பட்ட துணிகளில் தைய்த்த உடைகள் அநேக சலவைகளுக்குப் பிறகும் உடம்புக்கு பொருந்தாதபடி சுருங்காது!

லேபிலில் '*ஸான்பொரைஸ்ட்*' அடையாளம் இருந்தால் உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒரு பொழுதும் சுருங்காது!

'ஸான்பொரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ.. இன்கார்ப்பரேட்டட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. யில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த கம்பெனியின், சுருங்காது என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

விபரங்களுக்கு: 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ், 
95, மெரீன் டிரைவ், பம்பாய்-2

அவர் சமூகச் சீர்திருத்த சங்கம் அமைக்கலாம் என்கிறார். இதில் இருவருக்கும் ஒரு சமாதானம் ஏற்படவில்லை. நாம் செய்திருந்த முடிவெல்லாம் பாழாகிவிட்டது. என்ன காரணத்தினாலோ நம் வக்கீல் வைகுண்டம் நாளுக்கு நாள் சுத்த சுய நலமியாக மாறிக்கொண்டிருக்கிறார்."

"நீங்கள் கூறுவதில் அர்த்தமில்லை, டாக்டர்" என்று ஆரம்பித்தார் கோடையிடி குமார். "உலகில் சுயநலமி என்று ஒருவருமே கிடையாது. எல்லாம் பொதுநலம்தான். நாம் சாப்பிடுவது கூட உலகத்தின் நன்மைக்காகத்தான்! அது போகட்டும், விஷயத்தைச் சொல்லுங்கள்."

"நீயே சொல் மிஸ்டர் கேசன்! நம் குமார் ஒரு பத்திரிகாசிரியர் என்பது......"

"அட! பத்திரிகாசிரியர் என்றால் எல்லாம் தெரிந்தவர் என்று அர்த்தமா? நானும் உங்களைப் போலத்தான். சும்மா சொல்லுங்கள்" என்று குறுக்கிட்டு வற்புறுத்தினார் கோடையிடி.

"மிஸ்டர்! நீங்கள் பத்திரிகாசிரியரா அல்லது நிருபரா?" என்று வினவினார் வைகுண்டம்.

"இரண்டுமல்ல, பத்திரிகையின் அதிபர் நான்."

"டாக்டரும் அப்படித்தான் சொன்னார்."

"சரி! உங்கள் தகராறு சம்பந்தமாக இருவருக்கும் பொதுவாக நான் ஒன்று சொல்லட்டுமா?" என்றார் குமார்.

"என்ன சொல்லப் போகிறீர்கள்?" டாக்டர் கேசன் வினவினார்.

"ஒரு சமூகச் சீர்திருத்த சங்கம் அமையுங்கள். அதன் ஆதரவின் கீழ் ஓர் அநாதை விடுதியையும் ஆரம்பித்துவிடுங்கள். இருவர் எண்ணமும் ஒரே சமயத்தில் பூர்த்தியாகிவிடும்."

"அது நல்ல யோசனை" என்று வைகுண்டம் குதித்தார்.

"மிஸ்டர் வைகுண்டம்! இந்தக் கிண்டலெல்லாம் எனக்குப் பிடிக்காது" என்று முறைத்தார் டாக்டர்.

"அப்படியானால் உன் அபிப்பிராயம் என்ன? இது வக்கீல்.

"மிஸ்டர் குமார்! உங்கள் யோசனை ஒரு விதத்தில் சரிதான். ஆனால் 'பிராக்டிக'லாக என்ன செய்யமுடியும்?" இது டாக்டர்.

"அதைப்பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? சமூகச் சீர்திருத்த சங்கத்தின் சார்பாக என்னுடைய பத்திரிகை 'தங்கமணி'யில் ஒரு விளம்பரம் கொடுத்துவிடுங்கள்."

"என்ன விளம்பரம்?"

"'நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளம் விதவை திருமணத்திற்குத் தேவை. வரன் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்' என்று விளம்பரம் செய்தால் போதும்."

"விளம்பரத்தைப் பார்த்து யாரேனும் முன் வந்துவிட்டால்?

"வந்தால் என்ன? உயர்ந்த குடும்பத்துப்பெண் எவளும் முன்வர மாட்டாள். யாரேனும் வந்தால் அவள் நல்லவள் அல்ல; அவ்வளவுதானே!?"

"சரியான யோசனை" என்று சொல்லி மேஜையில் ஒரு தட்டுத் தட்டினார் வைகுண்டம்.

"நிஜமாகவே யாரேனும் நேரில் வந்து விட்டால் நம் டாக்டர் இருக்கவே இருக்கிறார்!" சிரித்துக்கொண்டே சொன்னார் குமார்.

"என்ன! நான் விதவையை மணப்பதா?" கேசன் கத்தினார்.

"பிராக்டிகல், டாக்டர்!" என்றார் வக்கீல்.

"உங்கள் பிராக்டிகலில் தீயை வையுங்கள்! முதலில் இந்த மாதிரிக் கிண்டல் பேச்சுக்களை நாம் விடவேண்டும்." டாக்டர் ஆத்திரத்தோடு பகர்ந்தார்.

கோடையிடி குறுக்கிட்டார். "சரி, சரி! இங்கு கவனியுங்கள். முதலில் ஒரு பொதுக் கூட்டத்தை கூட்டி சமூகச் சீர்திருத்த சங்கத்தை அமைத்து விடவேண்டும். அதன் வேலைகள் யாவற்றையும் ஒழுங்குபடுத்திவிட்டு, எனது பத்திரிகையில் விளம்பரம் செய்வதற்குப் பணம் கொடுத்துவிட வேண்டும். சம்மதந்தானே?"

"பூர்ண சம்மதம்! ஆனால் நானும் டாக்டருந்தான் கூட்டுக்காரியதரிசிகளாக இருப்போம்."

"சரி! நான் பொக்கிஷதார். 'தங்கமணிக்கு' இப்பொழுது கொஞ்சம் பண நெருக்கடி." என்றார் கோடையிடி.

"அவ்வளவுதானே? அனேகமாக எல்லாம் முடிந்தமாதிரித் தான்" என்று டாக்டர் கேசன் முத்தாய்ப்பு வைத்தார்.

"தலைவர் யாரென்று தீர்மானிக்கவில்லையே" இது குமார்.

"பழைய பேட்டை பார்த்தசாரதியைப் போட்டுவிடுவோமா?" என்றார் டாக்டர்.

வைகுண்டம் "ஓ! அவ்வாறே செய்துவிடலாம்" என்று டாக்டர் ஆமோதித்தார்.

"அப்படியானால்......... கிளம்பவேண்டியது தானே?" குமார் கேட்டார்.

"இருங்கள்! இன்று நாம் ஒரு நல்ல காரியத்தைச் செய்வதற்கு அஸ்திவாரம் போட்டிருக்கிறோம். அதனால் நாம் மூவரும் சேர்ந்து ஒரு நல்ல விருந்து சாப்பிடுவோம். டே ...... பையா! என்று கத்தினார் வக்கீல்.


எதிரிலிருந்த வெற்றிலைபாக்குக் கடையில் உட்கார்ந்து பீடி குடித்துக்கொண்டிருந்த சோமு ஓடிவந்தான். பக்கத்து ஓட்டலிலிருந்து பல காரங்கள் வாங்கிவரும்படி அவனை அனுப்பினார் வைகுண்டம்.

"பக்கத்தில் ஓட்டல் இருப்பது எவ்வளவு சௌகரியமாக இருக்கிறது, பார்த்தீர்களா?" குமாரைப் பார்த்துப் பேசினார் கேசன்.

"என்னுடைய இஷ்டப்படி மாத்திரம் நமது சங்கம் நடந்தால், அந்த ஓட்டல் முதலாளியையே நம் சங்கத்திற்குத் தலைவராகக் கொண்டுவந்து விடுவேன். பிராக்டிகலாகவும் அதில் நமக்கு நன்மை இருக்கிறது" என்றார் வைகுண்டம்.

"விளையாடாதே! அப்புறம்...ம்...ஆமா!"

[தொடரும்]



# கேரள நாட்டுப் பிரயாணம்-2

கே. ஸ்ரீநிவாஸன்

தேக்கடி அவ்வளவு உயர்ந்த மட்டத்தில் இல்லை என்றாலும் இரவில் கொஞ்சம் குளிரத்தான் செய்தது. இதை எதிர்பார்த்த ஸ்ரீகுருவில்லா தன் வீட்டிலிருந்து படுக்கையையும், கம்பளியையும் அனுப்பியிருந்தார். இரவில் படுக்கும் பொழுது வெறும் பனியனுடன் படுத்த எனக்குக் காலையில் எழுந்திருக்கும்பொழுது யார் எனக்குச் சட்டை போட்டார்கள், யார் அந்தக் கம்பளியை என்மேல் போர்த்தினார்கள் என்று வியப்பாக இருந்தது. "கல்லினுள் தேரைக்கும்......" என்ற பாட்டை முனகிக்கொண்டே காலைக் கடன்களை முடித்தற்கு கைமேல் பலன் கிடைத்தது. ஸ்ரீபாலின் வேலைக்காரர் நான் ஸ்னான அறையை விட்டு வெளியே வந்ததும் ஒரு தட்டில் சூடான இட்டலிகளையும் ஆவி பறக்கும் காப்பியையும் என்முன் நீட்டினார். "மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுகிறான்" என்பதை சிறிது மாற்றி "ஊர்சுற்ற வைத்தவன் காப்பி ஊற்றுகிறான்" என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

மணி அடித்தாற்போல் ஸ்ரீகுருவில்லா தன் ஜீப்பை எடுத்துக்கொண்டு வந்து வாசலில் ஹாரனை அடித்துக் கொண்டிருந்தார். "நீங்கள் சீக்கிரம் சென்றால்தான் ஏதாவது மிருகங்கள் பார்க்கலாம்" என்று ஸ்ரீபாலும் முத்தாய்ப்பு வைத்தார்.

நம் நாட்டு இளம் இஞ்சினியர்களுக்கு யார் ஜீப் ஓட்டக் கற்றுக் கொடுக்கிறார்கள் என்று எனக்கு வெகுநாட்களாக வியப்பு. கல்லூரியில் படிப்புதான் சொல்லிக் கொடுக்கிறார்கள். வாழ்க்கை என்னும் கல்லூரியில் அவர்கள் மற்ற தேவைகளை கற்றுக் கொள்கிறார்கள். இம்மாதிரி ஜீப் ஓட்டத் தெரிந்தால் அவர்கள் வேலையும் நடக்கும். நிசாசர வேளையில் தேடினால் எந்த டிரைவர் கிடைப்பார்? பல ஜீப்கள்

தேவையாக இருக்கும் இடத்தில் வெகுசில டிரைவர்களே உள்ளனர்.

போகும் வழியில் பலபல பெயர்களை சொல்லி உரக்க சத்தம் போடவே நீராவிப் படகு ஓட்டிகள், அணைக்கட்டு சூபர் வைஸர், லஸ்கர் முதலியவர்கள் எங்கிருந்தோ விரைந்து வந்து ஜீப்பில் தொத்திக்கொண்டார்கள். யாத்திரீகர்கள் விடுதியிலிருந்து படகுத்துறை வெகுசமீபமாகவே இருந்தது. நாங்கள் வெகு சீக்கிரம் வந்து விட்டோம் என்று எண்ணிய எனக்கு எங்களுக்கு முன்னரே அந்நியர்கள் அடங்கிய ஒரு கோஷ்டி படகில் புறப்பட்டுச்சென்றது ஆச்சர்யமாக இருந்தது.

பெரியாறு ஏரி என்பது செயற்கையாக செய்யப்பட்ட ஏரி. இந்த ஏரி உண்டாவதற்குமுன் இந்த ஏரியின் தண்ணீர் பரப்பு பூராவும் பாம்பு வளைவதுபோல பல சுற்றுகள் கொண்ட பள்ளத்தாக்காக இருந்ததாம். புதுப்புது இடங்களைக் கண்டுபிடிப்பதில் ஆங்கிலேயர்களில் பலருக்கு அக்கரை உண்டல்லவா? அந்த அக்கரையை எடுத்துக்காட்டுவதுபோல் கர்னல் ஜான் பென்னிகுவிக் என்பவர் பெரியாறு அமைந்திருக்கும் மலைத் தொடர்ச்சிகளை ஆராய்ந்து அங்கு பொழியும் மழை பூராவும் வியர்த்தமாகிறது என்று கண்டுபிடித்ததுடன் மலைத் தொடர்ச்சிகளில் இரு இடங்களில்தான் பிளவு இருப்பதையும் அறிந்துகொண்டார். சரி, இந்த இடத்தில் ஓர் அணையைப் போட்டால் ஒரு பிரம்மாண்டமான ஏரி உண்டாகும். அத்தேக்கம் விவசாயத்துக்கு உபயோகப்படும் என்று அறிந்து, அந்தப் பிரகாரம் பெரியாறு அணைக்கட்டை திட்டமிட்டார். இந்த அணைக்கட்டைப் பற்றி சில ருசிகரமான குறிப்புகளை பின்னர் கொடுக்கிறேன்.

நான் முன்னர் குறிப்பிட்டதுபோல, ஏரியின் பரப்பு ஒருகாலத்தில் பள்ளத்தாக்காக இருந்ததால் இன்றும் தண்ணீர் மட்டத்திற்குமேல் பலமரங்களின் பட்டுப்போன கட்டைகள் தலையைத் தூக்கிக்கொண்டு நிற்கின்றன. இவைகளை வெகு ஜாக்கிரதையாகக் கடக்க வேண்டும். மேலே தெரியும் மரங்கள் எவ்வளவோ அவ்வளவு தண்ணீருக்குக் கீழே அடி தெரியாமல் மறைந்து நிற்கின்றன. இதனால்தான் நீராவிப் படகோட்டிகள் பழைய புள்ளிகளாக இருக்கவேண்டும். சுமார் 150 அடிக்குக்கீழே நிற்கும் மரங்கள் பல்லாயிரம் இருக்கலாம். இவைகளை அடிவரை வெட்டியெடுத்தால் அவை நல்ல விலைக்குப் போகும். ஏனென்றால் அவை ஊறி வைரம் பாய்ந்தவை என்று எனக்கு ஓர் அதிகாரி சொன்னார்.

பெரியாறு ஏரியைக் கிழித்துக் கொண்டு படகு சென்றது. இரு பக்கங்களிலும் அடர்ந்த காடுகள். தூரத்தில் மங்கிய நீல வானில் பல வர்ணங்களுடன் நீராவி ஜாலம் செய்து கொண்டிருந்தது. "நன்றாக ஊன்றிப் பார்த்துக்கொண்டு வாருங்கள். மிருகங்கள் கண்ணில் படும்" என்று அணைக்கட்டு சூபர்வைஸர் எச்சரித்தார். கண்ணாடி போட்டுக்கொள்ளும் எனக்கு சாதாரணமாகவே 200 கஜங்களுக்கு அப்பால் ரஸ்தாவில் நடக்கும் இருகால் ஜந்துக்கள் நான்குகால் ஜந்துக்களைப்போல் தோன்றும். ஆகவே உண்மையான நான்குகால் மிருகங்களை சுமார் ஒரு மைல் தூரத்திலிருந்து பார்ப்பது என்றால் மனோதர்மத்துக்குக் கேட்கவா வேண்டும்? "அதோ பாருங்கள் ஒரு யானை" என்று சூபர்வைஸர் சுட்டிக்காட்டியபொழுது "ஒன்றா? பலவல்லவா தெரிகிறது" என்றேன். சூபர்வைஸர் ஒரு தினுசாக என்னைப் பார்த்தார் ஏது, நையாண்டி செய்கிறாப் போல இருக்கிறதே என்று கூட நினைத்திருக்கலாம்.


நிற்க, நீராவிப்படகு சுமார் நான்கு மைல்கள் சென்ற பிறகு நேர்பரப்பைவிட்டு ஒரு சந்துக்குள் நுழைந்தது. "அதோ, ஒரு பெரிய ஆண் யானை" என்றார் படகோட்டி. "சரி, என்ஜினை மட்டுப்படுத்தி நிசப்தமாக செல்லும்" என்றார் சூபர்வைஸர். படகோட்டி மிக சாமர்த்தியசாலி. என்ஜினை நிறுத்திவிட்டு படகை தன் போக்கிலேயே விட்டார். வெகு சீக்கிரத்தில் நாங்கள் யானை மேய்ந்துகொண்டிருந்த இடத்திற்கு சுமார் 200 கஜ தூரத்திற்குள் வந்து விட்டோம். நானும் சந்தோஷத்துடன் காமிராவை சரி செய்து கொள்ளலானேன். இந்த சமயம் பார்த்து இடி இடிப்பதுபோன்ற சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தோம். அமெரிக்கர்கள் அடங்கிய படகு கனவேகமாக வந்து கொண்டிருந்தது. இரு பக்கங்களிலும் அமெரிக்க யாத்ரீகர்கள் தங்கள் காமிராவை தயாராக வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுக்காக அந்த யானை காத்துக்கொண்டிருக்குமா? இடி சப்தத்தைக் கேட்டதும் அது அலட்சியமாக

ஒரு பார்வை பார்த்துவிட்டு காட்டிற்குள் மறைந்தது. சூபர்வைவஸருடைய கோபத்தை அவர் முகத்திலிருந்து கண்டு கொள்ள முடிந்தது. "பணம் மட்டும் இருந்தால் போதுமா?" என்று அவர் முணு முணுத்தார்.

மேலும் ஒரு மணி பிரயாணத்திற்குள் ஒரு காட்டெருமைக் கூட்டம், ஒரு மான் கூட்டம், இரு யானைகள், இவைகளைக் கண்டோம். மற்றொரு சந்துக்குள் காட்டுப் பன்றிகளைப் பார்க்கச் சென்றபொழுது படகினுடைய என்ஜின் நின்றுவிட்டது. அரை மணி அதை நோண்டிப் பயன் இல்லாமல் போகவே படகோட்டி முன்னால் நின்று கொண்டிருந்த இரு மலையாளிகளைப் பார்த்து "கொஞ்சம் துடுப்புகொண்டு தள்ளுங்கள்" என்றார். அம் மலையாளிகளுக்கு மகா கோபம், இவ்வளவு பெரிய படகை எப்படி துடுப்பு கொண்டு தள்ளுவது என்று நான்கூட வியந்தேன். "தள்ளுவது உண்டு சார்" என்றார் சூபர்வைவஸர். "ஆம், தள்ளி, நாசமாகி..." என்று சொல்லிக்கொண்டே இருவரும் தங்கள் கோபத்தைத் துடுப்புகளின் மேல் காட்டினர். படகு சிறிது சிறிதாக ஒரு மைல் தூரத்தைக் கடந்து அணைக்கட்டை அடைந்தது. "இங்கு சாவகாசமாக உட்கார்ந்து நாங்கள் ரிபேர் செய்கிறோம். நீங்கள் அணைக்கட்டை நன்றாகச் சுற்றிப் பார்த்துவிட்டு வாருங்கள்," என்றார் சூபர்வைஸர். இதற்குள் அணைக்கட்டு சூபரிண்டெண்டு ஸ்ரீ ஐயர் வந்து என்னை உயரே அழைத்துச் சென்றார்.

படகு நின்ற துறைக்கும் அணைக்கட்டிற்கும் நடுவே ஒரு சிறிய குன்று. அதில் அணையைப் பராமரிக்கும் ஊழியர்களின் வீடுகள் இருந்தன. அப்புறம் அணை பல பிரம்மாண்டமான மத யானைகளைப்போல் தண்ணீரைத் தேக்கி நின்றது. இந்த அணையின் விசேஷம் என்னவென்றால் அது காரையையும், பாராங்கற்களையும் கொண்டு கட்டப்பட்டது. அதைக் கட்டுவதற்கு ஒரு கோடி ஐந்து லக்ஷம் ரூபாய்கள்தான் செலவாயின. சுமார் 233 சதுரமைல் பரப்பில் உண்டாகும் மழை 99 அங்குல அளவு. அவ்வளவு தண்ணீரையும் இந்த 1,200 அடி நீள அணை தேக்குகிறது. நவீன அணைக்கட்டுகளைப்போல் இதிலேயே உபரித் தண்ணீர் வழிந்து ஓடு

குழந்தைகளின் வயிற்றுவலிகளை துரிதமாக சமனம் செய்வது



க்ரைப்பானில்
(க்ரைப் மிக்ஸ்சர்)

ஒரு 'டஸ்ஸனால்' காரர்களின் தயாரிப்பு

வதற்கு வழியில்லை. ஆனால் அதன் செலவும் இந் நாள் அணைகளின் செலவில் நூறில் ஒரு பங்குகூட இல்லையே! இதற்காகத்தான் அணைக்கட்டிலிருந்து சிறிது தூரத்தில் தனியாக தண்ணீர் போக்கிகள் இருக்கின்றன.

பெரியாறு அணையின் விசேஷம் என்னவென்றால் இது கேரளாவைச் சேர்ந்த ஸ்தலம். ஆனால் 999-வருஷ ஒப்பந்தப் பிரகாரம் இதன் தண்ணீர் சென்னையைச் சேர்ந்தது. இந்த ஒப்பந்தத்தை மிகவும் முன் யோசனையுடன் செய்த ஆங்கிலேயர்களுக்கு சென்னை வாசிகள் மிகவும் கடமைப்பட்டவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்நாளில் தண்ணீர் என்று சொல்லுமுன்னரே மலையாளிகளும் தமிழர்களும் மயிரைப் பிடித்துக்கொள்வதை நாம் பார்க்கிறோமே!

மற்றொரு விசேஷம் காட்டுப்பொருள்கள், மரங்கள் உள்பட, 158 அடி தண்ணீர் மட்டத்திற்குமேல் கேரளாவைச் சேர்ந்தது. அதற்குக் கீழ் சென்னையைச் சேர்ந்தது. சாதாரணமாக சென்னை ஜல மட்டம் 152 அடி இறங்கும் வரை தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அதற்குக்கீழே தண்ணீரை இறக்கினால் பெரியாறு விலங்கு விடுதியில் உள்ள மிருகங்கள் தண்ணீருக்குத் தவிக்கும், ஏனென்றால் ஏரி முன் சொன்னதுபோல பள்ளத்தாக்கில் ஏற்பட்டதல்லவா?

ஸ்ரீஐயர் மேட்டூர், பாபநாசம் முதலிய நீர்தேக்கங்களில் அனுபவப் பட்டவர். ஆகையால் பெரியாறு அணைக்கட்டில் சிரமம் ஜாஸ்தி என்று சொன்னது நம்ப வேண்டிய விஷயம். அணைக்கட்டில் மழை பெய்யும்பொழுது மழை இன்னும் எவ்வளவு நாள் பெய்யும், மிகவும் கடுமையாக இருக்குமா இருக்காதா என்பதெல்லாம் அவராக ஹேஷ்யம் செய்யவேண்டிய விஷயம். தண்ணீரை 158 அடிக்குமேல் தேக்கினால் அது அணைக்கு ஆபத்தை உண்டாக்கலாம். உபரியாக தண்ணீரைத் திறந்துவிட்டால் தண்ணீரைச் சேதப் படுத்திவிட்டார் என்று மேலே குறைகூற இடம் உண்டு.

அணையின் மத்தியில் நின்று சுற்று முற்றும் பார்த்தேன். கடலைப்போல் பரந்த தண்ணீர் ஒருபுறம். வானளாவும் மரங்கள் ஒருபுறம். இந்தப் பரந்த இடத்தில் மிருகப்பாதுகாப்பு விடுதி ஏற்படுத்த ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் முற்பட்டதில் ஆச்சரியம் என்ன? அவர் அப்படிச் செய்யாவிடில் பொறுக்கவந்த ஆங்கிலேயர்கள் கண்ணுக்கெட்டிய மட்டும் தங்கள் இடம் என்று சொந்தம் கொண்டாடி அதில் தேயிலை போடுவதாகப் பொய் சொல்லி மலைகளை தங்கள் அப்பன் வீட்டு சொத்துபோல் விற்று வந்தார்கள்.

இந்த இடங்களில் யானைக்கூட்டத் தொந்திரவு அதிகம். ஆனால் அவை அணைக் கட்டைத் தாண்டமுடியுமா? "ஐயோ, ஸார் யானை என்று சொல்லாதீர்கள். அடிக்கடி அவை எங்கள் வீட்டுப்பக்கம் வந்து தொந்திரவு செய்கின்றன. இதோ பாருங்கள்" என்று ஸ்ரீஐயர் இரு குழிகளை சுவற்றில் காட்டினார். அவர் காண்பித்த இடத்தில் ஒரு வெறிகொண்ட யானை தந்தங்களால் குத்திப் பெயர்த்ததாம். இது விலங்கு பாதுகாப்பு ஸ்தலமானதால் துப்பாக்கி யாருக்கும் கொடுப்பதில்லை. மிருகங்கள் நடமாட்டம் அதிகமானால் இருபுறங்களிலும் குப்பை கூளங்களைக் கொளுத்துவது வழங்கமாம். அப்படியும் மீறி யானைக்கூட்டம் வந்துவிட்டால் மூச்சுப்பேச்சு இல்லாமல் வீட்டிற்குள் இருப்பதுதான் சிரேஷ்டம்.

நாங்கள் கீழே இறங்கி துறையை அடைந்தபொழுது மணி பன்னிரண்டு அடிக்க சுமார் இருபது நிமிஷங்களே இருந்தன. அப்பொழுதும் படகு சரியாகவில்லை. நல்ல வேளை டெலிபோன் மூலம் தேக்கடிக்கு செய்தி அனுப்பியிருந்ததால் சில நிமிஷங்களில் ஒரு மாற்றுப் படகு வந்து சேர்ந்தது. ஆனால் இதுவும் தேக்கடியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் நின்று விட்டது. பெட்ரோல் குழாயில் காற்று சென்று விட்டது என்று படகோட்டி, பாவம், வாயை வைத்து உறிஞ்சி அவுன்ஸ¬ அவுன்ஸாக பெட்ரோலை உமிழ்ந்துவந்தார். அரை மணியில் படகும் கிளம்பித் துறையை அடைந்தது. துறையில் ஸ்ரீ குருவில்லா காத்துக்கொண்டிருந்தார்.

எனக்குப் பசி அதிகம்தான். இருந்தாலும் காட்டிக் கொள்ளவில்லை. ஏரியிலிருந்து தண்ணீரைக் கொண்டு செல்லும் கால்வாயை ஆழப்படுத்தும் வேலையைப் பார்க்கச் சென்றோம். ஸ்தலத்தில் எறும்பு சாரிகள் போல் உழைப்பாளிகள் உழைத்துக் கொண்டிருந்தார்கள். டைன

மெட்வைத்துப் பாறைபிளப்பது ஒருபக்கம்; ஊறும் தண்ணீரை இறைக்கும் பம்புகள் சத்தம் மற்றொரு பக்கம், மூட்டை மூட்டையாக சிமெண்டைக் கொட்டிக் கால்வாயை பூசுவது இன்னுமொரு பக்கமாக வேலை ஜரூராக நடந்துகொண்டிருந்தது. பல வெள்ளைச்சராய் அணிந்த இளைஞர்கள் வெகு சுறு சுறுப்பாக வேலையை மேற்பார்வை பார்த்து வந்தார்கள். அவ்வப்பொழுது வானத்தையும் உற்று நோக்கிய கண்கள் பல டஜன்கள், மழை வந்து வேலை தடைபட்டு விடுமோ என்ற கவலை. இரவு பகல் என்று பார்க்காமல் வேலைசெய்யும் இந்த இளைஞர்களுக்கு அவகாசம் எந்த சொந்த அலுவலுக்கும் கிடையாது. அந்த அலுவல்களில் சேர்ந்தது முகக்ஷவரம் செய்து கொள்வதுகூட. ஆகவே, கார்ல்மார்க்ஸ் தாடி ஒவ்வொருவர் முகத்திலும் இருந்ததில் ஆச்சரியம் என்ன?

சம்பளமும் அதிகம் இல்லை. வாழ்க்கை வசதிகள் ஏதும்இல்லை. இந்தச்சூழ்நிலையில் நாட்டுக்கென்று உழைக்க முற்படும் என்ஜினியர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்காகத்தான் மழை பெய்கிறது. இவர்கள் இருக்கும் நாடு இன்றைக்கில்லாவிட்டாலும் வேறு என்றைக்காவது உய்யத்தான் உய்யும்.

கொஞ்சம்கூட ஓய்வில்லாமல் உழைக்கும் உழைப்பாளிகளுக்கிடையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது எனக்கு லஜ்ஜையாக இருந்தது. “நீங்கள் எழுதினால் தானேசார் ஜனங்களுக்குப் படிப்பு உண்டாகிறது” என்று என்னைச் சமாதானப் படுத்தினார் ஸ்ரீகுருவில்லா. “எழுத்து நாசமாய் போகட்டும் சார். நான் கட்டுக் கட்டாக எழுதினாலும் அது பத்துக்கொட்டு மண்ணை அணையில் போட்ட அளவு பயன் அளிக்குமா” என்று சொன்னேன். ஸ்ரீகுருவில்லாவிற்கு நான் எங்காவது உழைப்பாளியாகி, பிறகு தொழிற்சங்கத் தலைவனாகத் தொந்திரவு கொடுப்பேனோ என்று பயம். “நன்றாக சொன்னீர்கள். நீங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்து முடியுங்கள்” என்று சொல்லி என்னை விடுதிக்கு அழைத்துச் சென்றார்

மத்தியானச் சாப்பாட்டை சீக்கிரமாகவே முடித்துக்கொண்டு ஸ்ரீ குருவில்லாவிடம் விடைபெற்றுக் கொள்ளச் சென்றேன். அவர் குழந்தைகளையும் அவரையும் போட்டோ எடுக்கவேண்டுமென்று ஆசை. அவர் விளம்பரப் பிரியர் இல்லாததால் குழந்தைகளை மட்டும் போட்டோ பிடித்து அவர்ஜீப்பிலேயே குமிளிக்குப் பிரயாணமானேன்.

ஜீப்பு என்று ஒரு வாகனத்தை உண்டு பண்ணிய புண்ணியாத்மா சிரஞ்சீவியாக இருக்கட்டும். முதல் நாள் தட்டுத் தடவி ஒரு மணி நடந்த தூரத்தை ஐந்து நிமிடங்களில் ஜீப் கடந்தது. கோட்டயம் செல்லவேண்டிய பஸ் தயாராகக் காத்துக்கொண்டிருந்தது. என்னை டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்த்திவிட்டு ஸ்ரீ குருவில்லா விடைபெற்றுக்கொண்டார். நல்லவேளை எனக்கு அந்த இடம் கிடைத்தது. உள்ளே உட்கார்ந்திருந்தால் கோட்டயம் செல்லுமுன் பழுத்துப்போய் இருப்பேன். கேரளத்தில் பஸ்ஸில் “ஓவர்லோடு” (அதிக ஆள் ஏற்றுவது) என்பது ஒருவருக்கும் தெரியாத விஷயம். கொஞ்சமும் நம் மனம் நோகாமல் “கொஞ்சம் தள்ளி ஸாரே” என்று கொஞ்சம் கொஞ்சமாக நெறுக்கி ஒரு கட்டத்தில் நம் மடியிலேயே கூட உட்கார்ந்து விடுகிறார்கள். நான் ஏறிய பொழுது காலியாக இருந்த பஸ் புறப்படுவதற்குள் நிரம்பி வழிந்தது. என் பக்கத்தில் இடம் இல்லை. இருந்தும் ஒரு மலையாளி என்னை டிரைவர் ஸ்தானத்தைத் தொடும் அளவுக்குத் தள்ளி உட்கார்ந்தார். நமக்கென்ன என்று நானும் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். டிரைவர் வந்ததும் அந்த மலையாளியை விரைத்துப் பார்த்து “எந்தா வர்த்தமானம்?” என்றார். “வண்டிப் பெரியாறு வரைதான்” என்றார் அந்த மலையாளி. “வண்டிப் பெரியாராம். ஆளை நோக்கியோ......” என்று சள்ளென்று டிரைவர் எரிந்து விழுந்ததும் அம்மலையாளி அந்தரத்தியானமாகி விட்டார். வண்டியில் டிக்கெட் கொடுத்துக்கொண்டிருந்த கண்டக்டர் “பேபே” என்றார். நம் ஊராக இருந்தால் “என்ன ஓய் ஏக வசனத்தில் பேசுகிறீர்” என்று டிரைவர் ஓர் அறை கூட விட்டுவிடுவார். ஆனால் அந்த டிரைவர் வாயைத் திறக்கவில்லை. வண்டிய ஜம்மென்று கிளப்பி கோட்டயம் ரோடில் திருப்பினர்.

[தொடரும்]

# சரியா தப்பா?...

ரா. வேங்கடசாமி

மணவறையிலிருந்து எழுந்தோடி வந்து தன் அறைக்குள் புகுந்து கொண்ட சுமதி முதல் வேலையாகக் கழுத்திலிருந்த மலர் மாலையைக் கழற்றி மேஜையின் மீது போட்டாள். பந்தலுக்குள், என்ன நடந்தது என்று எல்லோரும் அறிவதற்குள், இன்னும் இரண்டொரு நிமிடமாவது கடந்துவிடும். அதற்குள், தன் அறையினுள், யாரும் வராத வகையில் கதவை மூடிக் கொள்ளவேண்டும் என்று நினைத்த அவள், கதவையும், ஜன்னல்களையும் மூடிவிட்டு படுக்கையின் மீது அமர்ந்தாள்.

மூச்சு வாங்கியது அவளுக்கு! கட்டியிருந்த பட்டுப்புடவைகூட அவளுக்கு கனத்தது. வேறு சேலை உடுத்திக் கொள்ளாமென்றாலோ, பீரோவுக்கு, இன்னொரு அறைக்கு போக வேண்டும். அதற்குள் ஏதாவது நடந்துவிட்டால்? அவள் வீணாக முயற்சித்துப் பார்க்க விரும்பவில்லை. அதனால் கட்டிலில் காலை நீட்டிப் படுத்துவிட்டாள்.

இப்படி ஒரு சம்பவம் நடக்குமென்று யார் எதிர் பார்த்திருப்பார்கள்? எதிர் பார்க்காததால் எல்லோருக்கும் அதிர்ச்சி ஏற்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் சுமதியின் தந்தையும் தாயும் சிலையாக அல்லவா மாறிவிட்டார்கள்? தங்கள் மகளா இப்படி என்கிற எண்ணம் அவர்களை ஊமையாக்கி விட்டது.



"என்ன நடந்தது? என்ன?" என்று கேட்டவர்களுக்கு மணவறையின் அருகில் அமர்ந்திருந்தவர்கள், புரிந்தும் புரியாமலும் விளக்கினார்கள்.

எவ்வளவு அவமானகரமான செயல்! ஒரு பெண் அதிலும் மணவறையில் இருப்பவள் இப்படிச் செய்யலாமா? 'கசமுச'வென்று பேச்சொலி ஆரம்பமாகி விட்டது.

சம்பந்தப்பட்ட மாப்பிள்ளையோ மணவறையிலிருந்து எழவே இல்லை!



சுமதி எதிர்பார்த்தது நடக்காமல் போகவில்லை; விரைவில் சமாளித்துக் கொண்டவர்கள், 'விடுவிடு' வென்று சுமதியின் அறைக்கு வந்து கதவைத் தட்டினார்கள்.

"சுமதி கதவைத் திற!"

"முகூர்த்த நேரம் தவறிவிடப் போகிறது வாம்மா வெளியே."

"உன்னை ஒன்றும் செய்யவில்லை, கதவைத்திற அம்மா!"

"ஏண்டி சுமதி, என்ன வந்துவிட்டது உனக்கு? பேசாமல் கதவைத் திறக்கிறாயா இல்லையா?"

அழுகையினூடே ஒரு குரல்,

"அவள் திறக்கும்போது திறக்கட்டும்...... விடுங்கள்... ஏதாவது செய்துகொள்ளப் போகிறாள்!" என்றது. அது அவளது தாயின் குரல் என்று சுமதிக்குத் தெரியும்!

"என்னம்மா இது? முகூர்த்தத்திற்கு நேரமாகவில்லை?

"ஆமாம்! இனிமேல்தான் அந்த மாப்பிள்ளை இந்த ராட்க்ஷஸியைக் கட்டிக்கொள்ளப் போகிறான்! சரிதான் வாங்கடி வீட்டுக்குப் போகலாம்!" தெருப் பெண்களின் குரல் இந்த தோரணையில் இருந்தது.

"ஆமாம்! என்ன காரணம் சுமதி நடத்தைக்கு? ஏன் இப்படி அவள் பைத்தியக்காரத்தனமாய் நடந்துகொண்டாள்?"

இவ்வளவு கூச்சலிலும் சுமதிக்கு இக்குரல் நன்றாகக் கேட்டது.

ஆம்! காரணம் யாருக்குத் தெரியும்? தன்னையும் மாப்பிள்ளையையும் விட்டால் யாருக்குமே நடந்த சம்பவத்திற்குக் காரணம் தெரியாதே!

சொல்லாமல் விடவா போகிறார்கள்? ஆனால், தன்னால் கோர்வையாகத்தான் எல்லாவற்றையும் சொல்லமுடியுமா? நிச்சயம் முடியாது.

விவரம் அவர்களுக்கு எப்படித் தெரிவது?

சுமதி படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

வெளியில் கேட்ட அவ்வளவு குரல்களுக்கும் அவள் மதிப்பு கொடுத்ததாகவே தெரியவில்லை. மேஜை அருகில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள்.

மேஜை அறையிலிருந்த காகிதத்தையும், பேனாவையும் எடுத்து வைத்துக்கொண்டாள்.

ஆம்! அதுதான் சிறந்த வழி. கதையைப் போல் எழுதிக் கொடுத்துவிடுவதுதான் சரி.

வெள்ளைக் காகிதத்தின்மீது, மனதில் தோன்றிய நினைவு அலைகள்... பேனா வழியாக வந்து உருவைப் பெறத் தொடங்கின.

2

"ஆம்! தலை நிமிர முடியாத அளவுக்கு, இது அவமானகரமான விஷயந்தான். நான் இல்லையென்று மறுக்கவில்லை. அதே சமயத்தில் நான் வேண்டுமென்றே இப்படிச் செய்வேனா என்பதையும் நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். நடந்து போனதைக் காரணமாகக் கொண்டுதான் இப்போது அச்சம்பவம் நடந்தது என்று நான் பூரா விவரத்தையும் விளக்கினால், அவசியம் என்மீது நீங்கள் அதிகத் தவறு இருப்பதாகச்சொல்ல மாட்டீர்கள். நான் திடீரென்று உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன் என்று நீங்கள் முடிவு கட்டலாம். நானே அதை மறுக்கத் தயாராக இருக்கிறேன்! ஏனெனில் என் நிலையில் யார் இருந்தாலும் அப்படித்தான் நடந்து கொண்டிருப்பார்கள்! விவரத்தைச் சொல்கிறேன் கேளுங்கள்!

கடந்த வருடம் நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியும். கல்லூரிக்குப் போவதென்றால் நான் வீட்டிலிருந்து பஸ் நிலையத்திற்கு நடந்துபோய் அங்கிருந்து டவுன் பஸ்ஸில் போகவேண்டும். படிட்டைவிட பஸ்ஸில் போவதுதான் எனக்குச் சிரமமாக இருந்தது. பதினெட்டு வயதுப் பெண் கஷ்டமாக இருக்கிறது என்றால் அதற்கு என்ன பொருள்?

நான், என்னைப் பிரமாதமான அழகி என்று சொல்லிக் கொள்ளாவிட்டாலும் பார்ப்பவர்கள் என்னிடம் கவர்ச்சி அதிகமாக இருக்கிறது என்பதை ஒப்பக் கொள்ளத்தான் செய்வார்கள்! கவர்ச்சிகரமாக தோற்றமளித்த காரணத்தால் பஸ் நிலையத்தில் பலருடைய தீவிரமான திருஷ்டிக்கு நான் ஆளானேன். வாலிபர்களுக்குத்தான் வயது கோளாறு; ஆனால் வாய்தா போனவர்களுக்கு என்ன கோளாறோ எனக்குத் தெரியவில்லை. கையில் தடியை ஊன்றிக்கொண்டு நின்ற கனவான்களும் என்னைக் கடைக் கண்ணால் கவனிக்கத் தவறவில்லை. பஸ் வரும் வரை எனக்கு நெருப்பின் மீது நிற்பது போலிருக்கும்

நான் சாதாரண குடும்பத்தில் பிறந்தவளாதலால் ஆடம்பரமாக உடைஉடுத்துவதே இல்லை. சாதாரண வாயில் புடவைக்கே இந்த தொல்லை என்றால்...? பருவத்தில் யாரும் கவர்ச்சியாகத்தான் தெரிவார்கள் என்பதற்கு நான் நல்ல

ஓர் எடுத்துக்காட்டு! பஸ் நிலையத்தில் 'பார்வை' தொந்தரவு மட்டும் என்று முடிவு கட்டிவிடாதீர்கள்.......

'பார்வையை விட ஒரு பெரிய தொந்தரவும் இருந்தது; பணத்தை அளவுக்குமீறிக் குவித்து விட்ட காரணத்தால், பெற்ற பிள்ளைகளை ஆனந்தமாகப் பொழுதைக் கழித்துவிட்டு வரச் சொல்லுகிறார்களே சில பெற்றோர்கள் கல்லூரிக்கு அனுப்பி, அவர்களுக்குத் தங்கள் பிள்ளைகளின் வெளியுலக நாடகங்களைப் பற்றி என்ன தெரியும்?

பெண்ணுலகத்திற்குச் சேவை செய்யவே தாங்கள் அவதரிப்பதைப் போல், அப் பிள்ளைகள், தங்கள் கார்களை பஸ் நிலையத்தில் கொண்டு வந்து நிறுத்தி, அங்கே தாங்கள் பொறுக்கி வைத்திருக்கும் மாணவிகளிடம், பவ்யமாக "பஸ் வருவதற்கு இன்னும் நேரமாகும் போலிருக்கிறதே... வாருங்கள் என் காரில் உங்களைக் கொண்டுவிடுகிறேன்... நான் அந்த வழியாகப் போவதால் எனக்குச் சிரமம் ஒன்றும் இல்லை" என்பார்கள்.

கார் சவாரி கிடைக்கிறது என்கிறதால் சில வெகுளிப் பெண்கள், அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு காரில் ஏறிக்கொள்வார்கள். தங்களுக்கு கிடைத்த பாக்கியமாகக் கருதி அப் பிள்ளைகளும் 'டிரைவர்' உத்யோகத்தை மேற்கொள்ளுவார்கள். இதுவும் பஸ் நிலையத்தில் சர்வ சாதாரண நிகழ்ச்சி! ஒரு தடவை ஒரு பெண், ஒரு வாலிபன் கார் சவாரிக்கு கூப்பிட்டதற்கு மறுத்துவிட்டாள். அதே சமயத்தில், அருகிலிருந்த கிழவர் ஒருவர், அவ்வாலிபனிடம் "நான் காரில் வருகிறேனப்பா... எனக்கு அதிக தூரம் போக வேண்டும்!" என்று கூறவே ... ... "போய்யா...எனக்கு அதுதான் வேலையா?" என்று வாலிபன் பதில் கூறிவிட்டான், அருகிலிருந்த எல்லோரும் 'கொல்'லென்று சிரிக்கவாலிபன் அவமானமடைந்து அங்கிருந்து போய்விட்டான்.

என்னிடம் இரண்டொரு தடவை வாலிபர்கள் நெருங்கியிருக்கிறார்கள். ஆனால் என் பார்வையிலேயே அவர்களை நான் விரட்டி இருக்கிறேன். என்னுடைய இந்த உறுதி ஒரு தடவை தளர்ந்து விட்டது. காரணம் என் நிலைமை அப்போது அப்படி இருந்தது. இண்டர் மீடியட் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த எனக்கு அப்போது பரீட்சை சமயம். நேரம் காலந் தெரியாமல் பரீட்சையில் மூழ்கி இருந்ததால், நான் பஸ்ஸைத் தவற விட்டு விட்டேன், குறித்த நேரத்தில் பஸ் போய்விட்டதால், நான் அடுத்த வண்டிக்காகக் காத்திருக்க வேண்டியதாயிற்று. அதில் போனாலும்கூட பரீட்சைக்குக் குறித்த நேரத்தில் போய்ச் சேர்ந்துவிடலாம். ஆனால் பஸ் நிலையத்தில் எனக்குத் தனியாக நின்றுகொண்டிருக்கப் பிடிக்கவில்லை. யாருமே இல்லாமல் நான் மட்டும் தனியாக பஸ்ஸுக்குத் தவங்கிடந்தது எனக்கு என்னமோ போலிருந்தது. இத்தனை நாள் இல்லாமல் இப்போது வெயிலும் "சுள்"ளென்று உறைத்தது. அப்போது என் மனம்கூட லேசாக சலனமடைந்தது, இந்த நேரத்தில் யாராவது கார் கொண்டு வந்து, "லிப்ட்" தரக்கூடாதா என்று!

இதுவரை ஆசைப்படாதவள் இப்போது ஆசைப்படுகிறாள். நாம்தான் போய்ச் சேட்போமே என்று நினைத்துவிட்டதுபோல், ஒரு கார், எதிர்பாராத விதத்தில் என் எதிரில் வந்து நின்றது.

காருக்குள் இரண்டு வாலிபர்கள் இருந்தார்கள். அக்காரையும், அவ்வாலிபர்களையும் நான் இதுவரை அந்த வட்டாரத்தில் பார்த்ததே இல்லை. வண்டியை ஓட்டிக்கொண்டு வந்த நபர், என்னைப் பார்த்து முறுவலித்தபடி,

"என் கல்லூரிக்குத்தானே, ஏறிக்கொள்ளுங்கள், கொண்டுபோய் விடுகிறேன்" என்னிடம் நெடுநாள் பழகியவனைப்போல! எனக்கு தைரியம் வரவில்லை, அதனால் பேசாமல் இருந்தேன். என் மௌனத்தை அவன் வேறுவிதமாக எடுத்துக்கொள்ளக்கூடாதே என்ற கவலையும் எனக்கு சிறிதளவு இருந்தது. "பரவாயில்லை வாருங்கள். வெயில் அதிகமாக இருக்கிறது" என்றான் அவன் மீண்டும்.

"என்னால் உங்களுக்கு சிரமம் கூடாது!" நான் முக்கி முனகி இப்படிக் கூறுவதற்குள், எனக்கு வேர்த்துவிட்டது. இதனால் தைரிய மடைந்த அவன்,

"எனக்கு சிரமமே இல்லை வாருங்கள்!" அவன் சொல்ல, அருகில் இருந்தவன் கதவைத் திறந்து விட்டான்.

பின் சீட்டில் அமர்ந்தேன். கார் ஓடிற்று! அதோடு அவன் பேச்சும் ஆரம்பமாகியது.

என்னைப் பற்றி. மிகுந்த அக்கரையோடு விசாரித்தான். பதில் சொல்லவேண்டியவைகளுக்குச் சொன்னேன். மௌனம் சாதிக்க வேண்டிய இடத்தில் பேசாமல் இருந்தேன்.

அவனைப் பற்றி நானும் கேட்கவில்லை. அவனும் சொல்லவில்லை. அவனென்ன எனக்கு மிகவும் வேண்டியவனா, அதிலெல்லாம் நான் அக்கரை கொள்ள?

அதற்குள் என் கல்லூரி வந்துவிட்டது.

"இங்கேயே சற்று நிறுத்துங்கள், இறங்கிக் கொள்கிறேன்!" என்றேன்.

அந்த சமயத்தில் கார் மிகவும் வேகமாகப் போனது.

உடன் இருந்தவன் சிரித்தான்.

"அதற்குள்ளாகவா இறக்க வேண்டும்? உன்னேடு இன்னும் கொஞ்சநேரம் பேச வேண்டும் போலிருக்கிறது எனக்கு" என்ருன் காரை ஓட்டியவன்.

மரியாதை விடைபெற்றுக் கொண்டுபோய் விட்டதைக் கவனித்தேன்.

"இப்போது நிறுத்துகிறீர்களா... இல்லை நான் கீழே குதித்துவிடவா?" என்றேன் ஆத்திரமும் அழுகையும் கலந்த குரலில்.

அதையெல்லாம் அவர்கள் சட்டை செய்ததாகவே தெரியவில்லை. கீழே குதித்தால் அவர்களுக்கு என்ன நஷ்டம்?

என் குரலுக்கு மதிப்பு சுரப்படவில்லை...... கூச்சலிட்டும், அதட்டியும் ஓய்ந்த நான், அவர்கள் என்னதான் செய்கிருர்கள் பார்ப்போம் என்று பேசாமல் இருந்தேன்.

ஊருக்கு வெளியே இருந்த மாந்தோப்பு அருகே கார் நின்றது. காரிலிருந்து அவர்கள் இறங்கினர்கள். வண்டியை ஓட்டிவந்தவனையும், என்னையும் தனியாக விட்டுவிட்டு, இன்னெருவன் எங்கோ போய்விட்டான்.

என் கைகால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன. அதற்கேற்ருற்ப்போல், அவன் என் கையைப் பிடித்து வெளியே இழுத்த வண்ணம், "வாயேன்... தோப்பிற்குள் போய் உலாவி விட்டு வருவோம்!" என்ருன்.

சுற்றுமுற்றும் பார்த்தேன். கூச்சலிட்டால் கூட யாரும் உதவிக்கு வரக்கூடிய இடமல்ல அது!

வண்டியை விட்டு இறங்கினேன்... அவன் என் தோள்மீது கையைப் போட்டான். உதறிவிட்டேன். அதோடு அவன் கன்னத்திலும் ஒரு அறை வைத்தேன். மனதில் ஏற்பட்டிருந்த ஆத்திரத்தின் உந்தலினல் விழுந்த அறை அல்லவா அது... அவன் திணறிப் போனன்.

அதன் பலன் என்னைத் தோப்புக்குள் இழுத்துக்கொண்டு போனன்.

என்னை என்ன செய்துவிட முடியும் அவனல்? கொஞ்சங் கொஞ்சமாக எனக்கு தைரியம் வந்தது. அவனை அடித்தேன்; உதைத்தேன்; கடித்தேன். முடிவு என்ன என்கிறீர்களா? வரலாற்றில்கூட காணமுடியாத வகையில் நான் வெற்றி அடைந்தேன்.

என்னுடன் போராடிச் சலித்துப் போய்விட்டான் அவன்! பிறகு என்ன நினைத்துக்கொண்டானே என்னவோ என்னிடம்,

"உனக்கு இவ்வளவு திமிர் இருக்கிறதா? இரு, இரு உன்னைக் கவனித்துக்கொள்கிறேன்!" என்று கறுவிவிட்டு அவன் போய்விட்டான். சிதறிக் கிடந்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு ரோட்டுக்கு வந்தேன். போராடியதால் அசதி தள்ளியது. நல்ல வேளையாக அந்த நேரத்தில் ஒரு பஸ் அவ்வழியாக வந்ததனல், நான் மயக்கமடைந்து விழாமல் தப்பினேன்.

பரீட்சைக்கு உட்கார நேரமாகிவிட்டது. இருந்தாலும் பேப்பரை வாங்கிக்கொண்டு உட்கார்ந்தேன். கண்களுக்கு எழுத்துக்கள் ஒன்றுமே தெரியவில்லை.

மனம்தான் இச்சம்பவத்தைப்பற்றி நினைத்துக் கதறிக்கொண்டிருந்ததே, கவனம் எப்படி வேறு பக்கம் திரும்பும்...?

கார் சவாரி கேட்கும் பெண்களுக் கெல்லாம் இதே கதி தானு? அப்படியானல் சமூகத்தில் இப்படிப்பட்ட நபர்கள் எப்படி உலாவிக்கொண்டிருக்கிருர்கள்? போலீஸில் சொன்னல் என்ன என்ற எண்ணமும் எனக்கு வராமல் இல்லை. ஆனல்,விளைவு வேருக அல்லவா முடியும்? அவனுக்கென்ன ஆண்பிள்ளை. கொடுக்கும் தண்டனையை தைரியமாக அனுபவித்துவிட்டு வந்துவிடுவான்! பெண்களின் நிலை அதுவல்லவே...? அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று நினைத்து தான்... வாலிபர்கள் இப்படி நடந்து கொள்கிருர்கள் போலிருக்கிறது... என்னைப் போல் தைரியசாலிகள் இருந்தால்... வாலிபர்கள் கொஞ்சம் திருந்தலாம்!

3

"இச் சம்பவத்தைப் பற்றி நான் யாரிடமும் கூறவில்லை! யாரிடம், அதை எப்படிக் கூறுவது?

மூன்றும் நாள்!

நான் பரீட்சை எழுதிவிட்டு வெளியே வந்தேன். அப்போது என் தோழி ஒருத்தி கலைந்த ஆடையோடும், அலங்கோலமான தோற்றத்தோடும் என் எதிரில் வந்தாள். அவளைப் பார்த்தவுடன் எனக்கு ஓரளவு விஷயம் புரிந்தாலும் விவரத்தை அவளிடம் விசாரித்தேன்.

அழுதுகொண்டே அவள் என்னிடம் கூறிய தகவல்கள் என்னைத் திடுக்கிடச் செய்யவில்லை. காரணம், நான்தான் அனுபவப்பட்டிருக்கிறேனே!



*டி. வி. எஸ்.ஸின் புது நிலையம் — புதுக்கோட்டை*

# இப்போது புதுக்கோட்டையில்

## உங்கள் கார், டிரக், பஸ் ஆகியவற்றைக் கவனித்து செப்பனிடும் சகல பணிகளையும் 'டி. வி. எஸ்.'ஸிடம் பெறலாம்.

மோட்டார் வாகனம் வைத்திருப்பவர் யாரானாலும் அவருக்கு இப்போது எண்ணெய் விலை, பாதுகாப்புச் செலவு, செப்பனிடும் செலவு, தனி உறுப்புகளை மாற்றி அமைக்கும் செலவு இவை மிகவும் அதிகமாக இருக்கின்றன என்பது நன்ருகத் தெரியும். விஞ்ஞான முறைப்படி கவனித்துப் பார்த்தால்தான் இந்தச் செலவுகளைக் குறைக்க முடியும்.

உங்களுக்கு காரோ, பஸ்ஸோ, டிரக்கோ எதுவாக இருந்தாலும் அதை **டி. வி. எஸ்.** மூலம் செப்பனிடுவதில் மிகவும் லாபம் இருக்கும் என்பது நன்ருகத் தெரியவரும். **டி. வி. எஸ்.**ஸில் மோட்டார் உறுப்புக்களை சோதனை செய்து பார்ப்பதற்கும், திருத்தி அமைத்துக் கட்டுவதற்கும் உரியவையாக மிகவும் நவீன கருவிகள் இருக்கின்றன. நுட்பமாகவும், பொருத்தமாகவும் வேலை செய்ய விசேஷப் பயிற்சி பெற்றவர்கள் இங்கே, நீங்கள் ஒப்பிக்கும் வேலையைத் திறம்பட கவனிப்பார்கள்.

**TVS**

## டி. வி. சுந்தரம் ஐயங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதுரை – திருச்சி – திருநெல்வேலி – புதுக்கோட்டை – சேலம் – கோயமுத்தூர்.

TVS 289

அதே கார்தான்; அதே நபர்தான்!

தோழியைச் சமாதானப்படுத்துவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும் என்னால்! பரீட்சை முடிந்துவிட்டதால் பஸ் நிலையத்திற்குப் போகவேண்டிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் என் மனதிற்குள் இம்மாதிரியான சம்பவங்களுக்கு ஏதாவதொரு முடிவு கட்ட வேண்டும் என்னும் எண்ணம் குமைந்து கொண்டுதான் இருந்தது! அதற்குள் நீங்கள் எனது திருமணத்தைப் பற்றி பேச ஆரம்பித்து விட்டீர்கள்,

"படிப்பை முடித்துவிடுகிறேன்" என்று நான் கூறி அடம் பிடித்ததை யாரும் கவனிக்கவே இல்லை.

பெரிய இடத்துப் பிள்ளை, நம்மிடம் பணம் வாங்காமலும், எவ்விதமான சீர் செனத்திகளை எதிர்பார்க்காமலும் என்னைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லிவிட்டதால், என்னால் உங்களை எதிர்த்துப் பேசமுடியவில்லை. நம் நிலைக்கு அப்படி ஒரு சம்பந்தம் அதிகந்தானே?

மேலும் மாப்பிள்ளை என்னை ஏற்கனவே பார்த்திருப்பதாக நீங்கள் சொல்லிவிட்டதால், நான் அவரைப் பார்க்க விரும்பவில்லை. என் நலனையும் ஓரளவுக்கு நீங்கள் கவனிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். எனக்கு ஒரு மோசமான மாப்பிள்ளையைக் கட்டி வைப்பதால் உங்களுக்கு என்ன லாபம்? வாழப்போகிறவள் நானல்லவா!

இம்மாதிரி எண்ணங்களினால் நான் ஒரு பெரிய தவறு செய்துவிட்டேன். அப்போதே தடுத்திருக்கலாம் இக்கல்யாணத்தை......

நடப்பது நடந்துதானே தீரும்?

என்னைத் தோப்புக்குள் இழுத்துக்கொண்டு போன நபர், என் தோழியைக் கெடுத்த நபர், என் அருகில் மாப்பிள்ளையாக, நாலுபேர் பிரமாதமாகப் பேசிக்கொள்ளும் அளவுக்கு, உட்கார்ந்திருந்தால் எனக்கு எப்படி இருக்கும்?

அப்பா, அம்மா, கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்!

தாலிகட்ட வரும் சமயம்தான் நான் 'அவர்' முகத்தைப் பார்த்தேன். அடுத்த கணமே என்னுள் பீறிட்டு எழுந்த ஆத்திரத்தினால், ஓங்கி 'அவர்' கன்னத்தில் ஓர் அறைவிட்டு, பின் கையிலிருந்து தாலியைப் பிடுங்கி எறிந்தேன்! பிறகுதான் அழுதுகொண்டே என் அறைக்குள் ஓடி வந்துவிட்டேனே!

இவ்வளவுதான் நடந்தது! எப்படியோ எல்லாவற்றையும் சொல்லி முடித்துவிட்டேன். இப்போது நீங்கள் சொல்லுங்கள். அந்நபருக்கு மனைவி ஒரு கேடா?

நான் செய்தது சரியான காரியமா இல்லையா? விளைவு எப்படி ஆகுமோ, என்னமோ என்று கவலைப்படாதீர்கள் அப்பா, ஏனெனில் விவரத்தை அறிந்த யாருமே என்னைக் கோபித்துக் கொள்ளமாட்டார்கள். உங்களுக்குத்தான் நான் அளவுக்கு மீறிய மனக் கஷ்டத்தையும், தொந்தரவையும் கொடுத்துவிட்டேன். அதற்காக என்னை மனதார மன்னித்துவிடுங்கள் அப்பா!

இப்படிக்கு

உங்கள் மகள் சுமதி"

* *

கடிதத்தை முடித்து, எல்லோர் கண்களிலும் படும் இடத்தில் வைத்துவிட்ட சுமதி, நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள், ஏதோ ஒரு கடமையைச் செய்துவிட்டவள்போல! அவள் பிறகு தன் அறையின் கதவைத் திறந்துவிட்டாள்.

[விதை: ஆங்கிலம்]



# விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

## பிள்ளையாரின் கதை

கஜமுகனுக்கு அதிசய உருவம் ஏற்பட்ட கதை அனைவருக்கும் தெரிந்திருக்கும். கோபத்தில் மகனது தலையைச் சீவிவிட்ட சிவன் யானையின் தலையை உடலில் வைத்துப் பொருத்தினார். இந்தப் புராணக் கதையை மெய்யாக்கும் சோதனைகள் சிலவற்றை மீராபாவ்லோவிர் என்னும் யூகோஸ்லோவிய பெண் மருத்துவர் செய்திருக்கிறார். முட்டைக்குள் இருக்கும் கோழிக் குஞ்சு சிலநாட்கள் வளர்ந்தபின்னர் முட்டையோட்டில் ஒரு தொளை செய்தார். கடிகார ரிப்பேர்க்காரர் பயன்படுத்துவதைப் போன்றதொரு சாமணத்தால் கருவின் மூளைப் பகுதியைத் துண்டித்து, ஒரு குழலின் வழியே அதை உறிஞ்சி வெளியே எடுத்தார். இன்னொரு முட்டையை இதே வகையில் தலையைச் 'சீவி'த் தயாரித்து வைத்திருந்தார். முதற் கருவின் மூளைப் பகுதியை இரண்டாவதில் வைத்துப் பொருத்தி, ஓட்டில் செய்த தொளையை மூடிவிட்டார். தனது முட்டைக்கு நேர்ந்த கதியை அறியாத தாய்க் கோழி இம்முட்டையை அடைகாத்தது. உரிய காலத்தில் அதிலிருந்து குஞ்சு வெளிவந்தது. வேறொரு குஞ்சின் தலையைக்கொண்ட குஞ்சு ஒரு குறையுமின்றி வளர்ந்து பெரிதாயிற்று. இவ்வாறு அவர் பல குஞ்சுகளைப் படைத்திருக்கிறார். கருவில் உள்ள உயிரணுக்களின் தன்மையையும் கரு வளர்ச்சியின் இரகசியங்களையும் அறிவதற்கு இப்பெண்மணியின் சோதனைகளை முக்கியமாகக் கருதுகிறார்கள்.

## துண்டித்த விரலைத் தைக்கலாம்

விபத்தின் விளைவாகச் சில சமயங்களில் கைவிரல் துண்டித்துப் போகிறது. இவ்வாறு நேர்ந்தால் ரத்த ஒழுக்கை நிறுத்தி புண் ஆறுவதற்கு மருந்து போட்டு கட்டுவதைத் தவிர வேறு எதுவும் செய்யமுடிவதில்லை. போன விரல் போனதுதான். கை ஊனமாவதைத் தடை செய்ய முடிவதில்லை. ஆனால் தலையையே மாற்றி வேறு தலையைப் பொருத்தும் தற்கால மருத்துவர்களுக்கு இது ஒரு பெரிய காரியமா? துண்டித்த விரலை மீண்டும் கையில் வைத்துத் தைக்கும் முயற்சியில் அமெரிக்க டாக்டர் ஒருவர் பல முறை வெற்றி பெற்றிருக்கிறாராம். அவர் பெயர் டக்ளஸ். "இத்தகைய விபத்து நேர்ந்தால் துண்டித்த விரலைக் கவனமாக ஒரு தூய தாளில் சுற்றி, கையில் நேரும் ரத்த ஒழுக்கை மட்டும் தடை செய்து, தாமதிக்காமல் ஆஸ்பத்திரிக்கு வாருங்கள்" என்று அவர் கூறுகிறார். இரு பகுதிகளையும் திசுவுக்குத் திசு சரிவரப் பொருந்தும்படி ஒட்டுவதற்கு மிக்க அருமையான கைத்திறன் தேவை. இல்லாவிட்டால் கிழிந்த துணிக்கு ஒட்டுப் போட்டதுபோல் விரல் விகாரமாகத் தெரியும். அதன் இயக்கமும் கெட்டுவிடும். விரல் ரேகைகளும், விரலில் உள்ள முடிச்சுகளும்கூடச் சீராகப் பொருந்தி விபத்தின் அடையாளமே அவ்வளவாகத் தெரியாமல் செய்யமுடியுமாம். இவ்வாறு நுணுக்கமாக விரலை ஒட்டுவதற்கு அம்மருத்துவர் பூதக் கண்ணாடியைப் பயன்படுத்தி அதன் வழியே திசுக்களைப் பார்த்துத் தம் அரிய சாதனையைச் செய்து முடிக்கிறார். கைதேர்ந்த சிற்பியைவிட அருமையான கலைத் திறன் கொண்ட இம்மருத்துவரைப் புகழாமல் இருக்கமுடியாது.

## மீன் மாவு ரொட்டி

தென் ஆப்பிரிக்காவில் புதுவகை ரொட்டி விற்கிறார்கள். சாதாரண ரொட்டியைவிட ஊட்டம் மிக்க இதில் மீன் மாவு கலந்திருக்கிறது. மீனிலிருந்து எண்ணெய் எடுத்தபின் 'பிண்ணாக்கு' மிஞ்சுகிறது. அதை ஐந்து அல்லது ஆறு முறை கழுவி நீராவி கொண்டு சுத்தப் படுத்துகிறார்கள். இப்போது மணமும் சுவையும் இல்லாத ஒரு நுண்ணிய மாவு கிடைக்கிறது. இதை ரொட்டி மாவுடன் கலந்து ரொட்டி தயாரித்தால் அதன் சுவை சிறிதும் கெடுவதில்லை. ஆனால் அதன் புரதச் சத்து பெரிதும்

மிருகிறது. நம் நாட்டைப் போன்ற பகுதிகளில் உணவில் உள்ள பெரிய குறை புரதச் சத்து போதிய அளவு இல்லாமல் இருப்பது தான். இத்தகையதொரு செயற்கை முறையில் அதை இவ்வாறு அதிகமாக்கலாம். வேர்க்கடலைப் பிண்ணுக்கைப் புரத உணவாக இவ்வாறு பயன் படுத்தலாம் என்று முன்னர் ஒருமுறை நம் நாட்டிலும் ஒரு யோசனை கூறப்பட்டது. இதுபற்றி மேற்கொண்டு எதுவும் செய்ததாகத் தெரியவில்லை.

## சிகரெட்டின்மேல் வீண் பழியா?

சிகரெட் பிடிப்பதால் நுரையீரலில் புற்று நோய் காணக்கூடும் என்பதற்கு மறுக்க முடியாத சான்றுகள் இருப்பதாகவும், சுவாச உறுப்புகள் இதனுல் பாதிக்கப்படுகின்றன என்றும், ஆயுள் குறைகிறது என்றும் பலவாருக விஞ்ஞானிகளில் ஒரு சாரார் கூறி வருகிருர்கள். இச்செய்திகள் வெளியாகும் போதெல்லாம் என் வீட்டில் ஒரு சிறு புயல் தோன்றுகிறது. ஏனெனில் நான் சிகரெட்டின் அடிமை! அதனுல் அண்மையில் வெளியான செய்திக் குறிப்பு ஒன்று, இதெல்லாம் சிகரெட்டை வீணே பழிப்பதாகும் என்று நம்புவதற்கு இடந் தருகிறது. விஞ்ஞானிகள் வெளியிட்ட கருத்துக்களால் விற்பனை குறைந்துவிடும் என அஞ்சிய சிகரெட் கம்பெனிகள் ஆராய்ச்சி நடத்திவருகின்றன. அமெரிக்க சிகரெட் கம்பெனியொன்றில் மருத்துவர்களும், புள்ளியியல் நிபுணர்களும் தொழிற்சாலைத் தொழிலாளர்களை ஆராய்ந்தார்கள். சிகரெட் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதாலோ என்னவோ இவர்கள் மற்றவர்களைப்போல் இருமடங்கு சிகரெட் பிடிக்கிருர்கள். அவர்களது உடல் நலத்தை ஆராய்ந்ததில், அவர்கள் மற்றவர்களைவிட அதிகநாள் உயிரோடு இருப்பதும், அவர்களுக்கு வரும் சுவாச நோயும், புற்று நோயும் சராசரியைவிடக் குறைவு எனறும் தெரியவந்துள்ளது. இந்த ஆராய்ச்சியில், புகை பிடிப்பவர்களையும், அவர்கள் உடல் நலத்தையும் நேரடியாக ஆராய முடிந்தது. வேறு ஆராய்ச்சிகளின்போது பொதுமக்களையே ஆராய்ந்ததால் இத்தகைய நேரடித் தொடர்பு இருந்திருக்க முடியாது. அவற்றில் சராசரிகளைக்கொண்டே முடிவுகளை ஊகிக்க நேர்ந்தது. அதனுல் தமது ஆராய்ச்சி முடிவுகள் இன்னும் நம்பகமானவை என்று இந்த ஆராய்ச்சியாளர் கூறுகிருர்கள். இதையெல்லாம் பார்த்தால், சிகரெட் பிடிப்பதற்கும் புற்றுநோயைப் போன்ற கோளாறுகளுக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாகக் கூறமுடியாது என்பது அவர்கள் கருத்து.

## மன நோயும், நினைவுத் திறனும்

உள்ளநிலை பழுதானவர்களுக்கு நினைவுத் திறன் மிகுதி என்று அமெரிக்க மனேதத்துவ நிபுணர்கள் கண்டறிந்திருக்கிருர்கள். ஒரு சிறைச்சாலையில் இருந்த கைதிகளில் அடங்காப் பிடாரிகள், தொல்லை கொடுப்போர், ரெளடிகள் ஆகியோரை ஆராய்ந்ததில் அவர்கள் அனைவருக்கும் நினைவுத் திறன் மிக அதிகமாக இருந்தது தெரிந்தது. பல ஆண்டுகளுக்குமுன் அவர்களுக்கு நேர்ந்த அனுபவங்களைக்கூட அவர்கள் மிகவும் தெளிவாக நினைவு வைத்திருந்தார்கள். இவர்கள் அனைவரும் உள்ளநிலை சீரழிந்த பேர்வழிகள். சாதாரண உள்ள நிலையுள்ளவர்கள் இந்த நினைவுகளை உள்ளத்திலிருந்து அகலாமல் வைத்திருக்கமுடியவில்லை. இதன் காரணத்தையும் நிபுணர்கள் விளக்குகிருர்கள். உள்ள நிலை கெட்டவர்களுக்கு உள்ளத்தில் கவலை என்பதே கிடையாது. ஒரு விஷயத்தை நாம் தெரிந்துகொண்டால் அது உள்ளத்தில் நிலைத்து நிற்பதைக் கவலை தடை செய்கிறது. அதனுல்தான் உள்ளம் சீரழிந்து சமூக விரோதிகளாக மாறுவோரது நினைவுத்திறன் சிறந்து விளங்குகிறது. இந்த ஆராய்ச்சிமுடிவில் வேருெரு படிப்பினையும் அடங்கியிருக்கிறது. கல்வி கற்கும் சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் கவலை ஏற்பட்டால் அவர்கள் அக்கல்வியின் முழுப்பயனையும் நிலையாகப் பெறமுடியாது போகலாம். சிறுவயதிலேயே வாழ்க்கைப் போராட்டத்தின் கொடுமையை அனுபவிக்கும் ஏழைச் சிறுவனைவிடப் பணக்காரச் சிறுவன் படிக்கும் விஷயங்களை நன்கு நினைவு வைத்துக் கொள்ளமுடியும். அனைவருக்கும் சமமான கல்வி வசதி என்று சொல்வதில் அர்த்தமில்லை அல்லவா!

## அணுசக்தி பாட்டரி

அணுசக்தியைக் கொண்டு சிறு மின்கடங்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்யப் பல முறைகள் வழக்கத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன. அவற்றுள், இப்போது அமெரிக்க விஞ்ஞானிகள் அமைத்திருக்கும் பாட்டரி செயற்கைச் சந்திரனிலும் வானவெளியில் வருங்காலத்தில் செல்லவிருக்கும் வானக் கப்பல்களுக்கும் மிகவும் ஏற்றது என்று

கூறுகிறார்கள். சீஸியம் என்பது ஓர் உலோகம். இதை அணுசக்தி ஆக்க எந்திரத்தில் வைத்தால் இது அணுசக்திக் கதிர்களை வெளிவிடும் திறன் கொள்ளும். இதிலிருந்து வெளிவரும் கதிர்களால் வெப்பம் தோன்றும். இவ்வெப்பம் இரு உலோகக் கம்பிகள் இணைந்த ஒரு முனையைச் சூடேற்றும். இதனால் உலோகக் கம்பிகளில் மின்சாரம் தோன்றும். இந்த மின்னோட்டத்தைக்கொண்டு தானியங்கிக் கருவிகளை இயக்கலாம். மற்ற முறைகளைவிட இதில் அதிக மின்னோட்டத்தை நெடுநாட்கள் பெறலாம். இதுபோலவே வேறுசில உலோகங்களையும் பயன்படுத்தலாம். இந்த மின்கடம் பழுதடையவே வாய்ப்பு இல்லை. சுமார் ஓர் ஆண்டுக்காலம் தொடர்ந்து இயங்கிய பின்னரும் இம்மின்கடத்தின் திறமை சுமார் பாதியாகக் குறையுமே வொழிய அது மேலும் தொடர்ந்து இயங்க வல்லது. இத்தகைய மின்கடங்களை வேறு தானியங்கிக் கருவிகளிலும் பயன்படுத்தலாம்.

அணுசக்தியினால் வேறு துறைகளிலும் பெரும் புரட்சி நேர்ந்துவருகிறது. அணுசக்திப் பொருள்களைத் தாவரங்கள் உட்கொண்டு அவை வெளிவிடும் கதிர்களிலிருந்தும், தாவர வித்துக்களை அணுசக்திக் கதிர்களால் தாக்கி அவற்றின் அடிப்படைத் தன்மையையே மாற்றியும் செய்யும் ஆராய்ச்சிகளால் தாவர இயலில் பெரும் முன்னேற்றம் விளைந்துள்ளது. பல அரிய உண்மைகள் தெளிவாயிருக்கின்றன. பல புதுப் பயிர் வகைகள் தோன்றியிருக்கின்றன. கிருமி வகைகளால் தாவரங்களுக்குப் பலவகை நோய் ஏற்படுகிறது. ஒரு நோயை எதிர்க்கும் திறனுள்ள பயிர்வகையை உருவாக்குவது முன்னர் பல ஆண்டுக் காலம் நடத்தவேண்டிய முயற்சியாக இருந்தது. அணுசக்திக் கதிர்களின் உதவியால் இதை இப்போது மிக்க விரைவில் செய்து முடிக்கிறார்கள். கோதுமைப் பயிரைப் பாதிக்கும் ஒருவகைப் பூஞ்சை நோயை எதிர்க்க வல்ல கோதுமையை இப்போது உருவாக்கியிருக்கிறார்கள். ஒருவகைக் கிருமிக்கு எதிரான பயிரைத் தோற்றுவித்தால் சிறிது காலத்தில் அக்கிருமிகள் தன்மை மாறி அது அப்பயிரை அழிக்கும் திறமையைப் பெற்றுவிடுகிறது. இவ்வகையில் விஞ்ஞானத்துக்கும், கிருமிகளுக்கும் இடைவிடாத போர் நிகழ்கிறது. ஆகையால் அமெரிக்க அறிஞர்கள் இன்னும் நூறாண்டுகளுக்குக் கிருமிகள் எவ்வெவ்வகையில் மாறும் என முன்கூட்டியே அறிந்து அவை ஒவ்வொன்றுக்கும் எதிரான கோதுமைப் பயிரைத் தோற்றுவித்திருக்கிறார்களாம்.

## வீண் பெருமைக்கு இடமில்லை!

சிருஷ்டியின் சிகரம் என்று மனிதன் தற்பெருமை கொண்ட காலம் போய்விட்டது. மனிதன் என்னும் உன்னதப் பிறவி இப்புவியில் மட்டுமே இருக்கிறான் என்று நாம் கருதி வந்தோம். இது தவறு என்றும், இந்த அண்டத்தில் சுமார் 10 கோடி கிரகங்களிலாவது மானிடனைப் போன்ற உயிர் வகை இருக்கவேண்டும் என்றும் அமெரிக்க வான நூலறிஞரான ஷேப்லி என்பவர் கூறுகிறார். அவ்வுயிர்களில் பல நம்மைவிட அறிவிலும், சிந்தனைத் திறனிலும் சிறந்தவர்களாக இருக்கக்கூடும் என்று அவர் கூறுகிறார். உயிர் வாழ்க்கைக்கு ஏற்ற சூழ்நிலை நம் உலகில் இருக்கவே காலப் போக்கில் பற்பல உயிர்கள் தோன்றின. வேறு பல நட்சத்திரங்களைச் சுற்றிவரும் கிரகங்களிலும் இதே சூழ்நிலை இருக்கக்கூடும். அவ்வாறு இருந்தால் அங்கேயும் உயிர்களும், மனிதனைப் போன்ற ஆறறிவு உள்ள பிராணிகளும் இருக்கலாம். ஆகையால் நமது புவியையும், நம்மையும்பற்றிப் பெருமை கொள்ளாது பணிவை அறிவுறுத்தும் படிப்பினையாக இப்பேரறிஞரின் கருத்து அமைந்துள்ளது.






எஸ். விஜயா

## பொதுக் குறிப்புகள்.

சர்க்கரை, வெல்லம், தித்திப்புப் பட்சணங்கள் போன்றவைகளை டின்களில் எவ்வளவுதான் பத்திரமாக மூடிவைத்தாலும் எறும்புகள் எவ் விதமாவது அவற்றில் புகுந்துவிடுவதுண்டு. டின்னின் அடிப்பக்கம், டின் மூடியின் அடிப் பக்கம் இரண்டிலும் எண்ணெய் பூசிவிட வேண்டும். இப்படிச்செய்வதால் எறும்பு அதில் புகுவதில்லை.

வீட்டில் எறும்புத் தொல்லை அதிகமாக இருந்தால் படிக்காரம் எனப்படும் சீனக்காரத்தை வாங்கி வந்து தூள் செய்து எறும்பு வளையுள்ள இடங்களில் தூவிவிட வேண்டும். இப்படிச் செய்தால் இரண்டு மூன்று மணி நேரத்தில் எறும் பெல்லாம் அவ்விடத்தைவிட்டு குடி பெயர்ந்து ஓடிவிடும்.

மண் எண்ணெயை விளக்குகளில் நிரப்பி அதில் சூடவில்லை, இரண்டு மூன்று உப்புக் கற்கள் அல்லது இரண்டு மூன்றுத்துளி வினிகர் எனப்படும் காடி மூன்றில் ஏதாவதொன்றைக் கலந்தால் விளக்கு முன்னைவிடப் பிரகாசமாக எரியும், எண்ணெயும் குறைவாக எரியும்.

சமையல் செய்யும்போது அலுமினிய பாத்திரங்களில் தீசல் பிடித்து அது லேசில் விலக மறுத்தால் ஐந்தாறு வெங்காயத்தை அதில் அறுத்துப்போட்டு சிறிது நீர்விட்டு அடுப்பேற்றிக் கொதிக்கவைக்கவேண்டும். இவ்விதம் செய்தால் தீசல் எல்லாம் சுலபமாக நீங்கிவிடும்.

சொந்தமாக சலவை செய்யும் போது சோப் புக்கோ, சோப் பவுடருக்கோ மைக்கரைகள் லேசில் அசைவதில்லை. லாக்டிக் ஆசிட்- 2 பங்கு, டிநேசர் அல்கஹால்- 2 பங்கு, ஹைட்ரோ குளோரிக் ஆஸிட் (25%)-2பங்கு, சுத்த ஜலம்— 12 பங்கு நான்கையும் ஒன்றுகக் கலந்துகொள்ள வேண்டும். மேலே குறிப்பிட்ட ரசாயனப் பொருள்கள் மூன்றும் இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும். இவ்விதம் கலந்த கரைசலை பாட்டில்களில் பத்திரமாக மூடி வைத்துக்கொண்டு பிரஷால் தொட்டுக் கறைகளில் தேய்த்தால் அவை நீங்கிவிடும். எல்லா வகையான மைக் கறைகளையும் இது போக்கிவிடும்.

## அழகுக் குறிப்புகள்.

கூந்தல் வளர:

(1) தினசரி இரவில் படுக்கப் போகும்போது ஒரு கைப்பிடி அளவு துவரம் பருப்பை நீரில் ஊறப்போட்டு அடுத்த நாள் காலையில் எழுந்ததும் அரைத்து கூந்தலில் தேய்த்து ஸ்நாநம் செய்யவேண்டும். இவ்விதம் கிரமமாக நாற்பது நாள் செய்து வந்தால் கூந்தல் உதிர்வது நின்று கரு கரு என வளரும்.

(2) வாரம் இருமுறை இரவில் வெந்தயத்தை ஊறப் போட்டு காலையில் அரைத்துத் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும். தேங்காய் எண்ணெயில் வெந்தயத்தைப் பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு அவ்வெண்ணெயைக் கூந்தலுக்குத் தடவிவரவேண்டும். இவ்விதம் கிரமமாகச் செய்து வந்தாலும் கூந்தல் கொட்டுவது நின்று நீண்டு வளரும்.

முகப்பரு நீங்க:

(1) செந்துவரம் பரும்பு (மசூர் பருப்பு), அல்லது பச்சைப் பட்டாணியை அரைத்து முகத்தில் பூசி அலம்பி வரவேண்டும்.

# உத்தமமானவள் பெண்! உதாசீனம் செய்யப்பட்டாலோ —கண்ணகி!



ஒரு குடும்பப் பெண்மணிதான்... எனினும் அவள் விருப்பத்திற்கு நாங்கள் விசேஷ முக்கியத்துவம் அளிக்கிறோம். அவளுடைய கொள்கைகள், மனோபாவம், யோசனைகள் முதலியவற்றை நாங்கள் ஒருக்காலும் புறக்கணிப்பதில்லை — வீட்டின் தேவைகளை நன்கு உணர்ந்தவள் அவளன்றி வேறு யார்? அவளுக்குத் தேவைப்படுவது என்ன என்பதை உள்ளபடி உணரும் பொருட்டு நாடெங்கும் விற்பனைத் துறை ஆராய்ச்சிகள் நிகழ்த்தி வருகிறோம். பார்க்கப் போனால், பெரும்பாலான ஹிந்துஸ்தான் லீவர் சரக்குக்களின் தரம் எவ்வளவு உயர்வாக இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிப்பவள் குடும்பப் பெண்மணிதான்.

சரக்குக்களின் மேன்மை மாறுமலிருக்கும் பொருட்டு, உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவற்றின் தராதரத்தைப் பரிசோதித்துச் சீர்திருத்துகிறோம். இவற்றிற்கெல்லாம் பயனாக, உங்கள் தேவைக்கேற்ப, தரத்திலுயர்ந்த சரக்குக்களை உங்கள் வீட்டிற்குக் கிடைக்கும்படி செய்துவருகிறோம்.

குடும்பந்தோறும் தழைத்தோங்க ஊழியம் புரிவது ஹிந்துஸ்தான் லீவர்

HLL. 15-X52 TM

(2) படிக்காரம், நவச்சாரம் இரண்டையும் தயிரில் கலந்து அத்தயிரை முகத்தில் தேய்த்து அலம்பிவரலாம்.

(3) மிளகை ஜலம் விட்டு அரைத்து அதைப் பூசிவரலாம்.

(4) அவரை இலைச் சாற்றைப் பூசி முகம் அலம்பி வரலாம்.

## பாக விஞ்ஞானம்

குழந்தைகள் திடகாத்திரமாக வளர தினசரி வழக்கமாக வெண்ணெய் கொடுத்து வருவது சிறந்ததொரு வழக்கமாகும். ஆனால் பொது வாக நம் வீடுகளில் தயாரிக்கப்படும் வெண்ணெய் குமட்டலைக் கிளப்பும் வகையிலிருக்கிறது. இதனால் பெரும்பாலான குழந்தைகள் அதைச் சாப்பிட அவ்வளவாக விரும்புவதில்லை. பல குழந்தைகள் சாப்பிடமறுக்கவும் செய்கின்றன. அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு கண்ணன் வெண்ணெய் தயாரித்துக் கொடுக்கலாம். அதைக் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும். அதைச் செய்யும் முறை இதுதான்.

**கண்ணன் வெண்ணெய்:**

நல்ல கட்டித்தயிரை ஒரு மெல்லிய துணியில் கட்டித் தொங்கவிடவும், அதிலுள்ள தண்ணீரெல்லாம் நன்றாக வடிந்ததும் துணியைக் கையால் இறுகப் பற்றி ஒரு முறை பிழியவும். பிறகு மறுபடியும் தொங்கவிடவும். சிறிது நேரமானதும் மறுபடியும் பிழியவும். இவ்விதம் ஐந்தாறு முறை பிழிந்தால் நீரெல்லாம் பூரண மாக நீங்கிவிடும். அப்பொழுது துணியைத் திறந்தால் உள்ளே கெட்டி வெண்ணெயாக இருக்கும். கண்ணாடி, எவர்சில்வர் அல்லது ஈயப் பாத்திரத்தில் அதை வைத்து உடைத்துவிட்டு அதற்குச் சம அளவு கற்கண்டுத் தூள் கலந்து கொள்ளவும். இது தான் கண்ணன் வெண்ணெய் குழந்தைகள் இதை விரும்பிச் சாப்பிடும்.

குழந்தைகள் கொழு கொழு என வளர அவர்கள் தினசரி உணவில் வெண்ணெயைப்போலவே தயிரும் சேரவேண்டியது அவசியம். ஆனால் குழந்தைகள் சில தயிர் சாப்பிட மறுப்பதுண்டு. அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு கேசரித் தயிர் தயாரித்துக்கொடுக்கலாம். பார்க்க அழகாக இருக்கும். நல்ல ருசியாகவும் மணமாகவும் கூட இருக்கும். இதனால் குழந்தைகள் இதைப் பிரியமாகச் சாப்பிடும்.

**கேசரித்தயிர்:**

ஒரு படி பாலுக்கு வீசம்படி சீனி, கால் தோலா கேசரிப் பவுடர். சில துளி ரோஸ்வாட்டர் அல்லது அத்தர் போதும். முதலில் பாலை அடுப் பேற்றி காய வைக்கவும். ஒரு படி முக்கால்படியாக சுண்டியதும் அடுப்பை விட்டிறக்கி, அதோடு சர்க்கரையைச் சேர்க்கவும். சிறிது பாலை எடுத்து அதில் கேசரிப் பவுடரைக் கரைத்து அதையும் பாலில் கொட்டிவிடவும். பிறகு மறுபடியும் அடுப்பேற்றிக் கொதிக்க வைக்கவும். ஒரு கொதி வந்ததும் இறக்கி விடவும். உரைகுத்த ஏற்ற வெப்ப நிலைக்குச் சூடு தணிந்ததும் சிறிது மோர் சேர்த்து உரைகுத்தவும். உரைகுத்திய பிறகு சில துளிகள் ரோஸ்வாட்டர் அல்லது அத்தர் சேர்த்து மூடி வைக்கவும். சுமார் ஆறு மணி நேரத்தில் நல்ல தயிராக உரைந்துவிடும்.

பலாக்கொட்டை மிக ருசியானது. சத்துள்ளது. மலிவானது. பலாப்பழ சீசன்களில் பலாக் கொட்டை படி 2, 3 அணுவுக்குக்கூட வாங்குவாரற்று சீரழியும். இதை குழம்பாகவும் பொரியலாகவும் தயாரிப்பது தான் நம் பக்க வழக்கம். மலைப்பிரதேசங்களில் இக் கொட்டையை சுட்டும் அவித்தும் சாப்பிடுவதுண்டு. மலிவாகக் கொட்டைகள் கிடைக்கும் காலங்களில் இவற்றை வாங்கி மாவாக அரைத்து வைத்துக் கொள்ளலாம். வருடம் முழுவதும் கெடாது. மற்ற எல்லா வகை மாவுகளையும்விட மலிவானதாகவுமிருக்கும். மற்ற எந்த மாவுக்கும் ருசியிலோ சத்திலோ மட்டமானதும் அல்ல. நல்ல ருசியான பூரிகள் இம்மாவிலிருந்து தயாரிக்கலாம். செய்முறை இதுதான்;—

**பலாக்கொட்டை பூரி:**

பலாக்கொட்டைகளை தோல் உரித்து மெல்லிய துண்டுகளாக வெட்டி வெயிலில் உலர்த்த வேண்டும். நன்றாக உலர்ந்ததும் மெஷினில் கொடுத்து மாவாக அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். பதினைந்து நாட்களுக்கொருமுறை இம்மாவை வெயிலில் காயவைத்து பத்திரம் செய்தால் வெகுநாளைக்குக் கெட்டுப் போகாதிருக்கும். வேண்டியபொழுது சலித்துப் பூரி செய்யலாம். மாவோடு சிறிது எண்ணெய் சேர்த்து முதலில் பிசைந்து பிறகு வேண்டிய உப்பும் நீரும் சேர்த்து உருட்ட ஏற்றபடி பிசைந்து கொள்ளவேண்டும். பிறகு சிறுசிறு உருண்டைகளாக உருட்டி அப்பளமாக இட்டு எண்ணெய் அல்லது நெய்யில் பொரித்து எடுத்துக்கொள்ள வேண்டும். சர்க்கரை, மசால் அல்லது சட்னியோடு சாப்பிடலாம். மிகுந்த ருசியாக இருக்கும்.

# சிறுவர் பகுதி

எஸ். விசாலாக்ஷி

## மந்திரக் கட்டம்

"ஏண்டி பூமா! என்ன கணக்குப் போடறே அத்தனை சுவாரஸ்யமா. நான் வந்ததுகூடத் தெரியாமல்!"

"ஓ! பாமாவா! வா! வா! பாலம் மந்திரக் கட்டக் கணக்கு ஒண்ணு போட்டா. எப்படிப் போட்டாலும் விடை வரமாட்டேன்கிறது."

"எப்படி வரும்? மந்திரக் கட்டத்துக்கு ஒரு மந்திரம் இருக்கு. அதைப் போட்டாத்தான் விடை வரும். சும்மா வராது. எத்தனைக் கட்டக் கணக்கு?

"நாலு நாலு கட்டமா, நாலு வரிசை பதினாறு கட்டம்."

"எந்த நம்பர் நிரப்பணும்?"

"ஒன்றிலிருந்து பதினாறுவரை. ஒரு நம்பர் ஒரு தடவைக்குமேல் வரக்கூடாது. எந்தப் பக்கம் கூட்டினாலும் 34 வரணும்."

"அதுதானே: இதோ அதற்கு விடை கண்டு பிடிக்கும் வழி —

| | | | |
|---|---|---|---|
| 1 | | | 4 |
| | 6 | 7 | |
| | 10 | 11 | |
| 13 | | | 16 |

முதலில் இப்படி நிரப்பு

| | | | |
|---|---|---|---|
| 1 | 15 | 14 | 4 |
| 12 | 6 | 7 | 9 |
| 8 | 10 | 11 | 5 |
| 13 | 3 | 2 | 16 |

பிறகு இப்படிப் பூர்த்தி செய்

"வழியைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லேன்."

"சொல்லுகிறேன் கேள். முதல் கட்டத்தில் ஒன்று என எழுது. 2, 3 கட்டங்களைக் காலியாக விடு. நான்காவது கட்டத்தில் நான்கை எழுது: 5-வது கட்டத்தைக் காலியாக விடு. ஆறாவது கட்டத்தில் ஆறை எழுது. ஏழாவது கட்டத்தில் ஏழை எழுது. எட்டாவது கட்டத்தைக் காலியாக விடு. ஒன்பதாவதையும் காலியாக விடு. பத்தாவது கட்டத்தில் 10, பதினோராவது கட்டத்தில் 11 என எழுது. பனிரெண்டாவது கட்டத்தைக் காலியாக விடு. பதின்மூன்றாவது கட்டத்தில் 13 என எழுது. பதினான்காவது, பதினைந்தாவது கட்டங்களைக் காலியாக விடு. பதினாறாவது கட்டத்தில் 16 என எழுது. இதுதான் முதலில் செய்யவேண்டிய காரியம். இவ்விதம் மூலைக்கட்டங்கள் நான்கும், நடுக்கட்டங்கள் நான்கும் நிரம்பிவிடும்."

"இப்பொழுது கீழிருந்து மேல்நோக்கி தலைகீழாக நிரப்பத் தொடங்கவேண்டும். முதல் கட்டத்தில் ஒன்று என நிரப்ப வேண்டும். ஆனால் அதில் ஏற்கனவேயே 16 நிரப்பப்பட்டிருக்கிறது. ஆகையால் 16-ஐ அப்படியே விட்டுவிடவேண்டும். ஒன்றை நிரப்ப வேண்டியதில்லை. 2-வது கட்டம் காலி. அதில் இரண்டை நிரப்ப வேண்டும். மூன்றாவது கட்டம் காலி. அதில் மூன்றை நிரப்ப வேண்டும். நான்காவது கட்டத்தில் ஏற்கனவேயே 13 இருக்கிறது. ஆகையால் அதை அப்படியே விட்டுவிடவேண்டும். நான்கை நிரப்ப வேண்டியதில்லை. இவ்விதமாக கீழிருந்து மேல்நோக்கி காலியாக உள்ள கட்டங்களை நிரப்பி, எப்பக்கமாகக் கூட்டினாலும் 34 வரும். ஒன்றிலிருந்து பதினாறுக்குப் பதிலாக 2—17, 3—18, 4—19, 5—20 இவ்விதம் எந்த நம்பரை வேண்டுமானாலும் நிரப்பலாம். விதிமுறை ஒன்றேதான். மந்திரக் கட்டம் நிரப்ப சுலபமான மந்திரம் இதுதான். ஆனால் இந்த மந்திரம் $4 \times 4 = 16$ கட்டம் உள்ளவைகளுக்கு மட்டும்தான் பொருந்தும்."

## தெரிந்துகொள்ளுங்கள்

### 160 ராத்தல் எடையுள்ள மனிதனின் உடலில்

1. 60 தீக்குச்சிகள் கொண்ட 42 தீப்பெட்டிகள் செய்யப் போதுமான பாஸ்பரஸ்.
2. 144 கோலிக்குண்டுகள் செய்யப் போதுமான கந்தகம்.
3. 2 அங்குல நீளமுள்ள ஆணி செய்யப் போதுமான இரும்பு
4. 10000 பென்சில் செய்யப் போதுமான கார்பன். (கரி)
5. 8 அடி நீளம், 8 அடி அகலம் உள்ள சுவர் பூசப் போதுமான சுண்ணாம்பு.
6. 3 பெரிய நெய் டின்களை நிரப்பப் போதுமான நீர்—இத்தனையுமிருக்கிறது.

# விஸ்வாமித்திரரும், வசிஷ்டரும்

விஸ்வாமித்திரர் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவர். பிராமணத்வம் பெறவேண்டும் என்பதற்காக அவர் தவமிருந்தார். பிரமதேவன் அவர் முன் தோன்றி அவர் பிராமணராக வரம் தந்தார். இவ்விதம் பிராமணரான பிறகு ஒருநாள் வசிஷ்டர் ஆசிரமத்திற்கு அவர் போனார். அங்கே வசிஷ்டரைக்கண்டு நமஸ்காரம் செய்தார். ஆனால் வசிஷ்டரோ அவருக்கு நமஸ்காரம் செய்யவில்லை. ஆசீர்வாதம் செய்து வரவேற்றார். இதைக் கவனித்த விஸ்வாமித்திரருக்குச் சுருக்கென்றது. பிரமதேவனிடம் போய் புகார் செய்தார்.

"வசிஷ்டரிடம் மறுபடியும் போங்கள்; அவர் இம்முறை உங்களைப் பிராமணராக ஒப்புக் கொண்டுவிடுவார்." என்றார் பிரமதேவர். அவர் கூறியபடியே மறுபடியும் வசிஷ்டரிடம் போனார் விஸ்வாமித்திரர். ஆனால் அவர் முன்னைப் போலவே அவரை அப்பொழுதும் ஆசீர்வதித்தே வரவேற்றார். இதனால் மறுபடியும் பிரமதேவனிடம் ஓடினார் விஸ்வாமித்திரர்.

"மறுபடியும் இப்பொழுது ஒருமுறை போங்கள். இந்தத்தடவையும் அவர் பிராமணராக ஒப்ப மறுத்தால் அவருக்குத் தக்க தண்டனை கிடைக்கும்" என்றார் பிரம்மதேவர்.

பிரம்மதேவன் கூறியபடியே மறுபடியும் ஒரு முறை வசிஷ்டர் ஆசிரமத்திற்குப் போனார் விஸ்வாமித்திரர்; ஆசிரமத்தை நெருங்கியதும் அவருக்குச் சிந்தனை ஓடிற்று—

"நாம் ஆசிரமத்துக்குப் போய் முன்போலவே அவர் நடந்துகொண்டால் அவருக்குத் தண்டனை நிச்சயம் கிடைக்கும். அவர் தண்டனை பெற நாம் காரணமாக நிற்பது நல்லதல்ல. திரும்பிப் போய்விடுவதுதான் நல்லது" என்று.

இதனால் அவர் ஆசிரமத்தில் புகாமலேயே திரும்பிப் போகப் புறப்பட்டார். தன் தபோபல வலிமையால் இதைத் தெரிந்துகொண்டுவிட்டார் வசிஷ்டர்.

"நமஸ்காரம் பகவான்! வாருங்கள்! வாருங்கள்! ஏன் திரும்பிப்போகிறீர்கள்?" என நமஸ்கரித்து வரவேற்றார். இதைப் பார்த்த விஸ்வாமித்திரருக்கு ஒரே ஆச்சரியம்.

"இதற்குமுன் இரண்டுமுறை வந்தேன். ஆசீர்வாதம்தானே செய்தீர்கள்! ஏன்?" எனக் கேட்டார்.

"அதுவா! அப்பொழுதெல்லாம் உங்கள் மனதில் உங்கள் உயர்வைப்பற்றிய அகந்தை இடம் பெற்றிருந்தது. இம்முறை அந்த அகந்தை உங்கள் மனதைவிட்டு நீங்கிவிட்டது. இதுதான் வித்தியாசம்" என்றார் வசிஷ்டர்.

அவர் கூறியது முற்றிலும் சரியே என்பதை விஸ்வாமித்திரரும் ஒப்புக்கொண்டார்.

குழந்தைகளே! நீங்கள் உயர்வு என்னும் எண்ணத்தை உங்கள் மனதிலிருந்து துடைத்துவிட வேண்டும். தவறு செய்தால் அத்தவறை ஒப்புக் கொள்ள சிறிதும் தயங்கக்கூடாது. அப்பொழுது தான் விஸ்வாமித்திரரைப்போல் நீங்களும் உயர்வடைவீர்கள். உங்களை உயர்வாக மதித்து மற்றவர்கள் மரியாதையும் காட்டுவார்கள்.

---


## காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள்நாடு | | மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு | |
|---|---|---|---|---|
| | ரூ. | நயா பைசா | ரூ. | நயா பைசா |
| ஒரு வருஷம் | 6 | 00 | 7 | 50 |
| அரை வருஷம் | 3 | 00 | 3 | 75 |
| தனிப் பிரதி | 0 | 50 | 0 | 62 |


# உங்கள் நன்மையும்

# நாட்டின் முன்னேற்றமும்

தேவைகள் நிறைவேறி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்னும் ஆர்வம் மக்களிடம் மிகுதியாகப் பரவியுள்ளது. இந்த ஆர்வத்துக்குச் சரியான உருக்கொடுத்து வழிகாட்டும் பொறுப்பை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதே சமயத்தில் திட்டத்தின் வெற்றிக்கு உதவ வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்புமாகும். நாம் எந்தத் தொழில் செய்பவராக இருந்தாலும், நம் தொழிலின் மூலமாகவே இந்த மகத்தான முயற்சிக்கு நாம் உதவ முடியும். நம் குறிக்கோள் நிறைவேறி நாடு முன்னேற நாம் எல்லாரும் சேர்ந்து மேற்கொண்டுள்ள கூட்டு முயற்சியே இத்திட்டம். அதன் வெற்றி நமது குறிக்கோளுக்குப் புதிய சக்தியையும் ஊக்கத்தையும் தரும்.

விவசாயிகள் அதிக உணவு உற்பத்தி செய்யுங்கள். தொழிலாளிகள் அதிகப் பொருள் உற்பத்திக்கு உதவுங்கள். வசதியுள்ள யாவரும் சமூக நலப் பணிகள் செய்ய முன்வாருங்கள், எல்லோரும் கணிசமாகச் சேமித்து, தேசிய சேமிப்பு உறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள். இவை ஒவ்வொன்றும் புதிய இந்தியாவை உருவாக்கும் பெருமுயற்சியில் பங்கு கொள்வதன் மூலம் உங்கள் வாழ்வு உயர வழி வகுக்கும்.







திட்டத்துக்கு

உதவுங்கள்

## முன்னேற்றம் அடையுங்கள்

DA - 58/192

# சந்தேகம் யார் மேல்?

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

வானொலியில் செய்தி அறிக்கை முடிந்துவிட்டது. மணி ஒன்பது. ராதா மாடிக் கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு கவலையோடு வெளியே எட்டிப் பார்த்தாள். கிருஷ்ணன் இன்னும் வரவில்லை.

வெள்ளியை வார்த்து விட்டது போல நீண்ட தெருவின், இருபுறமும் அடர்ந்த கவின் மரங்கள். இருபுறமும் இடைவெளிகளும் சோலைகளும் சூழ்ந்த பங்களாக்களின் வரிசை. நாற்சந்தியைக் கடந்து ஒரு கார் மின்னல் வேகத்தில் சென்றது. மங்கலான மின்சார ஒளியிலும் அதில் இருந்தவர்களை அவள் தெரிந்து கொண்டாள். இரவு ஒன்பதரை மணிக்கு எப்போதும் தெருக்கோடியிலிருந்து அந்தக்கார் புறப்படுவது



வழக்கம். கடைசி வீட்டிலிருந்து ஓர் இளநங்கை துள்ளிக் குதித்துக் கொண்டு அதில் ஏறி உட்காருவாள். உடனே கார் புறப்பட்டுவிடும். இயற்கை மோகன நித்திரை வசப்பட்டிருக்கும் வேளையில் காதலர்களின் காதுகள் கடிகாரம் இரண்டு மணி அடிப்பதைக் கேட்டுக் கண்ணயரும் வேளையில் அது திரும்பிவரும். நிலவு பொங்கும் நாட்களில் இன்னும் நேரமாகும். ராதை தூக்கமில்லாத இரவுகளில் அதைப் பார்ப்பதுண்டு. வறுமையிலும், கவலையிலும், காதற்பித்திலும், தியானத்திலும் ஆழ்ந்தவர்களுக்குத் தூக்கம் ஏது? எதுவானாலும் மனம் அதில் ஒன்றிப்போகும்போது கண்கள் அயர மறுத்து விடுகின்றன.

எதிர் வீட்டு மேல் மாடியில் 'களுக்' கென்று நகைக்கும் ஒலி; இடையிடையே குரைக்கும் நாயின் சப்தத்தைத் தவிர வேறு சப்தமே இல்லை. சற்று நேரத்துக்கு ஒரு தடவை 'சர்' என்று ஒரு கார் ஓடிமறையும். சாலை ஓரத்தில் நிழலில் கப்பிக்கல் குவியல் மீது உட்கார்ந்து அடுத்த வீட்டுத் தோட்டக்காரன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். அவன் மனைவி கீழே உட்கார்ந்து புகையிலை போட்டுக் கொண்டிருந்தாள்.

அவர்களுடைய வாழ்க்கையில்தான் எவ்வளவு நிம்மதி? பத்து நிமிஷத்துக்கு ஒரு தடவை சண்டை போட்டுக் கொண்டாலும் அந்த அன்பில் விபரீதமான சிக்கல் எதுவும் இல்லை. ஓரிரு தடவைகள் தவறிப் போய் தெறித்து விடும் ஒரு வார்த்தைக்காக மூன்று நாட்கள் பேசாமல் இருக்கும் ஊடல் அவர்களிடம் இல்லை. ஏன் காரணம் இல்லாமலே கிருஷ்ணன் ஒரு வாரமாக அவளிடம் பேசவே இல்லை? இலையில் உட்கார்ந்தால் தலை நிமிராமல் சாப்பிடுகிறான். அவள் தூங்கப்போன பிறகும் பக்கத்து அறையில் விளக்கைப் போட்டுக்கொண்டு ஏதோ எழுதிக்கொண்டே இருக்கிறான். நடு ஜாமத்துக்கு அவள் ஒரு தூக்கம் தூங்கியான பிறகுதான் அவன் பேனாமுனை தேய்ந்து ஓய்கிறது.

இரண்டொரு நாட்கள் அவள் சாப்பிடாமலே போய்ப் படுத்துக்கொண்டாள். வழக்கமாக அவள் சாப்பிடவில்லை என்று சொன்னால் அவன் ஆயிரம் கேள்விகள் தோண்டித் தோண்டிக் கேட்ட வண்ணம் இருப்பான். சாப்பிட வற்புறுத்துவான். அவனே தட்டிலிருந்து ஒன்றிரண்டு பிடிகள் எடுத்து அவள் வாயில் போட்டுவிட்டதும்கூட உண்டு. முகம் சிவக்க திணறியபடி அவள் அவன் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டதுண்டு. இருந்தாலும் அவன் இன்சொல்லால் வேண்டும்போது மறுக்க முடியாமல் எப்படியோ கொஞ்சம் சாப்பிட்டுவிடுவாள்.



ஒரு மாதமாகவே உணவு இறங்கவில்லை. தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. ஒரு பிடி எடுத்துப்



போடும்போதே வாயிலெடுக்கத் தோன்றுகிறது. மேனியில் மஞ்சள்பூச்சு மின்ன ஆரம்பித்துவிட்டது. இடை இறுகியது. முகத்தில் இனந்தெரியாத ஆயாசம். இது மூன்றும் மாதம். கிருஷ்ணனுக்கே தெரியாது. அவன் வேண்டுமென்றுதான் சொல்லவில்லை. சொல்லிக் குதூகலப்பட இதில் ஒன்றுமில்லை. இது அவர்களுக்கு நான்காவது குழந்தை. அதுவும் கடைசிப் பையன் ரவிக்கு இன்னும் ஒரு வயது பூர்த்தியாகாமல் இருக்கும்போது!

விஷயம் தெரிந்தபோது அவளுக்கே கொஞ்சம் கலக்கமாகத்தான் இருந்தது. யாரிடம் சொல்வது? கோஷா ஆஸ்பத்திரிக்கு அவன் காரியாலயத்துக்குப் போன பிறகு போய் ஊர்ஜிதம் செய்துகொண்டு வந்தாள். பத்து வாரத்துக்கு மேல் இருக்குமென்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு அவரிடம் சொல்லாமல் எப்படி இருப்பது?

அன்று இரவு, காரியாலயத்தில் நடந்த எதையோ சுவாரசியமாகச் சொல்லிக்கொண்டிருந்தான். காலடியில் உட்கார்ந்து வாயில் வெற்றிலையின் செம்மை மெருகிட அவள் கேட்டுக்கொண்டிருந்தாள். ஒரு கணம் அவன் பேசவில்லை. பிறகு சட்டென்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு "ராது!" என்றான். அவளுக்குத் தெரியும்.

சரசரவென்று எழுந்துபோகத் தயாராக நின்றாள். அவன் கையை விடவில்லை. அவன் புறங்கையில் ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்ததும் நிமிர்ந்து பார்த்தான். மாலையில் மப்பும் மந்தாரமும் சூழ்ந்து கவிந்த வானம்போல் இருந்த அவள் முகத்திலிருந்து மழைபோல் கண்ணீர் பெருகியது.

"ஏன் அழுகிறாய் ராது?"

பதில் இல்லை.

"உனக்கு... உன...க்கு என்ன? ஏன் என்னுடன் சரியாகப் பேசுவதில்லை?"

அவள் ஒரு கணம் தயங்கினாள். உதடுகள் துடித்தன. வாளிப்பான உடலைச் சுற்றிப் படர்ந்த அவன் கை மென்மையை அனுபவித்த ஸ்பரிசம்.

"மூன்று...மாத...மாக......நான்...கு...ளிக்...கவில்லை."

ஒரேகணம். ஸ்பரிசம் விலகியது. அவன் பின் தங்கி நின்றான். மின்சாரம் பாய்ந்ததுபோல அவன் சமைந்து நின்றபோது அவளுக்கே என்னவோ போலத்தான் இருந்தது. மளமளவென்று உள்ளே போய்விட்டாள். அன்றையிலிருந்துதான் அவன் அவளிடம் சரியாகப் பேசுவதில்லை. முகம் கொடுத்துப் பதில் சொல்வதில்லை.

இது அவளுக்குப் புதியதில்லை; மணமான புதிதில் கமலு பிறப்பதற்கு முன்னால் இதே நிகழ்ச்சி அவர்களுக்கு எத்தனை மகிழ்ச்சி நிறைந்ததாக இருந்தது? எதிர்காலத்தைப்பற்றிக் கற்பனையில் எத்தனை விதமாகப் பின்னியிருப்பார்கள்? குழந்தையின் பெயர், அதன் படிப்பு, அதன் உடைகள்... ஏன், அதன் உத்தியோகம் அல்லது கலியாணத்தைப் பற்றிக்கூட எத்தனையோ மனக்கோட்டைகள் கட்டியதுண்டு. குழந்தை பிறந்த பிறகும்தான் அவனுக்கு எத்தனைப் பெருமை. வீட்டுக்கு வந்தால் அவளிடம் கூட பேசமாட்டான். பிஞ்சு விரல்கள் அவன் கன்னத்தைப் பிடித்துக்கொள்ளும்போது உலகத்தையே வென்றுவிட்டதுபோலக் குதூகலப்படுவான். வேட்டியில் குழந்தை அழுக்குப்பண்ணிவிட்டால்கூட அருவருப்புப் படமாட்டான். குழந்தைக்குக் காய்ச்சல் என்றால் காரியாலயத்துக்குப் போகமாட்டான். தூங்கவும் மாட்டான். குழந்தை விஷயமாக அவர்களிடையே எத்தனையோ ஊடல்கள்; அவற்றை அடுத்த கூடல்கள்.


நாட்கள் தேய்ந்து இரண்டாவது குழந்தை கோபுவும் பிறந்தான். பிள்ளை பிறந்துவிட்டால் எதிர்காலத்து வாரிசு வந்துவிட்ட மாதிரி. வயது வந்ததும் பட்டாபிஷேகம் செய்துவிட்டு ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். நான்கு பேர்கள் 'பிள்ளையா! பேஷ்!' என்று சொல்லும்போது ஏதோ பெரிய காரியம் சாதித்துவிட்டதுபோல ஒரு நினைப்பு. அந்தப் பெருமையில் அந்த இரண்டு ஆண்டுகளும் எப்படியோ ஒரு மாதிரியாக ஓடிவிட்டன.

ரவியை உண்டானபோதுதான் இதேபோன்ற ஒரு கலக்கம். அடுத்தடுத்து அந்தமாதிரிப் பிள்ளைப்பேறு ஏற்படுவது அவள் உடலைப் பாதிப்பது மட்டுமல்ல; குழந்தைகளையும் பாதிக்கும் என்பது அவளுடைய வாதம். கோபுவுக்கு இன்னும் விபரம் தெரியக்கூட இல்லை. ஆரம்ப நாட்களில் கொடுத்த செல்லத்தில் கமலு இன்னும் பிடிவாதமும் வீம்புமாகத்தான் வளர்ந்து வந்தாள். அந்த சமயத்தில் ரவியை அந்த குடும்பத்தில் யாரும் ஆவலாக வரவேற்கத் தயாராக இல்லைதான்.

ரவி பிறந்தபிறகு கிருஷ்ணன் ஒதுங்க ஆரம்பித்தான். அவளைக்கண்டாலே ஓடுவான். காரியாலயத்திலிருந்து நெடுநேரம்கழித்துத் திரும்புவான். ஊரடங்கும் வரை ஏதாவது வேலைசெய்துகொண்டிருப்பான். உடன் அலுத்து ஓய்ந்தபிறகு முற்றத்தில் படுக்கையை விரித்துக்கொண்டு தூங்கிப் போய்விடுவான். ஒவ்வொருநாளும் ஒவ்வொரு மாதமும் எப்படியோ கழிந்துவந்தது.

வாழ்க்கையில் ஓட்டமில்லை. எதிலும் ஒரு சுவாரஸ்யம் இல்லை. கொஞ்சம் உயரம் அடிமரம் வளர்ந்தபிறகு கிளைகள் திசைக்கு ஒன்றாக பிரிந்து விடுவதைப்போல ஆளுக்கு ஒரு பக்கமாகப் போய் விட்டார்கள். குழந்தைகளிடமும் அக்கரை இல்லை. அவர்களிடையேயும் பிணைப்பு இல்லை. நல்ல தூக்கமும் இல்லாமல் விழிப்பும் இல்லாமல் இரவு கழிந்தபிறகுக் காலையில் எழுந்ததும் ஏற்படும் ஆயாசம் போல மனம் வறண்ட வாழ்க்கையில் அலுத்து ஓய்ந்தது.

திடீரென்று ஒரு திருப்பம். அவனுக்கே அதன் காரணம் புரியவில்லை. மறுத்துக்கூறவும் துணிவு இல்லை. மனம் மட்டிலும் 'திக்திக்' என்று அடித்துக்கொண்டது. "இன்னும் என்ன சோதனையோ?" என்று ஓயாத கலக்கம்.


எழுச்சி மிக்க புத்தகம்
தரும் உற்சாகம்
அந்தநேரத்துக்கு மட்டுமே
—ஆனால்
எப்பொழுதும் உற்சாக
மளிப்பது தேநீர்தான்
நான்தான் டீ
எழுதுகிறவர்களுக்கும் படிக்கிறவர்களுக்கும்
நான் நண்பன்
TEA BOARD
INDIA

PST 200

எதிர்பார்த்தது நடந்து விட்டது. ஆனால் அதைச் சொன்னதும் அவனுக்கு ஏன் அவ்வளவு கோபம்? தவறு இருக்கலாம். அதற்கு இருவருமே பொறுப்பாளிகள். அவனுக்கு இருந்த அளவு அவளுக்கும் குடும்ப விஷயத்தில் அக்கரை உண்டு. இந்த நிலையில் குழந்தை ரவிக்கும் ஒரு வயதுகூட நிரம்பாதபோது அவள் இதை வேண்டவே இல்லை. ஆனால் இயற்கை சதி செய்துவிட்டது. அவளால் என்ன செய்ய முடியும்?

அவள் எண்ணியதுபோல அவன் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. கடுகடுவென்று பேசவும் இல்லை. ஆழங்காண முடியாத ஓர் அமைதி; புயலுக்கு முன்வரும் சூனியம்போல. கண்களில் அளவிட முடியாத வெறுப்பு. மனத்திரையில் பின் நிழலாக ஒரு சந்தேகம்; ஒரு கலக்கம். எடுத்து விளக்கமுடியாத ஏதோ ஒன்று அவனை ஆட்டுவிப்பதுபோல அவளுக்குத் தோன்றியது. கேட்கவும் தைரியம் இல்லை. பேச வாயெடுப்பாள். உதடுகள் துடிக்கும். அவன் முகத்தைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிடுவாள்.

மணி பத்தடிக்கும் சப்தம். ஊரடங்கிவிட்டது. அன்றைக்கு எப்படியாவது கேட்டுவிடுவது என்று அவள் தீர்மானித்திருந்தாள். அவனுக்குப் பிடித்த சமையலும் செய்துவைத்திருந்தாள். அவளுக்குத்தான் ஒன்றும் சாப்பிடப் பிடிக்கவில்லை. கமலுவும் ரவியும் தூங்கிப்போய் விட்டார்கள். கோபுதான் நடுநடுவில் சிணுங்கிக்கொண்டிருந்தான்.

அன்று சனிக்கிழமை. பிற்பகல் வேலை இல்லை. அதனால் அவனை சீக்கிரம் எதிர்பார்த்திருந்தாள். அவன் வீட்டுக்கு வரும்போது அவனைத் திகைக்க வைக்கவேண்டுமென்று வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு தன்னை அலங்கரித்துக்கொண்டிருந்தாள். நேரமாக ஆக அதைப்போல மனதிலும் உற்சாகம் மங்கிவிட்டது. உள்ளே போய்க் கட்டிலில் சாய்ந்துகொண்டாள். எங்கே போனார்? சினிமாவுக்குப் போயிருப்பாரோ?

இருளின் அமைதியைக் கிழித்துக்கொண்டு செருப்பின் 'சரசர'வென்ற ஒலி. படிகளில் மிதித்து ஏறும் காலடி சப்தம். நிமிர்ந்து உட்கார்ந்தாள். கதவைத் தட்டும் சத்தம்.

அவளைக் கூப்பிட்டதுபோலிருந்தது! "உம்... இதோ...வந்துவிட்டேன்!" ஓடிப் போய்க் கதவைத் திறந்தாள். வெளியே கிருஷ்ணன் நின்றுகொண்டிருந்தான். அவன் வாயில் வெற்றிலையின் சிவப்பு.

"இதென்ன, சாப்பாடு ஆகிவிட்டதா என்ன?"

"இல்லை...ஆமாம். என் சிநேகிதர் ஒருவர் வெகுநாளாய் என்னைத் தம் வீட்டில் சாப்பிட வேண்டுமென்று தொந்தரவு பண்ணிக்கொண்டிருந்தார். தட்டிக் கழித்துக்கொண்டு வந்தேன். இன்றைக்கு..."

ராதாவின் முகம் ஒருகணம் சிணுங்கியது. அவள் உள்ளே போய்விட்டாள். அவன் ஏதோ சொல்ல நினைத்தான். "ராது!" என்று கூப்பிட்டான். பதில் கிடைக்கவில்லை.

கால் கைகளைக் கழுவிக்கொண்டு அன்று வந்த தபால்களைப் பிரித்துப் படித்துவிட்டுப் படுத்துக்கொள்ள அவன் மேலே போனபோது அறையில் இருள் சூழ்ந்திருந்தது. மங்கலான நிலவொளியில் குழந்தைகளும் அவளும் படுத்துத் தூங்குவது தெரிந்தது.

சாய்வு நாற்காலியை வெளியே போட்டுப் படுத்துக்கொண்டான். ஒரே இறுக்கமாக இருந்தது. மனதில் என்னென்னவோ சிந்தனைகள். கைகளைப் பின்னாலிருந்து யாரோ பற்றி இழுப்பது போன்ற உணர்ச்சி. திரும்பிப் பார்த்தான்.

ராதைதான் நின்றுகொண்டிருந்தாள். கைகளைப்பற்றி உட்கார வைத்துக்கொண்டான்.

"நீ சாப்பிடவில்லை?"

"......"

"என்ன கோபமாம்?"

"எனக்கு ஒரு கோப...மும்...இல்லை." அவள் கண்கள் நிலவொளியில் பளிச்சிட்டன. "என்... மே...லே... ஒரு தப்...பும்... இ...ல்...லை!"

"என் மேலேதான் தப்பு, ராது!"

"என்ன சொ...ல்...கிறீர்கள்? உங்களுக்கு என்ன உடம்பு?... நீங்கள் ஏன்...என்னோடு... இப்படி..."

"உன்னிடம் ஒன்று சொல்கிறேன் கேள். இத்தனை நாளாகச் சொல்லாமல் வைத்திருந்தது தான் என் தப்பு. நான்கு மாதங்களுக்கு முன்னால் நான் குழந்தை பிறக்காமல் இருக்க எனக்கு ஓர் ஆபரேஷன் செய்துகொண்டேன்."

"என்னது?"

அவள் சட்டென்று எழுந்து நின்றாள். அவள் இடையைப் பற்றியிருந்த கரம் சுருண்டு விழுந்தது. ஒருகணம் மௌனம்.

"ஆமாம்! அதனால்தான்...... போனவாரம். ......நீ சொன்னபோது......"

அவளுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. அவன் சந்தேகத்தின் பயங்கரம் அவளுக்குத் தெளிவாகப் புலனாகியது. விபரீதமான வியாகூலத்தின் காரணம் புரிந்துவிட்டது. அழுகை குமுறிக்கொண்டு வந்தது. அவள்மேலா? அத்தனை நாட்களுக்குப் பிறகா?

"அழாதே ராது! அழாதே! என்மேலேதான் தப்பு!...... மன்னித்துவிடு! இன்றைக்குத்தான் டாக்டர் சொன்னார். ஆபரேஷன் சரியாக இல்லையாம்...... பலிக்கவில்லையாம்......"

அவள் விசும்பி விசும்பி அழுதுகொண்டே இருந்தாள். அவன் அவளை மடிமேல் சாய்த்துக்கொண்டான். முதுகை வருடிய கைவிரல்களில் அவன் வேண்டிய மன்னிப்பு பிரதிபலித்தது. ●

# சுடச் சுட

திருமால்

டைகர் ஸ்ரீ வரதாச்சாரியார் சங்கீத உலகத்தில் ஓர் உன்னத சிருஷ்டி? கறுத்த உருவம், நரைத்த புருவங்கள், கட்டை குட்டையான தோற்றம், பஞ்ச கச்சம் வைத்துக்கட்டிக் கொண்டு அதன் பேரில் ஒரு பெல்ட்! சங்கீத வைபவங்களுக்கு வரும்போது அகன்று பரந்த டர்பன்! கையில் வெள்ளிப் பூண் கட்டிய ஊன்று கோல், வயதின் ஏற்றமிருந்த போதிலும் கம்பீரமாக ஒரு நடை! வித்வான்களாகட்டும், ரசிகர்களாகட்டும் கிட்டே நெருங்கி வந்தால் அன்போடு குசலப் பிரச்னம் செய்யும் சரளமான மனோபாவம்? இவர் தான் டைகர்! கலைப்பொக்கிஷமாகிய டைகர் வரதாச்சாரியார் பாட்டிலே புலியாகவும், பழக்கத்திலே பசுவாகவும் வாழ்ந்து காட்டிய மேதை!

குடந்தையில் 1933-ம் வருடத்திலே நடந்த பொருட்காட்சியிலே சங்கீதவிழாவுக்கு ஸ்ரீடைகர் வரதாச்சாரியார் வந்திருந்தார். அங்கே பகல் சாப்பாட்டின் போது டைகர் தயிரை இரண்டு மூன்று கப் போட்டுக் கொண்டார். இதைப் பார்த்த மகாராஜபுரம் அவர்கள் "சாயங்காலம் பாடவேண்டி இருக்காப் போலிருக்கே! மோராக வேண்டுமானால்...!" என்று இழுத்தாப் போலச் சொன்னார் டைகரிடம்!

"என்னிடத்திலே பால் போன்ற சம்பிரதாய சங்கீதம் வைத்துக்கொண்டிருக்கிறேன், அதில் இந்த தயிரும் சேர்ந்தால் திரட்டுப்பாலாகிவிடும்! எல்லோரும் சாப்பிட்டால் போகிறது. நானும் அதை ரசிப்பேன்!" என்றார் டைகர்! எல்லோரும் சிரித்துவிட்டார்கள்!

* *

சங்கீத ரஸம், ஹாஸ்ய ரஸம் இரண்டும் இணைந்த வித்வான்களிலே ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்கார் அவர்கள் குறிப்பிடத் தக்கவர்! சபாரஞ்சகமாகப் பாடுவதைப் போல சமயோசிதமாக நகைச்சுவை ததும்பப் பேசுவதிலே கெட்டிக்காரர்.

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திலே ரிசர்வ் செய்யப் போய்விட்டுவந்த காரியஸ்தர் "அப்பர் பர்த் இல்லை" என்றார்.

இதைக் கேட்ட அரியக்குடி அவர்கள் "அப்பர் இல்லை என்றால் சுந்தரர் இருக்கோ இல்லியோ என்றார்!" எல்லோரும் குலுங்க குலுங்க சிரித்து விட்டார்கள்!

* * *

இரண்டாவது மகா யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலத்திலே ஏ. ஆர். பி. வேலைகள் சென்னை நகரிலும் இதர இடங்களிலும் தீவிரமாக நடந்து வந்தது அல்லவா? அப்போது தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் A. R. P.க்கு ஆதரவு என்ற தலைப்போடு ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்கார் அவர்கள் தமாஷாக நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அந்த பத்திரிகையில் வெளி வந்திருந்த "A. R. P. க்கு ஆதரவு" என்ற செய்திக்கு தமக்கு சாதகமாக விளக்கம் கூறினார்!

"A" என்ற ஆங்கில எழுத்து அரியக்குடி என்ற ஊருக்காக! "R" என்ற எழுத்து 'ராமானுஜய்யங்கார்' என்ற பெயருக்கு! "P" என்பது பாட்டுக்குப் பதிலாகச் சுருக்கமாகப் போட்ட எழுத்தாகும் என்றார். இதென்ன குதர்க்கமாகச் சொல்கிறாரே என்று நினைக்கிறீர்களா! நான் தான் பி. ஏ. வரையில் இங்கிலீஷில் 'பெயில்' ஆயிற்றே" என்று அரியக்குடி கூறியதும் அங்கிருந்தவர்கள் எல்லோரும் 'கொல்'லென்று சிரித்து விட்டார்கள்!

* * *

பிரபல சங்கீத வித்வான் திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் அவர்கள் ஒரு மிராசுதார் வீட்டில் நடந்த (வாய்ப்பாட்டுக்) கச்சேரிக்குப் பிடில் வாசித்தார்! கச்சேரி முடிந்தவுடன் அவருக்கு மிராசுதார் பத்து ரூபாய் சம்பாவனை செய்தார்! அந்தக் காலத்திலே அது பெரிய சம்பாவனை! கிருஷ்ணய்யர் ரூபாய்களின் ஓசை சரியாக இருக்கிறதா என்று தட்டிப் பார்ப்பது வழக்கம். அதே மாதிரி தட்டிப் பார்த்தபொழுது ஒரு ரூபாய் சப்தம் கொஞ்சம் குறைவாக இருந்தது. கிருஷ்ணய்யர் மிராசுதாரைப் பார்த்து "சப்தம் குறைவாக இருக்கிறதே, இந்த ரூபாய் செல்லுமா?" என்று கேட்டார். "எப்படி ச்ருதி குறைந்தாலும் விரலை அழுத்தி வாசித்தால் சரியாய்ப் போய்விடுமோ அதேமாதிரி சப்தம் குறைவாக இருந்தாலும் பலமாய்த் தட்டினால் ரூபாய்

சரியாய் இருக்கும்" என்றார் பிரரசுதார்! சபையில் எழுந்த சிரிப்பொலி அடங்க நேரமாயிற்று.

ஸ்ரீ கிருஷ்ணய்யர் கச்சேரி ஆரம்பிக்கும்போது ச்ருதியைச் சேர்த்துவிட்ட பிறகு அதைக் கவனிக்கமாட்டார். கச்சேரி நடக்கும்பொழுது ச்ருதி கொஞ்சம், கொஞ்சமாக விலகும். மறுபடியும் ச்ருதியைச் சேர்க்காமல் தன் ஞானபலத்தால் விரல்களைப் பக்குவமாய் வைத்து சுத்தமாய் வாசித்து விடுவார்! பிரரசுதார் இதைத் தெரிந்து சமயோசிதமாக பதில் சொன்னதை விவரித்தபோது எழுந்த சிரிப்பொலி அடங்கவே இல்லை!

* * *

சங்கீதத்தில் ராக லக்ஷணங்கள் ஆராய்ச்சி செய்வதால் பாடகர்களுக்கு ஏற்படும் சிரமம் அதிகம் தான்! ஒரு சங்கீத வித்வானை "இந்தோள ராகத்தை என்ன தைவதம் வைத்துப் பாடுகிறீர்கள்?" என்று கேட்டதற்கு அவர் "அது கேட்பவர்களைப் பொறுத்தது. சுத்த தைவதம் வரவேண்டும் என்பவரிடம் சுத்த தைவதத்தோடு பாடுவேன். சதுச்ருதி தைவதம் வேண்டுமென்பவரிடம் சதுச்ருதி தைவதத்தோடு பாடுவேன்" என்றார். இரண்டு கட்சிக்காரர்களும் ஒரே இடத்தில் சேர்ந்து வந்துவிட்டால் என்ன செய்வது என்பதை அவர் சொல்லவில்லை.


அந்தமாதிரி சந்தர்ப்பம் சென்னை சங்கீத அகாடமியில் ஒரு தரம் நேர்ந்தது. ஒரு பிரபல வித்வான் "மோக்ஷமு கலதா" என்ற சாரமதி ராகக் கீர்த்தனையைப் பாடினார். அந்த ராகத்திற்கு என்ன தைவதம் வரவேண்டும் என்பதைப் பற்றி அபிப்பிராய பேதமுண்டு. வித்வான் கீர்த்தனத்தை சுத்த தைவதத்தோடு பாடினார். பல்லவி முடிந்ததும் சபையில் சிலர் 'சதுச்ருதி தைவதத்தோடு கீர்த்தனம் பாட வேண்டும்' என்றார்கள். வித்வான் அப்படியே சதுச்ருதி தைவதத்தோடு பாடினார். அனுபல்லவி முடிந்ததும் சபையில் மற்றும் சிலர் "சுத்த தைவதத்தோடு பாடியதே நன்றாயிருந்தது. அப்படியே கீர்த்தனத்தைப் பாட வேண்டும்" என்றார்கள். ஆகவே வித்வான் சரணத்தைச் சுத்த தைவதத்துடன் பாடி முடித்தார். இம்மாதிரி ஒரே கீர்த்தனம் பல ரூபத்தோடு பாடப்பட்டது. பொறுமையை இழந்த டைகர் ஸ்ரீவரதாச்சாரியார் மேடையை நோக்கிப் பாய்ந்தார். "ரசிகசிகாமணிகளே! நீங்கள் கேட்டுக்கொண்டீர்களா சுத்த தைவதம்; சதுச்ருதி தைவதத்தோடு பாடவேண்டும் என்று சொன்னீர்களே! இதனால் அதிகமாக அவஸ்தைப் பட்டது கீர்த்தனமா அல்லது வித்வானா அல்லது சபையிலுள்ள ரசிகர்களாகிய நீங்களா?" என்று கேட்டார்! எங்கும் ஒரே கரகோஷம்?

* * *

இருநூறு பக்கங்கள் கொண்ட சங்கீதக்கதை ஒன்றை எழுதிக்கொண்டு இளம் சங்கீத வித்வான் ஒருவர் 'கல்கி' ஆசிரியர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் சென்றார்.

சங்கீத வித்வான் அந்த சங்கீதக் கதையின் பெருமையைப் பற்றிப் பேசினார். அப்படிப் பேசினார். அவர்! அத்துடன் விடவில்லை. அந்த சங்கீதக் கதையின் போக்கையும், அதில் வருகிற பாத்திரங்களையும் பற்றிப் பேசிவிட்டு, நான் வருவதற்கு முன்னால் என் தலைவலித்தது! இந்தக் கதையின் சுவையில் நான் மூழ்கிய பிறகு அந்த வலி போனஇடம் தெரியவில்லை என்று கூறி பெருமையடித்துக் கொண்டார்.

அதுவரையில் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீகல்கி அவர்கள் "தங்களுடைய தலைவலி எங்கும் போய்விடவில்லை. என்னிடம் வந்துவிட்டது" என்றார் சிரித்துக்கொண்டு!



# காலம் செய்த கோலம்





"ஏங்க, சாப்பிடவல்லியா?"

"இல்லே பத்து, ஆபீஸ் வேலை தலைக்கு மேலே இருக்குது!"

"குழந்தை ரவி, அப்பாவோடத் தான் சாப்பிடுவேன்னு, கீழே அடம்பண்ணிண்டு இருக்கான்."

"எத்தனை தடவை சொல்லுறது உனக்கு, மாடிக்கு வந்து தொந்தரவு செய்யாதேண்ணு!... நீயும் ரவியும் சாப்பிட்டுவிட்டு தூங்கப்போங்க; எனக்குப் பசிக்கும்போது உன்னை வந்து எழுப்பறேன்!"

'ஆபீஸ் விவகாரம் ஆபீஸோட இருக்கணும்... குடும்ப விவகாரம் வீட்டோட இருக்கணும்!' என்று சொல்ல வாயெடுத்தாள் பத்மா. அதுவும் இந்த சமயம் கணவனிடம் சொன்னால், இந்த இடமே போர்க்களமாக மாறிவிடும் என்ற எண்ணம் உள்ளத்தில் அரும்பியதும், தனது அழுகையையும், ஆத்திரத்தையும் அடக்கிக்கொண்டு, பதில் ஒன்றும் சொல்லாமல் கீழே இறங்கிப் போய்விட்டாள்!

ராமனாதன், தனது ஆபீஸ் பைல்களுடன் ஒன்றிவிட்டான். கீழேயிருந்து கிளம்பிய பொறுமலும், செறுமலும் மாடிவரைக்கும் ஏறி வந்தும் அவன் காதுகளில் ஒன்றும் விழவில்லை!



வானமங்கை, தனது பூர்ண நிலவுக் கலசத்திலிருந்து ஒளி வெள்ளத்தை பூமியின்மீது தெளித்துக்கொண்டிருந்தாள். 'டாண், டாண்' என்று ஒன்பது தடவைகள் போர் முழக்கம் செய்துவிட்டு, கடிகாரம் தன் வாயை மூடிக்கொண்டது. ராமனாதன் சட்டென்று எழுந்து, மாடியிலிருந்தபடியே தெருவை நோக்கினான்.

அவனது துடிக்கும் விழிகளைக்கொண்டு தீர்மானித்தால், பெரிய பணக்காரர் யாரோ பிளஷரிலோ, மோட்டார் சைக்கிளிலோ, ராமனாதனைப் பார்க்க வரப்போகிறார் என்றுதான் யாரும் சொல்லுவார்கள். ஆனால் ராமனாதன் எதிர்பார்த்தது, கால்களால் நடந்து வருபவரைக்கூட அல்ல. காலினை இழந்து, கம்கட்டில் இரண்டு கட்டைகளைத் தாங்கியபடி 'டொக், டொக்' என்று தரையில் ஓசை எழுப்பி, தாவித்தாவி வரும் ஓர் இராப்பிச்சைக்காரனை தான்!

ஏனோ, அந்த நொண்டியைப் பார்க்கும்போது, ராமனாதனுடைய உள்ளமே கரையும். ஓர் உயிர் காலினை இழந்துவிட்டு, வயிற்றிற்காகத் துடிக்கிற துடிப்பைக் கண்டால் கான்கிரீட் மனம் கொண்டோரும் இரண்டு சொட்டுக் கண்ணீர் விடத்தானே செய்வார்கள்!

'உடல் உறுப்புகளைப்பறிகொடுத்துவிட்டு தவிப்பதைப்போல், இந்த உலகத்தில் இம்சை வேறு எதுவுமே கிடையாது. நாளைக்கு நமக்கும் இந்த கதி ஏற்பட்டால் ......?' இந்த எண்ணம் ராமனாதனின் நெஞ்சத்திலே ஒரு பெரிய சூறுவளியை உண்டாக்கியது.

'கடவுளின் கருணைக்குப் பாத்திரமானால் நம்மை, எந்த கஷ்டமும் அணுகாது' என்று நினைத்து ராமனாதன் தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.

இரவு ஒன்பது மணி ஆகவேண்டியதுதான், எப்படியோ அந்த நொண்டிப்பிச்சைக்காரன் ராமனாதனின் பங்களாவிற்கு முன்பு வந்து நின்றுவிடுவான். ராமனாதனும் எந்த அலுவல் எப்படியிருந்தாலும், மாடியிலிருந்தே பிச்சைக்காரனை பார்க்காமல் இருக்கமாட்டான். சிறிது நேரத்தில் பெருமூச்சு–சலனம்– விரக்தி – ஆறுதல் – எல்லாம் ராமனாதனின் இதய தளத்தில் மாறி மாறி தோன்றி மறைந்துவிடும்,

இதில் இன்னொரு அதிசயம் என்னவென்றால், எல்லோருடைய வீட்டு முன்பும், அந்த நொண்டி இராப்பிச்சைக்காரன், பரிதாபமான குரலோடு ஓலமிடுவான். ராமனாதனின் பங்களாவிற்கு வந்தவுடன் அந்த அவலமான ஓசை நின்றுவிடும்; வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வெளிவராது.

பத்மா இதுவரைக்கும் ஒரு பிடிசாதம் கூட அந்த நொண்டிக்குப் போட்டதில்லை. அப்படியிருந்தும் நாள்தோறும் விடாமல் ராமனாதனின் பங்களாவின் முன்பு, ஐந்து நிமிஷங்கள் நின்றுவிட்டுதான் அப்பால் அகல்வான். ஏதாவது ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் போடுவார்கள் என்ற நினைப்போ என்னவோ அவனுக்கு?

இன்றும்— நொண்டிப் பிச்சைக்காரன் பங்களாவின் வாசற்படிக்கு அருகில் வந்துநின்றான். தெய்வத்தின் முன்பு மெய்மறந்து நிற்கும் பக்தனைப் போல; தன் நிலை மறந்து, சிறிதுநேரம் கதவையே பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு அந்த நொண்டி அந்த இடத்திலிருந்து நகர்ந்தான்' கட்டையொலியும் சிறிது சிறிதாக குறைந்து கொண்டே வந்து மறைந்தது.

சாதாரணமாக நல்ல உடல் வலிமையுள்ளவர்களுக்குப் பிச்சை போடும் பத்மா, ஏன் இந்த முடவனுக்கு ஒன்றும் போடாமல் கதவை சாத்துகிறாள்? சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தான் ராமனாதன். சரியான விடை கிடைக்கவில்லை. தனது மனைவியிடமே கேட்டு விடலாமென்று எண்ணி, "பத்மா! ... பத்து ... !" என்று கூப்பிட்டுக்கொண்டே மாடியிலிருந்து இறங்கி, கூடத்தை நோக்கி ஓடினான்.

கூடத்திற்குச் சென்றதும் - ராமனாதன் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றுவிட்டான்! பத்மா சோபாவில் சாய்ந்தவண்ணம், கண்களை மூடியிருந்தாள். அவளது மலர்க் கன்னங்களில், கண்ணீர்த் துளிகள் காய்ந்திருந்தன. ரவி ஒரு மூலையில் படுத்திருந்தான்.

பத்மாவின் நிலையைக் கண்டவுடன், ராமனாதனின் உள்ளம் உருகியது. சமையற் கட்டிற்குச் சென்று பார்த்தான். பொங்கிவைத்த சாதமும், கறிகளும் அப்படியே இருந்தன. தன் தவறை ராமனாதன் உணர்ந்தான். இனிமேல், தனக்காக இல்லாவிட்டாலும், பத்மாவுக்காவது குறித்த நேரத்தில் சாப்பிடவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

மறுபடியும் ராமனாதன் கூடத்திற்கு வந்து செல்லமாக, "பத்து!" என்று அழைத்துக் கொண்டே, சோபாவில் அமர்ந்தான். வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் பத்மா.

"ரவி சாப்பிட்டானா?" என்று பத்மாவிடம் வேதனையோடு கேட்டான் ராமனாதன்.

"அப்பாவோடு தான் சாப்பிடுவேன்" என்று அழுதுகொண்டே, குழந்தை தூங்கி போய் விட்டான். இதோ ஒரு நொடியில் ரவியை முழிக்கச் செஞ்சுடுரேன்" என்று கூறிக் கொண்டே, ரவியை எழுப்ப பத்மா சென்றாள்.

"ரவியை எழுப்பாதே பத்மா...நேரம் தவறி குழந்தைக்குச் சாதம் போடக்கூடாது! நாளையிலிருந்து நீ கூப்பிட்டவுடனேயே சாப்பாட்டிற்கு வந்துடுறேன்... இனிமே ஆபீஸிலிருந்து வந்தவுடன் உன்னோடும், ரவியோடும் பேசி விளையாடிய பிறகுதான்...மற்றவேலையெல்லாம்!" என்று உருக்கமாகச் சொன்னான் ராமனாதன்.

Be flower fresh, flower lovely




USE TATA'S

HAMĀM

TOILET SOAP

The Tata Oil Mills Company Limited

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,

சேல்ஸ் ஆபீஸ்:

இண்டியன் சேம்பர் பில்டிங்ஸ்,

எஸ்பிளனேடு — மதராஸ்-1

"ஏதேது, புதிய திட்டமாக இருக்கே...!" என்று கூறி, விழிகளை அகல விரித்து, பத்மா சிரித்தாள்.

"அது சரி, இதுக்காகவா அழுகிறது? அட அசடே!" என்று கூறிக்கொண்டே ராமனுதன், பத்மாவின் மாங்கனி – கன்னத்தை லேசாக கிள்ளினான்! பத்மாவின் செவ்விதழ்களில் சிறு மின்னல் இளநகை நெளிந்தது!

"பத்து, சாப்பிட வருகிறாயா? என்று ராமனுதன், பத்மாவை அழைத்தான்.

"இதென்ன கூத்து?" என்று தன் கணவனிடம் கேட்டாள் பத்மா!

"இன்னிக்கு, உன்னை உட்காரவைத்து என் கையாலேயே உனக்குச் சாதம் போடப் போகிறேன்... அப்போது தான், உன்னுடைய கஷ்டம் எனக்குத் தெரியும்" என்று கூறி, கலகலவென்று சிரித்தான் ராமனுதன்.

"நல்ல அழகு தான் போங்க!...ஏது அதிசயமா இருக்கே! பத்து மணிக்கே வந்துட்டீங்களே, பன்னிரெண்டு ஆகும்னு நினைச்சுகிட்டிருந்தேன்! என்றாள் பத்மா.

ராமனுதன் நெருப்பை மிதித்தவனைப்போல் ஒரு குதி குதித்தான். பிறகு பத்மாவிடம் "அடடா! வந்த காரியத்தை மறந்தே போனேனே! நல்ல சமயத்தில் ஞாபகப்படுத்தினே, முதல்லே அதைத் தெரிஞ்சுகிட்டப் பிறகு தான் சாப்பாடு" என்று கூறி, எழுந்த இடத்திலேயே ராமனுதன் மீண்டும் உட்கார்ந்தான். வேறு வழியில்லாமல் பத்மாவும் உட்கார்ந்தாள்.

"ஏன் பத்து, அந்த நொண்டி பிச்சைக்காரனுக்கு ஏதாவது நீ போட்டு அனுப்பக்கூடாதா?" என்று ராமனுதன் தனது சந்தேகத்தை ஆரம்பித்தான்.

திடுதிப்பென்று, தனது கணவன் இப்படியொரு கேள்வி கேட்கவும், பத்மா சிறிதுநேரம் தடுமாறினாள். பிறகு சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "நீங்கதானே, சொல்லியிருக்கீங்க, அங்கமுள்ளவர்கள் அழுகைக் காட்டி, பணத்தை பறிக்கிறாங்க; அங்கம் இழந்தவங்க, அவலக்ஷணத்தை காட்டி, காசு கேட்கிறாங்க. இரண்டும் வெறுப்பைத் தூண்டுகின்றன என்று"–இவ்வாறு ராமனுதன் என்றோ ஒருநாள் சொன்னதை. இப்போது அவனுக்கே அதைப் பதிலாகச் சொன்னாள் பத்மா.

"நான் சொன்னது உண்மைதான் பத்து, அங்கம் இழந்தவர்களைக் காணும் எனக்கு வெறுப்பு தோன்றுவது கிடையாது. வேதனை தான் தோன்றுகிறது! அவர்களையே பார்க்க வேண்டாம்போலிருக்கிறது. பார்த்துவிட்டாலோ மனம் படாத பாடுபடுகிறது. அதுசரி, இந்த நொண்டிப் பிச்சைக்காரனுக்கு தினமும் ஏதாவது போட்டு அனுப்பக்கூடாதா!" என்று பத்மாவிடம் சுற்றி வளைத்துக் கேட்டான் ராமராமனுதன்.

ராமனுதன் சொன்னதைக் கேட்டு பத்மா விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிட்டாள், ஒன்றும் புரியாத ராமனுதன் பதறிப்போய், "ஏன் பத்மா...அழுகிறாய், ஏன் அழுகிறாய்?" என்று பதட்டத்தோடு கேட்டான்.

"ஒன்றுமில்லை!" என்று அழுகையை அடக்கிக் கொண்டு பதில் சொன்னாள் பத்மா.

"எதையோ மூடி மறைக்கப் பார்க்கிறாய், சும்மா சொல்லு!" என்று ராமனுதன் பத்மாவிடம் கெஞ்சினான்.

"இத்தனை நாளும் உங்களிடம் சொல்லாததற்கு என்னை மன்னித்துவிடுங்கள். நமது ரவியும் இந்த நொண்டிப் பிச்சைக்காரனைப்போல் கால்களை இழந்து......!" என்று சரியாகக்கூட சொல்லாமல், 'கோ'வென்று கதறியழுதாள் பத்மா.

பேரிடி தலையில் விழுந்துவிட்டதைப்போல் ராமனுதன் நிலைகுலைந்தான். அவசர அவசரமாக ஓடி, ரவியின் கால்களைப் பார்த்தான். காலுக்கு ஒன்றுமில்லாமல் நல்லபடியாகவே யிருந்தது. அப்படியே ரவியை ராமனுதன் தூக்கித் தோளில் சாய்த்துக்கொண்டு, கால்களுக்கு முத்தமிட்டான்.

பின்னர் ராமனுதன் பத்மாவிடம் வந்து, "என்ன பத்மா, ஏதாவது கனவு கினவு கண்டாயா?" என்று மனைவியைப் பார்த்து ஆறுதலாகக் கேட்டான்.

"வாழ்க்கையில் நடப்பவைகள் பயங்கர கனவாகயிருந்துவிட்டால் எவ்வளவோ நன்றாகயிருக்கும்!" சிறிது நேரம் மௌனமாக இருந்தாள் பத்மா. பிறகு தானே பேச்சைத் தொடர்ந்தாள். "நீங்கள் கோயமுத்தூருக்கு ஆபீஸ் காரியமாகப் போயிருக்கும்போது ரவியை வாட்சுமேனிடம் விட்டுவிட்டு உள்ளே சமையல் காரியமாக இருந்துவிட்டேன்.

நம்ப ரவி, வாட்சுமேனையும் ஏமாற்றிவிட்டு தெருவில் விளையாட போய்விட்டான். அவசரமாக அங்கே வந்த லாரியின் டிரைவர், ரோட்டில் குழந்தை குறுக்கே நிற்பதைப் பார்த்து 'சடன் பிரேக்' போட்டிருக்கிறான். அப்படியும்......"

பத்மா, இந்த விதம் கூறியதும், ராமனுதன் தன்னையும் அறியாமல், 'ஆ'வென்று அலறினான். தொடர்ந்து பத்மா சொன்னாள்: "லாரியின் சக்கரம் நிற்கவில்லை. குழந்தையின் மீது ஏறவேண்டியதுதான் பாக்கி. யாரோ ஒருவர் சட்டென்று பாய்ந்து ரவியை தூக்கிவிட்டார். மயிரிழையில் நமது குழந்தை தப்பினான். ஆனால் ரவியைக் காப்பாற்ற போனவரின் மீது லாரியின் முன்சக்கரம் ஏறிவிட்டது. நான்

குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டேன்." என்று சொல்லி முடித்தாள் பத்மா. தடதடவென்று அவளது உடல் நடுங்கிறது.

"இப்படி அஜாக்கிரதையாக இருக்கலாமா பத்மா? கடவுள்தான் நம்கண்மணியை காப்பாற்றினார்" என்று கூறி பெருமூச்செறிந்தான் ராமனாதன். பிறகு தன் மனைவியிடம், "குழந்தையை காப்பாற்றியவருக்கு நீ எந்தவித உதவியும் செய்ய வில்லையா?" என்று ஆவலோடு கேட்டான்.

"முதலில் எனக்கு சித்தபிரமை போலிருந்தது. தலையை சுற்றியது. ஒன்றுமே ஓடவில்லை. வெகு நேரம் கழித்துதான் நடந்தவைகள் நினைவுக்கு வந்தன. உடனே வாட்சுமேனை கூப்பிட்டு விசாரித்தேன்.

அதற்கு அவன், "நம்ப ரவி ஐயாவை தனது உயிரை கொடுத்து காப்பாற்றியவருக்கு நல்ல அடிங்க. லாரியிலேயே தூக்கிபோட்டுகிட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிட்டாங்க. அந்த மனுஷருடைய உயிரு போயிடும்னுதான் எல்லோரும் பேசிகிட்டாங்க! என்றான்."

"உடனே ஆஸ்பத்திரிக்கு போன் செய்து விசாரித்தேன். அப்படிப்பட்ட கேஸ் ஒன்றும் வரவில்லை என்று சொல்லி விட்டார்கள். அந்த நல்லவரை பற்றி இதுவரைக்கும் ஒரு செய்தியும் கிடைக்கவில்லை" என்றாள் பத்மா.

ராமனாதன், பத்மா கூறியவைகளையெல்லாம் கவனமாக கேட்டு வந்தான். அங்கு மாட்டியிருந்த முருகன் படத்தை நோக்கி, தானாக அவனது கைகள் கூம்பின.

பத்மா கணவனுக்குச் சாப்பாடு போட்டாள், ராமனாதனும் அலுப்பால் படுக்கையில் படுத்தவுடனேயே தூங்கிப்போய்விட்டான்.

பத்மா சாப்பிடவில்லை! எதுவும் அவளுக்கு வேண்டாம்போலிருந்தது. கதவுகளை சாத்தி இறுக்கித் தாளிட்டாள். விளக்குகளையெல்லாம் அணைத்து, விடிவிளக்கை மட்டும் போட்டுவிட்டு, படுக்கையில் படுத்தாள்.

பத்மாவுக்கு வெகு நாழிகை ஆகியும் தூக்கம் வரவில்லை. என்னன்னவோ காட்சிகள். அவள் மனக்கண் முன் தோன்றின!

* * *

பத்மா—கல்லூரியில் இண்டர் படித்துக்கொண்டிருந்தாள். அதேகல்லூரியில் ராமனாதன் பி. எஸ். ஸி. வகுப்பில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தான். ஒருவர் மீது ஒருவர் உயிரையே வைத்திருந்தார்கள். முடிவில் இருவரும் ஒருவரை ஒருவர் மணப்பதாக-உறுதிமொழிகளை பரிமாறி கொண்டனர்.



பத்மாவின் தந்தையான மருதநாயகமுதலியார், அந்தஸ்து பேதமற்ற ராமனுதனை வெறுத்தார்; ராமனுதனை நேரிலேயே அழைத்து, பத்மாவை மறந்துவிடும்படி புத்திமதிகளைக் கூறினர்.

கனிந்துவிட்ட காதலை, மீண்டும் காயாக்க முடியாது! அழுகி போகும்படி விட்டுவிடவும் காதலர்களால் முடியாது, இதற்கு ராமனுதனும் பத்மாவும் விதிவிலக்கு அல்ல!

இதையறிந்த மருதநாயக முதலியார் மறுபடியும் ராமனுதனை அழைத்து பயமுறுத்தினர். ராமனுதன் பணிந்துவிட மறுத்தான். ஓர் அறையில்-ராமனுதனை தள்ளி – மருதநாயக முதலியார், ராமனுதனை வீறு வீறு என்று சவுக்கால் அடித்தார். பத்மா கதறினள். அந்த நிலைமையிலும் ராமனுதன் வீராப்புப் பேசினன்! முடிவில் தனக்கு கைவலி கண்டுபோகவே, மருதநாயக முதலியார் அந்த அறையை விட்டு வெளியேறினர்.

ராமனுதனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று, அட்மிட் செய்தாள் பத்மா. ராமனுதன் அங்கிருந்தால், மருதநாயக முதலியாரால் அவனை ஒன்றும் செய்யமுடியாது என்ற எண்ணத்தில், பத்மா அவ்விதம் செய்தாள். பிறகு தன் தந்தைக்குத் தெரியாமல் பங்களாவிற்கு வந்து பத்மா தூங்குவது போல் பாசாங்கு செய்தாள்.

இரவு ஒரு மணிக்கு மேலிருக்கும். தலையிலிருந்து பாதம் வரைக்கும் கறுப்புத் துணியால் போர்த்துக்கொண்டு - கையில் பிச்சுவா கத்தியுடன் மருதநாயக முதலியார், வெளியே புறப்பட்டுச் சென்ருர். அவருக்குத் தெரியாமல் பத்மாவும் அவரைப் பின் தொடர்ந்து சென்ருள்.

நல்லவேளை; ஆஸ்பத்திரிக்கு மருதநாயக முதலியார் போகவில்லை! அப்படியானல் தன் தந்தை இந்த இருட்டில் எங்கே போகிருர் என்று அறிந்துகொள்ளும் ஆவலில் பத்மாவும், மருதநாயக முதலியார் சென்ற திசையிலேயே காலடி யோசையைப் பின்பற்றி தொடர்ந்து சென்ருள்.

ராமனுதனின் வீட்டிற்குள் மருதநாயக முதலியார் நுழைந்தார். 'பக்'கென்று அடித்துக்கொண்டது பத்மாவின் நெஞ்சம். இவளும் ஓசைபடாமல், வீட்டினுள் நுழைந்து உள்ளே கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள். ஒரே கும்பிருட்டாக இருந்தது.

மறு விநாடி, "அய்யோ!" என்ற அலறல் கேட்டது. உடனே சட்டென்று தட்டுத்தடுமாறி ஓர் உருவம் கதவைத் திறக்க வந்தது. தனது அப்பாவாகத்தான் இருக்க வேண்டுமென்று பத்மா உணர்ந்தாள். வந்த உருவம் பத்மாவின் கழுத்தை நெரித்தது! பத்மா தன்னை சமாளிக்க முடியாமல், "அப்பா" என்று கத்தினள். அடுத்த நிமிஷம் அந்த அறையில் சிமினி விளக்கு ஏற்றப்பட்டது.

ராமனுதனின் தகப்பனர் கட்டிலில் குத்துண்டு கிடந்தார். அவர் மார்பிலிருந்து இரத்தம், 'குபுகுபு'வென்று பொங்கி வழிந்தது. அவருடைய உயிர் போய்விட்டது!

ராமனுதனின் தாய், தனது கணவனின் கால்களைக் கட்டிக்கொண்டு அலறினள். மருதநாயக முதலியார் தன்னை வெளியே விட்டுவிடும்படித் தனது மகளிடம் கெஞ்சினர். பத்மா தனது தகப்பனரை வெளியே விட்டுவிடாமல், தனது இரு கைகளையும் விரித்து கதவை மறைத்துக் கொண்டு நின்ருள்.

"இந்த கொலைக்கு தூக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்துத்தான் தீருவேன்!" என்று பத்மா ஆத்திரத்தோடு கத்தினள்.

மருதநாயக முதலியார் பத்மாவின் கால்களில் விழுந்து, "பத்மா, உன் தகப்பன் உன்மீதுள்ள அன்பால் தவறு செய்துவிட்டான். ராமனுதன் என்று நம்பி அவனுடைய அப்பாவைக் குத்தி விட்டேன். என் மகளே, என்னை மன்னித்து விடு. இனி உன் முகத்தில் நான் விழிக்கவில்லை. நீயும் ராமனுதனும் திருமணம் செய்துகொண்டு நமது பங்களாவிலேயே வாழுங்கள். என்னை விட்டுவிடு, விட்டுவிடு..." என்று கூறி, மருதநாயக முதலியார், தனது பெண்ணின் பாதங்களில் முகம் புதைத்து புலம்பினர்.

வேறு வழி ஒன்றும் தெரியாத பத்மா ராமனுதன் தாயின் கால்களில் விழுந்தாள்.

ஒரு மனிதமிருகத்தின் வெறிக்குத் தனது கணவனைப் பறிகொடுத்தவளிடம் தடுமாற்றத்தோடு பத்மா, "தாயே, விதி என் தகப்பன் உருவில் வந்து, தங்களது கணவரின் உயிரைக் குடித்துவிட்டது. இந்தக் கொலை வெளியானல் நானும் உங்களது பிள்ளையும் வேறுபடுவோம். முடிவில் எங்கள் இருவருடைய உயிரும் பிரியும்.

"இனிமேல் என் தகப்பனர் ஆயிரம் தண்டனைகளை அனுபவித்தாலும் பிரிந்துபோன தங்களுடைய கணவரின் உயிர் வராது! உங்களுடைய பையன் நன்மைக்காகவாவது இந்த விஷயத்தை எவரிடமும் சொல்லாதீர்கள்: மற்றவைகளை நான் கவனித்துக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டு, பத்மா பெரிதாக அழுதாள்.

ராமனுதன் தாயின் உள்ளம், ஓர் இளம் பெண்ணின் கண்ணீருக்காகவும், தனது மகனின் நல்வாழ்விற்காகவும் இரங்கியது.

மருதநாயக முதலியார், அன்றிரவே மறைந்தார். இரண்டு நாட்கள் கழித்து, ஆஸ்பத்திரி

யிலிருந்த ராமனுதனுக்கு, தன் தகப்பனுர் தற் கொலை செய்துகொண்டு இறந்துவிட்டார் என்ற செய்தி தெரிந்தது. மருதநாயக முதலியார், வாழ்க்கையை வெறுத்துத் துறவியாகப் போய் விட்டதாக, ஊரில் பலர் பேசிக்கொண்டார்கள்.

ராமனுதனும் பத்மாவும் திருமணம் புரிந்து கொண்டார்கள். ராமனுதன் தாய், தன் கண வன் கொலையுண்டதை யாரிடமும் கூருமல், மனதில் வைத்து மக்கி மக்கி, ஒருநாள் மடிந் தாள். காலம் ஆறு ஆண்டுகளைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தது.

பத்மாவும்—இந்த சம்பவங்களை குறித்து தன் கணவனிடம் இதுவரைக்கும் ஒரு வார்த்தை சொன்னது கிடையாது. ராமனுதனும், தன் தகப்பனுரின் முடிவைக் குறித்து, பத்மாவிடம் பேசியதும் கிடையாது.

அன்று, நொண்டிப் பிச்சைக்காரனுக்கு சாதம் போட போனபோது, பத்மா அவனை நிமிர்ந்து பார்த்தாள். அதே சமயத்தில் அவனும் பார்த் தான்! அந்தப் பிச்சைக்காரனின் கண்பார்வை, தனது தகப்பனுர் மருதநாயக முதலியாரின் கண் பார்வைபோலவேயிருந்தது. பத்மா, தன்னை கூர்ந்து கவனிப்பதை கவனித்த பிச்சைக்காரன், சட்டென்று தலைகுனிந்து கொண்டான். அவனது கண்களிலிருந்து, 'பொல பொல' வென்று கண்ணீர் வடிந்து தாடியை நனைந்தது! உடனே அந்த நொண்டி பிச்சைக்காரன், சாதத்தைகூட வாங்காமல் போய்விட்டான்!

வெகு நேரம் வரைக்கும் பத்மா சிந்தனை செய்து பார்த்தாள். தன் தகப்பனுர் மருதநாயக முதலியார், ராணுவத்தில் சேர்ந்து விட்டதாகத் தான் செய்தி வந்திருந்தது. இது உண்மைதான் என்பதற்கு அடையாளமாக, மருதநாயக முதலி யாரே, புனுவிலிருந்து பத்மாவுக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

அப்படியிருக்கும்போது, இந்தப்பிச்சைக்காரன் அப்பாவாக இருக்கமுடியாது! அப்படியே யிருந் தாலும் கால்கள் ஏன் முடமாக யிருக்கவேண்டும்? என்று தனக்குத்தானே கேள்வி கேட்டுகொண்டு பதில் ஒன்றும் தெரியாமல் பத்மா குழம்பினுள்.

* * *

ரவி, கனவுகண்டு, அழுதான், அவனைச் சமா தானப்படுத்தி, அவனைத் தட்டிகொண்டே, பத்மா தூங்கி விட்டாள்.

பொழுது விடிந்தது! பத்மா, பூஜைக்காக, தோட்டத்தில் மலர் பறித்துக்கொண்டிருந்தாள். அங்கே ராமனுதன் ஒரு செய்திப் பத்திரிகை யோடு ஓடிவந்து, "தெரியுமா பத்மா, இப்போ திருடர்கள் பிச்சைக்காரர்கள் வேஷத்தில் வீடு களுக்கு வந்து, கொள்ளையடிக்கிருர்களாம்! ஏராளமான திருடர்கள் ஊரில் நடமாடுவதாக வும், ஜாக்கிரதையாக இருக்கும்படி, ஜில்லா போலீஸ் அதிகாரி அறிக்கை விட்டிருக்கிருர்!" என்று சொல்லி பத்மாவிடம் பத்திரிகையைக் காட்டினுன்,

"அதற்கு நம்ப என்னசெய்வது? என்று பத்மா, ராமனுதனை நோக்கிக் கேட்டாள்.

"திருடர்களைப் பிடிப்பதற்குப் போலீஸுக்கு ஒத்தாசை செய்யவேண்டியது நம் கடமை. எனக்கென்னவோ பத்மா, அந்தக் காலில்லாத, பிச்சைக்காரனின் மீது சந்தேகமாகவே இருக் கிறது. நாம் ஒன்றும் சாதம் போடாமலிருக்கும் போது, தினமும் நம்ப பங்களாவின் முன் நின்று எதுக்காக வெறிச்சு வெறிச்சுப் பாக்கணும்?

இன்னிக்கு அந்த நொண்டி வரட்டும், போலீஸுக்குப் போன் செய்துவிட்டு மறுகாரி யம் பார்க்கிறேன்!" என்ருன் உறுதியாக ராம னுதன்.

"எதையும் தீர விசாரித்துச் செய்யணும்" என்று கூறிவிட்டு பத்மா முகத்தை வேறுபக் கம் திருப்பிக்கொண்டாள். ஏனோ அவள் மனம் 'திக் திக்'கென்று அடித்துக்கொண்டது.

'அந்தப் பிச்சைக்காரன் இன்னிக்கு வராமல் இருக்கவேண்டுமென்று தெய்வத்திடம் பல முறை வேண்டிக்கொண்டாள் பத்மா. அந்த நொண்டிப் பிச்சைக்காரனும் இரண்டு நாட் களாக அந்தத் தெருவிற்கே வரவில்லை.

"பார்த்தாயா பத்மா! நான் சந்தேகப்பட்டது சரியாகப்போய்விட்டது, அவன் பிச்சைக்காரன் அல்ல, திருடர்களின் ஒற்றன்" என்று சொல் லிக்கொண்டுவந்த ராமனுதன் சட்டென்று தன் பேச்சை நிறுத்தினுன்.

வாசலில் ஏதோ பெரிதாக சப்தம் கேட்கவே, ராமனுதனும் பத்மாவும் வாசலுக்கு ஓடினுர்கள். "உள்ளே விடமுடியாது!" என்று நொண்டிப் பிச் சைக்காரனிடம் வாட்சுமேன் சண்டையிட்டுக் கொண்டிருந்தான்.

பத்மா பரபரப்போடு அந்த நொண்டிப் பிச் சைக்காரனைப் பார்த்தாள். அவளையறியாமல் அவள் வாயிலிருந்து "அப்பா!" என்ற அலறல் வெளிவந்தது! ஆனுல், பத்மாவால் அப்பா வென்று அழைக்கப்பட்டவரோ, அமைதியாக இருந்தார்.

பத்மாவின் கதறல் அதிகமாகவே, நொண்டிப் பிச்சைக்காரரும், "பத்மா, என் கண்ணே பத்மா!" என்று கதறினர். பத்மாவை அணைத்துகொண் டார்! ராமனுதனுக்குத் தனது மாமனுர் மருத நாயக முதலியார்தான் என்று உடனே தெரிந்து விட்டது.

"ஏம்பா, இந்த கோலம்?" என்று அடக்க முடியாத அழுகையோடு பத்மா, கால் இழந்த தந்தையை நோக்கிக் கேட்டாள்.

"இது தாம்மா, காலத்தின் கோலம்" என்று அமைதியாக மருதநாயக முதலியார், பத்மாவுக்குப் பதில் சொன்னார்.

பிறகு, ராமனாதன் அருகில் சென்று, "என்னை மன்னித்துவிடு ராமனாதன்!" என்று கூறிக் கொண்டே, தன் நிலைமையையும் மறந்து, ராமநாதனின் கால்களில் விழுந்தார் மருதநாயக முதலியார்.

மருதநாயக முதலியாரின் வலது தோள் பட்டையில் அடிபட்டு, இரத்தம் கசிந்தது! பத்மா, தனது தகப்பனாரின் தலையை எடுத்து, தனது மடியில் போட்டுக்கொண்டாள்.

சிறிது நேரம் கழித்து மருதநாயக முதலியார் ராமனாதனை நோக்கி, "உன்னுடைய தகப்பனார் தற்கொலை செய்துகொண்டு இறக்கவில்லை. இந்தப் பாவிதான் அந்த அப்பாவியைக் கொலை செய்துவிட்டான். என்னை மன்னித்துவிடு ராமனாதன்– மன்னித்துவிடு...!" என்று கூறி மேலும் மேலும் தன் தலையில் கைகளால் அடித்துக்கொண்டு துடித்தார்.

மருதநாயக முதலியார் கூறியதைக் கேட்டு ராமனாதன் ஒரு நிமிஷம் தன் கண்களை மூடினான். அவனது முகம் பயங்கரமாக உருவெடுத்தது. மறுவினாடி சலனமற்று அமைதியாக விளங்கியது. "நடந்ததைப் பற்றி நினைத்து வருத்தப் படாதீர்கள்! மனித நீதி மன்றத்தில் சூழ் நிலை காரணமாக தவறு செய்தால், குற்றத்திலிருந்து விடுதலையுண்டு! ஆண்டவன் நீதிமன்றத்திலோ தான் செய்த தவறை உணர்ந்தாலே மன்னிப்பு உண்டு!" என்று உருக்கமாகச் சொன்னான் ராமனாதன்.

"நிச்சயமாக, நான் செய்த தவறுகளை எல்லாம் கடவுள் மன்னித்துவிட்டார்! இல்லாவிட்டால், என் கண்மணி ரவி அழியப் போகிற நேரத்தில் என் கால்களைக் கொடுத்து, நான் காப்பாற்றும்படி நேர்ந்திருக்குமா?" என்று மூச்சுத் திணறலோடு சொன்னார் மருதநாயக முதலியார்.

"என்னப்பா சொல்லுறீங்க? நீங்களா அன்று நம்ப ரவியைக் காப்பாத்தினீங்க?" என்று ஆச்சரியத்தோடு பத்மா கேட்டாள்.

"ஆமாம் பத்மா! ராணுவத்திலிருந்து, வாழ்ந்த இடத்தையும்– உன் வயிற்றில் பிறந்த குழந்தையையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்ற ஆசையால் லீவில் வந்தேன்.

நமது பங்களாவைப் பார்த்துக் கொண்டே நிற்கும்போதுதான் லாரிவந்தது! ரவியின் மீது லாரியின் சக்கரம் ஏற நூலிழைதான் பாக்கி. உடனே உருண்டுவந்த சக்கரத்திற்கு என் கால்களை முட்டுக் கட்டையாகக் கொடுத்து, குழந்தையைக் காப்பாற்றினேன்" என்று பெருமையுடன் சொன்னார் மருதநாயக முதலியார்.

"உங்களுடைய பேரக்குழந்தைக்காக உங்களது காலினைக் கொடுத்துவிட்டீர்களா!" என்று கூறி ராமனாதன் தன் கண்களில் வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டான்.

"அம்மா பத்மா, உனக்கும் உன் கணவன் ராமனாதனுக்கும் செய்த தீங்கிற்குக் கடைசியில என் காலைக் கொடுத்துப் பரிகாரம் தேடிவிட்டேன். ஆஸ்பத்திரியில் தொடையோடு வெட்டி எடுத்துவிட்டார்கள். அப்போது மனமகிழ்ச்சியே அடைந்தேன். உனக்குத் தெரியக்கூடாது என்பதற்காகத்தான் உனக்கு போனில் அப்படிச் சொல்லச் சொன்னேன்!" என்று கூறினார் மருதநாயக முதலியார். அவருக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

"அப்பா...அப்பா!" என்று பத்மா அடித்தொண்டையிலிருந்து கத்தினாள். காலம் செய்த கோலத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்தான் ராமனாதன்.

"கண்ணே பத்மா, நீ இனிமேல் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தும்மா! எதற்கும் கவலைப் படாதே! ஒவ்வொருவரும் கடைசி காலத்தில் தங்களுடைய மக்களின் மடியில் உயிர்பிரிவதை பாக்கியமாகக் கருதுவார்கள்.

நான் எவ்வளவோ பாவங்கள் செய்திருந்தும் பகவான் அந்த பாக்கியத்தை எனக்கு அருளியிருக்கிறார். உன் மடியிலிருந்தபடியே எனது உயிர் அமைதியாகப் போகப் போகிறது. என்னைக் கடவுள் மன்னித்துவிட்டார் பத்மா, என்னை மன்னித்தேவிட்டார்" என்று கூறி, லேசாகச் சிரித்தார் மருதநாயக முதலியார்.

அவருடைய முகம் களையோடு விளங்கியது. ராமனாதனும், பத்மாவும் கண்ணீர் வடித்தனர்.




நமது விசேஷ நிருபர்

படவிமர்சனம்

# நாடோடி மன்னன்

எம்ஜியார் பிக்சர்ஸ் 'நாடோடி மன்ன'னில் வீரச் சண்டைக் காட்சிகள் மண்டிக் கிடக்கின்றன. அவை மட்டுமா? மனதிற்கு இன்ப லாகிரி ஊட்டக்கூடிய காதல் ஸீன்கள் வேறு கேவா கலரில் படமாக்கப் பட்டுள்ளன.

"செந்தமிழே வணக்கம் – ஆதித் திராவிடர் வாழ்வினை சீரோடு விளக்கும்......" என்கிற பாடலை டி. எம். சௌந்தரராஜன் கணீரென்று பாடியுள்ளார். அரசியல் வாடைக்காற்று உண்டு என்பதற்குச் சூசகமாக தி. மு. க. கொடியும் பட ஆரம்பத்தில் ஆர்ப்பாட்டமாக அசைந்தாடுகிறது.

"தூங்காதே தம்பி தூங்காதே – நீயும் சோம்பேறி என்ற பெயர் வாங்காதே" என்கிற பாட்டைக் கேட்டுத் திரும்பும் எந்தத் தம்பியும் சும்மா இருப்பதென்னவோ சந்தேகம். இதர சகபாடிகளுடன் குறைந்தது நான்கைந்து தடவைகளாவது அப்படத்தைப் பார்க்காதவரை தூக்கம் ஏது?

சண்டையில் முதலிடம் எம். ஜி. ராமச்சந்திரனுக்கே. நடிப்பில் முதல் மார்க்கை பானுமதி வாங்கிக் கொண்டு போகிறார். அதிக வாய்ப்பு இல்லை; இருந்தாலும் கொடுத்த மட்டில் கச்சிதமாகச் செய்து படத்துக்குத் தம் வரை புகழ் தேடித்தருகிறார். அவருக்கு வயதாகிக் கொண்டிருப்பதால் இளம் காதலியாகக் காட்சி அளிக்க சிரமப்படுகிறார். ஆனால் அவரது தரமான நடிப்பைப் பார்க்குமிடத்து மற்ற குறைபாடுகளையெல்லாம் மறந்துவிடவே தோன்றுகிறது.

பி. சரோஜாதேவி பூரணமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளார். திரைக்கேற்ற நல்ல முகவெட்டும் தேகக்கட்டும் இருப்பதால் காதல் கட்டங்களில் அவர் எடுப்பாக விளங்கக் கேட்டானேன். எம். ஜி. ஆருடன் அவர் காதல் பாஷையில் கொஞ்சி, கட்டாந்தரையில் எழிலாகப் படுத்துறங்க முற்படும்போது வாட்டமான டலகோணங்களில் காமிரா ஷாட்கள் எடுத்திருப்பது 'பலே ஜோரு'. எம். ஜி. ஆர். மட்டும் சோடையா என்ன! கனவுக் காட்சியில் அத்தேவியை லாசவமாகக்



'நாடோடி மன்னனில்' எம். ஜி. ஆர்.

கட்டி அணைத்து ரம்மியமாக நடனமும் ஆடுகிறார். சரோஜாதேவி ஸ்பஷ்டமாகத் தமிழ் சொற்களை உச்சரித்து, நயம்பட நடிக்கவும் ஆரம்பித்துவிட்டால் கூடிய விரைவில் அபாரப் புகழ் அவரைத் தானாக வந்தடையும்.

தீவுத் தலைவன் பி. எஸ். வீரப்பாவை விட ராஜகுரு பி. எஸ். வீரப்பா நடிப்பு உயர்வாக இருந்தது. அசாத்ய இரைச்சலோ, கனத்த சிரிப்போ இல்லாமல் நடித்திருப்பது பாராட்டத் தக்கது. எம். என். நம்பியார், எம். ஜி. சக்கரபாணி, டி. கே. பாலச்சந்திரன் ஆகியோர் தத்தம் பாகங்களை செவ்வனே செய்துள்ளனர்.

எம். என். ராஜம் தம் பாத்திரம் அறிந்து அடக்க ஒடுக்கமாக நடித்திருக்கிறார். தான் மன்னன் அல்ல என்று நாடோடி கூறும் சமயத்தில் எம். என். ராஜம். எம். ஜி. ஆர். ஆகிய இருவரது நடிப்பும் மிகப் பொருத்தமாக இருந்தது.

சந்திரபாபு தமக்கே உரிய பாணியில் ஆடிப் பாடி ஹாஸ்யச் சுவை ஊட்டுகிறார். டி. பி. முத்துலெட்சுமி, அங்கமுத்து இருவரும் வழக்கமான தோரணையில் வந்துபோகின்றனர். கே. ஆர். ராம்சிங், பூபதி நந்தாராம், முதலியோரும் நடிக்கின்றனர்.

ஓரிரு பிரபல ஆங்கிலக் கதை அம்சங்களைப் பிய்த்தெடுத்து, ஒட்டுவேலை புரிந்து "நாடோடி மன்னனை" உருவாக்கியிருக்கிறது எம்ஜியார் பிக்சர்ஸ் கதை இலாகா. அதிக குழப்பம் இல்லாமல் கதையை ஓட்டியிருக்கின்றனர். அவ்விலாகாவில் அங்கம் வகித்த ஆர். எம். வீரப்பன், வித்துவான் வே. இலக்குமணன், எஸ். கே. டி. சாமி ஆகிய மூவரும்.

கவிஞர் கண்ணதாசன், ரவீந்தரன் இருவரும் வசனங்களை எளிய நடையில் எழுதியுள்ளனர். அரசியல் உட்கருத்துக்கள் பதிந்த கட்சிப் பிரசார ஜிகுனு வேலைப்பாட்டையும் ஆங்காங்கு காண முடிகிறது. ஆகவே 'தம்பிமார்கள்' 'அப்ளாஸ்' நிறைய கிடைக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

பாடல்களைப் பலர் இயற்றியுள்ளனர். மொத்தத்தில் பாமரர்கள் ரசிக்கக் கூடியவையே.

ஒளிப்பதிவாளர் ஜி. கே. ராமு சில வெளிப்புறக் காட்சிகளை வாகான கோணங்களில் அற்புதமாகப் படம் பிடித்துள்ளார். ஒலிப்பதிவும் தேவலை.

படத்தில் சண்டையே பிரதானம். சண்டைப் பயிற்சி அளித்தவர் ஆர். என். நம்பியார்.

கயிற்றுப் பாலத்தில் நல்ல 'சஸ்பென்ஸ்'. கயிறு பிரிந்து அறுந்துவிடாமல் அசல் மன்னன் மூச்சுப் பிடித்து அத்தனை நேரம் இழுத்துக் கொண்டிருக்கமுடியுமா என்று சிலர் கேட்கலாம். அசல் பாலத்தின் கயிறாக இருந்து, அந்தப் பாலத்தில் உண்மையிலேயே இருவர் பிடித்துத் தொங்குவதாக இருந்தாலல்லவோ அந்தக் கேள்வி. ஏதோ நன்றாக 'ஷாட்' எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மட்டும் பாராட்டவேண்டியதே.

கட்டிய வீட்டுக்குப் பழுது சொல்வது சுலபம். எம். ஜி. ஆரின் சொந்த முதல் முயற்சி. ஏராளமாகப் பணத்தைச் செலவழித்துப் பாமர ஜனங்களை மகிழ்விக்கக்கூடிய காட்சிகளைச் சேர்த்துக்கொண்டே போயிருக்கிறார். முதல் தடவையாக டைரக்டும் செய்திருக்கிறார். செய்த மட்டும் பரவாயில்லை. டைரக்ஷன் சோபிக்க ஆங்காங்கு அலாதியான சொந்த முத்திரைகள் இடம் பெறவேண்டும்.

தென்னகம் சுமார் மூன்றரை ஆண்டுகள் காத்திருந்து கண்ட படமல்லவா? என்னென்ன விதமாக எம். ஜி. ஆர். சொந்தப் படத்தைப் பிடித்திருக்கிறாரென்பதைப் பார்க்க ரசிகர்களுக்கு ஆவல் இருப்பது இயற்கையே. முந்திக்கொண்டு பார்க்கமுடிந்தால் பாருங்கள்.

---

## சாரங்கதரா

மினர்வா பிக்சர்ஸாரின் "சாரங்கதரா"வும் பல ஆண்டுகளாக எதிர்பார்த்த படம். ஏதோ டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன் முதலிய பின்னணிப் பாடகர்கள் அருமையாகப் பாட்டுகளைப் பாடி இந்நாடகத்துக்குக் களையூட்டியுள்ளனர்.

இந்த சினிமா நாடகத்தில் பானுமதியின் பங்கு சிறப்பாக உள்ளது. சிவாஜி கணேசன் சுமாராக நடித்துள்ளார்.

ஒரே ஒரு காதல் கட்டம் வருகிறது. பாருங்கள்! அப்பப்பா! கொட்டகை முழுவதுமே ஒரே சலசலப்பு! 'கனகாங்கி' ராஜசுலோசனாவின் மார்பகத்தை அழுத்தியவாறு 'சாரங்கன்' சிவாஜி கணேசன் குழந்தைபோல சாதுவாக சில நிமிடங்கள் படுத்திருக்கிறார். டைரக்டர் போதும் என்று சொல்ல மறந்துவிட்டார் போலும். யார் மறந்தால் என்ன? ரசிகர்கள் 'போதும், போதும்' என்று சொல்லும் அளவுக்குப் படம் அந்த இடத்தில் சற்றே நின்று நிதானமாக நகருகிறது.

எஸ். வி. ரங்காராவ், எம். என். நம்பியார், 'வளையாபதி' முத்துகிருஷ்ணன், முத்துலட்சுமி, சாந்தகுமாரி, எ. கருணாநிதி, சாயிராம் முதலியவர்களும் நடிக்கின்றனர்.



'நான் வளர்த்த தங்கை'யில் மைனாவதியும், ஹனிஇரானியும்

திரைக்கதை வசனத்தை எஸ். டி. சுந்தரம் எழுதியுள்ளார். பாடல்களை ஏ. மருதகாசி இயற்றியுள்ளார். இசை அமைப்பாளர் ஜி. ராமநாதன். கமலா லக்ஷ்மணன், ஈ. வி. சரோஜா நடனமாடியுள்ளனர். இவர்கள் எல்லோரும் இத்திரைப்படம் ஓட பெரிதும் உதவியுள்ளனர் எனலாம். ஒளிப்பதிவு மோசம். ஒலிப்பதிவு இன்னும் கேட்கவேண்டாம். 'மேக்கப்' பொதுவாக சீராக இல்லை.

பாட்டுகளைக் கேட்கப் படம் பார்க்கலாம். "சித்திரத்தைப் பார்த்தாலே சிரிக்கத்தான் தோணுதடி". டைரக்ட் செய்தவர் வி. எஸ். ராகவன்.

---

## இல்லறமே நல்லறம்

இத்திரைப்படத்தில் அருமையாக அமைந்திருப்பது கேவா கலர் டான்ஸ். கமலாலக்ஷ்மணன் நன்றாக நடனமாடியுள்ளார்.

நாராயணன் கம்பெனியார் எடுத்துள்ள இப்படத்தில் புதுமை ஏதும் இல்லை. சாதாரணக் கதை. திருப்பங்கள் கதைக்கு வேகம் ஊட்டக் காணோம்.

தாசி வலையில் விழக்கூடாது; இல்லறமே நல்லறம் என்கிற உண்மையைத் தெளிவாக உணர்த்துகிறது திரைப்படக் கதை. வசனங்கள் சுமார்.

கதாநாயகியாக அஞ்சலிதேவி திறம்பட நடித்திருக்கிறார். ஜெமினி கணேசன் கதாநாயகனாக வந்து குடிக்கிறார். குடித்தபின் நடிப்பிலும் அளவோடு திறமையைக் காட்டுகிறார் அவர்.

சமீபத்தில் வெளிவந்த படங்களுக்குள் இதில் தான் நாகையாவின் நடிப்பு மேம்பட்டிருக்கிறது. வேசி வீட்டிலிருந்து தன் தனயனை மீட்டுவரும் காட்சியில் அவர் உணர்ச்சி பொங்க நடித்துள்ளார்.

எம். வி. ராஜம்மாவின் நடிப்பில் குறை ஏதும் இல்லை.

தாசிகளாக சூர்யகலாவும், சரோஜாதேவியும் தோன்றி கவர்ச்சிகரமாக நடிக்கிறார்கள்.

நம்பியார் வழக்கப்படி. ராஜகோபால் சுரத்தில்லை.

பி. புல்லையா இதற்கு டைரக்டர். கமால் கோஷின் ஒளிப்பதிவு பாராட்டத்தக்கது. ஒரே ஒரு பாட்டு மிகவும் இனிமையாக உள்ளது.

## தேடிவந்த செல்வம்

கூடியமட்டில் தம் முழுத் திறமையைக் காட்டி, மேலும் ஒருபடி முன்னேற எஸ். எஸ். ராஜேந்திரனுக்குத் தேடிவந்த செல்வமாக இப் படம் அமைந்துவிட்டதெனலாம்.

அவரும், ராஜசுலோசனாவும் புரியும் காதல் விளையாட்டுகள் மிகவும் இயற்கையான சூழ் நிலையில் கன ஜோராக எடுக்கப்பட்டுள்ளன. ராஜசுலோசனாவை மடியில் வைத்துக் கொண்டு 'ஆராரோ ஆரிரரோ' பாடிக் கொஞ்சும் ராஜேந்திரனை வாலிப ரசிகர்கள் வாழ்த்தக் கூடும். காதலுக்குக் கண் இல்லை என்பதை எல்லோருமே ஒப்புக் கொள்ளத்தான் வேண்டுமோ?

முடவனாக டி. எஸ். பாலையா நடிப்பு பிரமாதம். நல்லபடியாக நடமாடும் போதும் அவர் தமக் குள்ள வழக்கமான ஆற்றலை வெளிக்காட்டி யுள்ளார். சுயநலப் பேராசையால் உந்தப்பட்டு தந்தை மகனுக்குச் சேவகம் புரியத் துடிதுடிக்கும் கட்டத்தில் பாலையா காட்டும் நயம் அத்யற்புதம்.

ராஜசுலோசனா சீராக நடித்துள்ளார். சரோஜாதேவி யௌவன பூரிப்புடன் விளங்கு கிறார். நடிப்பில் துடிதுடிப்பு தேவை. லட்சுமி பிரபா தம் பாகத்தைப் பக்குவமாக உணர்ந்து அழகாக நடித்திருக்கிறார்.

'குலதெய்வம்' ராஜகோபால் 'ப்ளாட் பாரம்' ஆசாமிகளை உற்சாகப்படுத்துகிறார்; அம்பலத் துக்கு புத்தி புகட்ட அனுயாசமாக 'லெக்சர்' ஒன்றும் அடிக்கிறார்.

வி. கே. ராமசாமி ஒரே மாதிரி வேஷத்தில் ரொம்ப நாளாக ஊறிக்கொண்டு வருகிறார். கூச்சவிடுவதைக் குறைத்து, வேறு புதுமையான பாகங்கள் ஏற்கப் பிரயாசைப்படலாம். அனுப வம் வாய்ந்த நடிகராதலால் அவர் ரசிகர்களுக்கு அலுப்புத் தட்டாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

டி. பி. முத்துலெட்சுமி டீக் கடை நடத்து கிறார். எ. கருணாநிதி ஜோடி நின்றுக் கூத் தடிக்கிறார். கொஞ்சத்துக்குக் கொஞ்சம் தமா ஷாக இருக்கிறது. டி. கே ராமச்சந்திரன், டி. பாலசுப்ரமணியம் இருவரும் சுமாராக நடித் துள்ளனர்.

எம். எஸ். சோலைமலை நன்கு வசனங்களை எழு தியிருக்கிறார். இரண்டு பாடல்கள் பாமர ரஞ் சகமாக எடுபடும்.

குத்துச் சண்டைக் காட்சிகளின் நீளத்தை சுருக்கியிருக்கலாம்.

அரசு பிக்சர்ஸுக்காக ப. நீலகண்டன் இப் படத்தைத் தயாரித்திருப்பதுடன் நேர்த்தியாக வும் டைரக்ட் செய்துள்ளார்.

நிர்மலமான நல்ல படம். யோசிக்காமல் பார்க்கலாம்.

---

## வளருகின்றன

### தம்பி தங்கக் கம்பி

எம். என். ராஜம், சௌகார் ஜானகி, பிரேம் நஸீர் முதலியோர் பங்கு கொள்ளும் மேற்படி தலைப்புள்ள படத்தை ராஜம் பிக்சர்ஸார் தயாரிக்க முனைந்துள்ளனர். ஸ்ரீ வி. ஸ்ரீநிவாசன் டைரக்ஷன் பொறுப்பேற்றிருக்கிறார்.

### உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

பாரமவுண்ட் ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டு வரும் இப்படத்தில் பிரேம்நஸீர், ஏ. கருணாநிதி, கண்ணாம்பா ஆகியோர் நடிக்கின்றனர். ஹொன்னப்ப பாகவதரின் லலித கலா பிலிம்ஸ் எடுக்கும் படமாகும் இது.

### பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்

நாடக மேடையில் நல்ல பெயர் சம்பாதித் துள்ள "பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்" நாடகம் சாவித்திரி பிக்சர்ஸாரால் திரைப்படமாக்கப் பட்டு வருகிறது. ஏ. எல். எஸ். இதன் தயாரிப் பாளர். ராஜேந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், டி. ஆர். ராமச்சந்திரன், வி. ஆர். ராஜகோபால், சரோஜாதேவி முதலியோர் தோன்றும் இப் படத்தை பீம்சிங் டைரக்ட் செய்கிறார். சாயி சுப்புலட்சுமி இருவரும் "ஒளிபடைத்த கண் ணினாய் வா! வா! வா!" என்று தொடங்கும் பாரதி பாடலுக்கு நாட்டியமாடியுள்ளனர்.

### அதிகாரி

ஈ. வி. சரோஜா, எம். என். ராஜம், பாலாஜி எஸ். எஸ். ராஜேந்திரன், சாரங்கபாணி, குல தெய்வம்' ராஜகோபால் ஆகியோர் தோன்றும் 'அதிகாரி' என்கிற படம் வெகு சீக்கிரம் திரை

யிடப்படலாம். சித்ரா மூவிடோன் தயாரிப்பு. மஸ்தான் டைரக்டர். கதை வசனகர்த்தா தர்மராஜன்.



'சாரங்கதரா'வில் புருவைக் கன்னத்தில் வைத்துக் கொஞ்சும் பானுமதி

## சந்திரகாந்தா

அருணா பிலிம்ஸ் பாகஸ்தர்களில் ஒருவரான ஸ்ரீ எம். ராதாகிருஷ்ணன் நிறுவியுள்ள எம். ஆர். கே. புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் 'சந்திரகாந்தா'வில் போலிச் சாமியாராக வருகிறார் டி. எஸ். பாலையா. டி. ஆர். ராமச்சந்திரனையும், டி. கே. ராமச்சந்திரனையும் இப் படத்தில் சந்திக்கலாம், பிரபல நாவலாசிரியர் ரங்கராஜு எழுதிய துப்பறியும் நாவலைத் தழுவி உருவாக்கப்படுகிறது இது. ஸ்ரீ கே. வேம்பு டைரக்ட் செய்கிறார்.

## சிவகங்கைச் சீமை

கும்பினியாரை எதிர்த்துப் போராடிய வீரப் புகழ் மருது சகோதரர்களின் வாழ்க்கையைப் பின்னணியாகவைத்து மேற்கண்டபெயரில் கதை அமைத்துப் படமாக்கி வருகிறார் கண்ணதாசன். வசனம் பாடல்களை அவரே எழுதுகிறார். ஜி. ஆர். நாதன் டைரக்ஷன். டி. கே. பகவதி மனோஹர், எம். என். ராஜம், எஸ். வரலட்சுமி, சௌகார் ஜானகி முதலியவர்கள் நடிக்கின்றனர்.

## சுமதி

'புதையலை'த் தந்த கமால் பிரதர்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் சிவாஜி கணேசன், பத்மினி எம். என். ராஜம், எஸ். எஸ். ராஜேந்திரன் ஆகியோர் பங்கெடுத்துக்கொள்கின்றனர். கிருஷ்ணன், பஞ்சு டைரக்ட் செய்கின்றனர்.

## கல்யாணப் பரிசு

வீனஸ் பிக்சர்ஸ் தயாரிக்கும் மூன்றாவது படத்துக்கு "கல்யாணப் பரிசு" எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இவர்களது படங்களில் சிவாஜி கணேசன்தான் பிரதம பாகம் ஏற்பது வழக்கம். ஆனால் இதிலோ ஜெமினி கணேசன் கதாநாயகன். அவருக்கு ஜோடியாக சரோஜா தேவி வருகிறார். மேலும், தங்கவேலு எம். சரோஜா ஜோடியையும் காணலாம். கதை வசனங்களை எழுதி டைரக்டும் செய்கிறார் ஸ்ரீதர். சங்கீத அமைப்பாளர் ஏ. எம். ராஜம்.

## தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை

ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ் புதுமையான பெயர் கொடுத்து துரிதமாகத் தயாரிக்கும் இப்படத்தில் வி. கே. ராமசாமி, சாரங்கபாணி, மனோகர், சிவதாணு, சாயிராம், ஏழுமலை, சம்பந்தம், கண்ணாம்பா, பண்டரிபாய், எம். என். ராஜம், முத்துலட்சுமி, டி. கே. ராமச்சந்திரன் ஆகியோர் நடிக்கின்றனர். கதை வசனம் ஏ. பி. நாகராஜன். கே. வி. மகாதேவன் சங்கீத அமைப்பாளர், மருதகாசி பாடல்களைப் புனைந்துள்ளார். டைரக்ஷன் கே. சோமு, வி. கே. ராமசாமி, ஏ. பி. நாகராஜன் கூட்டாகத் தயாரிக்கும் படம் இது.

218568
600 008

# ஓவியம்

விச்வம்

அகில உலகப் புகழ் ஓவிய நிபுணன் ரவியின் நட்பில் நான் பெருமை யோடு கொஞ்சம் கர்வமுங்கொண்டேன். எவருடைய நட்பையும் நாடாத, எவருட னும் நெருங்கிப் பழகாத, பழக விரும்பாத ரவியின் நட்பு எனக்கு கர்வத்தைக் கொடுத்ததில் என்ன ஆச்சரியம். பகல் முழுவதும் என் ஆபீசில் கழித்த எனக்கு இரவு கொஞ்ச நேரமாகிலும் ரவியோடு பேசிக் கழிக்காவிட்டால் தூக்கம் வராது. பகல் முழுவதும் வர்ண ஜாலங்களுடன் விளையாடிய அவனுக்கும் இரவு என்னைப் பார்க்காவிட்டால் தூக்கம் வராதாம். இரவு இருவரும் சேர்ந்தே சாப்பிடுவோம்— என் வீட்டிலோ அல்லது அவன் வீட்டிலோ.

ஒருமுறை என் சொந்த வேலையாக டில்லிக்குச் சென்றபோது ரவியும் கூட வந்தான். இருவரும் ஒரு சிறிய மதராசி ஓட்டலில் தங்கினோம்.

ராம்தாஸ் லோகியா டில்லியில் எனக்கு ஆப்த நண்பர். அவர் இல்லத்தில் ஓர் இரவு எனக்கு விருந்து ஏற்பாடு செய்தார். விருந்து தடபுடலாக இல்லாவிட்டாலும் கவர்ச்சிகரமாக இருந்தது. பொறுக்கான பத்து விருந்தினர்கள்தான் — என்னையும் ரவியையும் சேர்த்து. எல்லோருக்கும் ரவியை அறிமுகம் செய்தேன். லோகியா பெருமையால் பூரித்துப் போய்விட்டார்.

உண்டு முடிந்ததும் லோகியா எங்களை ஒரு பிரும்மாண்டமான அறைக்குள் அழைத்துப்போனார். அறையில் பிரகாசித்த மின் வெளிச்சம் எங்கள் கண்களைப் பறித்தன. லோகியாவின் சைகையின்மேல் ஒரு பக்கம் இருந்த பெரிய திரை விலக்கப்பட்டது. நாங்கள் பிரமித்து நின்றோம். திரைக்குப்பின் சுவர் நிறைய ரவியின் ஓவியங்கள்.

"ரவி அவர்களின் ஓவியங்கள் என்றாலே எனக்கு உயிர். அவைகளைக் கண்டு கண்டு மகிழ்ந்துவந்த எனக்கு, அவரே என் விருந்தினராய் வந்ததில் என்ன பெருமிதம் ஏற்பட்டிருக்கும்!" என்றார் லோகியா கண்களில் நீருடன்.

விருந்தினர் எல்லோரும் ஓவியங்களைப் பார்த்துக்கொண்டிருந்தனர். எல்லோரும் ரவியைப் பாராட்டினர்.

"வெகு சிரமப்பட்டு பெருவிலை கொடுத்து இவ்வளவையும் வாங்கினேன்" என்றார் லோகியா.

ரவி உதட்டைப் பிதுக்கினான். எல்லோர் கண்களும் அவனையே பார்த்தன.

"இவைகளில் இரண்டைத் தவிர மற்றது ஒன்றும் என்னால் வரையப்பட்டதல்ல" என்றான்.

ஏக காலத்தில் எல்லோரும் திடுக்கிட்டனர்.

"என்ன? எல்லாவற்றிலும் உங்கள் பெயர்தானே போட்டிருக்கிறது?" என்றார் லோகியோ கொஞ்சம் ஏமாற்றத்துடன்.

"அதனால் என்ன? என் பாணியில் தீட்டத் தெரிந்தவனுக்கு என்னைப் போல் கையெழுத்துப் போடுவதுதானா கஷ்டம்? யாரோ என் பாணியிலும் எழுதி என் கையெழுத்தையும் போட்டு ஏமாற்றி வருகிறார் என்று தெரிகிறது. இதே போல் தான் இன்னுமொரு இடத்தில் என் பெயர்போட்ட, ஆனால் என்னால் எழுதப்படாத படங்கள் சிலவற்றைப்பார்த்தேன்."

விருந்தினர்களிடையே சிறு சலசலப்பு. எல்லோரும் விடைபெற்றுக் கொண்டு பிரிந்தோம்.

மறுநாளே எல்லாப் பத்திரிகைகளிலும் இந்தச் செய்தி பிரசுரமாகிவிட்டது. நாங்களும் சென்னைக்குப் புறப்பட்டு வந்து விட்டோம்.

நான் என் வீட்டையடைந்து ஒரு மணி நேரங்கூட ஆகவில்லை. ரவியின் ஆள் என்னைக் கூப்பிட வந்துவிட்டான். நான் ரவியின் வீட்டிற்குச் சென்றேன்.

"இதோ பார்" என்றான் ஆத்திரத்தோடு நான் சுற்றிலும் பார்த்தேன். பத்துப் பன்னிரண்டு மரப்பெட்டிகள்!

"என்ன இவையெல்லாம்?" என்

ரவி பத்துப் பன்னிரண்டு கடித
என்னிடம் கொடுத்தான். நான் ஒன்
டைப் படித்தேன். ரவியின் ஓவிய
விரும்பி வாங்கிவைத்தவர்கள் அ
அனுப்பியிருந்தனர். அவைகளைப்
சீலனைசெய்து தன்னால் எழுதப்பட்
தானா அல்லவா என்று சொல்
ரவியைக் கோரியிருந்தனர்.

நான் ரவியின் முகத்தைப் பா

"எனக்கு வேறே வேலையில்லை
களைப் பரிசீலனை செய்துகொ
தால் மேலே எப்படி எழுதுவது?"
ரவி.

"யாரென்ன சொல்வது?
தேடிக்கொண்ட தொந்தரவு
லோகியோவின் வீட்டுப் பட
துவிட்டுச் சும்மாயிருந்தால்

"எப்படிச் சும்மாயிருப்ப
ரையே ஒருவன் திருடிக
தும் சும்மா இருக்கமுடியு

"இப்போது என்ன செய

"ஒரு வேலை செய்கிறே
ரவி.

இரண்டு நாட்கள் கழித்
களில் ரவியின் அறிக்கை
திருந்தது. அதாவது,

"நான் எழுதாத, ஆனால்
கொண்ட பல ஓவியங்கள்
களிலும் தனிப்பட்ட வீடுகள்
விட்டதாக அறிந்த அன்பர்க
கொண்ட படங்களையெல்லாம்
பரிசீலனைக்கு அனுப்புகிறார்கள்
தனைகளின் பேரில் நான் அவை
சீலனை செய்யத் தயாராயிரு
அனுப்புபவர்கள் படத்திற்கு ஐந்
வீதம் பரிசீலனைக் கட்டணமும், பட
திருப்பியனுப்ப படத்திற்கு ஒரு
வீதம் செலவுத் தொகையும் அனுப்ப
டும். என்னால் தீட்டப்பட்ட ஓவியங்க
தான் திருப்பியனுப்புவேன். என்னு
யதல்லாதவைகளைத் திருப்பியனுப்ப மா
டேன். கட்டணமில்லாமல் வரும் படங்கள
பரிசீலிக்கப்படவும் மாட்டா; திருப்பியனுப்
பப்படவும் மாட்டா."

உடனே ரவியைப் பார்த்தேன். என

ள் அப்படிப்பட்ட ஓவியங்களை
ாம் சேர்த்து வைத்துக் கொண்டிரு
ர். இல்லையா?"

ஆம்"

ங்கள் பெயரை உபயோகப்படு
தை ஏமாற்றியவனை நீங்கள் பா
டால் அவனை என்ன செய்வீர்க

ன செய்வேனே என

து"

ள் தண்டித்தாலும்சரி, மன்னித்
ண்மையைச் சொல்லிவிடுகிறே
உலகத்தைஏமாற்றியவன்....

நேரம் நிசப்தம்.

கிழவன் குரல் தான் கேட்ட
லேயே ஓவியத்தில் பர்
ர் நான். ஓவியக் கலை
ன்றேன். பயிற்சியின்போ
என் திறமையைப் பாராட
ல் என் கலை எனக்குச் சோ
என் ஓவியங்களை வாா
வருஷங்கள் வறுமைய
ஐந்தாறு வருஷங்களு
ஓவியக் கண்காட்சி
ரிசு கிடைத்ததல்லவ
தங்கள் படங்களு
டதல்லவா? நான் அ
ண்டேன். எப்பொழு
வியங்களையெல்லாம் புது
யரையும்போட்டு விற்ப
டங்கினேன். பல கா
டிருந்த ஸ்ரீதேவி என்னை

மௌனம்.

து என்ன வேண்டும்?"

வரை சம்பாதித்த பண
ம். அதில் பாதியை உ
வைத்திருக்கிறேன். அ
னடு என் படங்களையெல்
டவேண்டும்."

ன் முடியாது. நீங்கள்உலகத்
தற்குத் தண்டனையாக உங்
ாடு உங்கள் கலையையும் பிடுங்
ப் போகிறேன். இந்த அறை
ச் சிறை வைக்கப் போகிறேன்

ன?"

ஆமாம் குருநாதா. அடியேனைவிட
ங்கள் பிரியவே கூடாது."

ரவியின்குரலில் ஒரு தழுதழுப்பு தொ
தது. நான் உள்ளே நுழைந்தேன். குரு
சீடனும் ஆனந்த ஆலிங்கனத்திலிருந்

nujam, B. A., & Printed by S. Rangaswami, B
Press, Besant Road, Kumbakonam.